

# அழைப்பிதழ்

Sri Ramajayam

request the pleasure of your company with family and ...
on the occasion of the marriage of their
beloved daughter

Sowbhagyavathi.. Meenakshi Ammal
On friday, the 18th February 10...
between 6.30 am and 8.00 pm
at Kalyana Thirumana Mandapam, Sorka Vaasal
Sorka Logam - 103 103.

Reception : 9.00 pm

With best compliments from :
Brahma - Vishnu - Naradhar

## ரா.கி.ரங்கராஜன்



# அழைப்பிதழ்

ஆசிரியர்

ரா. கி. ரங்கராஜன்

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

# முன்னுரை

முப்பது ஆண்டுகளுக்கு முன் ஏதோ ஒரு ஏப்ரல் முதல் தேதியன்று இந்த நாவலுக்கான ஐடியா எனக்குத் தோன்றியது என்று நினைக்கிறேன். பௌத்த மதம், அபின் தயாரிப்பு முதலியன பற்றிச் சில புத்தகங்களைப் படித்தது நினைவிருக்கிறது. அவற்றின் பெயர்கள் இப்போது நினைவு வரவில்லை. அந்தப் புத்தகங்களின் முகம் தெரியாத ஆசிரியர்களுக்கு என் நன்றி.

'லலித்' என்ற புனைபெயரில் எழுதிய தொடர்கதை இது.

அழகிய முறையில் பதிப்பித்துள்ள அல்லயன்ஸ் பதிப்பகத்துக்கு மிக்க நன்றி.

**சென்னை - 40** **ரா.கி. ரங்கராஜன்**
**22.8.05**

# ரா.கி.ரங்கராஜன்

- தர்மங்கள் சிரிக்கின்றன
- ஹேமா! ஹேமா! ஹேமா!
- அழைப்பிதழ்
- ராசி
- கோஸ்ட்
- க்ரைம்
- கையில்லாத பொம்மை
- உள்ளேன் அம்மா
- அபாய நோயாளி
- ஒளிவதற்கு இடமில்லை
- ஹவுஸ் ஃபுல்
- புரட்சித் துறவி
- ஒரு தற்கொலை நடக்கப்போகிறது

# அழைப்பிதழ்

**ஒன்று**

திருப்பதியில் சென்ற ஞாயிறன்று செல்வி ஷோபா பி.ஏ.க்கும், செல்வன் நடராஜ் எம்.எஸ்ஸி.க்கும் நடைபெற்ற திருமணத்தை யொட்டி, இன்று மாலை எட்வர்ட் எலியட்ஸ் சாலை ஸ்ரீசக்ரா ஓட்டலில் நடைபெறவிருக்கும் வரவேற்புக்குத் தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து மணமக்களுக்கு ஆசி கூறக் கோருகிறேன்.

**ஜி. ரங்கசாமி,**
உரிமையாளர், ரங்கா அண் கோ.

உலகநாதன் தமது வழக்கமான பகல் தூக்கத்தை முடித்துக் கொண்டு ஹாலுக்கு வந்தபோது அந்த அழைப்பிதழ் வட்ட மேஜைமீது இருந்தது. முகத்தைத் துவாலையில் துடைத்துக் கொண்டு சோபாவில் அமர்ந்தவர் அதைப் படித்துவிட்டு, ''கருமிப் பயல்!'' என்று வாய்விட்டுத் திட்டினார் யாரையோ.

அவரெதிரே வந்தமர்ந்தாள் செங்கமலம்.

''யாருங்க, நமக்குத் தெரிந்தவர்களா?''

''உனக்குத் தெரிந்தவர்களோ இல்லையோ, எனக்குத் தெரிந்தவர்கள். ப்ரிண்டிங் மெஷினரி கமிஷன் ஏஜெண்ட். கொள்ளைக் காசு. அப்படியும் பார். மெட்றாசிலே கல்யாணம் வைத்துக் கொண்டால் செலவு என்று திருப்பதியில் முடித்துவிட்டான். ஆனால் வருமானத்தை விடவும் இஷ்டமில்லை. அதனால் மெட்றாஸிலே ஒரு ரிஸப்ஷன்...'' என்று சொல்லி முடித்தவர், மாடியை நோக்கி, ''தம்பி! ராகவ்!'' என்று கூப்பிட்டார்.

''இதோ வருகிறேன் அண்ணா,'' என்று பதில் வந்தது.

''வேண்டாம், தம்பி. தூங்கிக் கொண்டிருந்தாயா? பாவம், பிரயாணக் களைப்பு. படுத்துக் கொள்.''

ஆனால் அதற்குள் மாடியின் மேல் படிக்கு வந்து விட்டான் ராகவ் - அவர் தம்பி. கலைந்த தலையும் கழுத்தில் போட்டிருந்த துவாலையும் அவன் அரைத் தூக்கத்தில் இருப்பதை அதிகரித்துக் காட்டின. ''என்ன அண்ணா, ஏதாவது விசேஷமா?'' என்றான் அங்கிருந்து படியே.

''ஒன்றுமில்லை. ஒரு ரிஸப்ஷன். நீயும் வருகிறாயா என்று கேட்கத்தான் கூப்பிட்டே ''

''ஸாரி அண்ணா, ஒரே களைப்பாயிருக்கிறது.''

''ஆமாம், ஆமாம். நான் ஒரு மடையன். உன்னைப் போய் எழுப்பினேன் பார். போய்ப் படு, தம்பி,'' என்றார் உலகநாதன்.

ராகவ் திரும்பிச் சென்று விட்டான் தன் அறைக்கு.

''ஹூம்,'' என்று பெருமூச்சு விட்டாள் செங்கமலம். ''தம்பி மேலிருக்கிற கரிசனத்திலே கால் வாசியாவது தாலி கட்டினவள் மேல் இருக்கக் கூடாதா? எல்லாவற்றுக்கும் கொடுப்பினை வேணும்.''

''ஐயய்யோ! என்னம்மா நீ திடீர்க் கம்ப்ளெயிண்ட்?'' என்று உலகநாதன் சிரித்தார்.

''இல்லே, தம்பியைக் கூப்பிட்டீர்களே பார்ட்டிக்கு. என்னைக் கூப்பிடத் தோன்றியதா?''

''செங்கமலம், இப்படி வா பக்கத்திலே. சொல் கிறேன்.''

''பரவாயில்லை. இங்கேயே இருந்துக்கறேன், சொல்லுங்க.''

''இப்ப உன் கழுத்திலேயும் காதிலேயும் கையிலேயும் மூக்கிலேயும் வைரமும் தங்கமுமாய்க் காய்த்துத் தொங்கு கிறது. இருந்தாலும்கூட ஒரு வெள்ளிக்கிழமையிலே வெளியே கிளம்பினால், குளத்தங்கரையிலே இருக்கிற பூக்காரிகிட்டே ஒரு முழம் மல்லிகை வாங்கித் தலையில் வைத்துக்கொள்கிறாயா இல்லையா?''

''அந்த மாதிரி?''

''அந்த மாதிரி நீ வைர நகை. என் மார்பிலேயே இருக்கிறவள். தம்பி ராகவ் மல்லிகைப் பூ மாதிரி. அது பாட்டுக்கு அது. இது பாட்டுக்கு இது.''

''உங்க புலவர் சமாசாரமெல்லாம் எனக்குப் புரியாது. நான் வரட்டுமா வேணாமா?''

''வேணாம் என்பதற்காகவா இவ்வளவு சொன்னேன்? புறப்படு,'' என்றார் உலகநாதன்.

கார் போய்க் கொண்டிருந்தது.

''கௌரி!'' என்று கூப்பிட்டார் உலகநாதன். பதில் ஏதும் வராததால் பின் ஸீட்டிற்குப் பின்னால் எப்போதும் வைத்திருக்கும் சிறிய பிரம்பை எடுத்து, ''அடேய் கௌரி! உன்னைத் தானடா கூப்பிடுகிறேன்!'' என்று கார் ஓட்டும் இளைஞனின் தலையில் ஒரு தட்டுத் தட்டினார்.

ஒரு வினாடி க்ரீச்சென்று சத்தமிட்டு விட்டுக் கார் பழையபடி சீராக ஓடியது.

''மன்னிக்கணும் சார். கவனிக்கவில்லை.'' என்றான் அவன்.

''துப்பறியும் மேதையாச்சே! சிந்தனையில் ஆழ்ந்திருந்தீர்களா டிரைவர் சார்?'' என்றார் உலகநாதன்.

அவன் சிரித்தான்.

''கௌரி சங்கர் என்கிற உன் பெயரை எந்த மடையன் கௌரி என்று சுருக்கினான்?''

''நானேதான், சார்.''

''சகிக்கவில்லை. இனிமேல் சங்கர் என்று மாற்றிக் கொள். ஒரு பார்ட்டிக்கோ, பெரிய மனிதர்கள் வீட்டுக்கோ போய்விட்டுக் கிளம்புகிற போது நான் 'கௌரி' என்று கூப்பிடுவதும், மீசையும் கிருதாவுமாய் நீ வந்து நிற்பதைப் பார்த்து அவர்கள் திடுக்கிடுவதும் கண்ணராவியாக இருக்கிறது.''

''இருந்தாலும் இத்தனை வருஷம் கழித்து அதை மாற்றிக்கொள்வதென்றால் கஷ்டம் சார்,'' என்றான் கௌரி.

கார் ஜெமினி மேம்பாலத்தில் ஏறி இறங்கியது.

''உங்கள் தம்பியும் நம்மோடு வந்திருக்கலாம். என்னவோ இன்று காலையில் பம்பாயிலிருந்து வந்தது முதல் சரியாகவே பேசவில்லை,'' என்றாள் செங்கமலம். ''எப்பவுமே தொட்டாற் சுருங்கி. இப்ப இன்னும் கொஞ்சம் அதிகமாய்ப் போச்சு.''

''விஷயம் தெரியாமல் பேசாதே,'' என்று அதட்டினார் உலகநாதன், எவ்வளவு சகஜமாய்ப் பேசிக்கொண்டிருக்கும் சமயத்திலும் தம்பியை பற்றி ஒரு வார்த்தை யாரேனும் குறைவாய்ப் பேசினால் சடக்கென்று அவர் இயல்பு மாறிவிடும். ''பம்பாயில் ஏகப்பட்ட பேரைச் சந்தித்து ஒரு லட்ச ரூபாய்க்கு ஆர்டர் வாங்கி வரப் போகிறேன் என்று புறப்பட்டான். அது அவ்வளவு சுலபமான வேலையா? காலையில் அவன் வந்ததுமே கேட்டேன். 'இருபத்தையாயிரம் ரூபாய்க்குத் தான் ஆர்டர் கிடைத்தது அண்ணா' என்றான் வருத்தத்தோடு. 'இப்போ தெல்லாம் இருக்கிற காம்பெடிஷனில் இது இருபத்தைந்து லட்சத்துக்குச் சமமாக்கும்!' என்று தட்டிக் கொடுத்தேன். அப்படியும் பார், அவனுக்குச் சமாதானம் ஏற்படவில்லை.''

''ஆமாம், சார். என்கிட்டே கூடச் சரியாய்ப் பேசவில்லை,'' என்றான் கௌரி.

''உங்களுக்கெல்லாம் அவனைப்பற்றித் தெரியாது. என் அப்பா கான்ஸரிலே இருக்கிறபோது ராகவ்வுக்கு எட்டே வயது. எனக்கு இருபத்திரண்டு வயது. நடுவில் பிறந்ததெல்லாம் போய்விட்டது. என் அம்மாவும் போய்விட்டாள். அப்பா காலமான போது, 'உலகு, ராகவை

அனாதைக் குழந்தைமாதிரி உன் கிட்டே ஒப்படைக்கிறேன்' என்று அவன் கையைப் பிடித்து என் கையிலே கொடுத்தார். அதனாலே தான் அவனைக் கண்ணுக்குக் கண்ணாய் வைத்துக் காப்பாற்றுகிறேன். அவனைப் பற்றி யாராவது ஒரு வார்த்தை சொன்னாலும் எனக்குத் தாங்காது...''

''இப்ப நான் என்னங்க தப்பாய்ச் சொல்லி விட்டேன்?'' என்று கெஞ்சும் குரலில் செங்கமலம் சொன்ன பிறகுதான் உலகநாதனின் குரலில் வேகம் தணிந்தது.

எட்வர்ட் எலியட்ஸ் சாலையிலிருந்து பெரிய ஓட்டலுக்குள் கார் நுழைந்தது. முன்புறமிருந்த பூங்காவில் கும்பல் கும்பலாகப் பலர் கூடியிருந்தார்கள். இருந்தாலும் உலகநாதனுக்கு அறிமுகமானவர்கள் அதிகமாய்க் கண்ணில் படவில்லை. இள வயதினர்கள் நிறைய இருந்தார்கள். தோல் மண்டி அப்துல் ரஷீதைச் சுற்றிச் சிலர் கூடி நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். பெண்கள் குழுமியிருந்த இடத்தில் செங்கமலத்தை இருக்கச் சொல்லிவிட்டு அவர்களை நோக்கிச் சென்றார் உலகநாதன்.

''இருந்தாலும் ரங்கசாமி இப்படிக் காதும் காதும் வைத்த மாதிரி கல்யாணத்தை நடத்துவார் என்று நான் நினைக்கவில்லை,'' என்று ரஷீத் சொல்லிக் கொண் டிருந்தார்.

''அதனால்தான் இந்த ரிஸெப்ஷனை வைத்து நம்மையெல்லாம் சமாதானப்படுத்துகிறார்,'' என்றாள் ஒரு பெண். அவள் கையில் ரிப்பன் கட்டிய சிறிய பரிசு ஏதோவொன்று இருந்தது.

அப்துல் ரஷீத், ''ரங்கசாமியின் குடும்பத்தார் பல பேர்களை எனக்குத் தெரியும். அவர்களில் யாரையும் இங்கே காணாதது ஆச்சரியமாயிருக்கிறது.'' என்றார்.

டம் டம்மென்று பாண்டு வாத்தியத்தின் இசை எழுந்தது.

சரிகைக் குல்லாயும் வெல்வெட் கோட்டும் அணிந்த சேட்ஜி ஒருவர், மூன்று வயதுப் பையனொருவனைத் தோளில் சுமந்து கொண்டு உள்ளே வந்தார். மாலைகளும் நகைகளும் எக்கச்சக்கமாய் அணிந்திருந்தான் அந்தப் பையன், தொடர்ந்து சில வட இந்தியப் பெண்கள் வரலானார்கள்.

உலகநாதன், ரஷீத் முதலானவர்கள் மட்டுமின்றி, இருபது முப்பது தமிழர்கள் ஓரமாக ஒதுங்கிக் கொண்டு ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது என்கிற உணர்வு அவர்கள் முகத்தில் வெளிப்படையாகத் தெரிந்தது.

சேட்ஜி அதற்குள் அவர்களை நெருங்கி, ''நீங்கள்... இந்த ஃபங்ஷனுக்காக வந்திருக்கிறவர்கள் தானே? வாருங்கள், உட்காருங்கள்,'' என்றார்.

''இது... உங்கள்...''

''என் குமாரனுக்கு மூன்றாம் ஆண்டு நிறைவு. அதற்குத் தானே வந்திருக்கிறீர்கள்?''

உலகநாதன் சிரித்துச் சமாளித்தார். ''இல்லை... வந்து... அதோ ஓட்டல் மானேஜர் வருகிறாரே?'' என்றவர் அவரிடம் சென்று, ''ஏன் சார், ரங்கா அண் கோ ரங்கசாமியின் டாட்டருக்கு வெடிங் ரிஸெப்ஷன் எங்கே நடக்கிறது? வேறிடத்திலா?'' என்றார்.

ஓட்டல் மானேஜர் திகைத்தார். ''கிடையாதே? இன்றைக்கு இது ஒன்றுதான் பார்ட்டி. வேறு ஏதாவது ஓட்டலாயிருக்குமோ?''

''இதே ஓட்டல்தான்...'' என்று ஒருவர் அழைப் பிதழைக் காட்டினார். ''இதோ பாருங்கள். ஓட்டல் ஸ்ரீ சக்ராவில்...''

ரஷீத் அசட்டுச் சிரிப்புடன், ''எவனோ நம்மை முட்டாள்டித்திருக்கிறான்...'' என்றவர், மறு வினாடியே சிரித்தார். ''அடாடா! இன்று என்ன தேதி என்று மறந்து விட்டோமே நாம் எல்லோருமே!''

''ஏப்ரல் முதல் தேதி!'' என்று பல குரல்கள் ஒருசேர ஒலித்தன மறு வினாடியே.

பாண்டு வாத்தியம் உச்சக் கட்டத்தில் ஒலித்துக் கொண்டிருந்தது.

''கெட்டிக்காரன்தான் சார் நம்மை ஏமாற்றியவன்! நான் இன்று ரங்கசாமியின் வீட்டுக்கே போன் செய்தேன். 'ஆமாம், ஆமாம். திருப்பதியில் கல்யாணம் முடிந்து விட்டது' என்று வேலைக்காரன் பதில் சொன்னான். அவர்கள் ஊரிலேயே இல்லை போலிருக்கிறது. அதை உபயோகித்துக் கொண்டு வேலைக்காரனை அந்த மாதிரி சொல்லும்படி ஏற்பாடு பண்ணியிருக்கிறான்!'' என்றார் இன்னொருவர்.

பங்களாவை நோக்கிக் கார் திரும்பிக் கொண்டிருந்த போது கூட உலகநாதன் சிரித்துக் கொண்டு தான் இருந்தார்.

''நல்ல தமாஷ்! நல்ல வேடிக்கை!'' என்று தனக்குத் தானே ரசித்துக் கொண்டவர், ''என்ன செங்கமலம் உயிரோடுதான் இருக்கிறாயா? பேச்சு மூச்சைக் காணோமே?'' என்று மனைவியைத் தொடையில் தட்டினார்.

''ஆமாம். போங்க!''

''அட! என்ன கோபம் உனக்கு? அதுதான் அந்த சேட் நமக்கும் ப்ரூட் ஸாலட்டுடன் டிபன் காப்பி ஜமாய்த்து விட்டானே? பசியாக இருக்கிறதா என்ன?''

''த்ஸு, சும்மா விடுங்க சொல்கிறேன்.'' என்று செங்கமலம் சிணுங்கினாள். த்ஸு என்று மூக்கை உறிஞ்சியபோது வைர மூக்குத்தி டாலடித்தது.

''ஓகோ! தெரிந்தவர்கள் பார்ட்டிக்கு வருவார்கள், லேட்டஸ்டாய்ப் பண்ணிக் கொண்ட முத்து வளையலை அவர்களுக்குக் காட்ட வேண்டும் என்று வந்தாயாக்கும்? அதற்குச் சான்ஸே இல்லாமல் போய்விட்டது. அதுதானே கோபம்?''

''ஆமாம், நீங்கள் தான் கண்டீர்கள்!'' என்று செங்கமலம் சீறினாலும் அதுதான் உண்மை என்பதை அவள் குரல் காட்டி விட்டது.

''பூ! அதுதானே! சரி. கவலையை விடு! 'என் மனைவி லேட்டஸ்டாய் முத்து வளையல் போட்டிருக்கிறாள். அதைப் பார்ப்பதற்காக அனைவரும் வருக! வருக!' என்று ஒரு இன்விடேஷன் அச்சடித்து நாளைக்கே நம் சிநேகிதர்கள் எல்லோருக்கும் அனுப்பி விடுகிறேன். முத்து வளையல் பார்ட்டி என்று யாருமே கேள்விப்பட்டிராத ஃபங்ஷனை நாம் நடத்தி ஜமாய்த்து விடலாம். சரிதானே செங்கமலம்?'' என்று உலகநாதன் சொல்லிக் கொண்டிருந்த போது காரைப் போர்ட்டிகோவில் நிறுத்தினான் கௌரி.

''ஹாலில் விளக்கைக் கூடப்போடாமல் எங்கேதான் எல்லாரும் தொலைந்தார்கள்?'' என்று சலித்தவாறு ஸ்விட்சைத் தட்டி விட்டாள் செங்கமலம்.

விளக்கு ஒளி பளீரென்று வீசியதும் பின்புறத்தி லிருந்து விரைந்து வந்தான் வேலைக்காரன்.

''தம்பி எங்கேடா? வெளியிலே போயிருக்கிறானா?'' என்றார் உலகநாதன்.

''தெரியாதுங்களே! சாயந்தரம் டிபன் கூடச் சாப்பிடாமல் இங்கேதான் ரொம்ப நேரம உட்கார்ந் திருந்தார். அப்பாலே ஏதோ எழுதிக்கிட்டிருந்தார்...''

''சார்! என்ன அது?'' கௌரி சுட்டிக் காட்டினான்.

ஹாலின் நடுவேயிருந்த வட்ட மேஜையின் மீது சிவப்புக் கண்ணாடிக் குண்டின் கீழ், வெள்ளை வெளே ரென்ற காகிதத் துண்டொன்று படபடத்துக் கொண் டிருந்த்து.

உலகநாதன் விரைந்து சென்று எடுத்தார்.

அன்புமிக்க அண்ணன் அவர்களுக்கு...

- முதல் வரியைக் கண்டதும் ஏனோ அவர் இதயம் இருண்டது. 'என்ன இது?' என்று வாய்விட்டுச் சங்கடப்பட்டவராக விளக்கு வெளிச்சத்தினருகே ஓடிச் சென்று கடிதத்தைப் படித்தார்.

''என்னங்க? என்ன காகிதம்?'' என்று செங்கமலமும் படபத்துக் கொண்டு அவரை ஒட்டி நின்று கடிதத்தைப் பார்த்தாள். கௌரியும் எட்டிப் பார்த்தான். கடிதத்தில் -

'அன்பு மிக்க அண்ணன் அவர்களுக்கு.'

நீங்கள் புறப்பட்டுப் போன பிறகு தற்செயலாய் அந்த இன்விடேஷனைப் படித்தேன். என் இருதயம் வெடித்து விட்டது.

இத்தனை நாள் சொல்லாதிருந்ததற்கு மன்னியுங்கள். ரங்கா அண் கோ ரங்கசாமியின் மகள் ஷோபாவை நான் கல்லூரியில் வாசித்த காலம் முதல் காதலித்து வருகிறேன்

அவள் எங்கெல்லாம போவாளோ, எங்கெல்லாம் நிற்பாளோ அங்கெல்லாம் நிழல் போல அவளைச் சுற்றிக் கொண்டிருந்தேன். என்றைக்காவது ஒரு நாள் உங்களிடம் என் காதலைச் சொல்லி, எனக்கு அவளைத் திருமணம் செய்து வைக்கும்படி கேட்க வேண்டுமென்று எண்ணியிருந்தேன்.

அவள் எனக்கு இல்லாமலே போய்விட்டாள். என்னால் நம்ப முடியவில்லை. அவள் வீட்டுக்கு டெலி போன் பண்ணிக் கேட்டேன். முந்தா நாள் திருப்பதியில் கல்யாணம் நடந்துவிட்டதென்று வேலைக்காரன் சொன்னான்.

அண்ணா! எனக்கு வாழ்க்கை வெறுத்துவிட்டது. நான் போகிறேன். என்னை மன்னியுங்கள். இத்தனை காலமும் தாங்கள் என்பால் காட்டிய அன்புக்கு அடுத்த பிறவி யிலாவது ஈடு செய்வேன்.

- ராகவ்.

''தம்பி!'' என்று அலறிக் கொண்டு மாடிப்படிகளில் தாவியேறி ஓடினார் உலகநாதன். ''எல்லாம் விளை யாட்டாம்டா தம்பி! அதையா நம்பினாய்! விளையாட்டுடா! விளையாட்டு!''

''என்னங்க, என்னங்க!'' என்று அவர் பின்னாலேயே செங்கமலம் ஓட, உலகநாதன் வீசியெறிந்துவிட்டுச் சென்ற அந்தக் கடிதத்தை எடுத்துப் பாண்ட் பாக்கெட்டில் செருகிக் கொண்டு வேகமாய்ப் பின்தொடர்ந்தான் கௌரி.

உள்ளே நுழைந்ததும் தெரிந்து விட்டது - எல்லாம் முடிந்துவிட்டதென்று.

கட்டிலில் பாதியும் தரையில் பாதியுமாய் அலங்கோலமாய்க் கிடந்தான் ராகவ்.

கீழே ஒரு கைத்துப்பாக்கி கிடந்தது. அவன் நெற்றிப் பொட்டில் ரத்தம் கசிந்து உறைந்திருந்தது.

ராகவின் கையைப் பிடித்துப் பார்த்த கௌரி, ''மோசம் பண்ணி விட்டான் சார்! மோசம் பண்ணி விட்டான்!'' என்றான்.

''அடேய்! யாரடா அவன் ராஸ்கல்!'' என்று அண்ணாந்து பார்த்தபடி வெறி பிடித்துக் கத்தினார் உலகநாதன். ''விளையாட்டாடா விளையாடினாய் விளையாட்டு? உன் விளையாட்டு ஒரு பச்சைக் குருத்தின் உயிரைக் குடித்துவிட்டதடா கொலைகாரா! அடேய்! நீ யாராயிருந்தாலும் சரி. ஈரேழு பதினாலு லோகங்களில் நீ எங்கே ஒளிந்தாலும் சரி. உன் குடலைப் பிடுங்கி நான் விளையாடுகிறேனா இல்லையா பாரடா ராஸ்கல்! சத்தியமான வார்த்தையடா இது, சத்தியமான வார்த்தை!''

அவருடைய கர்ஜனை அந்தப் பங்களாவின் எல்லாச் சுவர்களிலும் முட்டி மோதி எதிரொலி கொடுத்தது.

## இரண்டு

''ஐயோ வேண்டாம். அவன் குழந்தை! பச்சைக் குழந்தை! பச்சைக் குழந்தை! அவனை அறுக்காதீர்கள். அலங்கோலம் பண்ணாதீர்கள்!'' என்று எவ்வளவோ கதறிப் பார்த்தார் உலகநாதன்.

போலீஸின் இதயமும் சட்டத்தின் கைகளும் இரும்பினால் செய்யப்பட்டவை. ராகவ்வின் கடிதத்தைப் àGÞ{ñ\ª ³W¢N óQ å cN óàG² ¨ ®GÞ¨ ~u W~ KÏ ¿i ½b ³W¢ Û õ n{ñGª á~ui à ±øài ~{ñGÞ¿ò .

''தற்கொலையா, கொலையா என்று நாங்கள் அறிய வேண்டாமா, மிஸ்டர் உலகநாதன்! உங்களுக்குப் பிடிக்காவிட்டாலும் எங்கள் கடமையைச் செய்ய வேண்டும்,'' என்றார் போலீஸ் அதிகாரி. ''தற்கொலைதான் என்று போஸ்ட் மார்ட்டம் செய்த டாக்டரும் பஞ்சாயத்தாரும் சொல்லிவிட்டார்கள்.''

''சார்! அந்த இன்விடேஷன்... அதை அச்சிட்டு வழங்கின கொலைகாரனைக் கண்டுபிடிக்காமல் விடாதீர்கள்!'' என்று போலீஸ் அதிகாரியின் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினார் உலகநாதன். ''அவனைத் தூக்கில் போட்டாக வேண்டும்!''

''கண்டுபிடிக்கிறோம். ஆனால் அதற்கெல்லாம் தூக்கில் போட முடியுமா?'' என்று அனுதாபத்துடன் கூறினார் அந்த அதிகாரி. ''இது ஒரு பிராக்டிகல் ஜோக். அவ்வளவுதான். சட்டப்படி ரொம்ப அற்பமான தண்டனை கூடக் கொடுக்க முடியுமோ என்னவோ? ஏன், ஷோபா என்கிற பெண்ணைப் பற்றிக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார் உங்கள் தம்பி. அவளையே கூட நாங்கள் எதுவும் செய்ய முடியாதே! இல்லையா?''

சுய நினைவே இல்லாமல், தளர்ந்து தளர்ந்து விழுந்தபடியே தம்பிக்குக் கொள்ளி போட்டார், உலகநாதன், செங்கமலமும், கௌரியும் அவரைத் தாங்கிப் பிடித்தவாறே இருந்தனர்.

மயானத்தில் யாரெல்லாமோ கூடியிருந்தார்கள். துக்கம் விசாரித்தார்கள். எதுவும் அவருக்கு உணர்வில் பதியவில்லை.

ஈரத் தலையைத் துவட்டிக் கொண்டிருந்தபோது, ''என்னைத் தெரிகிறதா? நான்தான் ரங்கசாமி!'' என்று

சொல்லிக்கொண்டு ஒரு பெரியவர் அவரை அணுகினார். ஒடிந்து விழுகிற மாதிரி ஒல்லி, தங்க பிரேம் போட்ட கண்ணாடி அணிந்திருந்தார்.

ரங்கசாமி என்ற பெயரைக் கேட்டதும் உலகநாதனின் கண்கள் நெருப்புத் துண்டமாய் ஜொலித்தன. ''ஏன் ஐயா நீர்தான்... உங்கள் பெண்தான்...''

சட்டென்று அவர் வாயைப் பொத்தினார் ரங்கசாமி. ''பதறாதீர்கள் உலகநாதன். என்னையும் போலீஸில் விசாரித்தார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. என் மகள் திருவனந்தபுரம் போயிருக்கிறாள். அவளுக்கு எதுவுமே தெரியாது...''

உலகநாதன் அவர் கையை விலக்கி, ''ரங்கசாமி, உங்களுக்கு என் தம்பி என்னய்யா கெடுதல் செய்தான்?'' என்று அரற்றினார்.

''மெதுவாய், மெதுவாய்!'' என்று ரங்கசாமி மன்றாடினார். அவரைச் சேர்ந்த சில பெரிய மனிதர்களும் அருகில் வந்து உலகநாதனைச் சாந்தப்படுத்தினார்கள்.

''உலகநாதன், எனக்கு இருப்பது ஒரே மகள். கல்யாணத்துக்கு இருக்கிற பெண். அவள் பெயர் கெடுகிற மாதிரி எது நடந்தாலும் அவள் வாழ்க்கையே போய் விடும். நான் போலீஸில் ரொம்பக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். நீங்களும் பெரிய மனது பண்ண வேண்டும்...'' என்றார் ரங்கசாமி.

''நான் என்னய்யா செய்ய வேண்டும் என்கிறீர்கள்?''

''வேறொன்றுமில்லை. இதை இத்தோடு விட்டுவிட வேண்டும். நடந்தது நடந்துவிட்டது. பேப்பர்களில் அதிகம் வரக்கூடாது. என் பெண்ணை விசாரிக்கிறேன்.

இவ்வளவு பெரிய கொடுமைக்கு அவள்தான் காரண மென்று தெரிந்ததோ நானே உங்கள் முன்னால் இழுத்து வந்து நிறுத்தி, சவுக்கெடுத்து உரித்துவிடுகிறேன்.''

''நீங்கள் என்னை உரித்து எனக்கென்ன? செத்தவனா திரும்பி வரப்போகிறான்?'' என்று சொல்லிவிட்டு, விம்மி னார் உலகநாதன்.

அந்தச் சமயத்தில் கௌரியின் முகத்தை யாரேனும் கவனித்திருந்தால் அவன் பல்லைக் கடித்துக் கொண் டிருந்தது தெரிந்திருக்கும். ராகவ்வின் அநியாய மரணத்தி னால் அவன் கொண்டிருந்த கொதிப்பு அவனுக்குத்தான் தெரியும். உலகநாதன் வாய்விட்டுச் சபதம் போட்டிருந்தார். கௌரி மனத்துக்குள் கறுவியிருந்தான். அவ்வளவு தான் வித்தியாசம்.

ராகவ்வும் அவனும் ஹை ஸ்கூலில் தோழர்கள். எட்டாம் வகுப்பிலிருந்து பதினொன்றாம் வகுப்புவரை சேர்ந்து படித்தவர்கள். ஆனால் நெருங்கிய சினேகம் கிடையாது. பிறகு ராகவ் வேறு கல்லூரிக்குப் போய் விட்டான். கௌரி ஒரு சாதாரண கல்லூரியில் பி.ஏ. வரை படிக்க முடிந்தது. கிராமத்திலிருந்த அப்பாவினால் அவனுக்குப் பணம் அனுப்ப முடியாமல் போகவே படிப்பை நிறுத்திக் கொண்டு வேலைக்கு அலைந்து கொண் டிருந்தான்.

இரண்டு வருடத்துக்கு முன்பு ஒரு மழை பெய்து கொண்டிருந்த தினத்தில், மவுண்ட் ரோடு எம்ப்ளாய் மெண்ட் எக்ஸ்சேஞ்சில் தன் பெயரைப் பதிவு செய்வதற்காக க்யூவில் நின்றிருந்த போது, நட்ட நடுத் தெருவில் ஒரு கார் நின்றுவிட்டதையும், ஓர் இளைஞன் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறுவதையும் கண்டு

உதவிக்குப் போனான். ஒரு சின்னக் கோளாறுதான். சரிசெய்து விட்டு நிமிர்ந்தபோதுதான் அவனும் ராகவ்வும் ஒருவரை ஒருவர் அடையாளம் புரிந்து கொண்டார்கள்.

அன்றே ராகவ் அவனைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று, அண்ணனின் பர்ஸனல் அஸிஸ்டண்ட் என்ற மாதிரி ஒரு வேலை வாங்கித் தந்தான். ஆனால் பெரும்பாலும் கார் டிரைவிங் தான் கௌரியின் வேலை.

வந்த அடுத்த மாதமே, உலகநாதனின் உயர்தரக் கைக்கடியாரம் காணாமல் போனபோது அதை ஒரு வேலைக்காரனிடமிருந்து மீட்டுக் கொடுத்தான். அன்று முதல் துப்பறியும் கௌரி என்ற வேடிக்கைப் பெயரும் ஏற்பட்டு விட்டது.

''என்னடா என்னைப் போய் நீங்க, நீங்க என்று கூப்பிட்டுக் கொணடு!'' என்று ராகவ் கண்டித்த போதிலும் கௌரி அந்த உரிமையை எடுத்துக் கொண்டதில்லை. சின்ன எஜமானர் என்கிற மரியாதையுடன் சிறிது தள்ளியே நிற்பான். வெறும் நண்பனாக மட்டுமின்றி, தனக்கு வாழ்வு ஏற்படுத்திக் கொடுத்த உபகாரி என்ற நன்றியும் அவன் உள்ளத்தில் பரவியிருந்தது.

ஆகவேதான், ''அந்த இன்விடேஷன் போட்ட ராஸ்கல்... அவனை அவனை... அவனை...'' என்று உலகநாதன் குமுறியபோது, அவனால் சும்மா இருக்க முடியவில்லை.

''நான் விசாரிக்கிறேன். சார்,'' என்று வாக்களித்தான். செயலிலும் இறங்கினான்.

முதலாவதாக, அந்த அழைப்பிதழை அச்சடித்திருந்த 'வினாயக் பிரிண்டர்'ஸுக்குச் சென்று விசாரித்தான்.

மவுண்ட்ரோடின் குறுக்குத் தெருவொன்றில் அமைந்திருந்த பெரிய பிரஸ் அது. மானேஜரிடம் கேட்டவுடன், ''உங்களுக்கு முன்பே போலீஸில் வந்து விசாரித்து விட்டார்கள். அது நாங்கள் அச்சடிக்கவில்லை. நம்பிக்கை ஏற்பட வேண்டுமென்பதற்காக, கார்டின் அடியில் எங்கள் அச்சகப் பெயரைப் போட்டிருக்கிறார்கள்'' என்று சொல்லி விட்டார்.

இரண்டாவதாக மயிலாப்பூரில் இருந்த ரங்கசாமியின் வீட்டைக் கண்காணித்தான். அவர் மகள் ஷோபா திருவனந்தபுரத்திலிருந்து வந்து விட்டாள் என்பது தெரிந்தது. அவளைப் பார்த்தாலொழிய, பார்த்துக் கேட்டாலொழிய, எவ்வித துப்பும் கிளம்பப் போவதில்லை என்று தோன்றியதால் அங்கே புறப்பட்டான்.

மந்தைவெளி பஸ் ஸ்டாண்டைத் தாண்டி அமைதியான பகுதியில் இருந்தது ரங்கசாமியின் பங்களா.

போர்ட்டிகோவில் கார் நின்றிருப்பதும், அதன் கதவுப் பிடியில் கை வைத்துபடி ரங்கசாமி யாருடனோ நின்று கொண்டே உரையாடுவதும் தெரிந்தது. மாலை வேளையாதலால் அவர், எங்கோ வெளியே புறப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்று ஊகித்தான். அவர் போன பிறகு விசாரிக்கலாம் என்ற எண்ணத்துடன் திரும்ப மெயின் ரோடுக்கு வந்தான்.

அங்கே அவனுடைய சினேகிதனொருவனின் ரேடியோ ரிப்பேர் ஷாப் இருந்தது. கௌரியைக் கண்டதும் ''கொஞ்சம் கடையைப் பார்த்துக் கொள்கிறாயா? காப்பி சாப்பிட்டு விட்டு வருகிறேன்,'' என்று சொல்லி விட்டுப போனான் அந்தச் சினேகிதன்.

அவன் அந்தண்டை போயிருக்க மாட்டான். எதிர்ச் சாரியில் ஒரு கார் வந்து நின்றது. அதை ஓட்டி வந்த பெண் சாவியைக் கழற்றி கைப் பையில் போட்டுக்கொண்டு ஒயிலாக ரோட்டைக் கடந்துவந்து, ''என் டிரான்ஸிஸ்டர் ரிப்பேர் ஆகிவிட்டதா?'' என்று கேட்டாள் தெருவில் நின்றபடியே.

அவளுடைய குரலும் அழகும் சேர்ந்து, 'எனக்குத் தெரியாது' என்று சொல்லாதபடி கௌரியைத் தடுத்து விட்டன. மாறாக ''எந்த டிரான்ஸிஸ்டர்?'' என்று கேட்டான்.

''அதோ, அதுதான். டேபிள் மீது இருக்கிறதே?'' காட்டிய வண்ணம் அவள் படியேறி உள்ளே வந்தாள்.

''உட்காருங்கள்'' என்று ஒரு மடக்கு நாற்காலியைப் பிரித்துப் போட்டான் கௌரி. பின்னர் அவள் காட்டிய டிரான்ஸிஸ்டரை எடுத்து வைத்துக்கொண்டு, வேண்டு மென்றே, ''இது நீங்கள் கொடுத்த ஸெட் மாதிரி தோன்ற வில்லையே? சுப்பிரமணியம் என்று ஒருவர் கொடுத்ததாக ஞாபகம்.'' என்றான்.

'உங்களுக்குத் தெரியாது. கடைக்காரர் வந்தால் தெரியும். நீங்கள் சும்மா உட்கார்ந்திருப்பவர் தானே!'' என்று சட்டெனச் சொல்லி விட்டாள் அவள்.

கௌரி சிரித்துவிட்டான்.

''இப்போது டெம்பரரியாய் நான்தான் முதலாளி என்று வைத்துக் கொள்ளுங்களேன். உங்கள் பெயர்?''

''ஷோபா'' என்றாள் அவள்.

சட்டென ஏற்பட்ட பரபரப்பைக் காட்டிக் கொள்ளாமல், ''ரங்கசாமி அண் கோ உரிமையாளரின் -'' என்று நிறுத்தினான்.

''டாட்டர்தான். நீங்கள்?''

''ராகவ் வீட்டு டிரைவர், ராகவ்வின் அண்ணாவிற்குப் பர்ஸனல் அஸிஸ்டண்ட். ராகவ் என்றால் தெரியுமில்லையா? ராகவ்?''

அவன் எவ்வளவுக்கெவ்வளவு கூர்மையாகப் பார்த்தானோ அவள் அவ்வளவுக்கவ்வளவு புன்சிரிப்போடு பார்த்தாள். ''நான் இன்று காலையில்தான் திருவனந்தபுரத்திலிருந்து வந்தேன். அப்பா எல்லாம் சொன்னார். ஆச்சரியமாயிருந்தது. ராகவ் என்று ஒருவரும் என்னுடன் படித்ததுமில்லை, நெருங்கிப் பழகியதுமில்லை. எதற்காக அவர் என் பெயரைக் குறிப்பிட்டுவிட்டுத் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை.''

''மிஸ் ஷோபா! யூ ஆர் வெரி க்ரூயல்!'' என்றான் கௌரி, கோபத்துடன். ''உங்கள்மீது அளவற்ற காதல் வைத்திருந்தவர் - உங்களுக்குக் கல்யாணமாகிவிட்டது என்று யாரோ கிளப்பிவிட்ட புரளியை நம்பித் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டவர் - அவர் இறந்து பத்து நாள் ஆகவில்லை. அதற்குள் இப்படி அடியோடு அவரைத் தெரியவே தெரியாதென்கிறீர்களே?''

அவளுடைய புன்னகை இப்போதும் மறையவில்லை. கோபம் கொள்ளாதவளாக, ''நான் உண்மையைத் தான் சொல்கிறேன்.'' என்றாள் அமைதியான குரலில். தனது கண்ணாடிகளை அவள் கழற்றியபோது அந்த விழிகளில் நிலவியது உண்மைதான் என்று புலப்பட்டது. கள்ளமோ, கபடமோ சிறிதும் அங்கே தெரியவில்லை.

கௌரி தடுமாறிப் போனான். ''ராகவ் என்று யாருமே உங்களுக்குத் தெரியாது?''

ஆட்காட்டி விரலை மோவாயில் வைத்துக் கொண்டு அவள் யோசனை செய்தாள்.

''ஒரே ஒருமுறை ராகவ் என்று ஒரு இளைஞரை எனக்கு அறிமுகம் செய்தார்கள். ஆனால் அது உங்கள் ராகவ்வாக இருக்க நியாயமில்லை.''

''ஏன்?''

''திரிசரண அபிமானிகள் சங்கம் என்று ஒன்று... என் சினேகிதி ஒருத்தி அழைத்துப் போயிருந்தாள். புத்தர் வழிபாடு என்றார்கள் ஏதோ தீவிரமான முறைகள் என்றார்கள். எனக்குப் பிடிக்கவில்லை. பிறகு போக வில்லை. அந்த ஒருமுறை மட்டும் அந்த ராகவ் என்பவரை அறிமுகம் செய்து வைத்தார்கள்.''

கௌரிக்குச் சுவரஸ்யம் குன்றியது. ''புத்தர் வழிபாடு... ஊகூம். ராகவ்வுக்கு அதெல்லாம் தெரியாது...''

''அன்று ஒரு துதிப் பாடல் மாதிரி ஒரு தோத்திரம் சொன்னார்கள். அது எனக்கு உச்சரிப்புப் புரியவில்லை. அந்த ராகவ் என்பவரை எழுதித் தரச் சொன்னேன்.'' அவள் தன் கை பையைத் திறந்தாள். ''அந்தத் துண்டு காகிதத்தை இன்னமும் வைத்திருக்கிறேன். நீங்கள் சொன்ன ராகவ்வின் கையெழுத்து இதுவா பாருங்கள்.''

கௌரி பார்த்தான். 'நமே தஸ்ஸ பகவதோ அரஹதோ ஸம்மஸம் புத்தஸ்ஸ' என்ற வரிகள் பேனாவினால் எழுதப்பட்டிருந்தது.

அது ராகவ்வின் கையெழுத்து மாதிரி இருந்தது. ஆனால் திரிசரண அபிமானிகள் சங்கமாவது, புத்தர் வழிபாடாவது...

''இது வேறு யாரோ ராகவ் தான்,'' என்றான் கடைசியில்.

ரேடியோக் கடைக்காரரும் வந்து விட்டார் அதற்குள்.

**வீ**டு திரும்பியபோது கௌரியின் மனம் குழம்பிக் கிடந்தது. அவள் மீதுள்ள காதலுக்காகத் தற்கொலை செய்து கொண்டதாகச் சொல்கிறான் ராகவ். இவளோ அவனைத் தெரியவே தெரியாது. என்கிறாள். பின்னே?...

''கௌரி! அவரைக் கொஞ்சம் தடுத்து நிறுத்தேன். பைத்தியம் கித்தியம் பிடித்துவிட்டதா என்ன, தெரிய வில்லையே?'' என்று கார் ஷெட்டுக்குள் வேகமாக வந்து கையைப் பிசைந்து கொண்டு புலம்பினாள் செங்கமலம்.

பானெட்டைத் திறந்து இஞ்சினைச் செக் பண்ணிக் கொண்டிருந்த கௌரி தலை நிமிர்ந்தான். ''என்ன அண்ணி, என்ன விஷயம்?''

''தோட்டத்துக்கு வந்து பாரேன். அவர் பாட்டுக்கு வெறிபிடித்தவர் மாதிரி கொத்திக் கொண்டும் வெட்டிக் கொண்டும் இருக்கிறார். நாலு நாள் ஆச்சு, ஆபீசுக்குப் போய். உனக்கே தெரியும். ஏழுமலையானே, தெய்வமே, உன் மனசிலே என்னப்பா வைத்திருக்கிறாய்?''

''அண்ணி, பதட்டப்படாமல் இருங்கள். நான் கவனிக்கிறேன்,'' என்ற கௌரி வெளியே வந்து பார்த்தான்.

பங்களாவைச் சுற்றி நான்கு பகுதிகளிலும் அழகான தோட்டம். கறிகாய்ச் செடிகள் இரண்டு பக்கம்; மலர்ச் செடிகளும் கொடிகளும் முன் பக்கம். இவ்வாறு திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்த தோட்டம் அது.

பூச்செடிகள் இருந்த பக்கத்தில்தான் உலகநாதன் வேலை செய்து கொண்டிருந்தார். தோட்டக்காரன், பயந்து போனமாதிரி தள்ளி நின்றிருந்தான்.

''நீங்கள் போங்கள், அண்ணி, நான் பக்குவமாய்ச் சொல்லி அழைத்து வருகிறேன்,'' என்று சமாதானப்படுத்தி அனுப்பினான் கௌரி. பிறகு உலகநாதனிடம் சென்றான்.

வேடிக்கையும் விளையாட்டுமாகப் பேசியே லட்சக்கணக்கில் சம்பாதித்துக் கொண்டிருந்த அந்த நல்ல மனிதர், இப்போது பஞ்சடைந்த கண்களுடன், சோகம் பூசிய முகத்துடன் காணப்பட்டார்.

''ஏன் சார், என்ன போடப் போகிறீர்கள் இங்கெல்லாம்? ரொம்ப சிரமப்பட்டுக் கொத்துகிறீர்களே?'' என்று அமைதியுடன் கேட்டான்.

''நான் ஏண்டா போட வேண்டும்? எல்லாவற்றையும் சேர்த்து அவன்தான் போட்டுவிட்டானே என் தலையில்?'' என்றார் உலகநாதன்.

''என்ன சார், திரும்பத் திரும்ப அதையே சொல்லிக் கொண்டு!'' என்று உரிமையுடன் அவரைக் கடிந்து கொண்டான் கௌரி. ''போனவன் போய்விட்டான். இனிமேல் இருக்கிறதைப் பார்க்க வேண்டியதுதான்.''

''என்னடா இருக்கிறதென்கிறாய் எனக்கு? என்ன இருக்கிறது?'' என்று வெடித்தார் உலகநாதன். ''கௌரி! ஆபீசுக்குப் போனால் அவன் உட்கார்ந்திருந்த மேஜையும் நாற்காலியும் என்னைப் பார்த்துச் சிரிக்கிறது. வீட்டுக்கு வந்தால் இந்தத் தோட்டம்! பதினைந்து வருடமாய் அவன் போட்டு வளர்த்து ஆளாக்கின தோட்டம் இது. வெட்கமில்லாமல் அவன் உரம் போட்ட கறிகாயைச் சாப்பிடுகிறேன் நான். வெட்கமில்லாமல் அவன் போட்ட செடியிலிருந்து பூப் பறித்துத் தலையில் வைத்துக் கொள்கிறாள் செங்கமலம்!'' குலுங்கிக் குலுங்கி அழலானார் அவர்.

கௌரி இருக்கிறான் என்ற தைரியமோ என்னவோ, தோட்டக்காரன் சிறிது அருகில் வந்தான். ''எஜமான்... எதை வேண்டுமானாலும் வெட்டுங்க... அதோ அந்தச் சின்னச் செடியை வெட்டாதீங்க...'' என்று சுட்டிக் காட்டினான்.

காம்பவுண்டுச் சுவர்களின் இரண்டு முனைகள் சேருமிடத்தில், அந்தச் செடி இருந்தது. அதில் ஒரே ஒரு பூ மலர்ந்திருந்தது. குட்டையான சிறிய செடி அது. செடியின் உயரத்தோடு ஒப்பிட்டால் அதன் பூ பெரிதென்றே சொல்ல வேண்டும். கையகலத்துக்கு, செக்கச் செவேலென்றிருந்தது. சாதாரண செவ்வந்தியிலேயே பெரிய அளவு என்றும் சொல்லலாம்.

''என்ன இதிலே விசேஷம்?'' என்றான் கௌரி.

''இந்தச் செடிமேலே சின்ன எசமானுக்கு ரொம்ப உயிருங்க. தெனம் இதை வந்து பார்த்துட்டே இருப்பார்.''

''தினம் இது பூக்குமா?''

''இல்லீங்க. வாரத்துக்கு ஒரே ஒரு வாட்டி, ஒரே ஒரு பூதான் பூக்கும். இதைப் பறிக்கமாட்டாருங்க. பறிக்கக் கூடாதுண்ணு சொல்லியிருக்கிறார். தானாகவே உதிர்ந்து விழுந்திடும். இதே போலவே இன்னொரு செடி தோட்டத்திலே முளைச்சிருக்குதா பாருண்ணு தெனம் சொல்லுவாருங்க. தானும் தோட்டத்திலே கவனிச்சிக் கிட்டேயிருப்பாருங்க...''

உலக நாதன் கண்களைத் துடைத்துக் கொண்டு, அந்தப் பூவைத் தொட்டுப் பார்த்துச் சொன்னார்:

''இப்பத்தான் ஞாபகம் வருகிறது... ஆறு மாசம் முந்தி ஒரு தாய்லாந்துக்காரனுக்கு இங்கே கார்டனில் பார்ட்டி

கொடுத்தோமே நினைவிருக்கிறதா? மெடூ சுங் என்று அவன் பெயர். சாப்பிட்டுக்கொண்டே உலாத்திக் கொண்டிருந்தான். இந்தப் பக்கம் நானும், அந்தப் பக்கம் அந்தக் கடன்காரனும் - ராகவ்வைத்தான் சொல்கிறேன் - அந்த தாய்லாந்துக்காரனுடன், நடக்கிறோம். திடீரென்று தாய்லாந்துக்காரன் நின்றுவிட்டான். இந்தச் செடியில் இதேபோல் அப்போதும் ஒரு பூ பூத்திருந்தது. இந்தச் செடியைப் பார்த்துவிட்டு, கிட்டே போனான். இலையைப் பார்த்தான். தண்டைப் பார்த்தான். கிளைகளை அதிசயத்துடன் திருப்பித் திருப்பிப் பார்த்தான். 'இது கல்ப புஷ்பம். பௌத்த மதத்திலும் புராணத்திலும் இதற்கு ரொம்ப முக்கியத்துவம் உண்டு' என்றான்...''

கௌரி திடுக்கிட்டான். ''என்ன சொன்னீர்கள்?''

''பௌத்தர்களின் புராணம் என்றேன்...''

கௌரி மௌனமானான்.

ஷோபா சொன்ன அந்தத் தோத்திரப் பாடல் அவனுக்கு ஞாபகம் வந்தது. 'நமோ தஸ்ஸ பகவதோ...'

பார்க்கப் பார்க்க அந்தப் பூ வளர்ந்து பெரிதாகி அந்தப் பங்களா அளவுக்கு விசுவரூபமெடுத்து அவனையே உற்று நோக்குகிறமாதிரி பிரமை ஏற்பட்டது அவனுக்கு. பூ என்று நினைக்கும்போது இனியதாக, மென்மையாக, மணமுள்ளதாக, கவர்ச்சியாக என்னவெல்லாம் தோன்றுமோ அதெல்லாம் தோன்றாததோடு, அதற்கு நேர்மாறான அச்சங்கள் தன்னுள் ஏற்படுவதை உணர்ந்தான்.

## மூன்று

''என்னவோ போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருக்கிறாயே தவிர, ஒரு தகவலும சொல்லவில்லையே? புதிதாய் ஏதாவது தெரிந்ததா?'' என்று உலகநாதன் கேட்டார்.

''இல்லை சார்,'' என்று சுருக்கமாக அவருக்குப் பதிலளித்து விட்டு, அந்தக் கல்ப புஷ்பத்தையே பார்த்த வாறு நின்றிருந்தான் கௌரி. பௌத்தர்களின் வழிபாட்டுக் கூட்டமொன்றில் பார்த்ததாகவும தோத்திரம் எழுதித் தந்ததாகவும் ஷோபா சொன்னது, கடைசியில் நம் ராகவ் தானோ?

அவன் எண்ணங்களை மீண்டும் வெட்டினார் உலகநாதன். ''நான் சொல்கிறேன், கேள். நிச்சயமாய் அந்த ரங்கசாமியின் பெண்ணினால்தான் இந்தப் பாவி உயிரை விட்டிருக்கிறான். எனக்கு சந்தேகமில்லை. கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சுகிறார் அந்த மனிதர் என்பதற்காக விட்டுவிடுவதா? ஒரு நாளுமில்லை...''

''சார், உங்கள் தம்பியின் ரூம் பூட்டித்தானே வைத்திருக்கிறீர்கள்?'' என்றான் கௌரி.

''அதைத்தான் போலீஸ்காரர்கள் காலோடு தலை புரட்டிவிட்டுப் போய்விட்டார்களே? ஏன், அங்கே ஏதாவது பார்க்க வேண்டுமா?''

''ஆமாம் சார்.''

''வா.'' பங்களாவினுள் சென்றார் உலகநாதன்.

கௌரி தன் கைக்குட்டையை எடுத்துத் தோட்டக் காரனிடம் தந்து, ''அந்தக் குழாயில் நனைத்துக் கொண்டு வா,'' என்றான்.

சொட்டச் சொட்டக் கொண்டுவந்து கொடுத்த கைக் குட்டையை ஒட்டப் பிழிந்தான் கௌரி. செடியிலிருந்து அந்தப் பூவைக் காம்போடு கிள்ளினான்.

''சாமி!'' என்று பதறிப் போய்த் தோட்டக்காரன் தடுக்குமுன் அந்தப் பூவை ஈரக் கைக்குட்டையில் சுற்றிப் பையில் வைத்துக் கொண்டு விட்டான் கௌரி.

''சாமி! அந்தப் பூவை - ஐயையோ! அதைப் பறிக்கவே கூடாதுண்ணு சொல்லியிருக்காருங்க சின்ன எசமான். ரொம்பக் கெடுதல் - ரொம்பப் பாவம்ணு சொன்னாருங்க...''

''பயப்படாதே. உனக்கு ஒன்றும் ஆகாது. எனக்கு ஏதாவது நேர்ந்தால் நான் பார்த்துக் கொள்கிறேன்.'' என்று தைரியம் சொல்லிவிட்டு, மாடிக்குச் சென்றான் கௌரி.

ராகவ்வின் அறையைத் திறந்து விட்டுப் பூட்டும் கையுமாக வெளியிலேயே நின்றிருந்தார் உலகநாதன். ''உள்ளே வந்தால் என் இருதயம் வெடித்து விடுமப்பா,'' என்று சொன்னாரெனினும், கௌரி நுழைந்த பின் தானும் நுழைந்தார்.

படிப்புக்காக ஓர் அறையும். அடுத்துப் படுக்கை யறையும் கொண்டிருந்த போர்ஷன் அது. படிக்கும் அறையில், ஷெல்புகளில் வரிசை வரிசையாகப் புத்தகங்கள் இருந்தன.

''எல்லாம் ஸெட் ஸெட்டாகத்தான் வாங்க வேண்டும் அவனுக்கு!'' கன்னங்களில் கண்ணீர் வழிய, தம்பியையே தடவிக் கொடுப்பது போலப் பாசத்துடன் அந்தப் புத்தக வரிசையைத் தடவிக் கொண்டே பேசினார் உலகநாதன். ''இதோ, இந்த ஷேக்ஸ்பியர் செட் - கல்கத்தாவிலிருந்து வரவழைத்தான். ஆயிரத்தைந்நூறு ரூபாய். இந்தக் கம்ப

ராமாயணம் - 'எதற்கடா புதிதாய்? என்னிடம் இருக்கிறது. தருகிறேன்' என்றேன். ஊகூம். புதிய செட்தான் வேண்டும் என்று வாங்கினான்...''

''இங்கே இருந்தால் உங்களுக்குத் துக்கம் அதிகமாகிக் கொண்டே போகும். நீங்கள் போங்கள். நான் எல்லா வற்றையும் பார்த்துவிட்டு வருகிறேன்,'' என்று கௌரி வற்புறுத்திச் சொன்னதன் பேரில் அவர் வெளியேறினார்.

ஸ்டீல் மேஜைக்கு நாலு டிராயர்கள் இருந்தன. ஒவ்வொன்றையும் திறந்தான். பரிசோதித்தான்.

புத்தகங்களையும் நோட்டுப் புத்தகங்களையும் புரட்டிப் புரட்டிப் பார்த்தான். பௌத்த மதத்தைப் பற்றி ஒரு புத்தகமோ, துண்டுப் பிரசுரமோ, கடிதமோ எதுவும் அகப்படவில்லை.

கட்டிலில் விரித்தபடியே இருந்த மெத்தையின் உறைகளுக்குள் கையை நுழைத்துத் தடவினான். தலையணைகளை எடுத்து உதறுகையில் -

யாரோ கதவைத் திறக்கும் சப்தம் கேட்டது.

செங்கமலம்தான்.

திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே உள்ளே வந்தவள், ''கௌரி!'' என்றாள் கிசுகிசுத்த குரலில். அவள் முகத்தில் கலவரம் படிந்திருந்தது.

''என்ன அண்ணி? என்ன விஷயம்?''

''கௌரி! ஒரு தப்புப் பண்ணிவிட்டேன். யார் கிட்டேயும் சொல்லப் பயமாயிருக்கிறது...''

அவளுடைய கலக்கத்தைப் போக்குவதற்காக, ''என்ன அண்ணி அப்படி? சாம்பாரில் வெல்லம் போட்டு

*விட்டீர்களா? அல்லது சர்க்கரையையும் ரவையையும்*
¿Ú ÍÛ õ ¨ ¡ Þ¿½G?''Mª ïGª ³¿½Á zÁ{Ûë³¿Gå ó~.

''õ i½NG~Góñ, ³¿½Á.M] ëÏ ¤ë ¤ë³¿ª x
µ Èëy ïÛ.''

Å~i Q{ ñi ÚøÅëÏ ò p Qò Mi ñóNG®i ï{Û
i Q{Ûë ³¿Gå cÈøài ñ p øóàGÛñGª ¿Q> {ñGª
³¿½Á.

''ä ] ëÏ {ñGª ³ñÁOó®? MËQ½óQG ñ~i Q
àGÞ{¤Èëy ïG¢. ÒG¿Ë î ëÏ Mª > ~u ³¿Gò i½ø
\Ó¤.èGª MÛ ó¿¨~G¦ u ³¿Gn {Ûõ n Q GÞ.M] ëÏ
±È Ä i W Mª ïG¬. á§ i Òë ³¿Gn {ñGQ Û p i ñ
Öi ïóQ÷ô i Q øàGÞ...''

³¿½Á ³àGx i ®O~ª, ''Ä ®Gu. Ä ®Gu.'
Mª ïGª.

''þ øàcøà¨~Q Þ µ i ñ ®¨nu fª
³¿Gn ë¿®G¨ ó~ª Mª ïGóÒG³ñÁNõ ¬i Ú.''Å~i Q{
ñi ÚøÅëÏ ò i È ÍÛ Mn {Ûë ¿G¨ c ] Gò ³WK¿®Úu.

p Û ±È Å{ñÞ àÛ i ®. ñÍñ{¤óÚ ³W¢ñÛ.
¿å i J ë¿QÈuóQ i ÚøàGn .à{®GW] {¤¬ p ®ÞÍñ
Öi Ú§¬ i ¿¿ì Òå i ~Ou ó¿G{Û ®c§¬ i Q {ñàc,
WÞQ {i ñOu Ûïíñ ñQë ó¿GÚ {¤¬ µ È ÍñGÞ
óàG¤®Ò{Ûb³W¬Qª.

E ª ïKÏÚ á§ ÒÌ È Íñ p Íñø àÛ i ®i Në
i ¿§¬ Q GKÏu óàGÛ ³¿½ÁëÏø Å¬ÚÁ{ñÛ.ñª
\ÒÌ øi à ³Q ì ë¿G¨ ~G®¬, ''ÒG¿Ë i Q {¤ÈÍñG] G
µ i ñ?''Mª ïGª.

''ஆமாம். மூன்று மாதம் முன்பு ஒருநாள் வெளியே போய்விட்டு வந்தபோது இதை வாங்கி வந்தார். இங்கே - இந்த ஸ்டாண்டில் வைத்த போது நான் பார்த்துவிட்டேன். 'எவ்வளவு அழகாயிருக்கிறது! நான் என் ரூமில் வைத்துக் கொள்கிறனே' என்றேன். 'ஸாரி அண்ணி!' என்று நறுக் கென்று என் கையிலிருந்து பறித்துக் கொண்டுவிட்டார்.''

''அப்புறம்?''

''போன மாசம் ஒருநாள் விடிகாலையிலே எதற்காகவோ இந்தப் பக்கம் வந்தேன். ஐந்து மணி இருக்கும். உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஜன்னல் வழியாய்ப் பார்த்தேன். என்ன பண்ணிக் கொண்டிருந்தார் என்று நினைக்கிறாய்?''

''என்ன பண்ணிக் கொண்டிருந்தார்?''

''இந்தப் பொம்மையைத் தரையில் வைத்துக் கொண்டு, இதன் எதிரிலேயே, இதே போலக் கையைக் காலைக் கட்டிக் கொண்டு தியானம் பண்ணுகிற மாதிரி உட்கார்ந்திருந்தார். அந்த மாதிரி அவர் உட்கார்ந்திருந்து நான் பார்த்தது கிடையாது. பயமாயிருந்தது. போய்விட்டேன்.''

''இதை எப்போது எடுத்துக் கொண்டு போனீர்கள்?''

''எல்லாக் கண்ணராவியும் நடந்ததே அதற்கு மறுநாள். ஆனால் இதை எடுத்துக் கொண்டு போனதி லிருந்து எனக்கு மனசில் நிம்மதியே இல்லை. ராத்திரி பூரா கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருக்கிறேன். துளித் தூக்கமில்லை. வெளியே எறியவும் மனசில்லை. திருப்பிக் கொண்டுவந்து வைக்கலாமென்றால் ரூமைப் பூட்டிச் சாவியை அவர் வைத்துக் கொண்டிருக்கிறார். இந்தாப்பா, அங்கேயே வைத்துவிடு.''

வந்தது போலவே அவசரமாகத் திரும்பிவிட்டாள் செங்கமலம்.

அந்தத் தந்தப் பதுமையைத் திருப்பித் திருப்பித் பார்த்தான் கௌரி. பீடத்தின் கீழே பார்த்தான். 'திரிசரண அபிமானிகள் சங்கம்' என்ற எழுத்து, பொடிப் பொடியாய்த் தெரிந்தது.

மயிலாப்பூர் குளத்தங்கரையில் கோபுரவாசலுக்கு நேர் எதிரே கௌரி பஸ்ஸை விட்டு இறங்கியபோது தெருவெல்லாம் ஜே ஜே என்றிருந்தது. கற்பகாம்பிகை நித்திய கல்யாணி. என்றைக்குத்தான் மாட வீதிகளில் கூட்டமிருந்ததில்லை!

இடது கைப்புறமாகத் திரும்பினான். கீரைகளும், புடலங்காய்களும் அவன் மீது உரச, பழ வியாபாரிகளின் கூச்சல்கள் காதைச் செவிடுபடுத்த, கறிகாய்க் கடைகளைத் தாண்டி நேரே சென்றான்.

உலகநாதனின் குரல் ஏனோ திடீரென்று அவன் காதில் ஒலித்தது. 'அந்த ரங்கசாமியின் பெண்ணினால்தான் ராகவ் உயிரை விட்டிருக்கிறான்...''

யோசித்துக் கொண்டே நடந்தவன். ஏறத்தாழ ஷோபாவின் தெருவுக்கே வந்து விட்டதை உணர்ந்து நின்றான்.

நின்ற இடத்தில் ஒரு டெலிபோன் கூண்டு இருந்தது.

டைரக்டரியில் ரங்கசாமியின் வீட்டு நம்பரைப் பார்த்துக் கொண்டு டயல் செய்தான்.

''ஹலோ,'' என்றாள் ஷோபா சில வினாடிகளில்.

குரலை மாற்றிக் கொண்டு பேசுவது சிரமமா யிருந்தது. இருந்தாலும் சமாளித்தான். ''ஷோபா, ஒரு அவசரமான விஷயம். கேள்.''

''யார் நீங்கள்?''

''நாய் யாரென்பது உனக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை. உன் நன்மைக்காகச் சொல்கிறேன். ராகவ் எழுதின கடிதங்களை வைத்துக் கொண்டிருக்காதே. கிழித்துப் போட்டுவிடு. இன்று ராத்திரியே செய். என்ன?''

''நான்ஸென்ஸ்! எனக்கு ஒருத்தரையும் தெரியாது. நீங்கள் ராங் நம்பரைக் கூப்பிட்டிருக்கிறீர்கள்.''

''ஷோபா -'' என்று கௌரி மேலே சொல்லுமுன் மறுமுனையில் போன் வைக்கப்பட்டு விட்டது.

புன்னகையுடன் வெளியே வந்து டெலிபோன் கூண்டின் கதவைச் சாத்தினான்.

அவளுடைய மறுப்பு, தன்னிச்சையாக, மனப்பூர்வ மாக வந்ததே தவிர, சிறிதும் யோசிப்பதாகவோ தயங்குவதாகவோ பிறகு நடிப்பதாகவோ தோன்றிவில்லை. 'சரி, கிழித்துப் போட்டு விடுகிறேன்' என்றோ, 'அவர் எனக்குக் கடிதம் எதுவும் எழுதியது கிடையாதே?' என்றோ அவள் பதிலளிக்கவில்லை.

ஆகவே ராகவ்வுக்கும் அவளுக்கும் தொடர்பு இருந்திருக்காது என்றுதான் தோன்றுகிறது...

வேண்டுமென்றே சற்று நேரம் கடத்துவதற்காக இரண்டு தெருக்களைச் சுற்றிக் கொண்டு சென்று ஷோபாவின் வீட்டை அடைந்தான்.

முன் வெராந்தாவில் ஒரு பிரம்பு நாற்காலியில் சாய்ந்து கொண்டு இன்னொரு பிரம்பு நாற்காலியில்

காலைத் தூக்கிப் போட்டுக் கொண்டு ஃபெமினாவைப் படித்துக் கொண்டிருந்தாள் அவள். துவளும் புடவையின் மடிப்புகள் மொஸைக் தரையைத் தடவிக்கொண்டிருந்தன. அருகில் சிறிய நாய்க் குட்டி ஒன்று படுத்திருந்தது. அதைத் தட்டிக் கொடுத்துக் கொண்டே படிப்பதில் ஈடு பட்டிருந்தாள்.

காலடியோசை கேட்டதும் சட்டென அவள் எழுந்து கொண்டாள். ''ஓ! நீங்களா!'' என்றபோது முகத்தில் தோன்றிய திகைப்பைப் புன்சிரிப்பு மறைத்தது.

அவள் காலைப் போட்டுக் கொண்டிருந்த நாற்காலி யில் அமர்ந்து கொண்டான் அவன்.

''டிரான்ஸிஸ்டர் வந்துவிட்டதா?''

''அன்றைக்கே வாங்கி வந்து விட்டேன். அதைப் பற்றி விசாரிப்பதற்காகவா வந்தீர்கள்?''

''இல்லை,'' என்று ஒப்புக் கொண்டான் கௌரி. ''ராகவ்வின் மரணத்தைப் பற்றி நான் விசாரித்துக் கொண்டிருக்கிறேன். அதற்கு உங்கள் உதவி தேவை.''

''எவ்வளவு வேண்டுமானாலும் நான் உதவத் தயார். ஆனால் உதவி கொடுக்கிறவருக்கும் உதவி பெறுகிறவருக்கு மிடையே பரஸ்பர நம்பிக்கை இருக்க வேண்டும். அது இல்லாத போது என்ன உதவி செய்து என்ன பயன்?''

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? எனக்கு உங்கள் மீது நம்பிக்கை இல்லாதிருந்தால், நான் மறுபடி உங்களைத் தேடி வருவேனா?''

''வந்தவர் நேரே வந்திருக்கலாமே? - டெலிபோன் கூண்டில் புகுந்து, குரலை மாற்றிக் கொண்டு பேசாமல்.''

அசந்து போனான் கௌரி. ''டெலிபோன் கூண்டா? எந்த டெலிபோன்?''

''இந்தத் தெருக் கோடியில் இருக்கிறதே அதே கூண்டுதான். அடையாளம் சொல்லட்டுமா? சிவப்புப் பெயிண்ட் அடித்திருக்கும். இன்று காலையில்தான் அடித்தார்கள். என்ன மாதிரி சிவப்பு என்கிறீர்களா? உங்கள் கையில் விரல் நுனிகளில் ஒட்டியிருக்கிறதே, அதே சிவப்பு.''

கையைப் பார்த்துக் கொண்டான் கௌரி. ''அட! என்னைக் காட்டிலும் பெரிய புலிதான் நீங்கள்!'' என்று அசட்டுச் சிரிப்புடன் சொல்லிவிட்டு அவளைப் பார்த்த போது, அவள் சிரித்துக் கொண்டிருக்கவில்லை.

அவளது விழி முனைகளில் ஈரம் கோத்து நின்றது. ''மிஸ்டர் கௌரி! அன்று நீங்கள் புறப்பட்டுப் போன பிற்பாடு அந்த ரேடியோக் கடைக்காரர் உங்களைப் பற்றி நிறையச் சொன்னார். இரண்டு வார்த்தைதான் நாம் பேசியிருந்தோமென்றாலும் எனக்கு உங்களிடம் ஒரு மதிப்பு ஏற்பட்டிருந்தது. ராகவ் என்பவரைப் பற்றி எனக்குத் தெரிந்ததை மறைக்காமல், உங்களிடம் உண்மையைச் சொன்னோம் என்று திருப்திப்பட்டிருந்தேன். ஆனால் என்னை நீங்கள் நம்பவில்லை. ரகசியமாய் என்னை வேவு பார்த்திருக்கிறீர்கள். எனக்கு ரொம்ப வருத்தமாயிருக்கிறது...'' அவள் குரல் தழுதழுத்துக் கொண்டே போயிற்று.

''ஷோபா... ஸாரி. ஐ டின்ட் மீன் இட். வந்து...''

''அந்த ராகவ்வுக்கும் எனக்கும் எந்த விதமான சம்பந்தமும் கிடையாது. இருந்தாலும் என் பெயரைச் சொல்லிவிட்டு உயிரை விட்டிருக்கிறார் அவர். அன்று

முதல் அந்த ராகவ்விடம் எனக்கு ஒருவித... ஒருவித அந்தரங்கமான பந்தம் ஏற்பட்டுவிட்ட மாதிரி இருக்கிறது...''

அவளுடைய அழகிய நயனங்கள் கௌரியின் உள்ளத்தில் புகுந்து கொண்டு விட்டன. எப்படிப்பட்ட சூழ்நிலையிலும், எத்தகைய அபாயத்தின் போதும் இவளைத் தன் கூட்டாளியாகக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை வலுவாக அவனது இதயத்தில் வேரூன்றியது. அவள் பேசும்போது தென்பட்ட அந்த குழந்தைத்தனமான உச்சரிப்பு அவனிடம் ஒரு நெகிழ்ச்சியை உண்டு பண்ணியது.

''அன்றொரு நாள் பௌத்தர்கள் கூட்டத்தில் ஒரே ஒரு முறை பார்த்ததாகச் சொன்னீர்களே, மிஸ் ஷோபா...''

''அவர் உங்கள் நண்பர் ராகவ்தானா?''

''ஆமாம். ஒரே ஒரு தடவை நீங்கள் சந்தித்த அந்த ராகவ்தான் - என் சிநேகிதன் ராகவ் - இறந்து போன ராகவ். அன்று நீங்கள் சொன்ன போது ராகவ்வாவது பௌத்தர்கள் கூட்டத்துக்குப் போவதாவது என்று நினைத்தேன். ஆனால் அவனுக்கு அதில் சம்பந்தம் உண்டு என்று தெரிகிறது.'' ஈரக் கைக் குட்டையில் சுற்றி வைத்திருந்த பூவை எடுத்துக் காட்டினான் அவளிடம். ''இந்தப் பூ - இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?''

விரல் நுனிகளில் பிடித்துக் கொண்டு அச்சத்துடன் பார்த்தாள் அவள். பிறகு முகர்ந்து பார்த்தாள். ''ரொம்ப வித்தியாசமான வாசனையாக இருக்கிறதே? என்ன விசேஷம் இந்தப் பூவில்?''

''அதைக் கண்டு பிடிக்கத்தான் வந்தேன்.'' என்றான் கௌரி. ''கல்ப புஷ்பம் என்று இதற்குப் பெயர். இதில் என்ன விசேஷம் என்பதை அறியக் கூடிய ஒரே இடம் -''

''ஒரே இடம்?''

''அந்தத் திரிசரண அபிமானிகள் சங்கம். எப்போது என்னை அங்கே அழைத்துப் போகிறீர்கள்?'' கேட்டு விட்டு அவள் முகத்தைப் பார்த்தான் கௌரி.

## நான்கு

பரங்கிமலைக் குன்றின் உச்சியை சூரியனின் முதல் கிரணங்கள் தொட்டுக் கொண்டிருந்தன. அங்கு கன்னங்கரேலென்ற சலவைக் கல்லில் கட்டப்பட்டிருந்த ஒரு கட்டிடம் விடிகாலைப் போதின் குளிர்ச்சியினால் தொட்ட இடமெல்லாம் சிலீரென்றிருந்தது. ஓங்கி உயர்ந்த மாடங்களிலிருந்து குருவிகள் பறந்து வந்து லஸ்தர் விளக்குகளின் மேல் அமர்ந்து கிணுகிணுவென்று நாதமெழுப்பின.

நூற்றுக்கணக்கான பேர்கள் வசதியாகத் தங்கியிருக்கக் கூடிய அந்தப் பிரம்மாண்டமான கட்டிடத்தில் மொத்தம் எட்டுப் பேர்கள் தான் இருந்தனர். பின்புறமிருந்த குளத்தில் அவர்கள் தங்களுடைய உடைகளைத் துவைக்கும் ஓசையைத் தவிர வேறெந்த ஓசையும் கேட்கக் காணோம். அந்தக் குளம் இயற்கையான சுனையைப் போல் தோற்றமளித்தாலும், கீழே இருந்த பெரும் குழாய்களிலிருந்து அதற்கு நீர் வருவது ஊன்றிப் பார்த்தால் தெரியும்.

தாழ்வாரத்தின் கடைசியிலிருந்து அறை வாசலை நோக்கிச் சென்றார் ஒரு குள்ளமான மனிதர். அறை வாசலில்

நின்றபடி, ''ஐயா அவர்கள் குளிக்க வரலாம்,'' என்றார் பணிவான குரலில்.

அறைக்குள்ளிருந்து ''யார் ரத்னமா? கீர்த்திசிங்கா எழுந்தாயிற்று. இதோ குளிப்பதற்கு வருவான்,'' என்ற குரல் கேட்டது. சொன்னவர் கீர்த்தி சிங்காதான். நான் வருகிறேன். நான் போகிறேன் என்று சொல்லாமல், கிர்த்திசிங்கா வருகிறான், கீர்த்திசிங்கா போகிறான் என்றுதான் தன்னைப் பற்றிக் குறிப்பிடுவது அவர் வழக்கம்.

சட்டென ஓரமாக ஒதுங்கிக் கொண்டார் குள்ளமானவர். உள்ளே இருந்து வருகிறவரின் நேர் பார்வையில் படுவதற்கு அஞ்சியவர் போல், கைகளை மார்பின் மீது கட்டிக் கொண்டு நிலத்தை நோக்கித் தன் கண்களைத் தாழ்த்திக் கொண்டார்.

மரத்தாலான பாதரட்சைகள் கருங்கல் தரையில் மோதிக் கடக் கடக்கென்று ஒலியெழுப்ப, கீர்த்திசிங்கா வெளியே வந்தார்.

பார்த்த மாத்திரத்திலேயே பிரமிக்க வைக்கும் ஆறரை அடி உயரம். பாலிஷ் செய்யப்பட்ட சந்தனக் கட்டை போன்ற பளபளப்பான நிறம். கிரேக்கச் சிற்பத்தில் இருப்பது போல் தீர்க்கமான மூக்கு. அடர்ந்த புருவங்கள். அவற்றின் கீழே தீப்பந்தம் போல் ஜொலிக்கும் சிவப்பு நிறமான கண்கள். அவரது மணிக்கட்டிலும் விரல்களிலும் ஏற்பட்டிருந்த சுருக்கங்கள் அவர் வயது ஐம்பதுக்கு மேலிருக்கும் என்று காட்டிய போதிலும், மஞ்சள் உடைக்குள் திரண்டு புடைத்திருந்த தோளையும் மார்பையும் பார்க்கும் போது திட காத்திரமான வாலிபரோ என எண்ண வைத்தது. இளநகையொன்று அவர் இதழ்களில் எப்போதும் தவழ்ந்த போதிலும், அது, காணுவோரின்

நெஞ்சில் நெகிழ்ச்சிக்குப் பதில் அச்சத்தையே ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது.

''இன்று எழுந்திருக்கும் போதே நமக்கு இரண்டு சோதனைகள் வந்தன,'' என்றார் ரத்னம்.

கீர்த்திசிங்காவின் புருவம் மட்டுமே உயர்ந்தது. ''என்ன?'' என்று வாய் திறந்து அவர் கேட்கவில்லை.

''யாரோ டெலிபோன் செய்தார்கள். ஒரு புத்தகம் வேண்டுமாம். கொஞ்ச நேரம் நான் தடுமாறிப் போய் விட்டேன்.'' என்றார்.

''இதற்காகத்தான் உனக்குக் கீர்த்திசிங்கா அடிக்கடி சொல்கிறான். என்ன வேடம் போடுகிறாயோ அதைப் பற்றிக் கொஞ்சம் கொஞ்சமாவது தெரிந்து கொள் என்று. போகட்டும். என்ன புத்தகம்?''

''மகாமங்கல சுத்தம் என்று ஒரு நூலாம்... பௌத்த மதத்தவர்கள் ரொம்ப மதிக்கும் புத்தகமாம். அதன் தமிழ் மொழி பெயர்ப்பு நாம் வெளியிட்டிருக்கிறோமா என்று கேட்டான்.''

ஹாஹ்ஹாஹா என்று இடுப்பைப் பிடித்துக் கொண்டு நகைத்தார் கீர்த்திசிங்கா. அந்த இடிச் சிரிப்பு, உயர்ந்த தூண்களில் மோதிக் கொண்டிருக்கையில், ரத்னம் குறுக்கிட்டு, ''அது எங்கே கிடைக்கும் என்றாவது சொல்ல முடியுமா என்றான். ஏதோ மழுப்பிச் சமாளித்து விட்டேன்!'' என்றார்.

''இரண்டு சோதனைகள் என்றாயே, இரண்டாவது என்ன?'' என்று தமது சிரிப்பை நிறுத்தாமலே வினவினார் கீர்த்திசிங்கா.

''இங்கே நம்முடன் சேர்ந்து கொள்ள வேண்டும் என்று நிஜமாகவே இரண்டு புத்த பிட்சுக்கள் கயாவிலிருந்து வருகிறார்கள்!''

கீர்த்திசிங்காவின் சிரிப்பு மறைந்தது. முகத்தில் கடுமை பரவியது. ''முட்டாள்கள்! நாம் எதற்காக இங்கே இருக்கிறோம், என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை அறியாத அப்பாவிகள்! அனாவசியமாய்க் குறுக்கிட்டு, நமது வேலையை கெடுக்கிறார்கள்!'' என்று உறுமிய வண்ணம் குறுக்கும் நெடுக்குமாக நடந்தவர், சட்டென்று நின்றார். ''சரி, மற்றவர்களிடமும் எச்சரிக்கை செய்யுங்கள். வருகிறவர்களுக்குத் துளியும் சந்தேகம் ஏற்படாதபடி எல்லா ஏற்பாடுகளும் நடக்கட்டும். பழைய ஒத்திகைகள் நினைவிருக்கிறதல்லவா?''

''இருக்கிறது ஐயா,'' என்று பதிலளித்த ரத்னம் விரைவாகக் குளத்தை நோக்கிச் சென்றார்.

பின் மௌனமாகத் தன் தலைவர் சொல்வதை யெல்லாம் கேட்டுக் கொண்டே அவருக்கான உதவிகளைச் செய்து கொண்டிருந்தார்.

சபை கூடியிருந்தது.

ஒரு ஹாலில் ரத்தினக் கம்பளம் விரித்து, மெல்லிய திண்டுகள் போடப்பட்டிருந்தன. தலைவர் கீர்த்திசிங்காவுக் கான ஆசனம் அது. அவருக்கு வலமாகவும் இடமாகவும் மெல்லிய நீண்ட கோரைப் பாய் விரிக்கப்பட்டிருந்தது. இடது புறம் நால்வரும், வலது புறம் நால்வருமாக மொத்தம் எட்டுப் பேர் இருந்தனர். அனைவரும் மஞ்சள் உடை தரித்திருந்தார்கள்.

கீர்த்திசிங்காவின் காலடி ஓசை கேட்டதுமே அவர்கள் எழுந்து நின்று கொண்டனர். அமருங்கள் என்று அவர் சாடை காட்டிவிட்டுத் தமது இடத்தில் உட்கார்ந்த பின்னர், ஒவ்வொருவராக அவர் முன்னிலையில் வந்து, மண்டியிட்டுச் சிரம் தாழ்த்தி வணங்கி விட்டுத் தங்கள் இருக்கைக்குத் திரும்பினார்கள்.

அந்தச் சிறிய சலசலப்பைத் தவிர வேறு ஓசைகள் அங்கே எழவில்லை. எட்டத்தில் ஒரு பீடத்தின்மீது எரிந்து கொண்டிருந்த ஊதுவத்தியின் புகை கூட அஞ்சி அஞ்சி ஒதுங்குவது போல் வெளியேறிக் கொண்டிருந்தது திறந்திருந்த சாளரங்களின் வழியாக.

இடது வரிசையின் கடைசியில் உட்கார்ந்திருந்தவர், தலைவரின் முன்னே வந்து, பணிவோடு வாய்பொத்தி, "குருநாதரே! தங்களுக்கு இன்று பிறந்த நாள். வாழ்த்துத் தந்தி வந்திருக்கிறது ஹாங்காங்கிலிருந்து," என்று கூறி, தந்திக் காகிதத்தைச் சேர்ப்பித்தார்.

"வருமென்று நேற்றே கீர்த்திசிங்காவுக்குத் தெரியும்." புன்சிரிப்புடன் அவர் காகிதத்தைப் பிரித்தார். "அஜாதம், அஜரம், அமதம் ஆகிய மூன்று விடுதலைகளும் தங்களுக்கு ஏற்படுவதாக!" என்று படித்தார். "ஆம். பிறப்பிலிருந்து விடுதலை; மூப்பிலிருந்து விடுதலை; இறப்பிலிருந்து விடுதலை - இம்மூன்றையும் எந்த உண்மையான பௌத்தன் தான் விரும்ப மாட்டான்?" என்று சொல்லிவிட்டு, ரத்னத்தை அருகில் அழைத்தார். "இதை நமது புராதன மொழியில் மொழி பெயர்த்து எடுத்து வரச் சொல்லுங்கள்," என்று தந்தியைக் கொடுத்தார்.

பிறகு அவர் குரல் உரக்க எழும்பியது: "உபாகரே, இன்று இரு புதிய நபர்கள் சங்கத்தில் சேர வருவதாகக் கீர்த்திசிங்கா கேள்விப்பட்டானே?"

உபாகர் என்பவர் எழுந்து நின்று, ''வந்திருக்கிறார்கள், ஐயனே!'' என்றார்.

''அழைத்து வாருங்கள்.''

குளத்தில் நீராடிவிட்டு ஈர உடையிலிருந்த இரண்டு பேரை உபாகர் அழைத்து வந்தார்.

வந்தவர்களில் முதல்வர் மூன்று முறை வணங்கினார்.

''குருநாதரே! சங்கத்தில் என்னை ஒரு சீடராகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். மீண்டும் வேண்டுகிறேன். சங்கத்தில் என்னை ஒரு சீடனாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். மூன்றாம் முறை வேண்டுகிறேன். சங்கத்தில் என்னை ஒரு சீடனாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதோ என்னுடைய மஞ்சள் உடைகள். என் மீது கருணை கூர்ந்து, நிர்வாண மார்க்கத்தைக் காட்டுங்கள்.'' என்று ஒவ்வொரு வாக்கியத்தையும் மூன்று முறை திருப்பித் திருப்பிச் சொன்னார். பின்னர் அதேபோல் இரண்டாமவரும் சொன்னார்.

கீர்த்திசிங்கா எழுந்திருந்தார். மஞ்சள் உடைகளைப் பெற்றுக் கொண்டு அவர்களிடம் தந்தார். அதிலிருந்து மஞ்சள் நாடாவை அவர்கள் கழுத்தைச் சுற்றிக் கட்டும் போது, 'கேசா, லோமா நகா, தந்தா, தசோ - தசோ, தந்தா, நகா, லோமா, கேசா' என்று தசபஞ்சகத்தை அவர் வாய் உச்சரித்துக் கொண்டிருந்தது. கண்கள் தன் சகாக்களைத் தந்திரமாகப் பார்த்தன.

புதியவர்கள் எழுந்து கொண்டனர். தாங்கள் அணிந்திருந்த பழைய ஆடைகளைக் களைந்து, மூட்டையாகக் கட்டி, சாளரத்துக்கு வெளியே எறிந்தனர். புதிய மஞ்சள் உடையைத் தரித்துக் கொண்டு திரும்பி வந்தனர்.

''ஊம்... சொல்லுங்கள்!'' என்று கூறிவிட்டு, ''புத்தம் சரணம் கச்சாமி. தம்மம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி,'' என்று மூன்று முறை திருப்பித் திருப்பிச் சொல்ல, அவர்களும் சொன்னார்கள்.

அவையிலிருந்தவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர் ரகசியமாக. தலைவர் என்னதான் செய்யப் போகிறார்? சடங்கு நீண்டு கொண்டே போகிறதே?

இடமிருந்து ஒருவரும், வலமிருந்து ஒருவருமாக இருவர் எழுந்து சென்று அவருக்கு இரு பக்கமும் நின்று கொண்டார்கள். பிட்சை ஏற்க வேண்டிய திருவோட்டை அவர்கள் முதுகில் கட்டினார்கள்.

கீர்த்திசிங்கா கூறினார் புதியவர்களில் ஒருவரைப் பார்த்து:

''கேள், சகோதரனே! இது நீ உண்மை சொல்ல வேண்டிய இடம். உண்மை சொல்ல வேண்டிய நேரம். அவையினர் கேட்கும் கேள்விகளுக்கு உண்மையான பதில்களைச் சொல்லு. எதற்கும் தயங்கக்கூடாது. எதையும் மறைக்கக்கூடாது.''

''அப்படியே ஐயனே!''

''உனக்கு புத்த மடத்தில் சேரும் முறைகள் எப்படித் தெரிந்தன?''

''நாங்கள் கயாவில் பலநாள் இருந்தோம், ஐயனே!''

''உனக்கு ஏதேனும் நோய் உண்டா?''

''இல்லை, ஐயனே!''

''தொழுநோய் உண்டா?''

''இல்லை, ஐயனே,''

''கொப்புளங்கள் உண்டா?''

''இல்லை, ஐயனே.''

''வலிப்பு நோய் உண்டா?''

''இல்லை, ஐயனே,''

''சுவாசக் கோளறுகள் உண்டா?''

''இல்லை, ஐயனே.''

இவ்வாறு இருவரையும் தனித்தனியே கேள்வி கேட்ட வண்ணம் இருந்தார் கீர்த்திசிங்கா. அவரது கூரிய பார்வை புதியவர்களின் மீதே நிலை பெற்றிருந்தது. இறுதியில் அவர் பேசலானார்.

''சகோதரர்களே, உங்களைச் சங்கத்தில் சேர்த்தாயிற்று. குளத்துக்குச் சென்று ஸ்நானம் செய்துவிட்டு வாருங்கள்.''

இருவரில் ஒருவர் உடனே குறுக்கிட்டு ''ஒருமுறை நீராடுவது தானே மரபு?'' என்றார்.

''கீர்த்திசிங்காவுக்கும் அது தெரியும்,'' என்று முறுவல் தவழப் பதிலளித்தார் கீர்த்திசிங்கா.

''ரத்னம், நீங்கள் பின்னால் செல்லுங்கள்,'' என்ற கட்டளை பிறந்தது அவரிடமிருந்து.

சில நிமிடங்கள்தான் சென்றிருக்கும்.

வெளியே பல விசித்திரமான ஒலிகள் கேட்டன. ''அடடா! ஏன் இப்படி?'' என்ற ரத்னத்தின் குரலும் ஒலித்தது.

பரபரவென்று மற்றவர்கள் எழுந்திருக்க முனைந்ததும், ''அமைதி!'' என்று கையமர்த்தினார் கீர்த்திசிங்கா. ''செய்தி தனாகவே நம்மைத் தேடி வரும்.''

''குருநாதரே!'' என்று ஓடி வந்தார் ரத்னம். ''அந்தப் புதியவர்களில் ஒருவர் குளித்ததும் கரையில் விழுந்து விட்டார் - வலிப்பு நோய் கண்டு -''

''கீர்த்திசிங்கா சந்தேகித்தது சரிதான்,'' என்று முறுவலித்தார் தலைவர். ''வாருங்கள், பார்க்கலாம்.''

குளத்தின் கரையில் அந்தப் புதியவர்களில் ஒருவர அலங்கோலமாக விழுந்துகிடந்தார். பயங்கரமான வலிப்பு கண்டு, அப்போதுதான் அடங்கியிருக்க வேண்டும். காலிலும் கையிலும் சிறு நடுக்கங்கள் தென்பட்டன. கண்கள் செருகியிருந்தன.

''குருநாதரே! என்னை மன்னியுங்கள்,'' என்று அலறியபடி மற்றவர் அவரது காலில் விழுந்தார்.

''சபையின் முன்னே இந்த மனிதர் நின்றபோது கீர்த்திசிங்கா கவனித்துக் கொண்டுதான் இருந்தான்,'' என்றார் கீர்த்திசிங்கா. ''விரல்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. வலிப்பு நோய் உண்டா எனத் தெரியவேண்டுமென்று தான் இரண்டாம் முறையும் நீரில் மூழ்குமாறு கீர்த்திசிங்கா உத்தரவிட்டான்.''

''குருநாதரே! மன்னியுங்கள். என் சகோதரர் இவர். எங்கள் இருவருக்கும் வேறு புகலிடம் இல்லாததால்...''

''தவறில்லை. ஆனால், பலத்த கட்டுப்பாடுகளும் ஒழுங்கு விதிகளும் உள்ள எமது சங்கத்தில் சேரமுயன்றது மன்னிக்கக்கூடிய குற்றமல்ல. வலிப்பு நோய் உண்டா என்று கேட்டபோது இல்லையென்று பொய் சொன்னது -''

அதற்குள் மற்றவரும் கண் விழித்தார். மிரள, மிரள, ''ஐயனே, நான் செய்தது பிழைதான்,'' என்று நாக்குழறச் சொன்னர்.

''இல்லை, குழந்தாய், இல்லை. ஞானதேவர் அருளிய பஞ்சசீலத்தில் நான்காவது சீலத்தை நீங்கள் மீறிவிட்டீர்கள். எவ்வளவோ படித்தீர்கள், பயின்றீர்கள். 'பராபவ சுத்த'த்தில், ஒரு மனிதனுடைய வீழ்ச்சிக்குக் காரணமென்ன என்று ஒரு தேவதை கேட்டபோது பகவான் பன்னிரண்டு காரணங்களைச் சொன்னார். அருந்தவனை, அறவோனை, அந்தணனை, ஆதுலனைப் பொய் சொல்லி ஏமாற்றுவது ஐந்தாவது காரணம் என்று அருளப் பட்டதை மறந்தீர்களா?'' கீர்த்தி சிங்காவின் உதட்டில் பழைய புன்னகை விளையாடிற்று. ''மன்னியுங்கள். போய் வாருங்கள். உங்களைச் சேர்த்துக் கொள்வதற்கில்லை.''

''வந்து...''

''ஊகூம்... கீர்த்திசிங்காவை வற்புறுத்தாதீர்கள்.''

அந்தப் புதியவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினார்கள். அவர்களது உருவங்கள் எட்டி எட்டிப் போய்த் தொலைவில் மறைந்தன.

'ஆகா! அவர்களுக்குச் சிறிதும் சந்தேகம் ஏற்படாத படி, என்ன அருமையாய் நாடகம் நடித்து விரட்டிவிட்டார் நம் தலைவர்!'' - இப்படிப் பரபரவெனப் பல புகழ் மொழிகள் கீர்த்திசிங்காவின் காதில் விழுந்தன.

பிரதம சீடரான ரத்னம், ஒரு காகிதத்தை எடுத்துக் கொண்டு திரும்பி வந்தார். ''குருநாதர் ஆணையிட்டிருந்த படி, ஹாங்காங் தந்தியின் அசல் மொழிபெயர்ப்பு,'' என்று கூறி, பணிவுடன் நீட்டினார்.

வாங்கிப் பார்த்தார் தலைவர். அவரது நெற்றியில் சுருக்கங்கள் கண்டன. ''நிறைய எதிர்பார்க்கிறார்கள்.

நிறைய எதிர்பார்க்கிறார்கள்,'' என்ற சொற்கள் மட்டுமே அவரிடமிருந்து வந்தன.

அவரே தொடர்ந்து பேசுவாரென எதிர்பார்த்து மற்றவர்கள் காத்திருந்தார்கள். கீர்த்திசிங்கா கூறினார்: ''இவர்கள் சொல்வதை நிறைவேற்ற வேண்டுமானால், கீர்த்திசிங்கா இத்தனை வருடங்களாகக் காத்து வந்திருக்கும் ஒரு கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டும்.''

''என்ன ஐயனே?'' என்று ரத்னம் துணிந்து வினவினார்.

''நமது சங்கத்திலே ஒரு பெண்ணைச் சேர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு பெண்ணின் மூலமாகத் தான் அந்தக் காரியங்களைச் செய்ய முடியும். ஆனால் யார் அந்தப் பெண்? எப்போது அவள் வருவாள்?''

பரங்கிமலைக் குன்றின் அடி வாரத்திலிருந்த சிறிய தோப்பில், நிழலானதோர் இடத்தில் அமர்ந்த வண்ணம், அண்ணாந்து பார்த்தார்கள் ஷோபாவும் கௌரியும்.

''அதோ தெரிகிறதே, அந்த கட்டிடம் தானா?'' என்றான் கௌரி.

''அதுவாகத்தான் இருக்க வேண்டும். நான் வந்தபோது இருட்டு வேளை. ஒற்றையடிப் பாதையில் மூச்சுவாங்க ஏறிப் போனது மட்டும்தான் ஞாபகம் இருக்கிறது...''

கௌரி எழுந்து கொண்டு, அவளையும் கை கொடுத்து எழுப்பினான்.

## ஐந்து

''போய்த் தொலைந்தார்களா இல்லையா?'' என்று கேட்டார் கீர்த்திசிங்கா.

''போய்க் கொண்டிருக்கிறார்கள்,'' என்று பதிலளித்தார் அவரது உதவியாளரான ரத்னம்.

குன்றின் மேலே, 'திரிசரண அபிமானிகள் சங்க'த்தின் கட்டிடம்.

அடிவாரத்தைப் பார்த்தாற் போலிருந்த அறையில், கண்ணாடிகள் பொருத்தப்பட்ட ஜன்னலை ஒட்டினாற் போல் நின்றிருந்தார் ரத்னம்.

அந்தக் காலை வேளையில் கூட அரை இருட்டாக இருந்தது அந்த அறை. ஒரு பழைய சோபாவின் மீது கால் போட்டு அமர்ந்திருந்தார் கீர்த்திசிங்கா.

''அந்தப் புதிய ஆட்களைத் தாங்கள் வெகு சாமர்த்தியமாகத் திருப்பியனுப்பியதைப் பற்றியே நாங்கள் திரும்பத் திரும்ப ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.'' என்றார் ரத்னம்.

கீர்த்திசிங்காவின் தடித்த உதடுகளில் ஒரு புன்னகை பிறந்தது. ''கீர்த்திசிங்கா ஒரு சாமானியமான ஆள், அவனுக்கு என்ன தெரியும்? பகவானின் அருளினால் அவனுக்கு இன்னொரு கண் கிடைத்திருக்கிறது. அவ்வளவு தான். நீ படித்ததில்லையா?'' என்று கூறியவர் ஒரு சுலோகத்தைச் சொன்னார்.

ரத்னத்தின் கவனம், கீழே தெரியும் பாதையில் ஊன்றியிருந்தது. ''இன்று தங்கள் திறமைக்கு மீண்டும் மீண்டும் சவால்கள் வரும் போலிருக்கிறது.''

''ஏன்?''

''வேறு இரண்டு பேர் வந்து கொண்டிருக்கிறார்கள்.''

கீர்த்திசிங்கா தமது இருக்கையிலிருந்து எழுந்து வந்து, சாளரத்தின் வழியே பார்த்தார். ''ஒரு பையனும் ஒரு பெண்ணும் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் யாரென்று தெரியவில்லை உனக்கு?''

''தெரியவில்லையே?''

''அந்தப் பெண் ... இங்கே வந்திருக்கிறாள். சங்கத்தின் ஆதரவாளர்களில் யாரோ அவளை அழைத்து வந்துவிட்டார்கள் தெரியாத்தனமாய். அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை. சீக்கிரமே திரும்பிப் போய்விட்டாள். ஆனால் அவள் வேறொரு வகையில் நமக்கு உதவியிருக்கிறாள். அது அவளுக்கே தெரியாது!'' கீர்த்திசிங்காவின் கண்களில் தந்திரம் மின்னியது. ''வரட்டும், வரட்டும். கீர்த்திசிங்கா என்ன விரும்பினானோ அது நடக்கிறது!''

''எதைச் சொல்கிறீர்கள்?''

''கீர்த்திசிங்கா தன் காரியங்களுக்கு ஒரு பெண் இருந்தால் நல்லது என்று நினைத்தான். அதே போல் இவள் வருகிறாள். எல்லா வகைகளிலும் பொருத்தமாயிருப்பாள் என்று தோன்றுகிறது.''

''அவளுடன் கூட வருகிறானே அந்தப் பையன்?''

கீர்த்திசிங்காவின் முகத்தில் கருமை பரவியது. ''அவனைக் கீர்த்திசிங்கா எங்கோ பார்த்திருக்கிறான். அருகில் வரட்டும்.''

இருவரும் ஆவலுடன் சாளரத்தருகிலேயே நின்றிருந்தார்கள்

கீழே ஷோபாவும் கௌரியும் ஏறி வந்துகொண்டிருந்தார்கள்.

பல்லாவரம் குன்றின் உச்சியில் இருந்த அந்தக் கட்டிடத்துக்குச் செல்ல, சிறிய படிக்கட்டுக்கள் வெட்டப் பட்டிருந்தன. பாதை ஏறத்தாழச் செங்குத்தாகவே இருந்ததால், நாலைந்து படி ஏறுவதற்குள்ளேயே ஷோபா வுக்குக் காலை வலித்தது. இளம் காலை வேளையாயிருந்த போதிலும் வியர்வை பொடித்தது.

''இதே இடம்தான் சந்தேகமில்லை. அன்றைக்கும் இப்படித்தான் காலை வலித்தது,'' என்றாள் அவள், முழங்காலைப் பிடித்துவிட்டுக் கொண்டவாறு.

கௌரி நின்று அவள் கால்களைப் பார்த்தான். ஏறுவதற்கு லாகவமாகப் புடவையைச் சற்றே அவள் ஒதுக்கிப் பிடித்திருந்ததால், பஞ்சு போன்ற மென்மையும் வெண்மையும் கொண்ட பாதங்கள் பளிச்செனத் தெரிந்தன. சிவப்புக் காலணிகளில் செய்திருந்த சித்திரப் பூக்கள், காலின் வ[redacted]றும் தூக்கிக் கொடுத்தன.

தொடர்ந்து அந்த அழகிலேயே அவன் லயிக்காமல் தடுப்பது போல ஷோபா ஏதோ சொல்லுவது கேட்டது.

''என்ன, என்ன சொன்னீர்கள்?'' என்றான், வேறேதோ சிந்தனையிலிருந்து விழித்தவன் போல,

''இல்லை. திரிசரண அபிமானிகள் சங்கம் எங்கே இருக்கிறதென்று கேட்டீர்கள். சொன்னேன். அழைத்துப் போக முடியுமா என்றீர்கள். அழைத்து வந்திருக்கிறேன். இப்படி ஒரே ஒன் வே ரூட்டாக இருக்கிறதே தவிர, நீங்கள் எதற்காக கேட்கிறீர்கள், என்ன செய்யப் போகிறீர்கள் என்று தெரியவில்லையே? அதைப் பற்றிச் சொன்னால் நான்

உங்கள் அஸிஸ்டென்டாகப் பணியாற்றுவது இன்னும் சுலபமாயிருக்குமே என்று சொல்லிக் கொண்டிருந்தேன்...''

''என் அஸிஸ்டென்டா! நீங்களா! என்ன பாக்கியம், என்ன பாக்கியம்!'' என்று சிரித்தான் கௌரி. ''முதலிலேயே உங்களிடம் சொல்லிவிட்டேன், இங்கே எதற்காக வரவேண்டும் என்று. ராகவ்வின் வீட்டுத் தோட்டத்தில் கல்ப புஷ்பம் என்ற பூ பூத்திருந்தது அல்லவா? உங்களிடம் கூடக் காட்டினேனே? பௌத்தர்களின் புராணப்படி அந்தப் பூவுக்கு ஏதோ மகத்துவம் உண்டு என்று தாய்லாந்திலிருந்து வந்திருந்த ஒருவர் ராகவ்வுக்கு சொல்லியிருக்கிறார். அது என்ன விசேடம் என்று தெரிந்து கொள்வதற்காக ராகவ் அடிக்கடி இங்கே வந்திருக்கிறான். வீட்டிலேயும் ஒரு புத்தர் பதுமையை வைத்துக் கொண்டு தியானம் செய்து வந்திருக்கிறான். ஆகவே அவனுடைய தற்கொலைக்குக் காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமானால், இந்தத் திரிசரண அபிமானிகள் சங்கத்துக்கு வராமல் வேறெங்கே போவது?''

''அப்படியானால் ராகவ் செய்து கொண்டது தற்கொலைதான் என்று முடிவு செய்து விட்டீர்களா?''

பேசியவாறே படியில் ஏறிக் கொண்டிருந்த கௌரி சட்டென்று நின்றான். அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். ''நான்... எனக்கு... வேறு யோசனையே தோன்ற வில்லையே? தற்கொலை என்று போலீஸ் தீர்மானித்தது. அதையே நானும் ஏற்றுக் கொண்டேன்.'' அவன் பேச்சில் மாற்றம் தொனித்தது. ''வேறு விதமாகவும் இருக்கக் கூடும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா, ஷோபா?''

''தற்கொலை விஷயத்தைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்று என் அப்பா போலீசைக் கேட்டுக்

கொண்டிருந்தார். ராகவ்வின் அண்ணா உலகநாதனும் மனம் வெறுத்துப் போயிருந்தார். ஏதோ அகப்பட்ட தடயங்களை வைத்துக் கொண்டு போலீசார் அவசர அவசரமாக விசாரித்து, மேலோட்டமாக அப்படி முடிவு செய்திருக்கலாமல்லவா? நாம் நாலையும் யோசனை செய்ய வேண்டுமென்பதற்காகச் சொன்னேன். என்னிடம் ஆதாரம் கீதாரம எதுவும் கிடையாது. என்னைப் பிடித்துக் கொண்டு விடாதீர்கள்!''

கௌரி சிந்தனை வயப்பட்டவனாக, ''தற்கொலை இல்லையென்றால்... கொலை! கொலை என்றா சொல்கிறீர்கள்? ராகவ்வுக்கு அப்படிப்பட்ட விரோதிகள் இருந்திருக்க முடியுமா? நம்ப முடியவில்லை...'' என்று தனக்குத் தானே பேசிக் கொண்டான்.

''தற்கொலை செய்து கொண்டவர், தன் கடிதத்தில், ஒன்று, பொருத்தமான காரணம் சொல்லியிருக்கலாம். அல்லது எதுவுமே சொல்லாமல் இறந்திருக்கலாம். சம்பந்தமேயில்லாமல் என் பெயரை எழுதி வைத்திருக்க தேவையில்லை இல்லையா? அன்று முதல் எனக்கு இப்படித் தோன்றிக்கொண்டேயிருக்கிறது!'' என்றாள் ஷோபா.

''மை காட்! நானல்லவா உங்கள் அஸிஸ்டென்டாக இருக்க வேண்டும் போலிருக்கிறது!'' என்று கௌரி சொல்லிக் கொண்டிருந்த போது -

''ஆ!'' என்று திடீரென ஒரு துள்ளுத் துள்ளினாள். ஷோபா.

கருங்கல் பாறையில் அவள் காலின் நுனி இடித்ததால், வலது கால் பெருவிரலில் நகம் பெயர்ந்து, குபு குபுவென்று ரத்தம் கசிந்தது.

''என்ன? என்ன நேர்ந்தது, ஷோபா! எதைக் கண்டு பயந்தீர்கள்?'' என்ற கௌரி சட்டெனத் தன் கைக் குட்டையை எடுத்து அந்த விரலில் சுற்றினான்.

''தாங்ஸ்,'' என்றாள் ஷோபா.

''எதற்கு அப்படித் திடுக்கிட்டீர்கள்?''

''சொல்ல வெட்கமாயிருக்கிறது.''

''நான் யாரிடமும் சொல்ல மாட்டேன். சொல்லுங்கள்.''

''ஓணான்! எவ்வளவு பெரிது என்கிறீர்கள்? குபீரென்று குறுக்கே ஓடி வந்தது!''

விழிகளை மலர மலர விரித்த வண்ணம் அவள் பேசுகிற விதத்தை கௌரி ரசித்தான். ஓணானைக் கண்டா அப்படிப் பயப்பட்டாள்!... சிரிப்பு வந்தது. அவள் மனத்துக்கு வருத்தம் ஏற்படும் என்பதற்காகச் சிரிப்பை அடக்கிக் கொண்டான். ''ஆமாம், ஆமாம். மலை ஓணான் என்று கேள்விப்பட்டதில்லை? இரண்டடி மூன்றடி நீளம் இருக்கும்!'' என்றான் வேண்டுமென்றே. ''நடக்க முடியுமா உங்களால்?''

மேலேயிருந்த கட்டிடத்தை அடைய இன்னும் பாதி தூரம் போக வேண்டியிருந்தது. வெய்யில் சுள்ளென்று ஏறிக் கொண்டிருந்தது.

''இதென்ன பெரிய மரண காயம்!'' என்று புன்னகை செய்தாள் அவள். ''அதோ பாருங்கள், யாரோ இரண்டு பேர் வருகிறார்கள்.''

கௌரி அண்ணாந்து பார்த்தான். ''பௌத்தத் துறவிகள் போல் இருக்கிறது. அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்கும்.''

இறங்கி வந்து கொண்டிருந்த இருவரும், கீர்த்திசிங்காவினால் திருப்பியனுப்பப்பட்டவர்கள் என்பது கௌரிக்கோ ஷோபாவுக்கோ தெரியாது.

''வணக்கம் ஐயா,'' என்று எழுந்து கொண்டான் கௌரி, பாதையில் அவர்களுக்கு வழி விட்டவனாக. ''மேலே தெரிகிறதே, அது என்ன கட்டிடம்? தயவு பண்ணிச் சொல்ல முடியுமா?''

மஞ்சள் உடையும் மழித்த முகமுமாக இருந்த அந்த இருவரில், நெட்டையாக இருந்தவர், ''திரிசரண அபிமானிகள் சங்கம் என்ற பௌத்த ஸ்தாபனம் அங்கே இருக்கிறது. துறவிகள் சிலர் இருக்கிறார்கள்,'' என்றார்.

''தாங்களும் அங்கேதான்...''

''இல்லை. குழந்தாய். எங்களுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லை.''

''வெளி மனிதர்கள் - அதாவது, எங்களைப் போன்றவர்கள் - அங்கே போய்ப் பார்க்கலாமா?''

''பார்க்கலாம் என்றுதான் நினைக்கிறேன்,'' என்று நெட்டையானவர் சொல்கையில், குட்டையாயிருந்த மற்றவர் குறுக்கிட்டார். ''இந்தச் சகோதரி காலில் ஏதோ கட்டுப் போட்டுக் கொண்டிருக்கிறாரே? ஏன்?''

''அது ஒன்றுமில்லை. இப்போதுதான் ஏதோ கல் இடித்து விட்டது,'' என்றாள் ஷோபா.

''அப்படியானால் அங்கே நுழைய முடியாது,'' என்று திட்டமாகச் சொன்னார் அந்தத் துறவி.

''தேகத்தில் காயமோ நோயோ உள்ளவர்கள் அந்தச் சங்கத்துக்குள் வரக் கூடாது. பௌத்த மடங்களில் பொதுவாக அப்படியொரு விதி உண்டு. சிலர் அதைக் கடுமையாகக் கடைப் பிடிப்பார்கள். சிலர் அதைப் பொருட்படுத்தமாட்டார்கள். ஆனால். இவர்கள்!'' மேலேயிருந்த கட்டிடத்தைச் சுட்டிக்காட்டினார் அந்தத் துறவி. ''அப்பப்பா! நெருப்புதான்!''

''ஆமாம் சகோதரி. ரொம்பக் கண்டிப்பானவர்கள்,'' என்றார் மற்றவரும்.

''கட்டை வேண்டுமானால் அவிழ்த்து விடுகிறேன்.'' என்றான் கௌரி.

துறவிகள் சிரித்தார்கள். ''இளைஞனே, திரிசரண அபிமானிகள் சங்கத்தின் தலைவர் கீர்த்திசிங்காவைப் பற்றி உனக்குத் தெரியாது போல் இருக்கிறது. சற்று முன்பு தான் அவருடைய அபாரமான வல்லமையை நாங்கள் கண்கூடாகப் பார்த்துவிட்டு வந்திருக்கிறோம். நீங்கள் எவ்வளவு தான் மறைத்தாலும் அவர் கண்டுபிடித்து விடுவார். பொய் சொல்வானேன்? இரண்டு நாளில் இந்தக் காயம் ஆறிய பிறகு வாருங்களேன்? சங்கம் ஓடியா போய்விடப் போகிறது?''

இரண்டு துறவிகளும் இறங்கிச் சென்று விட்டார்கள்.

கௌரி படியிலேயே உட்கார்ந்து கொண்டான் முன் போல.

''ஷோபா! அந்தப் பெரியவர்கள் சொன்னபடியே இன்னொரு சமயம் வருவோம்,'' என்றான்.

ஷோபா நகைத்தாள். ''ஏன், திரிசரண அபிமானிகள் சங்கத்தில் சுவரஸ்யம் விட்டுவிட்டதா?''

''சுவாரஸ்யம் விடவில்லை. ஆனால் சந்தேகம் ஓரளவு விட்டுவிட்டது. இந்த இரண்டு பேரும் சொன்னதைப் பார்த்தால், அந்தச் சங்கத்தில் இருப்பவர்கள் உண்மையானவர்கள், நல்லவர்கள் என்றல்லவா தெரிகிறது? ராகவ்வின் மரணத்தில் இவர்களைச் சம்பந்தப்படுத்தி நினைப்பதே பாவம் போல் இருக்கிறது எனக்கு! அத்தோடு...''

''அத்தோடு?''

''நீங்கள் சொன்னபடி ராகவ் இறந்தது கொலையா. தற்கொலையா என்பதையும் விசாரிக்கப் போகிறேன். போலீஸ் அதிகாரிகளைச் சந்தித்து, ராகவ் எழுதியிருந்த கடிதத்தைப் பார்க்க முடியுமா என்று கேட்கப் போகிறேன். ராகவ்வுக்கு எங்கெங்கே என்னென்ன விரோதங்கள் ஏற்பட்டிருந்தது என்பதையும் துப்பறிகிறேன்...''

''அப்பாடி! இப்போதுதான் உங்களைப் பார்த்தால் துப்பறியும் புலி மாதிரி இருக்கிறது!'' என்று சிரித்தாள் ஷோபா.

''உங்களைப் பார்த்தால் எப்படி இருக்கிறது என்று சொல்லட்டுமா!''

''சொல்லுங்களேன்!''

''துப்பறியும் மான்!''

ஷோபாவின் முகம் சிவந்தது.

''நாம் மறுபடி எப்போது சந்திப்பது?''

''அடுத்த வாரம். இதே கிழமை. இதே இடம். இதே நேரம். சரி தானா?''

''ஓ. கே.''

இரண்டு பேரும் கடகடவென்று குன்றை விட்டு இறங்கிய போது, அவர்களை அறியாமலே அவர்களது கைகள் கோத்துக் கொண்டிருந்தன.

**கை**ப் பையைச் சுழற்றிக் கெண்டு உல்லாசமாக ஷோபா வீட்டினுள் நுழைந்தபோது, நடுப் பகல் வேளையாகி விட்டது.

அவள் தந்தை ரங்கனாதன் அப்போதுதான் வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தவர், அவளைக் கண்டதும் நின்றார்.

''ஹலோ அப்பா! எப்போது வந்தீர்கள்?'' என்றாள் ஷோபா. இரண்டு தினங்களுக்கு முன்பு திருச்சி சென்றிருந் தார் அவர்.

''காலையில் வந்தேன். அதிருக்கட்டும். நான் வந்தது முதல் உன்னைக் காணோமே? எங்கே போய்விட்டு வருகிறாய்?''

''ராஜகுமாரியில் ஒரு மலையாளப் படம் அப்பா. மார்னிங் ஷோ.''

''ஓகோ! ராஜகுமாரி தியேட்டர் டி. நகரிலே இருக்கிறதென்று நினைத்திருந்தேனே? பரங்கிமலைக்கு மாற்றிவிட்டார்களா அம்மா?''

''வந்து... அப்பா...'' ஷோபா தடுமாறிப் போனாள்.

''திருச்சியிலிருந்து காரில் வந்து கொண்டிருந்தபோது, பரஞ்கிமலைக்குப் பக்கத்தில் உன்னைப் பார்த்தேன்,'' என்றார் ரங்கநாதன் கடுமையாய். ''அந்தப் பையனையும் பார்த்தேன்.''

ஷோபா தலைகுனிந்து நின்றாள்.

''வயசுப் பெண்ணின் பெயர் கெடக்கூடாதே என்பதற்காக, விழாதவர்கள் காலிலெல்லாம் விழுந்து, அந்தத் தற்கொலைக் கேஸில் உன்னைச் சம்பந்தப் படுத்தாமல் இருக்கும்படி பண்ணினேன். அதற்கு நீ செய்கிற கைம்மாறா இது?''

ஷோபா மௌனமாக இருந்தாள்.

''அந்தப் பையன் யார் தெரியுமா? உலகநாதன் வீட்டில் எடுபிடி. செத்துப் போனானே ராகவ், அவன் எப்படிச் செத்தான், எதனாலே செத்தான் என்பதை அவன் கண்டு பிடிக்கப் போகிறானாம். அதற்காக ஊரெல்லாம் அலைந்து கொணடிருக்கிறானாம். அவனோடு நீ பழகினால் நான் பட்ட பாடெல்லாம் வீண்!''

''அப்பா... வந்து...''

''பேசாதே!'' என்று அதட்டினார் ரங்கநாதன். ''இன்னொரு தரம் இந்த மாதிரி முட்டாள்தனம் பண்ணின தாய்த் தெரிந்ததோ, நான் ரொம்பப் பொல்லாதவனாகி விடுவேன். சொல்லி விட்டேன்!''

விறுவிறுவென்ற அவர் போய்விட்டார்.

## ஆறு

ரங்கநாதன் கோபமாயும் வேகமாயும் கிளம்பினாரே தவிர, உடனே கார் புறப்பட்டு விடவில்லை.

அப்பாவின் எதிர்பாராத கோபத்தினால் அயர்ந்து போயிருந்த ஷோபா, கீழுதட்டைக் கடித்துக் கொண்டு ஹாலில் உட்கார்ந்திருந்தாள். கார் கிளம்பும் சத்தம் கேட்காதது அவளுக்கும் வியப்பாகவே இருந்தது. எஞ்சின் ஸ்டார்ட் ஆகவில்லையென்றால் ட்ர்ர் ட்ர்ர் ஓசையாவது கேட்குமே?

கதவு மறுபடி திறந்து மூடப்படும் சத்தம் கேட்டது. ரங்கநாதனின் பர்ஸனல் அஸிஸ்டென்ட் உள்ளே வந்தான். அவருடைய மேஜை மீது எதையோ தேடினான். திரும்பிப் போய் அவரிடம் சொன்னான் போலும். ரங்கநாதன் சீற்றத்துடன், ''உனக்கு எப்போதுமே கண் ரிப்பேர்!'' என்று அவனைத் திட்டிக் கொண்டே காரிலிருந்து இறங்கி வந்து, தனது மேஜையை அலசினார். ஒரே நிமிடத்தில் தான் தேடிய ஃபைலைக் கண்டெடுத்தவராக, ''இதோஇருக்கிறதேடா முட்டாள்!'' என்று பி.ஏ.யின் மீது எறிந்தார். சட்டென்று அவன் காட்ச் பிடித்துக் கொண்டான்.

காருக்குத் திரும்பிச் செல்ல விருந்தவர், ஷோபா உர்ரென்று உட்கார்ந்திருப்பதைக் கவனித்தார். கொஞ்சம் அதிகப்படியாகக் கோபித்துக் கொண்டு விட்டோமோ என்று குறு குறுப்பு ஏற்பட்டது.

''நீ போ, வருகிறேன்,'' என்று சொல்லி, பி.ஏ.யை அங்கிருந்து போகப் பண்ணினார். பின்னர் மெதுவே மகளின் பக்கத்தில் அமர்ந்து கொண்டு ''கோபமா, ஷோபா?'' என்றார் கெஞ்சலாக.

''இல்லையே அப்பா. என்னை நீங்கள் கண்டிக்கா விட்டால் வேறு யார் கண்டிக்கப் போகிறார்கள்?'' என்று கண்ணைத் துடைத்துக் கொண்டாள் அவள்.

''பார்த்தாயா, பார்த்தாயா?'' என்று தமது கைக்குட்டையினால் மகளின் கன்னங்களை ஒற்றினார் ரங்கநாதன். ''நான் இப்போது என்ன சொல்லிவிட்டேன்? நமது அந்தஸ்துக்குக் குறைவான பேர்களுடன் சினேகிதம வைத்துக் கொள்ளக் கூடாது என்றேன். அது ஒரு தப்பா?''

''உங்கள் அந்தஸ்துக்குக் குறைவு நேருகிற மாதிரி நான் எதுவும் செய்துவிட மாட்டேனப்பா,'' என்றாள்

ஷோபா. ''ஆனால் எடுபிடி, ஏழை என்றெல்லாம் நீங்களே இளப்பம் பேசலாமா? நீங்கள் ஒரு காலத்தில் எவ்வளவு சாதாரண நிலையில் இருந்து, படிப்படியாய் முன்னேறி னீர்கள் என்று அம்மா எத்தனையோ தடவை எனக்குச் சொல்லியிருக்கிறாள். நீங்களும் உங்கள் கூட்டாளி ஜானகிராம் என்பவரும் இருளப்பன் தெருவில் ஒரு சின்ன ஸ்டேஷனரி கடை வைத்திருந்தீர்களாம். கவர், இங்க் பாட்டில், காகிதம் என்று சைனா பஜாரில் கடை கடையாய் ஏறி ஆர்டர் வாங்குவீர்களாம்...''

''சரி, சரி. அந்தப் பேச்செல்லாம் எதற்கு?'' என்று எழுந்து கொண்டார் ரங்கநாதன். ''தாயில்லாப் பெண்ணான நீ கண்கலங்கக் கூடாது என்பதுதான் எனக்கு ஒரே அக்கறை. அதேபோல் அனாதரவான அப்பா என்று என்மீது உனக்கு இரக்கம் இருந்தால் போதும்.''

ஆனால் உடனே அவரைப் போக அனுமதிக்க வில்லை ஷோபா. ''மதிப்பு, அந்தஸ்து என்றெல்லாம் வாயால் சொல்கிறீர்களே யொழிய, எவனோ ஒரு ராஸ்கல் ஒரே நாளில் அதைக் குலைய வைத்தபோது அதைப் பொருட்படுத்தாமல் தானே விட்டு விட்டீர்கள்?'' என்றாள்.

''எதையம்மா சொல்கிறாய்?''

''எனக்குக் கல்யாண ரிஸப்ஷன் என்று அழைப்பிதழ் அச்சடித்து அனுப்பினானே ஒருத்தன் அவனைக் கண்டுபிடிக்க வேண்டாமா? அது எவ்வளவு பெரிய அவமானமான விஷயம்! அதைப் பற்றித் துருவ வேண்டா மென்று போலீசில் சொல்லிச் சரிக்கட்டி விட்டீர்கள். ஆனால் பிரைவேட்டாகவாவது விசாரிக்க ஏற்பாடு செய்தீர்களா?''

''எப்படிச் செய்தாலும் அது அசிங்கம்தான் ஷோபா? p ñ] G¬ ñGª óQå ~G³®ª x õ ¨nõ ¨ó~ª ."

'"èGª õ ~{ ñNGÒG§¬iÚ, pøàG. Mª zó] y¤¿³½¤Á¬ pÛ ±È ³àÁN óüGë®G¤Á èGª àGWGKÏ ³W¢Û ³¿Gå n QG¢õ ¨n µc µc³Nª x zÁøài ñ{ñGª úK¿ò àGÞëyâÞ¿ò .Mª µñN{ÛëÏò èGª pYÛpYÛ áÈÏQÛ áK¿ç ëÏ{ ³ñÁNGÛ .Mª á~u\¬ Ò{ñ{ÛëÏø à¤¬ ¿å R Þ ùnQÛ áK¿ç ëÏ{ ³ñÁNGÛ ..."

'"Þ Wn, p Wn !" Mª x pQò óñGi½{ ñ¨cë ³¿Gn{ñGÞÒK¿èGñª ."MQó] GÏxuÅë¿GÒª ³W¢ñ ¿GÁNu pÛ .piñø óàG¢ë y½xQGó] ª ?óàWG®¬ piñp{óñGn õ ¨nõn .Mª ] ?èGª QÈyóïª . óèÒ®GyïÛ ,"Mª x Åïøà¨ ~QG,QGW¬ ³QÒGÍñGi Q pi~ÍñÛu ,"bd GàG!µ Íñ{ óñG¨~ë¿GÒÇ ëÏ æÍÛ £àG¢ àJ u ³¿Gn{Û{ ³ñGiÚ .µQó] Gn ³àÁN QuàG¢ø óàG¢õ ¨~Û !"Mª x hôõ ¨nb³Wª ïGÞ.

¿GÞy½uÅu ±Ù ó¿¨~Û .

"Mª ]øàG«ÒGWGÌ ?µøàc QG,"Mª x ód GàG óñG¨~ë¿GÒi ] áòó½ pii{ñGò .

'"±å V Ì¬óÚu®G. ³ñ]u Ä ² à{¤ÁëÏø óàG¢ë ¿G¨c¨n QÍ¤¨cÈëyóïª .µ Íñb óWG{Ûë i¿NGóÚ ±È óQiÚOu ³W¢N Õ cNóÚu®G & på iJ §óÚ§ÈÍÛ ,"Mª ïGª óñG¨~ë¿GÒª .

"Mª iï§óÚ§ÈÍÛ ?"

'"Þ ñGK¿, úK¿ç u æNGîu C ÁóÚ µ¬ÚGñøóàG... ±È èGò ãÒG..."

ஷோபா பெருமூச்சு விட்டாள். அதே பழைய அழைப்பிதழ் கதைதான். பல முறை அவன் சொல்லி யிருக்கிறான்.

அன்றைத் தினம் தோட்டக்காரன் ஒருவன் தான் வீட்டுக்குக் காவல் இருந்தானாம். சமையல்காரத் தாத்தா கூட லீவு. இரண்டு பேர் திடீரென்று வந்து அவனை மடக்கிப் போட்டார்கள். ஹாலுக்கு அடுத்திருந்த அறையில் அவனைக் கட்டிப் போட்டுவிட்டார்கள். அன்று பூரா டெலிபோன் மணி அடித்துக் கொண்டிருந்தது. அவர்களே பதில் சொன்னார்கள் 'ஆமாம்... திருப்பதியில் கல்யாணம் முடிந்துவிட்டது' என்று சொல்வது அவன் காதில் விழுந்தது. சாயந்தரம் தோட்டக்காரனின் கட்டை அவிழ்த்துவிட்டுப் போய் விட்டார்களாம்... ஆனால் வலது கையில் அழுத்தமாகக் கட்டியதால் ஏற்பட்ட சுளுக்கு இன்னும் சரியாகவில்லையாம்...

தோட்டக்காரனிடம் ஐந்து ரூபாயைக் கொடுத்தபடி, "அந்த ஆட்கள் எப்படி இருந்தார்கள் வீராசாமி?" என்றாள்.

"மூஞ்சியைப் பார்க்க முடியவில்லை, அம்மா, ஆனால் சின்ன வயசு தாங்க," என்றான் அவன்.

இவ்வளவு பயங்கரமான வேலை செய்தவன் எவன் என்று கண்டுபிடிக்க அப்பா முயலவில்லையே! நினைத்தால் அதிசயமாக இருக்கிறது...

அவர்களை மடக்குவதில் அப்பாவுக்கு ஏன் ஆர்வ மில்லை?...

யோசித்த வண்ணமே பர்ஸைத் திரும்ப வைப்பதற் காக தந்தையின் ஸ்டீல் அலமாரி லாக்கரைத் திறந்தாள். முன் பக்கமாக இருந்த ஒரு காகித உறை கீழே விழுந்தது.

ரங்கநாதனின் பெயரும் முகவரியும் கச்சிதமாய் டைப் அடிக்கப் பட்டிருந்தது உறையின் மீது. வாய் திறந்திருந்ததால் படித்துவிட்டுத்தான் வைத்திருக்க வேண்டும்.

அந்த டைப் எழுத்துக்களின் சுத்தம் ஷோபாவைச் சிந்திக்க வைத்தது. எந்தக் கடிதமானாலும் அப்பா அதனதன் ஃபைலில் இணைத்துவிடுவாரே தவிர, இப்படித் தனியே லாக்கரில் வைத்திருக்க மாட்டாரே... எந்த ஃபைலிலும் சேர்க்க முடியாத, சேர்க்க விரும்பாத கடிதமா...

உறையை எடுத்துக் கொண்டு சோபாவில் வந்தமர்ந்தாள். எடுத்துப் படிக்கும்படி உள்ளத்துக்குள் எதுவோ ஒன்று அவளைத் தூண்டியது. தந்தையின் அந்தரங்கக் கடிதத்தைப் படிக்கலாமா என்று தயக்கம் தடுத்தது. இறுதியில் மனத்தின் தூண்டுதலே வென்றது. உறையிலிருந்து காகிதத்தை வெளியே எடுத்தாள்.

நல்ல வெள்ளை நிற ஃபுல்ஸ் காப் காகிதம் அது. நாலு பக்கமும் நிறைய இடம் விட்டு, நட்ட நடுவே கட்டம் கட்டிய மாதிரி நீல நிறத் தட்டெழுத்தில் பளீரென்ற வரிகள் காணப்பட்டன. தொடக்கத்தில் ரங்கநாதனின் பெயரோ இறுதியில் எழுதியவனின் கையெழுத்தோ எதுவும் இருக்கவில்லை.

> சட்டப்படி எனக்கு எவ்விதமான உரிமையும் கிடையாதென்று சொல்லி ஏமாற்றிவிட்டீர்கள். நானும் சட்டத்தால் பிடிக்க முடியாத வழிகளிலேயே என் திறமையைக் காட்டுவதென்று முடிவு செய்து விட்டேன். அன்று அந்த ரிஸப்ஷன் திருவிழாவை நடத்தியவன் நான் தானென்று ஊகித்திருப்பீர்களே? அன்றே உங்கள்

மானமும் உங்கள் குடும்பத்தின் மானமும் போய் இருக்க வேண்டும். என் துரதிஷ்டம் அன்று ஏப்ரல் முதல் தேதி என்பதை மறந்து விட்டேன். ஆகவே அதை வேடிக்கை யென்று நினைத்து விட்டார்கள் எல்லோரும். அடுத்த தடவை இப்படி வேடிக்யாகும்படி விட மாட்டேன்.

மேலே விசிறி வேகமாகச் சுழன்ற போதிலும், தோட்டத்து மரங்கள் குளிர்ச்சியான காற்றை வஞ்சனை யின்றி உள்ளே அனுப்பிக் கொண்டிருந்த போதிலும், ஷோபாவுக்குக் குப்பென்று வியர்த்தது.

*காரணமாகத்தான் அப்பா அந்த அழைப்பிதழ் விஷயத்தைக் கிளறாமலே விட்டிருக்கிறார்! சிறை வேண்டா மென்று நம்மைதம் கோபித்திருக்கிறார். குற்றவாளி யாரென்று அவருக்குத் தெரிந்திருக்கிறது!*

*யாரிவன்? யாரிந்த முகமில்லாத பகைவன்? எதற்காக அவனுக்கு இவ்வளவு வஞ்சம் இந்தக் குடும்பத்தின் மீது?*

அவளுக்குத் தெரியவில்லை. நடுங்கும் கரங்களால் அந்த உறையையும் கடிதத்தையும் தன் கைப்பைக்குள் அடைத்துக் கொண்டாள்.

**அ**டுத்த வாரம்.

கைக்கடியாரத்தில் முட்கள் மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தன. கைக் குழந்தையின் மீது ஒரு கண் வைத்தவாறே வீட்டு அலுவல்களைக் கவனிக்கும் தாயைப்போல, என்ன செய்தாலும், எங்கு சென்றாலும் திரும்பத் திரும்ப கைக்கடியாரத்யையே பார்த்தவாறிருந்தாள் ஷோபா.

இதே இடம், இதே கிழமை, இதே நேரம் என்று கௌரி சொன்ன போது மணி ஒன்பது இருக்கும். இன்று அதே கிழமை. மணி எட்டாகிறது. பரங்கிமலைக்கு குன்றுக்குப் பதினைந்து மைல் இப்பால் அவள் இருக்கிறாள்.

ரங்கநாதன் ஸெண்டிரலுக்குப் போயிருந்தார் யாரையோ வரவேற்பதற்காக. அங்கிருந்து நேரே கன்னிமரா ஓட்டலுக்குப் போவதாகச் சொல்லியிருந்தார். ஆகவே பகல் ஒரு மணிக்குக் குறைந்து அவர் வரப் போவதில்லை. அதற்குள் நிச்சயமாய்ப் பரங்கிமலைக்குப் போய்விட்டுத் திரும்பி விடலாம். கௌரியிடம் அந்தக் கடிதத்தைக் காட்டிவிட்டு வந்துவிடலாம். கண்ணாடி முன் நின்று முகத்தை இரண்டு நிமிடம் டச் பண்ணி கொண்டாள். கட்டிலில் தலையணையின் கீழே வைத்திருந்த அந்தக் கடிதத்தைக் கைப் பைக்குள் திணித்துக் கொண்டாள். சமையல்காரரிடம், ''தாத்தா! என் சிநேகிதி ஒருத்தியை அவசரமாய்ப் பார்க்கணும். அப்பா வந்து கேட்டால் சொல்லுங்கள்,'' என்று கூறிவிட்டு ஓட்டமும் நடையுமாகப் பஸ்ஸைப் பிடித்து, மின்சார ரெயிலைப் பிடித்து, பரங்கிமலை ஸ்டேஷனில் இறங்கி, குன்றின் அடிவாரத்தை அடைந்த போது மணி ஒன்பதடித்துப் பத்து நிமிடமே ஆகியிருந்தன.

ஆனால் கௌரி சொன்ன இடத்தில் அவனைக் காணவில்லை. ஒரு வேளை மேலே போயிருப்பானோ என்று ஒரு வினாடி எண்ணினாள். தன்னை வரச் சொல்லிவிட்டு. அவன் மட்டும் போயிருப்பானென்று தோன்றவில்லை. மீண்டும் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து வரும் பாதையில் நிற்க எண்ணினாள்.

சாலையைக கடக்க முனைந்த சமயம், ஒரு லாரி அவளைத் தாண்டிக் கொண்டு நின்றது. பொத்தென்று கௌரி குதித்தான் அதிலிருந்து. லாரி போய்விட்டது.

''அப்பா! பயந்தே போனேன்,'' என்றாள் ஷோபா.

''பயந்து போனாலும் பரவாயில்லை. பதைத்துப் போகக் கூடாதென்றுதான் டிரெயின், பிளேன். ஸ்டீமர், ரோடு எஞ்சின், லாரி என்றெல்லாம் பிடித்துப் பறந்து வந்தேன்.''

ஷோபா கைக் கடியாரத்தைப் பார்த்து, ''மணி பத்துக்கு மேலாகி விட்டது. எனக்கு இன்று வேறொரு வேலை இருக்கிறது...'' என்று அவசரப்பட்டாள்.

''இதைக் காட்டிலுமா முக்கியமான வேலை?'' என்று அவன் குன்றைக் காட்டினான்.

ஷோபா கைப் பையைத் திறக்க நினைத்தாள் - அந்தக் கடிதத்தை எடுப்பதற்காக, இப்போதே அதை இவருக்குக் காட்டி விடுவது நல்லது என்று துடித்தாள் அவள். ''இந்தச் சுழலில் சிக்கியிருப்பவர்கள் திரிசரண அபிமானிகள் சங்கத்தார் மட்டுமல்ல, நீங்களும் நானும் மட்டுமல்ல. என் அப்பாவும் அவருடைய மர்மமான எதிரியொருத்தரும் கூட இருக்கிறார்கள்' என்பதை இப்போதே சொல்லி விட வேண்டும் என்று எண்ணினாள்.

அதற்குள் கௌரி, ''இங்கே நான் வந்து சேர்ந்ததே பெரிய காரியமாக்கும்?'' எனறான்.

''என்ன நேர்ந்தது?''

''என் பாஸ் இருக்கிறாரே, உலகநாதன், அவர் ஒரு விசித்திரமான ஆள். அவருடைய பெருந்தன்மை மற்ற எல்லாருக்கும் ஒரு தலைவலி,'' என்றான்.

''ஊம்?'' என்றாள் ஷோபா இருப்புக் கொள்ளாமல்.

''உலகநாதனுக்குப் பல கம்பெனிகள் சொந்தம். ராயப்பேட்டை கம்பெனியில் காஷியராக இருக்கிறார் ஒரு கிழவர். ஹெட்டிலே ஹேர் முளைத்த நாளிலிருந்து இருந்து வருகிறாராம். அவர் ஒரு அசட்டுத்தனம் பண்ணிவிட்டார்.''

''கை வைத்து விட்டாராக்கும்?''

''சே! சே! அதுதான் இல்லை. நாலு மாசம் முன்பு கணக்கில் ஒரு எழுநூற்றைம்பது ரூபாய் கோட்டை விட்டு விட்டார். தன் மீது அபவாதம் வந்துவிடப் போகிறதே என்று, வீட்டிலிருந்த பண்டம் பாடியை அடகு வைத்துப் பணம் வாங்கி, கணக்கைச் சரிக்கட்டியிருக்கிறார். இது அரை குறையாய் இவர் காதில் விழுந்து விட்டது. என்னை ரகசியமாய் விசாரிக்கச் சொன்னார். விசாரித்து, உண்மை தான் என்றேன். உடனே என்ன செய்தார் தெரியுமா?''

''என்ன செய்தார்?''

''நேரே அந்தப் பெரியவரிடம் போனார். 'ஏனய்யா, கம்பெனியிலே எவன் யோக்கியன் எவன் அயோக்கிய னென்று கூடத் தெரிந்து கொள்ள முடியாத முட்டாளென்றா என்னை நினைத்தீர்? நீர் அயோக்கியரென்று தோன்றி யிருந்தால் என்றைக்கோ சீட்டுக் கிழித்திருக்க மாட்டேன்? உண்மையை என்னிடம் சொல்லாமல், எதற்காகக் கடன் உடன் வாங்கிக் கணக்கைச் சரி செய்தீர்?' என்று கண்டபடி கத்திவிட்டு, எண்ணூறு ரூபாய் பணத்தைக் கொடுத்து, அடகு வைத்திருக்கிற பொருள்களை மீட்டுக் கொண்டுவரச் சொன்னார்!''

''நிஜமாகவா!''

''என்னையும் அவருடன் கூடவே அனுப்பி, மீட்கிறாரா இல்லையா என்று பார்த்து வரச் சொன்னார்.

இதோ பார் ரசீதுகள்,'' என்று காட்டினான் கௌரி. ''அப்பப்பா! லட்சத்திலே ஒருத்தர் இந்த உலகநாதன்! என்ன பெருந்தன்மை, என்ன கண்ணியம்!''

கைப் பையிலிருந்து வெளியெடுக்க எண்ணியிருந்த அந்தக் கடிதத்தைத் திரும்ப அதற்குள்ளேயே திணித்தாள் ஷோபா.

பெருந்தன்மையையும் கண்ணியத்தையும் எவ்வளவு பெரிதாக மதிக்கிறார் இவர்! இவரிடம் போய் எப்படி அந்தக் கடிதத்தைக் காட்டுவது? 'யாருக்கோ அநீதி இழைத்து, அவருடைய விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார் என் அப்பா' என்று எப்படிச் சொல்வது? அப்படிப் பட்டவருடைய பெண்ணா இவள் என்று என்னையுமல்லவா மட்டமாக நினைப்பார்?...

வேண்டாம், வேண்டாம் என்று தனக்குள் சொன்னவாறே கைப்பையின் பொத்தானைப் படக்கென்று அழுத்தினாள் ஷோபா.

அந்த ஒரு விஷயத்தை மறைத்ததன் மூலம் பின்னால் எத்தனை சிக்கல்கள் விளையப் போகின்றன என்று அப்போது அவள் அறியவில்லை.

## ஏழு

கருங்கல் படிகளின் ஓரத்தில் முளைத்திருந்த புற்களில் பனி முத்துக்கள் தத்தளித்துக் கொண்டிருந்தன. மெல்ல எழுந்து வந்த சூரியனின் கிரணங்கள் அங்கே பாய்ந்த போது ஓராயிரம் வைர வீச்சு அங்கே ஒளிர்ந்தது.

''இதைப் பிடித்துக் கொள்வது நல்லது.'' என்று தன் கையை நீட்டினான் கௌரி.

''எந்த வகையில்?'' என்றாள் ஷோபா.

''கால் இடறாமல் நடக்கலாம். காயம் பட்டுக் கொள்ளாமல் இருக்கலாம். திரிசரண அபிமானகள் சங்கத்துக்குள் தடையில்லாமல் நுழையலாம்,'' என்று கௌரி அடுக்கிக்கொண்டே போனபோது அவளுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

அவனுடைய நீட்டிய கையைப் பிடித்துக் கொண்டு படிகளில் உற்சாகத்துடன் ஏறினாள். 'மின்சாரம் பார்தாற் போல' என்ற வர்ணனை எவ்வளவு உண்மையானது என்று தோன்றியது அவளுக்கு. கிட்டத்தில் கிட்டத்தில் வந்து கொண்டிருக்கும் அந்தக் குன்று மாளிகை இன்னும் எட்டத்தில் எட்டத்தில் போகக்கூடாதா, நாம் இன்னும் இது போலவே பல நூறு மைல்களுக்கு நடந்து போய்க் கொண்டே இருக்க மாட்டோமா என்று மனம் ஏங்கியது. 'இவருக்குக் காட்டாமலே அந்தக் கடிதத்தை மறைத்து விட்டது எவ்வளவு புத்திசாலித்தனம்! அப்பாவைப் பற்றி ரொம்ப மட்டமாக எண்ணியிருப்பார். அப்படிப்பட்டவரின் பெண்தானே என்று என்னையும் தாழ்வாக எண்ணுவார்!...'

திடீரென்று கௌரி மூக்கை உறிஞ்சி, ''முந்திரிப் பருப்பு!'' என்றான். ''வறுத்த முந்திரிப் பருப்பு!''

''எங்கே?'' என்று திகைத்தாள் ஷோபா.

''இங்கேதான் எங்கேயோ,'' என்று மறுபடி மூக்கை உறிஞ்சிவிட்டுச் சுற்று முற்றும் நோக்கினான் அவன். ''நன்றாய் வாசனை வருகிறது. இங்கே தான்... ஆ! கண்டுபிடித்துவிட்டேன்!''

''எங்கே?''

''உன் கைப் கையில்தான். நீதான் வைத்திருக்கிறாய். எடு, எடு.'' அவள் பையைப் பறிக்க முனைந்தான் கௌரி.

''இல்லை, இல்லை,'' என்று பதைத்துப் போனாள் ஷோபா. ''என் பையில் எதுவும் இல்லை!''

''அடடே! என் பையில்தான் இருக்கிறார் போலிருக்கிறது!'' என்றவன் பாண்ட் பாக்கெட்டிலிருந்து இரண்டு சிறிய பொட்டலங்களை வெளியே எடுத்தான்.

ஷோபா முகம் சுளித்தாள். ''சரிதான். ஸீரியஸான வேலை இருக்கிறதென்று எண்ணிக் கொண்டு நான் வந்திருக்கிறேன். நீங்கள் ஏதோ பிக்னிக் பார்ட்டிக்குக் கிளம்பின மாதிரி வந்திருக்கிறீர்கள்.''

''ஷோபா! தூக்கு மேடையில் நிற்கிறபோதுகூட ஒரு ஜோக் அடித்துவிட்டுக் கயிற்றைக் கழுத்தில் மாட்டிக் கொள்ள வேண்டுமாக்கும்!'' என்ற கௌரி ஒரு பொட்டலத்தைப் பிரித்து அவளிடம் தந்து, ''நன்றா யிருக்கிறதா, சொல்,'' என்றான்.

அவள் சுவைத்தாள். ''எந்தக் கடை?''

''உலகநாதன் வீட்டுச் சமையலறையில் முன்னூறு கிராம் இப்போது குறைந்திருக்கும்,'' என்று சிரித்தான் கௌரி.

''சமையல்காரன் உடந்தையா?''

''ஷோபா! இந்தக் கௌரி ஒரு நல்ல பர்ஸனல் அஸிஸ்டென்ட் மட்டுமல்ல. ஒரு நல்ல டிரைவர மட்டுமல்ல. ஒரு நல்ல சமையற்காரனும் கூட,'' என்றான் கௌரி. ''உன் ஹாண்ட்பாக்கை நான் பிரிக்கப் பார்த்ததும் நீ பதைத்தது ஏனென்று எனக்குத் தெரியும்.''

ஷோபா திடுக்கிட்டாள். ''ஏன்?''

''ஒரு பெண்ணின் கைப்பைக்குள் எவ்வளவோ ரகசியமான-''

''ரகசியமான?''

''அழகு சாதனங்கள் இருக்கும்.''

ஷோபா நிம்மதியுடன் பெருமூச்சு விடவும், நீள்வட்டமான காம்பவுண்டு சுவரின் நுழை வாயிலை அவர்கள் அடையவும் சரியாயிருந்தது. வாசலுக்கு இடப்புறமாக உயரமான கம்பம் நட்டு, அதில் 'திரிசரண அபிமானிகள் சங்கம், சென்னைக் கிளை' என்ற பெரிய பலகை மாட்டப்பட்டிருந்தது. மிகத் தள்ளி, உள்ளே ஏற்றமான பாதையின் கடைசியில், மஞ்சள் வண்ணக் கட்டிடம் தெரிந்தது.

சுற்றுச் சுவரின் வாசலில் வாட்ச்மேன் யாரும் இருக்கவில்லை. 'பௌத்தத்திலும் தம்மத்திலும், சங்கத்திலும் நம்பிக்கை உள்ளவர்கள் தாராளமாக வரலாம்' என்ற வாசகம் அடங்கிய சிறிய பலகையொன்று இரும்புக் கேட்டின்மீது காணப்பட்டது.

''போகலாம் வா,'' என்று கண்ணால் சாடை காட்டினான் கௌரி.

ராஜாஜி ஹாலின் வாசலைப் போல நீளமும் அகலமுமாக இருந்த படிகளைக் கடந்து வெராந்தாவை அடைந்தார்கள் அவர்கள்.

மாளிகையெங்கும் நிசப்தமாயிருந்தது. ஆனால் இடதுபுறத்து அறையிலிருந்து மட்டும் படபடவென்ற மெல்லிய ஓசை கேட்டது. எட்டிப் பார்த்தார்கள்.

பௌத்தத் துறவிகளின் வழக்கப்படி ஒற்றைத் தோள் தெரியுமாறு மஞ்சள் போர்வை சுற்றிக் கொண்டிருந்த ஒருவர் வேகமாக டைப் அடித்துக் கொண்டிருந்தார் அங்கே. சுற்றிலும் இரண்டாள் உயரமுள்ள மர பீரோக்களில் புதிய புத்தகங்களும் பழைய புத்தகங்களும் தனித் தனியே அழகுற அடுக்கப்பட்டிருந்தன. தரையெங்கும் மெத்தென்ற கம்பளம் விரிக்கப்பட்டு, வசதியாக வட்ட மேஜைகளும் நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன.

நிழலாடியதும் அந்த மனிதர் தலை நிமிர்ந்து, ''வாருங்கள், உட்காருங்கள், என்ன வேண்டும்?'' என்று பணிவும் இனிமையுமாக விசாரித்தார்.

''வணக்கம்,'' என்று கை குவித்தான் கௌரி. ''இந்தச் சங்கத்தின் தலைவரைப் பார்க்க வந்தோம்.''

ஒரு டைரியைப் புரட்டினார் அவர். ''தலைவரவர்கள் இன்று யாரையும் பார்ப்பதாகக் குறிப்பிட்டிருக்க வில்லையே?''

''நாங்கள் முன்கூட்டித் தெரிவிக்கவில்லை,'' என்றாள் ஷோபா.

''அடடா, அதனால்தான் அவர் இன்று முக்கியமான தியானமொன்றில் ஈடுபட்டிருக்கிறார்.''

''எப்போது எழுந்து வருவார்கள்?''

''சொல்வதற்கில்லை. சேர்ந்தாற்போல் பத்து மணி நேரம்கூட அமர்ந்திருப்பார். இன்று விடிகாலை நாலு மணிக்கு அமர்ந்தார்...''

''அவ்வளவு நேரம் காத்திருக்க முடியாது. நான் போக வேண்டும் இன்னொரு நாள் வரலாம்,'' என்று எழுந்து கொண்டாள் ஷோபா. ஏர் போர்ட்டிலிருந்து தந்தை

திரும்பக்கூடிய நேரம் நெருங்க நெருங்க, அதற்குமுன் வீட்டை அடைந்துவிட வேண்டுமே என்ற தவிப்பு அவளை வாட்டிக் கொண்டிருந்தது.

அவளுடைய அவசரம் கௌரிக்குப் புரியவில்லை. 'அவசரப்படாதே' என்று குறிப்பு காட்டும் வகையில் அவள் காலை மெல்ல மிதித்தான்.

''தலைவரின் திருநாமம் என்ன?''

''கீர்த்திசிங்கா,'' என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கையில் உள்ளிருந்து இன்னொருவர் வந்தார். அவரும் துறவுத் தோற்றத்தில் தானிருந்தார். ஆனால் சிறிது அதிக வயதுக்காரராகத் தோற்றமளித்தார்.

வந்தவர், டைப் அடித்துக் கொண்டிருந்தவரிடம், ''இன்று இங்கே கௌரி சங்கர் என்ற இளைஞரும், ஷோபா என்ற பெண்ணும் வருகிறார்களாம். அவர்களை இருக்கும்படி சொல்லச் சொன்னார் தலைவர்,'' என்றார்.

குபுக்கென்று ஷோபா எழுந்து கொண்டாள்.

''எப்படி... எப்படி எங்களைப் பற்றி... எங்கள் பெயரைப் பற்றி...''

வாய் விட்டு அவள் திகைத்துக் கொண்டிருக்கையில், வெளியே மண்டபத்திலிருந்து, 'காயேன ஸன்வரோ ஸாது, ஸாது வாக்காய ஸன் வரோ, மனஸா ஸன்வரோ ஸாது...' என்ற மெல்லிய பாடலொலி கேட்க, டக்டக்கென்ற பாதக் குறடுகளின் கட்டியத்துடன் கீர்த்திசிங்கா உள்ளே வந்தார்.

அவரது தோற்றமும், பார்வையும், குரலும், தோத்திரத்தைப் பாடிய வண்ணமே உள்ளே வந்த தோரணையும், யாரும் சொல்லாமலே ஒரு பயத்தை மூட்டின.

கௌரி எழுந்து கொண்டான்.

''வணக்கம், சுவாமி நான் தான் கௌரி சங்கர் என்கிறவன். இவள் தான் ஷோபா. தங்களுக்கு முன்கூட்டித் தெரிவிக்காதிருந்தும்...''

''கீர்த்திசிங்காவுக்கு அது தெரிந்துதான் இருக்கிறது,'' என்று முறுவலித்தார் அவர். அந்தத் தடித்த உதடுகள் புன்னகையினால் வளைந்த போது முகத்தில் அசாதாரண மான ஆழமொன்று பரவியது.

''ரத்னம், நீங்கள் இன்று நீல நிறமான ஆடை அணிந்திருக்கிறீர்களா?'' என்றார் கீர்த்திசிங்கா.

''இல்லை, ஐயனே. மஞ்சள் உடை அணிந்திருக் கிறேன்,'' என்றார் முதலில் வந்த நபர்.

''நீங்கள் நீலம் அணிந்திருக்கிறீர்களா, உபாகரே?'' என்று தட்டெழுத்துக்காரரைக் கேட்டார் கீர்த்தி சிங்கா.

''இந்தத் துறவி உடை தவிர வேறொன்று அணிவேனா, குருநாதரே?'' என்றார் அவர்.

''இவர்கள்?'' என்று ஷோபாவையும், கௌரியையும் சுட்டிக் கேட்டார் கீர்த்திசிங்கா.

''இந்தச் சகோதரர் வெள்ளைச் சட்டையும் கறுப்புப் பாண்ட்டும் அணிந்திருக்கிறார். இந்தச் சகோதரி ஆரஞ்சுக் கரை போட்ட பச்சை நிறப் புடவையும், ஆரஞ்சு நிற ரவிக்கையும் அணிந்திருக்கிறார்.''

கண்களை மூடிக் கொண்டு, கைகளை குவித்து, வானத்தை நோக்கினார் கீர்த்திசிங்கா. ''அப்படியானால் பிரார்த்தனைக்குச் செவி சாய்த்து விட்டான் பேரருளாளன்,'' என்றவர் கண்களைத் திறந்து, ''ஆம், ரத்னம்.

கீர்த்திசிங்காவுக்கு இன்று எல்லாமே நீலமாகத் தோன்றுகிறது,'' என்றார்.

''அப்படியா?'' ரத்னம் நடுங்கும் கைகளால் அவரது கால்களைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டார்.

''ஆமாம் ரத்னம். இந்தச் சித்திக்காகத்தான் பெரும் பிரயத்தனம் செய்து வந்தான் கீர்த்திசிங்கா. புறக் கண்ணால் பார்க்கப்படும் பொருள் என்ன நிறமாக இருந்தாலும் அதை நீலமாக, நீல வண்ணமாக, நீலத் தோற்றமாக, நீலத்தைப் பிரதிபலிப்பதாகக் கீர்த்திசிங்காவினால் பார்க்க முடிகிறது. அது நேற்றிரவு கீர்த்திசிங்காவுக்கு ஏற்பட்ட சித்தி. அடுத்த சித்தி எல்லாப் பொருள்களையும் மஞ்சள் நிறமாகப் பார்ப்பது. அதற்கடுத்தது சிவப்பாகப் பார்ப்பது...''

''என்னை மன்னியுங்கள், ஐயனே!'' என்று அவரது காலடியில் வீழ்ந்தார் ரத்னம். ''தங்களை அறியாமல், தங்களது வலிமையை உள்ளபடி உணராமல், இங்கே காலம் கழிப்பது வீண் என்று நினைத்தேன்...''

''நினைத்து, இன்று யாரிடமும் சொல்லாமல் வெளியேறிவிடத் திட்டமிட்டிருந்தாய்? உன் உடைமைகளை மூட்டை கட்டி, தென் திசையிலுள்ள பலா மண்டபத்துக்குப் பக்கமாக வைத்திருக்கிறாய்? அப்படித்தானே?''

ரத்னத்தின் கன்னங்களில் கரகரவென்று கண்ணீர் வழிந்தது. மீண்டும் ஒருமுறை கீர்த்திசிங்காவின் கால்களைத் தொட்டு வணங்கிவிட்டு, ''இனி மேல் எங்கும் போகமாட்டேன், குரு நாதா. என்னை இந்தத் தடவை மட்டும் மன்னித்து விடுங்கள்,'' என்று கூறிவிட்டு விரைந்து வெளியே சென்றார்.

இவ்வளவு நேரமும் கௌரியோ ஷோபாவோ வாயே திறக்கவில்லை. மந்திரத்தால் கட்டுண்டவர்கள் போல் பதுமையென ஒதுங்கி நின்றிருந்தார்கள்.

நாற்காலியில் அமர்ந்தார் கீர்த்திசிங்கா. "உட்காருங்கள்," என்றார் இருவரையும்.

ஷோபா கைகால்களை ஒடுக்கிக் கொண்டு அடக்கமாக ஓர் நாற்காலியில் உட்கார்ந்தாள். கௌரி அவள் பக்கத்தில் உட்காருமுன்னர், கையிலிருந்த கைக்குட்டையைப் பிரித்தான். அலுங்காமல் கசங்காமல் அதனுள் இருந்த ஒரு பூவை எடுத்தான். கீர்த்தி சிங்காவிடம் நீட்டினான்.

"கல்ப புஷ்பம்," என்றவாறே அதை வாங்கிக் கொண்டார் கீர்த்திசிங்கா. ஒரு பெருமூச்சு அவரிடமிருந்து வெளிப்பட்டது. "ஹூம்! பாவம், அந்த இளைஞன்!" என்றார்.

"சுவாமி! தங்களுக்கு இதைப்பற்றித் தெரியுமா?" என்றான் கௌரி வியப்புடன்.

"குழந்தாய்! இந்த கீர்த்தி சிங்காவின் கண்முன்னே உலகம் அதன்பாட்டுக்குச் சுழன்று கொண்டே இருக்கிறது," என்று தலையைக் குனிந்தவாறு துயரமான குரலில் பேசினார், கீர்த்திசிங்கா. "யதோ நாணம் உதபாதி, பன்னா சக்ஷு அனுத்தரம். யஸ்ஸ ஸக்ஷுஸ்ஸ பதிபா ஸப்ய துக்கா பமுச்சதி என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எந்தக் கண்ணிலிருந்து எல்லா அறிவுகளும் பிறக்கின்றனவோ அந்த ஞானக் கண்ணுக்கு நிகரானது கிடையாது, அந்தக் கண்ணை அடைந்தவன் எல்லாத்

துக்கங்களிலிருந்தும் விடுபடுகிறான் என்பது அதன் பொருள். ஆனால் அந்தக் கண்ணினால் பார்க்கப் பார்க்கத துன்பம்தான் கீர்த்திசிங்காவுக்கு அதிகரிக்கிறது.''

''எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்!'' என்றாள் ஷோபா பயபக்தியுடன். அவர் 'நான்' என்று குறிப்பிடாமல் கீர்த்திசிங்கா என்று பேசுவது முதலில் அவளுக்கு என்னவோ போலிருந்தது. பிறகு பழகிவிட்டது.

''வேறெப்படிச் சொல்வது, சகோதரி? இதோ இந்தக் கல்ப புஷ்பத்தைப் பார். இதை எடுத்துக் கொண்டு ஒரு வாலிபன் - ராகவ் என்ற பெயருடையவன் - முன்னொரு நாள் கீர்த்தி சிங்காவிடம் வந்தான். 'பௌத்தர்களின் தத்துவப்படி இதற்குப் பெரும் மகிமை உண்டு என்கிறார்களே உண்மை தானா?' என்று கேட்டான்.''

கௌரி ஆர்வத்துடன் ''தாங்கள் என்ன சொன்னீர் கள்?'' என்றான்.

''உண்டு என்று கீர்த்திசிங்கா சொன்னான். எந்த வீட்டில் இந்தப் புஷ்பம் மலர்கிறதோ அந்த வீட்டிலுள்ள வாலிபனுக்கு இன்னொரு பிறவி கிடையாது, அவன் நிர்வாணம் அடைவது நிச்சயம் என்று கூறினான். ஆனால் அந்த இளைஞன் பல கடும் சாதனைகளும் தவமும் செய்ய வேண்டுமென்றும், பொறுமையுடன் இருந்து வரவேண்டும் என்றும் கீர்த்திசிங்கா சொன்னான். ஆனால் அந்தச் சிறுவனுக்குப் பொறுமை இல்லை. முயற்சிகளைச் செய்தான். சலிப்படைந்தான். விரக்தியடைந்தான். ஒரு நாள் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டு விட்டான்.''

திடுக்கிட்ட ஷோப, ''தங்களுக்கு அது தெரியுமா?'' என்று உரத்த குரலில் கேட்டாள்.

''கீர்த்திசிங்காவின் கண் இப்போது கூட அதைப் பார்க்கிறது. அவன் பாதி கட்டிலிலும் பாதி தரையிலுமாகக் கிடக்கிறான். 'அன்புமிக்க அண்ணன் அவர்களுக்கு' என்று ஒரு கடிதம் எழுதி வைத்திருக்கிறான்,'' என்ற கீர்த்திசிங்கா கௌரியின் பக்கம் திரும்பினார். ''உனக்கு எப்படி இந்தப் புஷ்பம் கிடைத்தது, குழந்தாய்?''

''இறந்துபோன ராகவ்வின் வீட்டில் நான் வேலை செய்கிறேன், ஐயா,'' என்றான் கௌரி. ''அவன் இந்தப் பூவை வைத்திருந்ததும், பௌத்த வழிபாடுகளில் ஆர்வம் செலுத்தியதும் எனக்குத் தெரியும். அவன் தற்கொலைக்குக் காரணம் என்னவென்று தெரியாதிருந்தது. அதை அறிந்து கொள்வதற்காகவே இங்கு வந்தேன். தாங்களும் சொல்லிவிட்டீர்கள்.''

அவனுக்கு முன்னால் ஷோபா எழுந்து கொண்டாள். ''தங்கள் நேரத்தை நாங்கள் வீணாக்கிவிட்டோம்...''

''இரு, குழந்தாய்,'' என்று அவளுடைய தோள்களின் மீது கையை வைத்தார் கீர்த்திசிங்கா. அந்த இடம் நெருப்புப் பட்டதுபோலச் சுரீரெனச் சுடுவதை உணர்ந்த ஷோபாவுக்கு ஆச்சரியமாயிருந்தது.

''ஏறத்தாழப் பதினைந்து வருடங்களுக்கு முன்பு - டாக்டர் அம்பேத்கரும், அவருடன் சேர்ந்து லட்சக் கணக்கான பேரும் போதியெம்பெருமானின் மார்க்கத்தைத் தழுவினார்கள் அல்லவா?''

''கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''அப்போது ஏற்பட்ட உற்சாகம் கொஞ்ச நாளில் மங்கிவிட்டது. அப்படிப் போகாதிருக்க வேண்டி, கீர்த்திசிங்கா சில சகோதரர்களுடன் சேர்ந்து, இந்தச்

சங்கத்தைத் தோற்றுவித்தான். இப்போதும் கூடப் பிரசாரகர்கள் - குறிப்பாகப் பிரசாரகிகள் - நிறையத் தேவைப்படுகிறது.''

''சொற்பொழிவுகள் நிகழ்த்துவதற்காகவா?'' என்று கேட்டாள் ஷோபா.

''வேண்டாம், வேண்டாம். துண்டுப் பிரசுரங்கள், சிறு சிறு புத்தகங்கள் முதலியவற்றைக் குறிப்பிட்ட இடங்களில் வினியோகிக்க வேண்டும். அம்மாதிரி வேலைகளை ஒரு சகோதரன் செய்வதைக் காட்டிலும் ஒரு சகோதரி செய்யும்போது அதிக வரவேற்புக் கிடைக்கிறது. நீ ஏனம்மா அந்தப் பணியை மேற்கொள்ளக்கூடாது?''

''நானா!'' திடுக்கிட்டாள் ஷோபா. ''நான்... எனக்கு இதிலெல்லாம் பழக்கமில்லை...''

''நடப்பதற்குக் காலும், கொடுப்பதற்குக் கையும், பார்ப்பதற்கு கண்ணும் இருக்கும்போது பழக்கம் என்ன தனியாக? அவசரமில்லை. யோசித்துச் சொல்.''

''என் தந்தையைக் கேட்டுத்தான் சேர வேண்டும்...''

''மெதுவாகச் செய்யம்மா. கீர்த்திசிங்காவின் ஆசி உனக்கு எப்போதும் உண்டு,'' என்று அவள் தலையைத் தொட்டு ஆசி கூறினார் கீர்த்திசிங்கா.

''ஃப்ராடு'' என்றான் கௌரி, இறங்கி வரும்போது.

''என்ன!''

''ஃப்ராடு என்றேன். இஃப்பன்னா, ராவன்னா, டூனா.''

அவனைக் குழப்பத்துடன், பார்த்தாள் ஷோபா. ''பின்னே அந்தக் கீர்த்திசிங்காவின் எதிரில் அப்படியே

மயங்கிப் பரவசமாகிவிட்ட மாதிரியெல்லாம் பேசிக் கொண்டிருந்தீர்களே?''

''அதுவா? நான் நல்ல டிரைவர் மட்டுமல்ல, நல்ல சமையற்காரன் மட்டுமல்ல, நல்ல நடிகனும் கூட.''

ஷோபா மேற்கொண்டு படிகளில் இறங்காமல் நின்றாள். ''அவர்கள் ஃப்ராடு என்று எதை வைத்துச் சொல்கிறீர்கள்?''

''சும்மா ஒரு ஹஞ்ச். அவ்வளவுதான். ஆதாரம் எதுவுமில்லை என்னிடம். ஆனால் நீ நினைக்கிறமாதிரி அவர்கள் போதிசத்வரின் மறு அவதாரங்கள் இல்லை என்று மட்டும் நிச்சயமாய்ச் சொல்வேன்.''

''அவர்களுடை பிரசாரக் குழுவில் என்னை ஒரு தொண்டராகச் சேரச் சொன்னாரே? நானும் ஓரளவு சம்மதித்தேனே? வாபஸாக வேண்டியதுதானா?''

''நோ, நோ! எல்லா மர்மத்துக்கும் சாவி இவர்களிடம் தான் இருக்கிறது. நீ எவ்வளவுக்கெவ்வளவு இவர்களை நம்புவதாக நடிக்கிறாயோ, எவ்வளவுக்கெவ்வளவு இவர்களுடைய படையில் தீவிரமாகச் சேர்ந்து கொள்கிறாயோ அவ்வளவுக்கவ்வளவு ஆதாயம்.''

''ஆபத்து என்று சொல்லுங்கள்.''

''அதுவும்தான்'' என்றான் கௌரி.

'திரிசரண அபிமானிகள் சங்கம்' என்ற ஆழம் தெரியாக் கிணற்றினுள் இந்தப் பூங்கொடியை இறக்கு கிறோமே என்று அவனுள் ஒரு கணம் நடுக்கம் ஏற்பட்டது.

## எட்டு

''நீ பச்சைக் குழந்தையா இல்லை, பைத்தியமா என்று புரியவில்லை. வர வர ரொம்ப மோசமாகி விட்டாய்!'' என்று இரைந்து கொண்டிருந்தார் உலகநாதன். செங்கமலம் அப்பாவித்தனமாகத் திருதிருவென்று விழித்துக் கொண்டு அவரெதிரில் நின்றிருந்தாள்.

உள்ளே நுழையவிருந்த கௌரி, சந்தர்ப்பம் சரியில்லையென்று வெளியிலேயே நின்றுகொண்டான்.

''இப்போது நான் என்ன செய்துவிட்டேனென்று இப்படிச் சத்தம் போடுகிறீர்கள்?'' என்றாள் செங்கமலம்.

''ஒரு கையெழுத்துப் போடப் பேனா இருக்கிறதா என்று கேட்டதும் உன் ரூமிலிருந்து இதை எடுத்து வந்து காட்டுகிறாயே, என்ன அர்த்தம்?'' என்று கடிந்து கொண்டார் உலகநாதன். அது என்ன பொருள் என்று கௌரி மெதுவாய் எட்டிப் பார்த்தான்.

அழகான பிளாஸ்டிக் பேனா ஸ்டாண்ட். சிவப்பு, நீல பால் பாயின்ட் பேனாக்கள் அதில் செருகப் பட்டிருந்தன. ஸ்டாண்டின் அடிப்புறத்தைத் திருப்பிப் பார்த்தபடி உலகநாதன், ''ஜி.டி. சைக்கிள்ஸ் வெள்ளி விழாக் கொண்டாட்டத்துக்காக இதை அனுப்பியிருக்கிறார்கள். இது எப்போது வந்தது என்று கேட்டால் ஒரு மாதமாயிற்று என்கிறாய். இவர்களுக்கு ஒரு தாங்ஸ் எழுதிப் போட வேண்டாமா? உன் ரூமுக்கு எடுத்துப் போய் ஒளித்து வைத்துக் கொண்டால் எனக்கு எப்படித் தெரியும்?'' என்றார்.

''இது என்ன பிரமாதப் பொருள்? பெரிசாய்த் திருடி விட்ட மாதிரி பேசுகிறீர்களே?'' என்றாள் செங்கமலம், ரோஷப்பட்டவள் போல.

''அடச் சட்! பொருளோட மதிப்புக்காகவா சொல்கிறேன்? வேண்டுமென்றே திரித்து அர்த்தம் பண்ணுகிறாயே?'' என்றார் உலகநாதன். ஆனால் உடனேயே குரலைத் தணித்துக் கொண்டு, ''நூறு நூறாய்ப் பணம் போட்டுத் துணிமணி வாங்கிக் கொள்கிறாய். ஆயிரம் ஆயிரமாய்ப் பணம் போட்டு நகைகள் எடுத்துக் கொள்கிறாய். அப்புறமும் இந்தப் பத்துப் பைசா பதினைந்து பைசா சமாசாரத்தில் ஏன்தான் உனக்கு மோகமோ! எனக்குப் புரியவேயில்லை. சரி, சரி. எடுத்துக் கொண்டு போ.''

''எனக்கொன்றும் வேண்டாம். நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்.'' என்று அந்தப் பேனா ஸ்டாண்டை மேஜை மீதே வைத்து விட்டுத் திரும்பிப் போய்விட்டாள் செங்கமலம்.

சில நிமிடங்கள் தாமதித்த பின்னர் கௌரி உள்ளே நுழைந்தான்.

அவனை நிமிர்ந்து பார்த்து விட்டு, அன்றைய தினசரிக்குள் பார்வையைப் புதைத்துக் கொண்டார் உலகநாதன். ''கௌரி, கொஞ்ச நாளைக்கு நீ என் முகத்தில் விழிக்காமல் இரேன். புண்ணியம் உண்டு,'' என்றார் கடுமையாக.

''என் சார்? என்ன செய்தேன் அப்படி?''

''செய்யவில்லை என்பதற்காகத்தான் சொல்கிறேன்.'' பேப்பரை மடித்து மேஜைமீது தொப்பென்று போட்டார் உலகநாதன். ''துக்கம் விசாரிக்க வந்தவர்களிடமெல்லாம் நான் என்ன சொன்னேன் அன்று? நீயும் கேட்டுக்கொண்டு தானே இருந்தாய்? 'அந்த இன்விடேஷனை அச்சடித்து என் தம்பியைச் சாகடித்தவன் யாரென்று கண்டு பிடிக்காமல் விடமாட்டேன்' என்று நான் சொல்லவில்லை? 'நான்

விசாரிக்கிறேன் சார்' என்று நீயும் எனக்கு வாக்களிக்க வில்லை? இப்போது யாரைப் பார்த்தாலும் கேட்கிறார்கள், ஏதாவது தெரிந்ததா என்று?''

''அதற்காகத்தான் சார் வந்தேன். போலீசிலேயே...''

''போலீஸ் போலீஸ் என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்காதே. அவர்களுக்கு ஆயிரம் நிர்ப்பந்தங்கள் இருக்கும். தடங்கல்கள் இருக்கும். அதனால் பர்ஸ்யூ பண்ணாமல் விட்டிருப்பார்கள். நீ தனிப்பட்ட முறையில் விசாரிக்கிறேன் என்றாயே. அது என்ன ஆயிற்று என்கிறேன்.''

'அதற்காகத்தான் சார் வந்தேன். அஸிஸ்டெண்ட் கமிஷனர் மணிவண்ணன் உங்களுக்குச் சினேகிதர் தானே? அவருக்கு ஒரு கடிதம் கொடுங்கள். அவர்கள் எது வரை விசாரித்திருக்கிறார்கள், என்ன தெரிந்து கொண்டார்கள் என்பதைக் கேட்கிறேன். அதற்கு மேல்...''

''ஹூம்! எவனைக் கண்டுபிடித்து என்ன செய்யப் போகிறோம்? ஒரு மண்ணுமில்லை. மனசு கிடந்து தவிப்பதால் புலம்புகிறேன்...''

''அப்படி நீங்கள மனம் நொந்து பேச வேண்டாம் சார். லெட்டர் கொடுங்கள்,'' என்று கௌரி வற்புறுத்தியதன் பேரில் வேண்டா வெறுப்பாக எழுதிக் கொடுத்தார் உலகநாதன்.

ஆனால் மணிவண்ணன், கௌரி நினைத்திருந்த அளவுக்கு உதவியாயிருக்கவில்லை. நல்லவர்தான். உலகநாதன் வீட்டு விசேடங்களுக்குச் வரும் போது கௌரியைப் பார்த்திருக்கிறவர்தான். இருந்தாலும் தாம் ஓர் உயர்தரப் போலீஸ் அதிகாரி என்ற பொறுப்பை

மறக்காதவராக இருந்தார். பல அதிகாரிகளுடன் போன் மூலம் பேசிய பின்னர், கௌரியிடம், ''ஐ ஆம் ஸாரி, கௌரி. அந்த ராகவ் ஃபைல் க்ளோஸ் பண்ணியாகி விட்டதாம். ஒரு ப்ராக்டிகல் ஜோக், ஆனால் அன்ஃபார்சு னேட் முடிவு என்பதைத் தவிர வேறெதுவும் கண்டு பிடிக்க முடியவில்லை. அத்தோடு விட்டு விட்டார்கள்,'' என்றார்.

''ராகவ் எழுதி வைத்திருந்த கடிதத்தைக் கொடுக்க முடியுமா சார்?'' என்று கௌரி கேட்டுப் பார்த்தான்.

''அதற்கும் ஒரு ஸாரி தான் என் பதில்,'' என்று முறுவலித்தார் அஸிஸ்டெண்ட் கமிஷனர் மணிவண்ணன். ''சட்ட விரோதமில்லாத முறையில் எந்த விஷயத்தை வேண்டுமானாலும் துப்பறிய ஒரு பிரஜைக்கு உரிமை உண்டு. அந்த வகையில் நீ என்ன செய்தாலும் ஐ விஷ் யூ ஆல் லக். தகுந்த ஆதாரத்துடன் கொடுத்தால் நிச்சயமாய் நாங்கள் நடவடிக்கை எடுப்போம். குட் பை!'' என்று எழுந்து கை குலுக்கி விடை கொடுத்து விட்டார்.

கௌரி ஏமாற்றத்துடன் வெளியே வந்து மனம் போனபடி கொஞ்ச நேரம் அந்தக் காம்பவுண்டுக்குள் சுற்றிக் கொண்டிருந்தான். வீட்டுக்குப் புறப்படக் காம்பவுண்டைத் தாண்டும் போதுதான், பொழுது போக்குக்காக மக்லீன் நாவலை மணி வண்ணனின் மேஜைமீதே வைத்து விட்டோம் என்று ஞாபகம் வந்தது. திரும்பி நடந்தான்.

மணிவண்ணனின் கார் அவனை உரசினாற்போல நின்றது. ''உன்னை தேடிப் பிடித்து வரச் சொல்லி நாலைந்து கான்ஸ்டபிள்களை அனுப்பினேனே? நீ இங்கேதான் இருக்கிறாயா?''

''ஆமாம் சார்... ஒரு புத்தகம் உங்கள் மேஜைமீது...''

''அதை உன் வீட்டுக்கு அனுப்பியாயிற்று. ஆனால் நான் அதற்காக உன்னைத் தேடவில்லை. இந்தா,'' என்று ஒரு காகித உறையை நீட்டினார் அஸிஸ்டெண்ட் கமிஷனர்.

கௌரி ஆவலுடன் பார்த்தான். அதற்குள் -

ராகவ்வின் லெட்டர் ஹெட் காகிதம் ஒன்று இருந்தது. கசங்கியிருந்தது. 'மதிப்புக்குரிய போலீஸ் கமிஷன -' என்ற அரைகுறையான வாக்கியமொன்று ராகவ்வின் கையெழுத்தில் இருந்தது. வேறெதுவும் எழுதப்படவில்லை.

''மரணம் நேரிட்ட அன்று ராகவ்வின் அறையில் குப்பைக் கூடையில் கிடந்ததாம். இது. எடுத்து வைத்திருந்த இன்ஸ்பெக்டர் சட்டைப் பையிலேயே மறந்து விட்டாராம். இதை ராகவ் ஃபைலில் சேர்க்கவேயில்லையாம். நான் இப்போது விசாரித்ததால் கொண்டு வந்து தந்தார். இதைக் கூட உன்னிடம் தருவது தப்புதான். அனஃபீஷியல் என்று வைத்துக் கொண்டு தருகிறேன். உபயோகப் படுத்திக் கொள்.''

அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான் கௌரி. ''இதற்கு என்ன சார் அர்த்தம்? ஏன் வாக்கியம் பாதியில் நின்றுவிட்டது?''

''தட்ஸ் யுவர் ஹெடேக்!'' என்றார் மணிவண்ணன். பிறகு, ''சாதாரண விஷயம்தான். தற்கொலை செய்து கொள்கிறவர்களில் சிலர் போலீசுக்கு ஒரு கடிதம் எழுதுவார்கள் இல்லையா, 'என் மரணத்துக்கு வேறு யாரும் பொறுப்பில்லை. நானேதான் பொறுப்பாளி' என்று? அது போல, ராகவ் முதலில் அண்ணனுக்கு எழுதிய பிறகு போலீசுக்கும் எழுத நினைத்திருக்கிறான். பிறகு அண்ணனுக்கு எழுதியதே போதும் என்று தோன்றி

யிருக்கும். அல்லது அதற்குள் யாராவது வருகிற சத்தம் கேட்டிருக்கும். போலீசுக்குக் கடிதம் தேவையில்லை என்று முடிவு செய்து தன் உயிரையும் முடித்துக் கொண்டு விட்டான். அவ்வளவுதான் விஷயம். உனக்குப் புரிய வில்லை?'' என்றார்.

''புரிகிறது சார். ரொம்ப நன்றி,'' என்று கூறி விட்டுத் ¤Èu\] Gª ³¿½Á.Ä] G¬ pQª ®]u W®GñG] ®i~Nõ¬iÚ.

**அ**ன்று பிற்பகல் - சமையலறைக் கடியாரம் மூன்று மணி அடித்த போது, .கௌரி பெரிய சண்டை போட்டுக் கொண்டிருந்தான் சமையற்காரனுடன், காப்பி நன்றா யில்லை என்று.

மேற்கொண்டு அந்தப் போர் நீடிக்குமுன், உள்ளே வந்தாள் செங்கமலம்.

''கௌரி, இப்படி வா, சொல்கிறேன். ஒரு உதவி செய்யணும்,'' என்று அவனைத் தன் பின்னே அழைத்துக் கொண்டு சென்றாள். முன் கட்டுக்கு வந்ததும், உலகநாதனின் படுக்கையறையைக் கடக்கும் போது, ஓசைப்படாமல் நுனிக் காலால் நடக்கத் தொடங்கியவள், உதட்டின் மீது விரல் வைத்துக் கௌரிக்கும் எச்சரிக்கை செய்தாள். சாப்பாட்டுக்குப் பிறகு பகல் தூக்கம் போட்டுக் கொண்டிருந்தார் உலகநாதன்.

அதற்கு அடுத்த அறை செங்கமலத்தினுடையது. ''உள்ளே வா,'' என்று சைகை காட்டினாள் அவள்.

இரண்டு ஸ்டீல் பீரோக்களும், சுவரோடு சுவராகப் பதித்த மர அலமாரியும், சில சூட் கேஸுகளும் இரண்டு நாற்காலிகளும் இருந்தன அந்த அறையில். ஒரு சுவர்

அலமாரிக்குக் கண்ணாடி போடப்பட்டிருந்தது. அதனுள் வெளியூர்களிலும் எக்ஸிபிஷன்களிலும் வாங்கிய பொம்மைகள், தட்டுக்கள், செயற்கைப் பூக்கள் முதலியன் காணப்பட்டன. இன்னொரு அலமாரிக்குக் கண்ணாடி போடவில்லை. கதவுக்குப் பூட்டுப் போடப்பட்டிருந்தது.

''இதற்குத்தான் கூப்பிட்டேன்.'' என்று அந்தப் பூட்டைக் காட்டினாள் செங்கமமலம். ''சாவி எங்கேயோ தொலைந்து விட்டது. இதைத் திறந்தாக வேண்டும்.''

ஏன் அவ்வளவு ரகசியக் குரலில் அதைச் சொல்ல வேண்டும் என்று கௌரிக்குப் புரியவில்லை. பூட்டை இழுத்துப் பார்த்தவன், ''சாதாரணப் பூட்டுதான். சுத்தியால் இரண்ட தட்டுத் தட்டினால் திறந்து கொண்டு விடும்,'' என்றான்.

''வேண்டாம், வேண்டாம். தட்டுகிற சத்தம் கேட்டால் அவர் எழுந்து கொண்டு விடுவார். அவர் எழுந்து கொள்வதற்கு முன்னால் திறந்துவிட வேண்டும். உன்னிடம் சாவிக்கொத்து இருக்கிறதா? எதாவது பழையசாவி திறக்குமா பார்கலாம்.''

''இருங்கள்,'' என்ற கௌரி கார் ஷெட்டுக்குச் சென்று ஒரு பழைய சாவிக் கொத்தை எடுத்து வந்தான். ஒவ்வொன்றாகப் போட்டுப் பார்ப்பதற்குள் செங்கமலம் நாலு தடவை வாசல் பக்கம் எட்டிப் பார்த்து விட்டு வந்ததோடு, ''என்ன? திறந்ததா?'' என்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

''பெட்டி பூட்டு ரிப்பேர்க்காரன் யாரையாவது பிடித்து அழைத்து வருகிறேன் அண்ணி. இப்போதே இதைத் திறந்து என்ன ஆக வேண்டும்!'' என்றான் கௌரி.

''ஐயய்யோ! உனக்குத் தெரியாது. திறந்தப்புறம் சொல்கிறேன்,'' என்று செங்கமலம் பதைத்தாள்.

நல்ல வேளை, கடைசியில் ஒரு சாவி சரியா யிருக்கவே க்ளிக் கென்று பூட்டுத் திறந்து கொண்டது.

அலமாரியின் மேல் தட்டைப் பார்த்தவன் திகைத்துப் போனான்.

சிறியதும் பெரியதுமாக, வண்ண வண்ணமான அட்டைகள் போட்டதாக, பல வகை டைரிகள் ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தன அந்தத் தட்டில். பிரஸ் பட்டன். வைத்தவை; பென்ஸில் உள்ளவை; முகம் பார்க்கும் கண்ணாடி கொண்டவை; பிளாஸ்டிக் உறை போட்டவை. பாக்கெட் சைஸ், பெரிய சைஸ், மிகப் பெரிய சைஸ் - அத்தனை டைரிகளும் இந்த வருடத்தியவை. ஒன்றிலாவது முதல் பக்கம்கூட எழுதப்படவில்லை! புத்தம் புதியன அத்தனையும்.

''என்ன அண்ணி இதெல்லாம்?'' என்றான் கௌரி திகைப்பை அடக்க மாட்டாமல்.

''என்னைக் கேட்கணுமாக்கும்?'' என்று சிணுங்கி னாள் செங்கமலம். ''அவர் எவ்வளவு பெரிய பிஸினஸ் காரர்? எவ்வளவு டைரிகள் வரும்? அதையெல்லாம் அப்பப்போ எடுத்துப் பத்திரமாய் வைத்திருக்கிறேன். இல்லாவிட்டால் கன்னா பின்னாவென்று தொலைந்து போயிருக்கும்.''

''யாருக்காவது கொடுத்திருக்கலாமே அண்ணி. வருஷத்திலே பாதி தாண்டிவிட்டதே?''

''அதேதான்! அந்தவார்த்தையை அவர் சொல்லிவிடப் போகிறாரே என்றுதான் அவசர அவசரமாய் உன்னைக்

கூப்பிட்டேன். கேவலம் அந்த இங்க் ஸ்டாண்டுக்குக் காலையில் என்ன சத்தம் போட்டார் மனுஷன்? இதையும் ஒரு நாள் பார்ப்பார். யாராவது கேட்டால் கொடுக்கலாம் என்று பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேனே, அதற்குப் பாராட்டவா போகிறார்? காச்சு மூச்சென்று கத்துவார்.''

''அதனாலே?''

செங்கமலத்தின் கண்ணில் நீர் தளும்பியது. ''அவர் பார்த்து விட்டுக் கத்துவதற்கு முன்னாடி எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு. போய்த் தொலை! வேண்டுமானால் உன் ரூமில் கொண்டு போய் வைத்துக் கொள்!''

''சரிதான்! நான்தான் திருடிக் கொண்டு வந்து வைத்திருக்கிறேனாக்கும் என்று அவர் என்னைப் பிய்த்து உதறினால்...''

''அப்படியானால் கிழித்துப் போடு! கொளுத்திப் போடு! இங்கே இருக்க வேண்டாம்!'' என்று சொல்லும் போது கிட்டத்தட்ட அழுகையே வெடித்து விட்டது அவளுக்கு. குழந்தைத்தனமான ஆசையுடன் கணவருக்கு வந்த டைரிகளையெல்டலாம் சேகரித்து வைத்துவிட்டு, இப்போது மொத்தத்தையும் தாரை வார்க்கிற வருத்தத்தை அவளால் அடக்க முடியவில்லை.

நாசூக்காகத் தொண்டையைக் கனைத்துக் கொண்டான் கௌரி. ''சரி அண்ணி! பழைய பேப்பர்காரனிடம் போட்டு விடுகிறேன். ஆனால் நிபந்தனை.''

''என்ன?''

''காசு என்ன கிடைத்தாலும் எனக்குத்தான். ஒரு பைசா உங்கள் கண்ணில் காட்டமாட்டேன். அப்புறம் பங்கு கேட்கக் கூடாது.''

செங்கமலம் தன் வருத்தத்தை மறந்து சிரித்து விட்டாள். கௌரி ஒரு பெரிய துணிப் பையை எடுத்துக் கொண்டுவந்து எல்லா டைரிகளையும் அள்ளிப் போட்டுக் கொண்டான். ஆனால் டைரியில் சேராத ஒன்றும் அவைகளின் நடுவே இருந்தது. அது ஒரு லெட்டர்ஹெட்.

''அண்ணி... இது...'' என்று கூறும்போதே அது யாருடைய லெட்டர் ஹெட் என்பதையும் கண்டு விட்டான்.

இறந்து போன ராகவ்வினுடையது. மெல்லிய அழகான வெள்ளை நிறத் தாளில், ஓரங்களில் சித்திரப் பூக்களுடன் இருந்தது. 'ராகவ்' என்கிற பெயர் மட்டுமே தாளின் மேற்புறத்தில் இடது கோடியில் காணப்பட்டது. புதிய லெட்டர் ஹெட். மொத்தம் நாலைந்து தாள்கள் தான் செலவழிந்திருக்கும். மீதி சுமார் நூறு தாள்களுக்கு மேல் இருந்தது.

அவன் கேட்டதையும் பார்த்ததையும் கவனிக்காத மாதிரி, ''சீக்கிரம் மூட்டையைக் கட்டு. அவர் எழுந்திருக்கிற நேரமாகி விட்டது.'' என்றாள் செங்கமலம்.

பாவம், இதையும் கேட்டுக் குடைவானேன் என்று கௌரி எதுவும் பேசாமல் அதைப் பைக்குள் போட்டுக் கொண்டான். செங்கமலம் ராகவ் ரூமில் இதைப் பார்த்திருக்கிறாள், வழவழப்பாக, பளபளப்பாக, புதியதாக இருந்த அந்த 'லெட்டர்ஹெட்' கண்ணை உறுத்தி யிருக்கிறது. தூக்கி வந்திருக்கிறாள். இதை அவளைக் கேட்டுத் தான் தெரிந்துகொள்ள வேண்டுமா என்ன?

அலமாரிக் கதவைச் சாத்திவிட்டு, ''வருகிறேன் அண்ணி' என்று புறப்பட்டான். 'அந்த அருமையான லெட்டர் ஹெட்டையும் சேர்த்துத் தூக்கிக் கொண்டு போகிறானே பாவி! அவன் கையிலே கொள்ளி வைக்க!'

என்று செங்கமலம் மனத்துக்குள் சாபமிடுவது அவன் காதிலேயே கேட்கிற மாதிரி இருந்தது. திரும்பிப் பார்க்காமல் நேரே கார் ஷெட்டுக்குப் போனான்.

லெட்டர் ஹெட்டை மட்டும் எடுத்துக் கொண்டு டைரி மூட்டையை ஓர் ஓரமாக வைத்து, அதன் மீது இரண்டு பழைய கோணிகளை மூடினான். காருக்குள் உட்கார்ந்து கொண்டான். ராகவ்வின் லெட்டர்ஹெட்டை மடியில் வைத்துக் கொண்டு கவனித்தான்.

அவன் நினைத்த மாதிரி நாலைந்து தாள்கள் செலவழிந்திருக்கவில்லை. இரண்டே இரண்டு தாள்கள் தான் கிழிக்கப்பட்டிருந்தன. அவைகளும்கூட அவசரமாகக் கிழிக்கப் பட்டிருக்க வேண்டும். லெட்டர் ஹெட்டின் மேற்பகுதியில் அந்த இரண்டு காகிதத்தின் முனைகள் பிசிறு பிசிறாய் நின்றிருந்தன.

அஸிஸ்டெண்ட் கமிஷனர் கொடுத்திருந்த காகி தத்தைப் பாண்ட் பையிலிருந்து எடுத்தான். இரண்டாவது தாளின் பிசிறுகளுடன் அதன் முனையை இணைத்துப் பார்த்தான். பொருந்தவில்லை. முதல் தாளின் பிசிறுகளுடன் பொருத்திப் பார்த்தான். இணைந்தது.

கடிதத்தையும், லெட்டர் ஹெட்டையும் பத்திரமாக வேறொரு காகிதத்தில சுற்றி, ஷெட்டிலிருந்த அலமாரியில் வைத்துப் பூட்டினான். திரும்பக் காரில் வந்து அமர்ந்து கொண்டபோது அவன் சிந்தனைகள் வேகமாக ஓடின.

இறந்து போன ராகவ், முதலில் அண்ணனுக்குக் கடிதம் எழுதிவிட்டு, பிறகு போலீஸுக்கு எழுத முயன்றதாயும், பாதியில் நிறுத்திவிட்டதாயும் அஸிஸ்டெண்ட் கமிஷனர் ஊகித்தாரே, அது சரியில்லை போலிருக்கிறதே?

முதலில் போலீஸ் கமிஷனருக்கு - அவருக்கு மட்டுமே - கடிதம் எழுத ராகவ் முயன்றிருக்க வேண்டும். அதுவும் தற்கொலையைப் பற்றியதாகத் தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. வேறு ஏதோவொரு முக்கியமான விஷயத்தைப் போலீஸுக்குத் தெரிவிக்க எண்ணியிருக்கலாம்.

அதை எழுத முடியாமல் அதற்குள் யாரோ குறுக்கிட்டிருக்கக் கூடும். ஆகவே அதைக் கசக்கி எறிந்திருக்கிறான். குறுக்கிட்டவர், தற்கொலைக் கடிதம் எழுதும்படி அவனைக் கட்டாயப் படுத்தி இருக்கக் கூடும். பிறகு...

வெறும் ஊகங்கள் தான். என்றாலும் கௌரிக்கு வியர்த்தது.

## ஒன்பது

ஆஸ்திரேலியாக்காரர் ஒருவரும் அவரது மனைவியும் அன்று திரிசரண அபிமானிகள் சங்கத்துக்கு வருகை தநதிருந்தார்கள் தோட்டம். நூல் நிலையம், பழைய ஏட்டுச் சுவடிகள் முதலியனவற்றைப் பார்வையிட்டு முடிந்த பின்னர் புத்த பிரானின் திருவுருவம் வைக்கப் பட்டிருந்த பெரிய ஹாலை அடைந்தார்கள். புத்தரின் காலடியில் பற்பல மெழுகுவத்திகள் எரிந்துகொண்டிருந்தன.

''அருமை! அருமை! மிகச் சிறப்பாக நடத்தி வருகிறீர்கள்,'' என்று பாராட்டினார் ஆஸ்திரேலியாக்காரர்.

''கீர்த்திசிங்காவின் கையில் என்ன இருக்கிறது? நல்ல சங்கம் இங்கே சேர்ந்திருப்பதால் தர்ம மார்க்கத்தைப் பரப்பும் பணியில் அவன் உற்சாகமாக இறங்க முடிகிறது,'' என்றார் கீர்த்திசிங்கா.

ரத்னம் சிவப்பான காகிதம் ஒன்றை அவரிடம் நீட்டினார். தந்திச் செய்தி.

'கல்கத்தாவில் வஜ்ரேந்திர பிக்கு ஒரு கார் விபத்தில் காலமானார்,' என்று அதில் கண்டிருந்தது.

கண்களை மூடி மண்டியிட்டமர்ந்து ஜெபங்கள் செய்வதுபோல் முணுமுணுத்தார் கீர்த்திசிங்கா. ''வஜ்ரேந்திர பிக்கு கீர்த்திசிங்காவின் ஆருயிர்த் தோழர்,'' என்று கூறித் தந்தியைக் காட்டினார் வந்தவர்களுக்கு.

ரத்னம் குறுக்கிட்டு, ''உத்தமமான துறவி அவர். ஐயனே, உலக வாழ்க்கையை நீத்த பின்னர் அவர் என்ன ஆவார்?'' என்று கேட்டான்.

கீர்த்திசிங்கா புன்னகை புரிந்தார். ''இதே கேள்வியைப் புத்த பிரானிடம் வத்ஸன் என்ற சீடர் கேட்ட போது என்ன சொன்னாரென்று நீங்கள் படித்ததில்லையா, ரத்னம்?'' என்றவர், மெழுகுவத்திகளில் ஒன்றை வாயினால் ஊதி அணைத்தார். ''இதோ இங்கே உன்முன் எரிந்து கொண்டிருந்த தீக்கொழுந்து எங்கே போயிற்று? அது அணைக்கப்பட்டதைக் கண்டாய். இங்கிருந்து எந்தத் திசையில் சென்றது? கிழக்குத் திசையில் சென்றதா? மேற்குத் திசையில் சென்றதா? வடக்குத் திசையில் சென்றதா? தெற்குத் திசையில் சென்றதா? உன்னால் சொல்ல முடியுமா? முடியாது. மெழுகுவத்தி, தீக்கு ஒரு வெளிப்பாடு. தீ அணைந்ததும் எங்கிருந்து வந்ததோ அங்கே போய் விட்டது. நெருப்புக்கு மெழுகுவத்தி போல உயிருக்கு உடம்பு.''

''ஆகா, என்ன விளக்கம்!'' என்று வாய்விட்டு வியந்தவாறே ஆஸ்திரேலிய தம்பதிகள் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டனர்.

அவர்கள் தலை மறைந்ததும் கீர்த்திசிங்காவின் முகத்தில் அதுவரை குடியிருந்த கண்ணியமும் இனிமையும பெருந்தன்மையும் அகன்றன. தடித்த புருவங்கள் நெறித்துக்கொண்டு நெற்றி மேலேறின. ''வஜ்ரேந்திர பிக்குவுக்குக் கார் விபத்தா!' என்றார் குரூரமான புன்னகையுடன். ''என்ன அர்த்தம், புரிகிறதா ரத்னம்?''

''தெரியவில்லையே குரு நாதரே!''

''கீர்த்திசிங்காவுக்குத் தெரியும். மேலிடத்துக் கட்டளைகளை ஒழுங்காக நிறைவேற்றவில்லை அவர். இரண்டொரு விஷயங்களில் எதிரிகளிடம் காட்டிக் கொடுத்து விடுவாரோ என்று கூடச் சந்தேகம் ஏற்பட்டதாம். ஆகவே சௌகரியமான வழியில் அவரைக் கார் விபத்துக்காளாக்கி விட்டார்கள்.''

ரத்னத்துக்குக் குப்பென்று அச்சம் காலோடு தலை பரவியது.

கீர்த்திசிங்கா தொடர்ந்து, ''அது மாதிரி நாமும் மந்தமாயிருக்கக் கூடாது என்பதற்கு எச்சரிக்கை இது. நமது வேலைகளுக்கு உதவியாக அந்த ஷோபாவை அமர்த்த வேண்டுமென்று கீர்த்திசிங்கா அன்று சொன்னானே என்று ஆயிற்று?'' என்றார்.

'' நான் விசாரித்தவரையில் அவள் தந்தை ரங்கநாதன் கொஞ்சம் கண்டிப்பானவராக இருக்கிறாரென்று தெரிகிறது. இங்கே போகாதே அங்கே போகாதே என்று மகளைத் தடுக்கிறாராம்.''

''ஹாஹ்ஹா! கீர்த்திசிங்காவிடம் வந்து இதைச் சொல்கிறீர்களே!'' என்று சிரித்தார் கீர்த்திசிங்கா. பிறகு ரத்னத்தின் தோளை மெல்லத் தட்டி, ''ஒவ்வொரு ஆளுக்கும் ஒரு விலையுண்டு, ரத்னம். ரங்கநாதனின் விலை

என்னவென்று தெரிந்து கொண்டு அதைக் கொடுத்து விட்டால் போதும். கவலைப் படாதே. கீர்த்திசிங்கா ஏற்பாடு செய்வான்,'' என்றார்.

''உஷ்!'' என்ற ரகசியமான அழைப்பு ஷோபாவைத் தூக்கிவாரிப் போட வைத்தது.

அப்போதுதான் ரங்கநாதன் எங்கோ காரில் புறப்பட்டுச் சென்றிருந்தார். அவருக்கு விடை கொடுத் தனுப்பிவிட்டுப் போர்ட்டிகோவில் நின்றிருந்தபோதுதான் அந்த 'உஷ்' சப்தம் ஒலித்தது. சுற்றுமுற்றும் பார்த்தாள்.

அடர்த்தியான போகன் வில்லாக் கொடிகளின் பின்னாலிருந்து வெளிப்பட்டான கௌரி.

''அம்மாடி! நீங்கள்தானா! பயந்தே போனேன்,'' என்றாள் ஷோபா. அவள் இமைகள் படபடவென்று அடித்துக்கொண்டன.

''இதற்கே இவ்வளவு பயப்படுகிறவள் பயங்கரக் கொலைகள், சர்வதேசச் சதிகள், மர்மக் கடத்தல்களை யெல்லாம் கண்டுபிடிக்க வேணடியிருக்குமே, என்ன செய்வாய்?''

''உஷ்! இங்கே வேண்டாம். அப்படி வாருங்கள்,'' என்று தோட்டத்தின் மத்திக்கு கௌரியை அழைத்துப் போனாள் ஷோபா. நாலுபுறமும் ஒருமுறை எச்சரிக்கை யாகப் பார்த்துக் கொண்டபின், ''சொல்லுங்கள்,'' என்றாள்.

''ஷோபா! அந்தத் திரிசரண அபிமானிகள் சங்கத்தில் நீ சேர வேண்டியது ரொம்ப அவசரமாயும் அவசியமாயும் ஆகிவிட்டது.'' என்றான் கௌரி.

''ஓ!''

''ஆமாம். அவர்கள் ஃபிராடு என்றதற்கு எதை வைத்துச் சொல்கிறாய் என்று கேட்டாயல்லவா? இப்போது சந்தேகத்துக்கு இடமில்லாமல் தெரிந்துவிட்டது.''

''எப்படி?''

''அந்தக் கீர்த்திசிங்கா அவ்வளவு கச்சிதமாக, நேரில் பார்க்கிற மாதிரி வர்ணித்தாரே, ராகவ்வின் தற்கொலைக் காட்சியை? ராகவ் கடிதம் எழுதி வைத்திருப்பதாகக் கூடச் சொன்னாரே? யாருக்கு?''

''தன் அண்ணனுக்கு.''

''அதற்கு முன்னால் போலீஸ் கமிஷனருக்கு ஒரு கடிதம் எழுத நினைத்து, ஒரே ஒரு வாக்கியம் மட்டுமே எழுதிவிட்டு நிறுத்திக் கொண்டதாகச் சொன்னாரா?''

''இல்லையே? போலீஸ் கமிஷனருக்கும் ஒரு கடிதம் எழுதினாராமா?''

ராகவ்வின் லெட்டர் ஹெட் காகிதம் பற்றிச் சொன்னான் கௌரி. ''உண்மையில் போலீஸ் கமிஷனருக்குத்தான் முதலில் எழுத ஆரம்பித்திருந்தான். அதில் ஒரு வாக்கியம் எழுதுமுன்பு யாரோ குறுக்கிட்டிருக்கிறார்கள். அதைக் கசக்கி எறிந்துவிட்டான். பிறகு அண்ணனுக்கு எழுதியிருக்கிறான் - தற்கொலை செய்து கொள்வதாக. ஆகையால் நீ அன்றைக்குச் சந்தேகப்பட்டது சரிதான்.''

''என்ன சந்தேகம்?''

''ராகவ் தற்கொலைதான் செய்து கொண்டான் என்பது என்ன நிச்சயம் என்று நீ சொல்லவில்லையா? ஏன் கொலையாக இருக்கக் கூடாது என்று கேட்டாயே, நினை

வில்லை? அதெல்லாம் சரிதானோ என்று தோன்றுகிறது எனக்கு. ஆகவே அந்தத் திரிசரண அபிமானிகள் சங்கத்தில் நீ சேரவேண்டியது அவசியமாகிவிட்டது, ஷோபா.''

''ஆனால் என் அப்பா...''

''ஏதாவது பொய் புளுகுகளைச் சொல்லி அவரைச் சரிக்கட்ட வேண்டியதுதான்.''

''சரி, கௌரி, நாளை பிற்பகல் அப்பா தூக்கம் போடுகிற சமயத்தில் கிளம்பிவிடுகிறேன்,'' என்று ஷோபா வாக்களித்தாள்.

ஆனால் அந்த வாக்கை நிறைவேற்றுவது அவ்வளவு சுலபமாயிருக்கவில்லை.

மறுநாள் மாலை நாலு மணி சுமாருக்கு டிரெஸ் மாற்றிக் கொண்டு புறப்பட்டபோது தந்தை தன்னைக் கவனிக்கவில்லை என்றுதான் அவள் நினைத்திருந்தாள்.

பெரிய கேட் கிறீச்சென்று சத்தம் கேட்குமே என்றபதற்காகச் சிறிய ஒற்றைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே செல்ல நினைத்தாள் அவள். வெளியே ஒரு பழைய ரசீதுப் புத்தகத்துடன் நின்றிருந்த ஓர் அழுக்கான ஆள், 'ஆடிக் கிருத்திகைக்காக ஏழைகளுக்குக் கஞ்சி ஊத்துறோமுங்க. உங்களாலானது...'' என்று வழிமறித்தான்.

''தினம் நாலு பேர் இந்த மாதிரி வருகிறார்கள். போப்பா!''என்று அவனை விரட்டிக் கொண்டிருந்த போது, அந்தச் சத்தம் கேட்டதனாலோ என்னவோ ரங்கநாதன் வந்துவிட்டார். கேட்டைக் கடக்கவிருந்த சமயம் சட்டென்று அவள் கையைப் பிடித்து, ''என்ன ஷோபா, எங்கே ரொம்ப அவசரமாய்?'' என்று மடக்கினார்.

ஷோபாவுக்குப் பயத்தைக் காட்டிலும் கோபம்தான் அதிகம் வந்தது. ''போரடிக்கிறதப்பா வீட்டில்,'' என்றாள் எரிச்சலுடன்.

''அதற்காக? சும்மா ஊர் சுற்றுவதா?''

ஷோபா தன் கற்பனைத் திறனைக் காட்டுவதென்று தீர்மானித்தாள். ''சும்மா இல்லை, அப்பா. இந்தப் பேப்பர்மாஷ், டால்ஸ் இதெல்லாம் சத்யகுமாரி என்று ஓர் அம்மாள் சொல்லிக் கொடுக்கிறார்கள், இல்லையா? அதில் சேர்ந்திருக்கிறேன்.''

''அட, நல்ல காரியமாய் இருக்கிறதே? எங்கே அந்த இடம்?''

''டவுனில் - காசி முதலித் தெரு இல்லை, பிராட்வேக்குப் பக்கத்தில்? அங்கே நாலாம் நம்பர் வீட்டுமாடி.'' துணிந்து அடுக்கினாள் பொய்யை.

''இன்றைக்குத்தான் முதல் நாளா?''

''ஆமாம் அப்பா.''

''முதல் நாளன்று தனியாய்ப் போவானேன்? நானும் வருகிறேன்.''

''வேண்டாம்பா,'' என்ற ஆட்சேபணையை ரங்கநாதன் லட்சியம் பண்ணவில்லை. ஷெட்டுக்குப் போய்த் தானே காரை எடுத்துவந்தார். ''வாம்மா, நானே அழைத்துப் போகிறேன்,'' என்றார்.

ஷோபாவுக்கு வேறு வழி இருக்கவில்லை. காரில் ஏறிக் கொண்டாள்.

கார் காசி முதலித் தெரு நாலாம் நம்பர் வீட்டு எதிரில் போய் நின்றது.

காரை விட்டு இறங்கி வந்து. ''வாயேன், போகலாம்,'' என்றார் ரங்கநாதன்.

''நான் வரவில்லை,'' என்றாள் ஷோபா முகத்தைக் கடுகடுப்புடன் திருப்பிக் கொண்டு.

''ஏன், அதற்குள் உன் திட்டம் மாறிவிட்டதா?''

''இல்லை. என்னை நீங்கள் இப்படி ஸ்பை பண்ணுவது பிடிக்கவில்லை. நானென்ன பச்சைக் குழந்தையா?''

''பச்சைக் குழந்தையாயிருந்தால் கவலையே படமாட்டேன். விட்டால் விட்ட இடத்தல் கிடக்கும். பசிக்கிறபோது அழும். ஆகாரம் கொடுத்தால் தூங்கிவிடும். நீ வயது வந்த பெரிய பெண்ணாக, அறிவும் அழகும் உள்ள யுவதியாக இருப்பதால் தான் கண்ணும் கருத்துமாய்க் கட்டிக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது,'' என்று ஒரு நீண்ட பிரசங்கத்தைச் செய்து முடித்துவிட்டுக் காரிலிருந்து இறங்கினார் ரங்கநாதன்.

ஷோபா பேசாமலே இருந்தாள்.

''முதல் மாடி என்றுதானே சொன்னாய்?'' என்றார் ரங்கநாதன்.

'சும்மாக்கானும் சொன்னேனப்பா!' என்று எரிச்சலுடன் சொல்லிவிடலாம் போலிருந்தது. மாடியேறி விட்டுத்தான் வரட்டுமே, தண்டனையாயிருக்கும் என்று எண்ணியவளாக, ''ஆமாம்,'' என்றாள்.

''பெயர் என்ன சொன்னாய்?''

ஏதோ வாயில் வந்த பெயரை அப்போது சொன்னது, இப்போது நினைவுபடுத்திக் கொள்வது கஷ்டமாயிருந்தது

ஷோபாவுக்கு. அதற்குள் ரங்கநாதனே, ''என்னவோ சத்யகுமாரி என்று சொன்னாயென்று ஞாபகம்,'' என்று எடுத்துக் கொடுத்தார்.

''ஆமாம், சத்யகுமாரி,'' என்றாள் ஷோபா.

குறுகலாயிருந்த மாடிப்படியின் வழியே கைத்தடியை டொக்டொக்கென்று தட்டிக் கொண்டே மேலேறிச் சென்றார் ரங்கநாதன். உதட்டைக் கடித்துக் கொண்டு காரில் அமர்ந்திருந்தாள் ஷோபா. அப்பா கோபத்துடன்தான் திரும்பி வரப் போகிறார். வரட்டும். 'எதற்காகப் பொய் சொன்னாய்?' என்று கேட்கத்தான் போகிறார். கேட்கட்டும். 'நீங்கள் மட்டும் என்னிடம் ஒளிவு மறைவில்லாமல் இருக்கிறீர்களா, அப்பா?' என்று திருப்பிக் கேட்பதற்கு இதுதான் சந்தர்ப்பம். 'யாரோ ஒருவனை மோசம் செய்திருக்கிறீர்களே? அவன் உங்களையும் என்னையும் வஞ்சம் தீர்த்துக் கொள்வதற்காகக் கறுவிக் கொண்டிருக் கிறானே? அதைப் பற்றி ஒரு நாளாவது என்னிடம் நீங்கள் மூச்சுவிட்டது உண்டா?' என்று சரமாரியாய்க் கேள்வி கேட்பதற்கு இது ஒரு பொன்னான வாய்ப்பு.

வெளியே பார்த்தாள்.

பழைய ரசீது புத்தகங்களுடன் அந்த அழுக்கான ஆள் அவள் காரைக் கடந்து போனான். ஆடிக் கிருத்திகையாம்! கஞ்சி ஊற்றுகிறானாம்! ஊர் பூரா சுற்றுவான் போலிருக் கிறது, ஏமாந்தவர்கள்அகப்பட்டால் தலையில் மிளகளாய் அரைக்க!

ரங்கநாதன் திரும்பி வந்தார். காரின் கதவு சாத்தப்படும் சத்தம் கேட்டவுடன்தான் திடுக்கிட்டுத் திரும்பினாள் ஷோபா. ரங்கநாதன் எதுவும் சொல்லாமல் ஸ்விட்ச்சீயைத் திருப்பிக் காரைக் கிளப்பினார். சைனாபஜாரை அடையும்

வரை அவர் ஒன்றுமே சொல்லவில்லை. பிறகே, ''நீ சொன்ன மாதிரி அங்கே யாரும் கிடையாது,'' என்றார்.

ஷோபா ஏதோ சொல்ல வாயெடுத்தாள். ஆனால் அதற்குள் குறுக்கிட்டார் ரங்கநாதன். ''ஏன் இப்படிப் பொய் சொன்னாயென்று எனக்குப் புரிகிறது.''

ஷோபா திடுக்கிட்டாள். ரங்கநாதன், ''எனக்கு உன்மீது கோபம் இல்லை, ஷோபா. பயப்படாதே. போரடிக்கிறது, போரடிக்கிறது என்று அடிக்கடி சொல்வாயே, அது உண்மைதான் என்று இன்றைக்குத்தான் புரிந்து கொண்டேன். பி.ஏ. பாஸ் பண்ணிவிட்டாய். வேலைக்குப் போகலாமென்றால் என் கௌரவத்துக்குக் குறைச்சல். டைப்ரைட்டிங் படித்தாயிற்று. எத்தனை நாள் சும்மா வீட்டிலே உட்கார்ந்திருப்பது என்று உனக்கு அலுப்பாயிருக்கிறது. இயற்கை தானே? ஒரு நல்ல பிள்ளையாகப் பார்த்து உன்னை ஒப்படைக்கிற வரையில் நீ போரடிக்கிறது என்று சொல்லிக் கொண்டுதான் இருப்பாய். அதில் தப்பில்லை.'' என்றார்.

தந்தை என்ன சொல்ல முயலுகிறார் என்று ஷோபாவுக்குப் புரியவில்லை. எரிந்து விழுந்து கோபித்துக் கொள்வதற்குப் பதில் சாந்தமான முறையில் பேசுவது ஏன் என்றும் விளங்கவில்லை.

ரங்கநாதன் தொடர்ந்தார். ''ஆனால் பொழுது போகவில்லை என்பதற்காக நீ கண்ட கண்ட இடங்களில் சுற்றத் தேவையில்லை. உன்னைப் போலப் படித்த, பெரிய இடத்துப் பெண்கள் செய்யக்கூடிய ஒரு நல்ல காரியம் இருக்கிறது. அதைப் பற்றி இப்போதுதான் தெரிந்தது.''

''என்னப்பா சொல்கிறீர்கள்?''

''நீ சொன்ன நபர் இரண்டாவது மாடியில் இருப்பார் என்று போனேனில்லையா? அங்கே யாரும் இல்லை. மூன்றாவது மாடியாக இருக்குமோ என்று நினைத்து அங்கே போனேன். அங்கே என் பழைய சிநேகிதரொருவரைப் பார்த்தேன். இரண்டு நிமிஷம்தான் பேசிக் கொண்டிருந்தோம். ஒரு யோசனை சொன்னார். ரொம்பப் பிடித்திருக்கிறது. ஆனால் நீ என்ன சொல்கிறாயோ?''

சுவாரஸ்யமில்லாமல், ''ஊம்,'' என்றாள் ஷோபா.

''திரிசரண அபிமானிகள் சங்கம் என்று கேள்விப் பட்டிருக்கிறாயோ?''

ஷோபா திடுக்கிட்டு நிமிர்ந்தாள். ''ஏன்... அது... அதற்கென்ன?''

''என் சிநேகிதர் அதிலே ஒரு மெம்பராம். அவர்களுக்குப் பிரசாரகிகள் - அதாவத பிரசாரம் செய்யும் பெண்கள் - நிறைய வேணடியிருக்கிறதாம். பல வீடுகளுக்குச் சென்று அவர்கள் தருகிற துண்டுப் பிரசுரங்களை வினியோகிக்க வேண்டுமாம். அவ்வளவுதான் 'அதில் உங்கள் மகளைச் சேருங்களேன். பொழுது போக்குக்குப் பொழுதுபோக்கு. புண்ணியத்துக்குப் புண்ணியம், என்றார். நல்ல யோசனையாய்த் தோன்றுகிறது. நீ என்ன சொல்கிறாய்?''

ஷோபாவுக்கு ஒரு பக்கம சிரிப்பு வந்தது. அவள் மனத்துக்குள் நினைத்திருந்தது. எப்படி மறைமுகமாக நிறைவேறுகிறது!

''என்னம்மா சொல்கிறாய், ஷோபா?'' என்று மறுபடி கேட்டார் ரங்கநாதன்.

''ஏதோ இன்ட்டரஸ்டிங் ஓர்க்காகத்தான் இருக்கும் போலிருக்கிறது. போகிறேன் அப்பா,'' என்றாள் பணிவுடன்.

அப்படிச் சொல்கையில் தந்தையின் முகத்தை அவள் பார்க்கவில்லை. பார்த்திருந்தால், ரங்கநாதன் தன்னிச்சை யாகப் பேசவில்லை என்பதையும், ஏதோ ஒரு கட்டாயத்தின் பேரில்தான் சொல்கிறார் என்பதையும் அவருடைய முகத்தி லிருந்த அச்சம் அவளுக்குக் காட்டிக் கொடுத்திருக்கும்.

## பத்து

''வா, மகளே!'' என்று இனிய குரலில் வரவேற்றார் கீர்த்திசிங்கா. ''நீ வருவாயென்பது கீர்த்திசிங்காவுக்குத் தெரிந்ததுதான். ஆனால் அவன் எதிர்பார்த்ததைக் காட்டிலும் சீக்கிரமாகவே வந்து விட்டாய்.''

'திரிசரண அபிமானிகள் சங்கத்'தின் வாயிற்புறத்தில், பசும்புல் வெளியில் நின்றிருந்த ஷோபா அவர் பேச்சைக் கவனமாகக் கேட்பதுபோல் பாசாங்கு செய்து கொண்டிருந்தாள். அவள் எண்ணமெல்லாம் கௌரியைத் துணைக்கு அழைத்து வந்திருக்கலாமோ என்பதிலேயே இருந்தது. எதிர்பாராத விதமாக அப்பாவின் அனுமதியைப் பெற்ற மகிழ்ச்சியுடன் இன்று காலை அவள் பரங்கி மலைக்குப் புறப்பட்ட போது உலகநாதனின் வீட்டுக்குப் போன் பண்ணிப் பார்த்தாள். கௌரி எங்கேயோ வெளியே போயிருப்பதாகச் சொன்னார்கள். ''நீ யாரம்மா பேசுவது?'' என்று உலகநாதனின் மனைவி கேட்டதும், ''கௌரியின் கஸின் ஸிஸ்டர்,'' என்று கூறிவிட்டுப் போனை டக்கென்று வைத்துவிட்டாள்.

'இப்போது குன்றின் அடிவாரத்தில் அவர் காத்திருக்கிறார் என்றால் அந்தத் தெம்பே அலாதிதான்' என்ற எண்ணம் தோன்றியது அவளுக்கு.

''தந்தையைக் கேட்க வேண்டும் என்று சொன்னாயே, குழந்தாய்? கேட்டுவிட்டாயா?'' என்று விசாரித்தார் கீர்த்திசிங்கா.

''கேட்டுவிட்டேன், ஐயா, அவர் சந்தோஷமாய்ச் சம்மதம் கொடுத்தார்.''

''கீர்த்திசிங்கா அறிந்தது தான் - உன் தந்தை ரங்கநாதன் நல்ல அறிவாளி என்று. அவர் சம்மதம் கொடுக்காமல் இருக்கமாட்டார்.'' கீர்த்திசிங்காவின் இதழ்களில் ஒரு மர்மப் புன்னகை விளையாடியது. ''முன் காலமாயிருந்தால் பயப்பட்டிருப்பார். உனக்கு ஒன்று தெரியுமா, குழந்தாய்?''

''என்ன ஐயா?''

''போதிபிரானின் அன்புக் கட்டளைகளைப் பரப்பும் முயற்சியிலே எவ்வளவோ பேர் எத்தனையோ சித்திர வதைகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஏன், எனக்குத் தெரிந்து முப்பது வருடங்களுக்கு முன்புகூட, புத்தமதப் பிரசாரகர்களின் நாக்கையே வெட்டி எறிந்திருக்கிறார்கள் சில வெறியர்கள்.''

''ஐயோ! அப்படியா!'' என்று காதைப் பொத்திக் கொண்டாள் ஷோபா.

''பயப்படாதே. அந்தக் காலம் மாறிவிட்டது. அதுவும் உன்னைப் போன்ற அழகான படித்த பெண்களுக்கு எங்கு போனாலும் வரவேற்பு தான்,'' என்ற கீர்த்திசிங்கா, அருகே இன்னொரு நாற்காலியின் மீது வைக்கப்பட்டிருந்த சிறிய பெட்டியை எடுத்து அவளிடம் தந்தார்.

''திரிசரண அபிமானிகள் சங்கத்தின் பிரசாரப் புத்தகங்கள் இதில் இருக்கின்றன. மகளே, இதோ பார், கீர்த்திசிங்கா மிகுந்த சிரமத்துடன் திரட்டிய ஆதரவாளர்களின் விலாசங்கள்,'' என்று ஒரு காகிதத்தையும் தனியே தந்தார். ''புத்தகங்களில் ஒவ்வொரு பிரதியை இவர்களிடம் வினியோகித்தால் போதும்... உன் மனசில் என்ன சந்தேகம் ஓடுகிறது என்று கீர்த்திசிங்காவுக்குப் புரிகிறது.''

ஷோபா திடுக்கிட்டவளாக, ''ஒன்றுமில்லையே?'' என்றாள்.

''மறைக்காதே. இவைகளைத் தபால் மூலமாக அனுப்பலாமே என்று நினைத்தாய் இல்லையா?'' கீர்த்திசிங்கா புன்சிரிப்புடன் எழுந்து கொண்டார். அவள் முகத்தை ஊடுருவினாற்போல் பார்த்தார். ''தபாலில் வந்தால், பிரிக்காமலேகூடப் போட்டுவிடுவார்கள். ஆனால் உன்னைப் போன்றவர்கள் கொண்டுபோய்க் கொடுத்தால், உன் எதிரிலேயே பிரிப்பார்கள். உடனேயே படிக்க ஆரம்பிப்பார்கள். வேறு சினேகிதர்களுக்கும் சொல்வார்கள். உண்டா இல்லையா? ஹாஹ்ஹா!''

அவரது சிரிப்பில் வெறுப்புடன் கலந்து கொண்டாள் ஷோபா.

''இன்னொன்று, குழந்தாய். நீ தைரியமானவள்தான். ஆர்வம் உள்ளவள்தான். இருந்தாலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது முக்கியம். கண்ட கண்ட இடங்களுக்குப் போய்விடக் கூடாது. உதாரணமாக, நேற்றுமாலை கீர்த்திசிங்காவின் காதில் ஒரு சேதி விழுந்தது.''

''என்ன ஐயா, அது?''

''மவுண்ட்ரோடுக்கருகே ஞானியார் நகர் என்று ஒரு பகுதி இருக்கிறதாமே? அங்கே ஏதோ கலவரமாம்.

அடிதடியாம். யாரோ சொன்னார்கள். அந்த மாதிரி இடங்களுக்குச் செல்லாமல் இருப்பதே மேல். இல்லையா அம்மா?''

''ஞாபகம் வைத்துக் கொள்கிறேன், ஐயா. வரட்டுமா?'' என்று விடைபெற்றுக் கொண்டு, பெட்டியுடன் புறப்பட்டாள் ஷோபா.

கோடம்பாக்கத்தில் மின்சார ரயில் நின்ற அந்த ஒரு நிமிடத்துக்குள் அந்த நிகழ்ச்சி நடைபெறுமென ஷோபா எதிர்பார்க்கவில்லை.

ஸ்டேஷன் கான்டீனில் டீ ருசித்துக் கொண்டிருந்தான் கௌரி. ஜன்னலோரமாக அவள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும், உற்சாகமான சீட்டியுடன் அவளிடம் விரைந்து வந்தான். ''இறங்கு, இறங்கு!'' என்று சொல்லி, அவள் கைப் பெட்டியை எடுத்துக் கொண்டு அவளையும் கையைப் பற்றிக் கீழே இறக்கியபோது ஓர் உறுமலுடன் வண்டி கிளம்பி விட்டது.

''ரொம்ப மோசம் நீங்கள்! பார்க்கிறவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள்?'' என்று முகம் சிவந்தாள் ஷோபா.

''என்ன நினைத்துக் கொள்வார்கள்? யாரையோ ஏமாற்றிவிட்டு ஓடுகிற மோசடி மோகினி என்று உன்னையும், லபக்கென்று அவளைப் பாய்ந்து பிடித்த வீர ஸி.ஐ.டி என்று என்னையும் நினைப்பார்கள். உண்மை தானே?'' என்று கௌரி சிரித்தான்.

''க்ளாட் டு மீட் யூ மிஸ்டர் வீர ஸி.ஐ.டி!'' என்று அவனுக்குப் பழிப்புக் காட்டிக் கொண்டே கை குலுக்கினாள் ஷோபா. ''நீங்கள் செய்ய வேண்டிய முதல்

வேலை, எப்பாடு பட்டாவது உங்களுக்கு ஒரு கஸின் ஸிஸ்டர் சம்பாதித்துக் கொள்வதுதான்!''

''அம்மாடியோவ்! என்ன அவசியம் அப்படி?''

''மிஸஸ் உலகநாதனிடம் என்னை அப்படித்தான் சொல்லிக் கொண்டேன்,'' என்று கூறியவள், எதிர்பாராத விதமாய் அப்பாவே அனுமதி தந்ததையும், இப்போது கீர்த்திசிங்காவைப் பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண் டிருப்பதையும் விவரமாகச் சொன்னாள்.

''ஓ! பதவி ஏற்றாயிற்றா!'' என்று கௌரி சிரித்தானே தவிர, அவன் முகத்தில் கவலைக் கோடுகள் தான் பரவின. ''ஷோபா, நீ... நீ ரொம்ப எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எனக்குத் தெரியாமல்... என்னிடம் சொல்லா மல் எதையும் செய்யாதே. இவர்கள் கொலைக்கும் அஞ்சாத கயவர்கள்...'' என்று சொல்லும் போது அவன் குரல் அவனையும் அறியாமல் தழுதழுத்துவிட்டது.

அந்த அக்கறை அவள் இதயத்தை நெகிழ்வித்தது. பேசத் தெரியாதவளாக அவனது வலிய கரங்களை ஒருமுறை அழுத்தினாள்.

இருவரும் வெளியே வந்தார்கள்.

காரின் கதவைத் திறந்து அவன், ''ஆஃப்டர் யூ ப்ளீஸ்!'' என்றதும், ஷோபா, ''பாவம் உலகநாதன்!'' என்றாள்.

''ஏன்? என்ன?''

''பின்னே என்ன? தம்பியை பற்றித் துப்பறியப் போகிறேன் என்று சொல்லிவிட்டு, உலகநாதனின் காரை எநதப் பிக்னிக்குக்கு வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு போகலாமாக்கும்!''

கௌரியின் முகத்திலிருந்த வேடிக்கை மறைந்தது. ஷோபா உள்ளே அமர்ந்துகொண்டு கதவைச் சாத்திக் கொண்ட பின்னரும் காரை ஸ்டார்ட் பண்ணாமல் சிறிது சும்மாவே இருந்தான். ''இந்த வண்டியை எப்போதும் ராகவ்தான் ஓட்டுவார். இதைப் பார்க்கும் போதெல்லாம் தம்பியின் ஞாபகமே வருகிறதாம். அதனால் விற்றுவிடுவதாக இருக்கிறார் அவர். இங்கே ஒருவரிடம் காட்டுவதற்காக எடுத்து வந்தேன். அப்படியே உன்னையும் சந்திக்க முடிந்தது,'' என்றவன், ''ஆனால ஷோபா, தன் தம்பி விஷயத்துக்காக காரென்ன, உயிரையே கொடுப்பார் உலகநாதன். அந்தப் போலி இன்விட்டேஷனை அச்சடித்த வன் யாரென்று தெரிய வேண்டும், அவனைத் தன் கையாலேயே கழுத்தை நெரித்துக் கொலை செய்ய வேண்டும் என்று மூச்சுக்கு மூச்சு பொருமிக் கொண் டிருக்கிறார்!'' என்றான்.

ஷோபா மெல்ல வேறுபுறம் திரும்பிக் கொண்டாள்.

இந்தத் திரிசரண அபிமானிகள் சங்கம், ராகவ்வின் பௌத்த மதப பற்று, கீர்த்திசிங்காவின் மர்ம நடவடிக்கை கள் - இவை எவற்றுக்கும் சம்பந்தமில்லாதது அந்த அழைப்பிதழ் சமாசாரம் என்று அவளுக்குத் தெரியும். தன் அப்பாவைக் கறுவிக் கொண்டிருக்கும் அந்த ஊர் பெயர் தெரியாத ஒருத்தனைப் பற்றிக் கௌரியிடம் சொல்லிவிட இப்போதும் அவள் மனம் துடித்தது. ஆனால் அப்பாவைப் பற்றியும் அதைத் தொடர்ந்து தன்னைப் பற்றியும் கௌரி மட்டமாக நினைத்து விடுவானோ என்ற தயக்கம் அவள் நாவைக் கட்டிப் போட்டு விட்டது.

மேம்பாலத்தில் வழுக்கி இறங்கி, கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் ஓடியது கார்.

ஷோபா அந்த ஜேம்ஸ் பாண்ட் பெட்டியை மடியில் எடுத்து வைத்துக் கொண்டு பிரித்தாள். வெளிர் நீல நிறத்தில், மெத்தென்று ரெக்ஸின் 'பாடிங்' கொடுக்கப் பட்டிருந்தது. சாதாரணமாகப் பர்ஸ்களின் உட்புறம் காணப்படுவதுபோல் திறந்த பைகளும். ஜிப் அல்லது பிரஸ் பட்டன் வைத்த பைகளும் இருந்தன. பிடிகளும் பூட்டுக்களும் வெள்ளிபோல் மின்னின.

சின்னஞ்சிறு பிரசுரங்கள் உட்புறம் வரிசையாகக் காணப்பட்டன. எல்லாம் கையடக்கமானவை. கலையழகுடன் கூடிய ஆர்ட் காகித அட்டைகள். சுத்தமான அச்சு.

சாலையில் ஒரு கண் வைத்தபடியே அந்தப் புத்தகங்களையும் மேலோட்டமாகப் பார்வையிட்டான் கௌரி. ''கொள்ளையாய்த் தான் செலவழிப்பார்கள் போலிருக்கிறது. எந்த வெளிநாட்டுப் பணம் தண்ணீராய்ச் செலவழிகிறதோ! ஏதாவது கொஞ்சம் படியேன், கேட்கலாம்.''

''... சரணம் என்பதை உன்னதமாகப் பொருள் கொள்ள வேண்டும். ஒரு சாக்கியன் புத்தரைத் தன் உறவினனாக நினைத்தால் அது சரணமாகாது. அவர் உலக முழுதும் போற்றப்படுகிறவராயிற்றே என்பதற்காக அவரிடம் பயந்து கொண்டு சரணமடைந்தால் அதுவும் உண்மையான சரணமில்லை,'' என்று படிக்கத் தொடங்கினாள் ஷோபா. பிறகு இன்னொரு பிரசுரத்தைப் புரட்டினாள். ''ஒருவனுடைய வீழ்ச்சிக்கு முதலாவது கரணம் என்னவென்று புத்ததேவர் கூறியதாவது தீயவர்களே. அவனுக்கு மிக இனியவர்கள். நல்லார் தொடர்பில் அவனுக்கு இன்பம் இருக்காது. அவன் தீயாருடைய மதத்தையே பெரிதும் விரும்புவான். இரண்டாவது காரணம், ஒருவன் நித்திரையில் அதிக

விருப்பம் கொண்டவனாக, சோம்பலும் முன் கோபமும் உடையவனாக, எப்போதும் தீயோர் கூட்டங்களையே நாடுபவனாக இருந்தால்...''

''அருமையான கருத்துக்கள் தான். ஆனால் குரங்கின் கையில் தீவட்டியைக் கொடுத்த மாதிரிதான்! இந்தப் பிரசாரப் போர்வையில் இவர்கள் என்னவெல்லாம் செய்கிறார்களோ!'' என்றான் கெளரி.

ப்ரீஃப் கேஸை மூடிப் பூட்டினாள் ஷோபா. ''முக்கியமாக எங்கெங்கே இவைகளைக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும் என்று சில விலாசங்களைக் கொடுத்திருக் கிறார்கள். அந்த விலாசங்களில் கண் வைத்தபடி இருந்தோமானால் கண்டு பிடித்து விட முடியும்.''

''உரித்த வாழைப்பழம் மாதிரி எல்லா வேலைகளும் நடப்பதென்றால் உலகத்தில் வில்லன்களே இருக்க மாட்டார்கள், ஷோபா,'' என்று சிரித்தான் கெளரி. ''உன்னையும் என்னையும் ஒவ்வொரு நிமிஷமும் கிர்த்திசிங்காவின் கண் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. ஆகையால் அவர்களுடைய நடவடிக்கைகள் என்ன, கூட்டாளிகள் யார் என்பதெல்லாம் அத்தனை எளிதாக நீ கண்டுகொள்ளும்படி விட்டுவிட மாட்டார்கள்.''

''பின்னே?''

''விஷயம், விலாசத்தில்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. இந்தப் புத்தகத்தின் வாசகங்களில் இருக்கலாம். ஒரு வரிக்கும் இரண்டாவது வரிக்கும் நடுவே எத்தனையோ ரகசியங்கள் மறைந்து கிடக்கக் கூடும். இவைகளில் உள்ள வாக்கியங்களுக்கு வெளிப்படையான அர்த்தம் ஒன்றும், உள்ளுக்குள் ரகசியமான சேதியொன்றும் இருக்கக் கூடும். யார் கண்டது?''

ஷோபா திடீரென்று, ''ஆமாம், ஏன் மவுண்ட் ரோடு வழியாகப் போகாமல் இப்படிச் சுற்றி வளைத்துக் கொண்டு போகிறீர்கள்.'' என்று கேட்டாள்.

''உன்னுடன் அதிக நேரம் இருப்பதற்காகத்தான் - என்று பொய் சொல்ல வேண்டும் போலிருக்கிறது!''

''வேண்டாம். உண்மையான காரணத்தையே சொல்லுங்கள்.''

''இன்றைக்கு மாபெரும் ஊர்வலமொன்று மவுண்ட் ரோடு வழியாகப் போகிறதாம். அதனால் டிராபிக் டைவர்ஷன். ஆகவேதான் இப்படி ஞானியார் நகர் வழியாகச் சுற்றிக் கொண்டு போகிறேன்...''

''ஞானியார் நகர்!'' திடுக்கிட்டு நிமிர்ந்தாள் ஷோபா. ''இங்கே ஏதோ கலவரம் நடந்ததாமே? இந்தப் பக்கம் போக வேண்டாமென்று கீர்த்திசிங்கா சொன்னாரே!''

''கலவரமா?'' அமைதியில் குளித்து அழகுக் கோலமாக விளங்கிய தெருக்களைக் கண்ணோட்ட மிட்டான் கௌரி. ''எதுவும் தெரியவில்லையே! ஏன் அப்படிச் சொன்னான் அந்த ஆள்? ஏதாவது நோக்கமில்லாமல் இருக்காது. விசாரிக்கலாம், வா.'' சாலையின் ஓரமாகக் காரை நிறுத்தினான் அவன். சிறிது தொலைவில் தெரிந்த ஒரு வெற்றிலை பாக்குக் கடையை நோக்கிச் சென்றார்கள் இருவரும்.

கூல் ட்ரிங்க் வாங்கிப் பருகியவாறே, ''ஏனப்பா இந்தப் பேட்டைக்கு என்ன பெயர்?'' என்று கௌரி சாதாரணமாகக் கேட்பது போல் கடைக்காரனை விசாரித்தான்.

''ஞானியார் நகர்!'' என்றான் கடைக்காரன் பெருமை தொனிக்கும் குரலில்.

''ஞானியார் நகரா? ஞானியார் நகர் என்றா சொன்னாய்?'' நெற்றிப் பொட்டைத் தட்டிக்கொண்டு யோசனை செய்தான் கௌரி. ''என்னவோ கலவரம், கலாட்டா என்று பேப்பரில் படித்தேனே, அது இந்த இடமா?''

கடைக்காரனுக்கு ரோஷம் வந்துவிட்டது. ''சார், நம்ப பேட்டையிலே அதெல்லாம் மூச்சுக் காட்ட முடியாது, சார். நானும் டென் இயர்ஸா இங்கேதான் கடை நடத்துகிறேன். தம்மாத்துண்டு கலாட்டாகூட நடந்தது கிடையாது!''

''ஓகோ, அப்படியானால் அது வேறொரு ஞானியார் நகரோ என்னவோ,'' என்று சொன்னபின் காசைக் கொடுத்து விட்டுத் திரும்பி நடந்தான் கௌரி.

''என்ன, இப்படிச் சொல்கிறானே?'' என்றாள் ஷோபா.

''இவன் சொல்வதுதான் உண்மையாயிருக்கும். கீர்த்திசிங்கா உன்னிடம் சொன்னது என்ன? எக்ஸாக்டாய்ச் சொல்லு.''

ஷோபா நினைவுபடுத்திக் கொண்டாள். ''ஞானியார் நகர் பக்கமாய் இப்போதைக்குப் போக வேண்டாம், என்னவோ இன்று கலாட்டாவாக இருக்கிறதாம் அந்தப் பக்கத்தில் என்றார்.''

''அவர்கள் போக வேண்டாம் என்று சொன்னால் நாம் போக வேண்டும் என்று அர்த்தம்!'' காரைத் திறப்பதற்காகக் கதவில் கை வைத்த கௌரி. ''ஷோபா! அதோ பார்!'' என்று சுட்டிக் காட்டினான்.

அவர்கள் நின்றிருந்தது ஒரு பெரிய கட்டிடத்தின் வாசலில். 'திலகர் ஹால்' என்ற பெயருள்ள அந்த இடத்தில் அரசியல் கலப்பற்ற மாநாடுகளும் கருத்தரங்குகளும் அடிக்கடி நடைபெறுவது வழக்கம்.

கட்டிடத்தின் வாசல் சுவரில் ஒட்டப்பட்டிருந்தது ஒரு பெரிய சுவரொட்டி. கௌரியின் கவனத்தைக் கவர்ந்தது. அதுதான். ஷோபாவும் அவனும் நெருங்கிச் சென்று படித்தார்கள்.

ரங்கூனைச் சேர்ந்த சர்வதேச பௌத்த மிஷனின் தலைவர் ஆனந்ததேரா என்பவர், ''பௌத்தமும் இன்றைய உலகமும்'' என்பதைப் பற்றிச் சொற்பொழிவு செய்யப் போவதாகக் கண்டிருந்தது.

அந்தப் பேச்சாளரின் புகைப்படமும் இடம் பெற்றிருந்தது சுவரொட்டியில்.

ஓர் உண்மையான துறவியின் முகத்தில் என்ன சாந்தம் நிலவுமோ அந்தச் சாந்தமும், கண்களில் என்ன அருளொளி கனியுமோ அந்த அருளொளியும் சந்தேகத்துக்கிட மில்லாமல் தெரிந்தன.

''புரிகிறதா?'' என்றான் கௌரி.

''ஆமாம். நான் இந்தப் பக்கம் வந்தால் இவரைச் சந்தித்துவிடுவேனோ என்பது கீர்த்திசிங்காவின் கவலை! திரிசரண அபிமானிகள் சங்கத்தின் நடவடிக்கைகள் சந்தேகத்துக்கிடமானவை என்று இவர் சொல்லி விடுவாரோ என்று பயம்! ஆகையால் நான் இவரைப் பார்க்காதிருப்பதே மேல் என்று முன்னெச்சரிக்கையாகத் தடுத்து வைத்திருக்கிறார். அப்படித் தானே?''

''கரெக்ட். என்று அவளைப் பாராட்டியவாறு காரில் அமர்ந்தான் கௌரி. ''ஆகவே இந்த ஆனந்த தேராவை நாம் கட்டாயம் பார்த்துவிட வேண்டியதுதான்!''

''நாளை மாலை ஐந்தரை மணிக்குச் சொற்பொழிவு. வந்துவிட வேண்டியதுதானே?''

''டியதுதான், என்று புன்னகையுடன் பதிலளித்தாள் ஷோபா. மேலும் மேலும சிக்கலிலே அகப்படு கிறோம் என்ற உணர்வு இருந்த போதிலும் மனத்துக் கினியவனின் கையைக் கோத்துக் கொண்டுதான் ஆபத்தில் இறங்கு கிறோம் என்ற மகிழ்ச்சி அவள் உள்ளத்தை நிறைத்திருந்தது.

## பதினொன்று

**கா**லை பதினொரு மணி இருக்கும். உலகநாதனின் பங்களா.

''நேற்று நான் என்னவோ இரண்டு வார்த்தை விளையாட்டாய்ச் சொல்லிவிட்டால் அதற்கு இந்த முறைப்பா முறைக்கிறது?'' என்று சமையல்காரனைச் சமாதானப்படுத்த முயன்றான் கௌரி. ''சரி... அந்த ஆளை இங்கே அழைத்துக்கொண்டு வரட்டுமா?''

''எந்த ஆளை?''

''நீ என்னண்ணே, விடிய விடிய ராமாயணம் கேட்டுவிட்டு!'' என்று சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டான் கௌரி. ''அவர்தான், கிராமத்திலிருந்து வந்திருக்கிறார் என்று சொன்னேனே, என் உறவு ஆள்! கொல்லைப் புறம் தோட்டத்தில் நிற்கிறாள் பாவம்.''

''அவருக்கு என்ன செய்யணும் என்கிறே?''

''நாலு இட்டிலி போட்டு அனுப்பிவிடு. ஒரு கப் காப்பி. அவ்வளவுதான்,'' என்று கூறிய கௌளரி, சமையல் கட்டின் பின்பக்கமாய் ஒரு பெரியவரை அழைத்து வந்தான். ''இதோ பாருங்கள் மாமா. என் சொந்தத் தமையன் மாதிரி இந்தச் சமையற்காரர். வயிறு முட்ட டிபன் கொடுப்பார். சுவடு தெரியாமல் திரும்பிவிட வேண்டும். புரிகிறதா?''

அந்தப் பெரியவர் தலையை ஆட்டிக்கொண்டே மனைப் பலகையில் உட்கார்ந்த வேளை பார்த்து, ''யாரது, புது ஆள்?'' என்ற விசாரணையுடன் உள்ளே வந்துவிட்டாள் செங்கமலம்.

''வந்து அண்ணி... ஒன்றுமில்லை... இவர் எங்க கிராமம்... மாமா முறை...'' என்று கௌளரி தடுமாறினான்.

வந்திருந்தவர் பயத்துடன் எழுந்திருக்க முயன்றார். ''உட்காருங்கள், உட்காருங்கள்,'' என்று அவரை அமர்த்தினாள் செங்கமலம் ''தெரிந்தவர்தானே? பின்னே ஏன் கௌளரி இவரை இந்த விரட்டு விரட்டுகிறாய்?''

''அது வந்து அண்ணி...'' என்று கௌளரி ஏதோ சொல்வதற்குள், அந்தப் பெரியவர். ''அது வந்து அம்மா...'' என்று குறுக்கிட, ''நீங்க சும்மா இருங்க மாமா!'' என்று அதட்டல் போட்டான் கௌளரி.

''நீ சும்மா இரு முதலில்!'' என்றாள் செங்கமலம். ''நீங்கள் சொல்லுங்கள்! பரவாயில்லை. சாப்பிட்டுக் கொண்டே சொல்லுங்கள். எழுந்திருக்க வேண்டாம்.''

''அதாவது அம்மா... இவன் மாசா மாசம் ஐம்பது ரூபாய் அனுப்பிக் கொண்டிருந்தான் இவனோட அப்பாவுக்கு. இப்ப இரண்டு மாசமாய் பணம் வரக் காணோம். பிள்ளையை நேரிலே பார்த்துக் கேட்டுவிட்டு

வா என்று அவர் அனுப்பினார். உடம்பு வேறே சரியில்லாமல் கிடக்கிறார்...''

''இல்லேம்மா...'' என்று கௌரி அவரை மறுக்க முயன்றான், ஆனால் உள்ளே சென்ற செங்கமலம் கைநிறைய நோட்டுக்களுடன் திரும்பினாள். ''இந்தாங்க, பெரியவரே, இங்கே வீட்டிலே இரண்டு மூன்று மாதமாய் அசம்பாவிதம். அதனாலே தவறிப்போச்சு. இவரும் மகா பெரிய மனுஷர். வாய்விட்டுக் கேட்கமாட்டார். நூறு ரூபாய் இருக்கிறது. இவன் அப்பாவிடம் கொடுங்கள். இந்தா கௌரி, உன் செலவுக்கும் இருபத்தைந்து ரூபாய் வைத்துக்கொள்.''

கௌரி எதுவும் சொல்லத தெரியாதவனாக நிறைந்த இதயத்துடன் நின்றிருக்க, வந்திருந்த பெரியவர் சாப்பிட்டு முடித்துக் கும்பிட்டுவிட்டுத் திரும்பிச் சென்றார்.

''ஏன் கௌரி, யாரோ உன் கஸின் ஸிஸ்டர் என்று அடிக்கடி சொல்கிறாயே, அவளிடமிருந்து உங்கள் குடும்பத்துக்கு உதவி எதுவும் கிடைக்காதா? வீடு, டெலிபோன் என்று சௌகரியமாயிருக்கிறாள்போல் தெரிகிறதே? இப்போதுகூட அவள் உன்னைப் போனில் கூப்பிடுகிறாள் என்று சொல்லத் தான் வந்தேன்...'' என்று செங்கமலம் சொல்லி முடிக்கு முன்-

''இதை முன்னேயே சொல்லக் கூடாதா அண்ணி?'' என்று ஹாலுக்குப் பாய்ந்தான் கௌரி.

அன்று பிற்பகல்.

''உன்னிடம் இரண்டே இரண்டு குறைகள்தான் தெரிகிறது,'' என்றான் கௌரி, ஷோபாவை ஏற இறங்கப் பார்த்தபடி.

அவளுடைய வீட்டிலிருந்து புறப்பட்டுத் தெருக் கோடிக்குத்தான் வந்திருந்தார்கள் அவர்கள். தெருவில் அவனுடைய விசில் பாட்டு கேட்டால் அவள் ஓசைப்படாமல் வந்து சேர்ந்து கொள்ள வேண்டும் என்பது அவர்களுக்குள் ஒப்பந்தம். அதன்படி கௌரி அறிவிப்புக் கொடுக்க ஷோபா வந்து சேர்ந்துவிட்டாள்.

''இரண்டு குறையா? என்னென்ன?'' என்று தன்னைத்தானே சரி பார்த்துக் கொண்டாள் அவள்.

''வலது தோளில் ஓர் இறக்கை, இடது தோளில் ஓர் இறக்கை - இருந்துவிட்டால் போதும். நீ வனதேவதை மாதிரி காட்சி தரச் சந்தேகமேயில்லை. அந்த இரண்டும் இல்லாததால் சாதாரணமாய் யாரோ ஒரு ரதி மாதிரி இருக்கிறாய். அவ்வளவு தான்.''

''உங்களிடம் ஒரே ஒரு குறை சொல்லட்டுமா?'' என்று திருப்பினாள் ஷோபா.

''சொல்லேன்.''

''நாக்குக் கொஞ்சம் நீளம் அதிகம். சற்றுக் குறைவாயிருந்தால் நீங்கள் அளக்கிற அளப்புக்களில் பாதியையாவது நம்புகிற மாதிரி இருக்கும்.''

''அடடே! இத்தனை நாளும் தெரியாமல் போச்சே! ஸிடியில் பெரிய டங் ஸ்பெஷலிஸ்ட் யாரென்று விசாரித்து நாளைக்கே போய் நீளத்தைக் கட் பண்ணிக்கொண்டு வந்துவிடுகிறேன்,'' என்றான் கௌரி.

பிற்பகல் வெய்யில் சுள்ளென்று வீசிக் கொண்டிருந்தது. மாட வீதி அமைதியாக இருந்தது அவர்கள் பஸ் ஸ்டாண்டை நெருங்கியபோது.

''ஆஸ்தான ரதம் எடுத்து வர முடியவில்லை,'' என்றான் கௌரி. ''அரசியார் கோபம் கொள்ளாமல் ஆட்டோ ஊர்தியில் பவனி வர ஒப்புதல் தர வேண்டும்.''

''அது இருக்கட்டும். இவ்வளவு சீக்கிரமாக வந்துவிட்டீர்களே நீங்கள் பாட்டுக்கு? ஆந்த ஆனந்த தேராவின் சொற்பொழிவு ஆறு மணிக்கோ என்னவோ தானே?''

''ஒரு புத்த பிட்சுவின் சொற்பொழிவைக் காட்டிலும் சுவரசியமான விஷயங்கள் பல இருக்கின்றன இந்தச் சென்னை மாநகரில்.''

''உதாரணமாக?''

''ப்ளூ டைமண்டுக்குப் போய் 'இடைவிடாத ஷோ' பார்த்தால் போயிற்று. படம் பாதி நடந்து கொண் டிருந்தாலும் பரவாயில்லை.''

''நைஸ் ஐடியா,'' என்று ஷோபா கூறவே ஓர் ஆட்டோவை வரவழைத்தான் கௌரி. தியேட்டரில் படம் ஆரம்பித்துக் கால் மணி நேரம் ஆகியிருந்தது. கௌரி டிக்கெட்டுடன் இரண்டு கப் காப்பியும் வாங்கிவந்து வெளியே இருந்த ஸ்டாலில் அவளிடம் ஒன்று நீட்டினான். ''தாங்ஸ்,'' என்றாள் அவள்.

காப்பியை உறிஞ்சிக் கொண்டிருந்த கௌரி டக்கென்று அதை வைத்தான்.

''ஷோபா! நானும் ரொம்ப நேரமாய்க் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். மனம் விட்டுப் பேசுகிற மாதிரி நடிக்கிறாயே தவிர, உண்மையாய் உன் முகத்தில் மலர்ச்சியைக் காணோம். தோளில் இறக்கை இல்லை என்று சொன்னேனே, அது தப்பு. உன் விலாவில் சாவி இல்லாதது

தான் குறை. அவ்வளவு பொம்மையாய் இருக்கிறாய். என்ன விஷயம், ஷோபா?''

தரையைப் பார்த்தாற் போல் ஒரு வினாடி பேசாமல் இருந்தாள் ஷோபா. பிறகு நிமிர்ந்தபோது அவள் கண்களில் கடுமை தென்பட்டது. ''எப்போது நீங்கள் இவ்வளவு தூரம் சொல்லிவிட்டீர்களோ, இனிமேல் நானும் சொல்லிவிட வேண்டியது தான்.''

கௌரி அவளைத் திடுக்கிட்டவனாகப் பார்த்தான். ஷோபா தன் கைப்பையைத் திறந்தாள். ஒரு கடிதத்தை வெளியே எடுத்தாள். ''இதோ இதைப் படியுங்கள்,'' என்று கௌரியிடம் கொடுத்தாள்.

''என்னவோ நீ பேசுவதெல்லாம் மர்மமாக இருக்கிறது,'' என்று முணுமுணுத்தபடி கௌரி அதைப் பிரித்தான். சிறிது வாய்விட்டே படித்தான். குறுக்கும் நெடுக்கும் செல்லும் ரசிகர்களின் இடைஞ்சல்களைப் பொருட்படுத்தவில்லை.

ஷோபாவுக்கு,

நீ ஒட்டி உறவாடிக் கொண்டு வரும் கௌரிசங்கர் என்ற வாலிபன் எப்படிபட்டவன் என்பது உனக்குத் தெரியாது. அவன் உன் தந்தையையே சந்தேகிக்கிறான். அவருடைய நடவடிக்கைகளை உன்கரும் தெரியாமல் அவருக்கும் தெரியாமல் ரகசியமாய்க் கண்காணித்துக் கொண்டிருக் கிறான், உன் அப்பாவையே மாட்ட வைக்கும் ஒருவனுடன் பழக உனக்கு வெட்கமா யில்லையா?

இப்படிக்கு
நலம் விரும்பி...

கௌரி அதைப் பழையபடி மடித்து அவளிடம் திருப்பினான்.

''இதற்கு என்ன சொல்கிறீர்கள்?'' என்றாள் ஷோபா.

''என்ன சொல்ல வேண்டும் என்று நீ எதிர் பார்க்கிறாய்?''

''உங்கள் குரல் இவ்வளவு சத்தமாக ஒலிக்கத் தேவையில்லை. முதலில் அதைக் கொஞ்சம் தணித்துக் கொள்ளுங்கள்.''

''ஷோபா!'' என்று அவன் இன்னும் உரக்க அதட்டினான். ''நான் என்ன வேலையில் ஈடுபட்டிருக்கிறேன் என்பது உனக்கு நன்றாய்த் தெரியும். என் சினேகிதன், எனக்கு வாழ்வு தந்த உத்தமன், ராகவ்வினுடைய மரணத்துக்குக் காரணமானவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிப்பதில்தான் என் உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் அர்ப்பணித்திருக்கிறேன்.''

''நான் அதை வேண்டாமென்று சொல்லவில்லையே?''

'இப்போது இந்த மொட்டைக் கடிதத்தைக் காட்டிக் கேள்வி போடுவதும், அந்த வேலையில் நான் ஈடுபடுவதைத் தடுப்பதும் ஒன்றுதான்.''

''எப்படி என்பதைத் தயவு பண்ணி விளக்குகிறீர்களா?''

''என் வேலை காரணமாக நான் எதை வேண்டுமானாலும் துருவி ஆராய்வேன். யாரை வேண்டுமானாலும் கண்காணிப்பேன்.''

ஷோபாவின் இமைகள் படபடத்தன. நீளமான காப்பி மேஜையைப் பிடித்திருந்த விரல்கள் மெல்ல நடுங்கின.

''அப்படியானால் இந்தக் கடிதத்தில் உங்களைப் பற்றிச் சொல்லியிருப்பது உண்மைதான்?''

''சொந்தத் தாயாகவே இருந்தாலும் அவளைச் சந்தேகப்பட வேண்டியது ஒரு போலீஸ்காரனின் கடமை. நான் உடுப்புப் போடாத போலீஸ்காரன்.''

''அதாவது, என் அப்பா கூட உங்கள் சந்தேக லிஸ்டில் சேர்ந்தவர்தான் என்கிறீர்கள்?''

''ஆமாம்.''

''அவரைக் கண்காணித்து வருவது உண்மைதான்?''

''ஆமாம்.''

''ரொம்ப நன்றி. இப்போதாவது சொன்னீர்களே?'' என்ற ஷோபா கடிதத்தை வாங்கிப் பையில் வைத்துக் கொண்டு படக்கென்ற ஓசையுடன் பையை மூடிக் கொண்டாள். அவள் செய்கையின் வேகம் அவள் புறப்படப் போகிறாள் என்பதைக் காட்டியது.

''ஏன்ன ஷோபா?'' என்றான் கௌரி.

''ஏன்? குற்றவாளியின் மகளுடன் சேர்ந்து சினிமா பார்ப்பது ஒரு போலீஸ்காரரின் அந்தஸ்துக்கு ஏற்ற காரியமா? நான் வருகிறேன்.''

''சினிமா வேண்டாவிட்டால் பரவாயில்லை. ஆனால் நம்முடைய அடுத்த திட்டம் - அதை மறந்து விட்டாயா?''

''எதை?''

''திலகர் ஹாலுக்குப் போய் ஆனந்த தேராவைச் சந்திப்பது என்று பேசிக் கொண்டோமே?''

''ஓ, அதுவா!'' ஏளனமாகச் சிரித்தாள் ஷோபா. ''உண்மையை உடைத்தே சொல்லிவிடுகிறேன். கேளுங்கள்

திரிசரண அபிமானிகள் சங்கத்தின் மீது எனக்கு ஆரம்பத்திலிருந்தே சந்தேகம் கிடையாது. அவர்கள் நல்லவர்கள், நல்ல கரியம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் என் அபிப்பிராயம். ஆனால் நீங்கள் அடித்துப் பேசியதைப் பார்த்துத்தான் கொஞ்சம் கொஞ்சம் சந்தேகப்பட்டேன். இப்போது உங்கள் போக்கு, எண்ணம். பேச்சு இதையெல்லாம் கவனிக்கிற போது, நீங்கள் யார்மீது சந்தேகப்படுகிறீர்களோ அவர்கள் நிச்சயம் நல்லவர்களாக இருப்பார்கள் என்று தெரிந்து விட்டது. ஆகையால் -''

''ஆகையால்?''

''திரிசரண அபிமானிகள் சங்கத்துக்காக முழுக்க முழுக்க வேலை செய்யப் போகிறேனே தவிர, உங்களைப் போல் முட்டாள்தனமான சந்தேகங்களில் என் பொழுதை வீணாக்கப் போவதில்லை. குட்பை மிஸ்டர் கௌரி!''

''ஷோபா! நில்!'' என்றான் கௌரி.

அவள் திரும்பி வந்து ''மறந்து விட்டேன்.'' என்றவள், கைப் பையிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து அவன் முன்னே போட்டாள். எனக்காகச் செலவழித்ததற்கு இது, என்று சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

இதற்கு ஒரு மணி நேரம் கழித்து, பரங்கிமலையில் திரிசரண அபிமானிகள் சங்கக் கட்டிடத்தில் கீர்த்திசிங்கா புன்னகையுடன் சொல்லிக் கொண்டிருந்தார். தன் எதிரே நின்றிருந்த உபாகரிடம். ''நமது பெருமான் என்ன சொன்னார் தெரியுமா? 'சதா விழித்திருப்பது ஒன்றுதான் சாவாமைக்கு ஒரே வழி. அஜாக்கிரதையாயிருப்பவன்தான் சாகிறான்' என்றார். அதனால்தான் கீர்த்திசிங்காவும்

அடிக்கடி சொல்கிறான், விழித்திருக்க வேண்டியது அவசியமென்று. இன்று பலன் கிடைத்திருக்கிறது. பார்த்தாயல்லவா?''

''ஆம். ஐயனே,'' என்றார் உபாகர்.

''நடந்ததைச் சொல்.'

''நமது ஆள் அவர்களைப் பின்தொடர்ந்து கொண்டேயிருந்தானாம். மொட்டைக் கடிதத்துக்கான பலன், தியேட்டரில்தான் கிடைத்ததாம். அவள் அதைக் காட்டிச் சண்டையிட்டாளாம். திரிசரண அபிமானிகள் சங்கத்தை நம்பினாலும் நம்புவேனே தவிர உன்னை நம்பமாட்டேன் என்று சொல்லிவிட்டுக் கோபமாகப் போய் விட்டாளாம்.''

''கீர்த்திசிங்காவின் கணக்கு சரிதான்!'' அட்டகாசமாகச் சிரித்தார் அவர். ''அவளுக்குத் தன் தந்தையிடம் அபாரப் பிரியம். அவரை ஒரு வார்த்தை சொன்னால் பொறுக்காது. அதேபோல் அவன் ரோஷக்காரன். அவனுடைய வேலையைக் கொஞ்சம் குறைவாகப் பேசினாலும் சகிக்கமாட்டான். கீர்த்திசிங்கா திட்டமிட்டது சரிதானே?''

''சரிதான் குருநாதரே!''

கீர்த்திசிங்கா எழுந்து கொண்டு வெகுநேரம்வரை அநதக் கரும்பளிங்குத் தாழ்வாரத்தில் ஒரு கோடியிலிருந்து மறுகோடிக்கு உலவினார். பிறகு மறுபடி வாய்விட்டு ஒரு முறை சிரித்தார். ''அந்தப் பையன்ட கௌரிக்கு இப்போதே பாதி உற்சாகம் போயிருக்கும். இனி மேல் அந்த ரங்கூன் கிழவன் என்ன வேண்டுமானாலும் அவனிடம் உளறட்டும். அதை நம்பக்கூடிய அளவுக்கு மனோதிடமோ சுறுசுறுப்போ அவனுக்கு இருக்காது. கீர்த்திசிங்கா நிம்மதியாகத் தூங்கலாம்.''

''ஆம், ஐயனே,'' என்று ஆமோதித்தார் அவருடைய உதவியாளர்.

ஏறத்தாழ அதே நேரம்.

ஷோபாவின் வீட்டில் டெலிபோன் மணி கிணுகிணுத்தது. புரட்டிக் கொண்டிருந்த பத்திரிகையை எறிந்துவிட்டு ஃபோனை எடுத்தாள்.

''யாரங்கே? ஷோவன்னா தானே? நான்தான் கௌவன்னா பேசுகிறேன்.''

ஷோபாவின் முகம் மலர்ந்தது. ''உஷ்! மெதுவாய்! எங்கிருந்து பேசுகிறீர்கள்?''

''திலகர் ஹாலிலிருந்து. இனிமேல்தான் ஆனந்த தேராவைப் பார்க்கப் போகிறேன். நீ பத்திரமாய் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தாயா என்று தெரிந்துகொள்ளத்தான் கூப்பிட்டேன்.''

''எப்படி என் பர்ஃபாமென்ஸ்? இத்தனைக்கும் காலேஜிலே ஒரு நாள்கூட நான் மேடையேறி டிராமாவில் நடித்ததில்லை.''

''ஃபிலிம்ஃபேர் அவார்டு அடுத்த வருடம் உனக்குத்தான். ஆனால் காலையில் நீ அந்த மொட்டைக் கடிதத்தைப் பற்றி டெலிபோனில் சொன்னதும், நான்தான் உனக்கு நாடகமும் வசனமும் சொல்லிக் கொடுத்தேன் என்பதை மறந்துவிடாதே.''

''மறக்கமாட்டேன், வாத்தியாரே!'' என்றாள் ஷோபா. ''ஆமாம், அத்தனை நாடகமும் அவசியம்தானா சார்?''

''முக்காலும் அவசியம். கீர்த்திசிங்காவின் கண் நம்மைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறது என்று முன்பே

சொல்லியிருக்கிறேன். இன்று அது கை கால் முளைத்து உன் பின்னாடியும் என் பின்னாடியும் சுற்றிக் கொண்டே யிருந்தது. நீ கவனிக்கவில்லை?''

''இல்லையே? உண்மையாகவா?''

''உண்மையாகத்தான். ஆகையால் இனிமேல் வெளி உலகத்தைப் பொறுத்த மட்டில் நீயும் நானும் விரோதிகள். இந்த மாதிரி டெலிபோனில் பேசுவதுகூடக் கூடாது.''

''வாத்தியாரே! நிபந்தனை ரொம்பக் கடுமையாக இருக்கிறதே!''

''கொஞ்ச நாள்தான், என் அருமைச் சிஷ்யப் பெண்ணே! வாயில் பல் இருக்கிறதா?''

''இருக்கிறதே?''

''அதைக் கடித்துக் கொண்டு பொறுமையாயிரு,'' என்று கூறிவிட்டு டெலிபோனை வைத்துவிட்டான் கௌரி.

## பன்னிரண்டு

**ஷோ**பாவுக்குப் போன் செய்து விட்டுத் திரும்பு வதற்குள் ஆனந்த தேராவின் சொற்பொழிவு ஆரம்பமாகி விட்டது.

குண்டூசி விழுந்தால் கூடச் சப்தம் கேட்குமளவுக்கு, திலகர் ஹாலுக்குள் நிசப்தம் நிலவியது. ரங்கூனிலிருந்து வந்துள்ள துறவியின் கணீரென்ற பேச்சு, ஒலி பெருக்கிகளின் வழியே பாய்ந்து வந்த போது, தூய்மையான நதியோட்டத்தைக் காணுவது போன்ற மன அமைதி ஏற்பட்டது கௌரிக்கு. ஹாலுக்கு வெளியே பல கார்களும் ஸ்கூட்டர்களும் மைதானத்தில் நிறுத்தப்பட்டிருந்தன. இதற்கு முன்பும் பலமுறை இங்கே சொற்பொழிவாற்ற

ஆனந்ததேரா வந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்படியொரு கூட்டம் அவருக்காக வந்திருக்க முடியாது.

''... மாலுங்க்யபுத்ரன் என்ற சீடரிடம் போதி பகவான் என்ன சொன்னார்? விஷத்தில் தோய்த்த அம்பொன்று ஒரு மனிதனின் மார்பில் பாய்ந்திருக்கிறது. அவன் கீழே விழுந்து கிடக்கிறான். அவனுடைய உறவினர்களும் நண்பர்களும் ஓடோடிச் சென்று ஒரு மருத்துவனை அழைத்து வந்திருக்கிறார்கள். அப்போது அந்த மனிதன், 'முடியாது, முடியாது! இந்த அம்பை எய்தவன் யாரென்று தெரிந்தாலொழிய, அவனது ஊரையும் பெயரையும் அறிந்தாலொழிய, அவன் குள்ளமா நெட்டையா என்பதை அறிந்தாலொழிய, அவன் சிவப்பா, கறுப்பா என்பதை அறிந்தாலொழிய, இந்த அம்பை எடுக்க நான் விடமாட்டேன்' என்று பிடிவாதம் பிடிப்பானானால் அவன் கதி என்னவாகும்? அவன் இறந்து போவான் - அம்பு எய்தவனைப் பற்றி எதுவும் அறிந்து கொள்ளாமலேயே! அதே போல இந்த உலகம் நிலையானதா, நிலையற்றதா, வாழ்வென்றால் என்ன, மரணமென்றால் என்ன என்றெல்லாம் தெரிந்து கொண்டான பிறகுதான் தர்ம மார்க்கத்துக்கு வருவேனென்று ஒருவன் சொன்னால்...''

ஆனந்த தேராவின் வெண்கலக் குரல் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது. அவர் பேச்சிலிருந்த கனிவைக் கண்டபோது 'இவரல்லவோ உண்மையான துறவி!'' என்று கௌரி மனத்துக்குள் வியந்து கொண்டான்.

ஹாலில் போய் உட்கார்ந்து கொண்டு கேட்கலாமா அல்லது சொற்பொழிவு முடிந்து ஆனந்த தேரா வரும் வரை வெளியிலேயே காத்திருக்கலாமா?

அவன் யோசித்துக் கொண்டிருந்தபோது ஒரு பெரிய படகுக் கார் தனியே வந்து, ஹாலை ஒட்டினாற் போல் நின்றது. அதிலிருந்து இறங்கிய பெண்ணுக்கு இருபத்தைந்து வயது இருக்கும். சொற்பொழிவின் அமைதியைக் கெடுத்துவிடக் கூடாதென்பதற்காக மிக மெல்லக் காரின் கதவைச் சாத்தினாள் அவள். செருப்பின் சத்தம் கேட்காதபடி நளினமாக நடந்து வந்தவள், ''உள்ளே போய் உட்காருங்களேன்,'' என்று கௌரியை உபசரித்தாள். அதை அவள் சொன்ன விதத்திலிருந்து, இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருப்பவர்களில் அவளும் ஒருத்தி என்று தெரிந்தது.

''இல்லை... நான் அவரிடம்... ரங்கூனிலிருந்து வந்திருக்கிற சுவாமிகளிடம் தனியே ஒரு சொந்த விஷயம் பேச வேண்டியிருக்கிறது...'' என்றான் கௌரி.

''என்னிடம் சொல்வதானால் சொல்லுங்கள். சுவாமிகளுக்கு நேரம் கிடையாது. நாங்கள்தான் அவருக்காக நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்கிறோம். குறிப்பாக, நான்தான் சென்னையில் அவருடைய காரியதரிசி மாதிரி... என் பெயர் நந்தினி,'' என்றாள் அவள்.

கௌரி அவள் முகத்தையும் குரலையும் கவனித்தான். பெரிய இடத்தைச் சேர்ந்த கண்ணியமான பெண் என்பது சந்தேகமில்லாமல் தெரிந்தது?

பிளாஸ்டிக் காகிதத்தில் சுற்றி வைத்திருந்த அந்தப் பூவை வெளியெடுத்தான். அவளிடம் தந்தான்.

''இது... இது?'' அவள் திகைத்தாள்.

''கல்ப புஷ்பமென்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அது தான் இது. பௌத்த மதப் புராணங்களில் இதைப்

பற்றிச் சொல்லியிருக்கிறதாமே? இந்த அபூர்வமான மலர் எங்கள் தோட்டத்தில் பூத்திருக்கிறது.''

அவளுடைய வதனத்தில் பரபரப்புப் படர்ந்தது. ''ஆமாம், ஆமாம்... நான் கேள்விப்பட்டிருக்கிறேன்... உங்கள் விலாசம் என்ன? நாளைக் காலை சுவாமிகளை அங்கேயே நேரில் அழைத்து வந்துவிடுகிறேன்...''

''ஏன் சிரமம்? நான் இங்கேயே அவரைப் பார்த்துப் பேசிவிட்டுப் போகிறேனே?''

''வேண்டாம். இதைப் பற்றி நீங்கள் பகிரங்கமாய்ப் பேசச் சந்தர்ப்பம் கிடைப்பது கஷ்டம்... ப்ளீஸ்... நான் சொல்வதைக் கேளுங்கள்,'' என்றாள் நந்தினி.

சிறிது தயக்கத்துக்குப் பின் முகவரியை ஒரு காகிதத்தில் குறித்துத் தந்தான் கௌரி. பிறகு சிறிது நேரம் ஆனந்த தேராவின் சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்து விட்டுத் திரும்பினான்.

**ம**ணி பத்துக்குமேல் ஆகியிருந்த போதிலும் உலகநாதன் இன்னும் விழித்துக் கொண்டுதான் இருந்தார். அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

ஆனந்த தேரா மறுநாள் வருவதாகச் சொல்லி யிருப்பதை அவரிடம் சொல்லிவிட வேண்டும். என்னதான் அவருடைய தம்பியின் விவகாரமாயிருந்தாலும், வீடு அவருடையது. அதன் எஜமானர் அவர். யாரோ ஒரு ரங்கூன் சாமியாரைத் தன் இஷ்டப்படி இழுத்து வந்து, 'தோட்டத்தில் என்ன பார்க்க வேண்டுமோ பார்த்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லிவிட முடியாதே!

உலகநாதனின் அறைக் கதவு சாத்தியிருந்தது. இருந்தாலும் இரட்டைக் கதவுகளின் இடுக்கு வழியே

விழுந்த வெளிச்சம், தரைக்கும் கதவுக்கும் பின்னப் பட்ட சிலந்தி வலை மாதிரி இருந்தது. யாரோ அவன் தோளை மெல்லத் தட்டினார்கள். திடுக்கிட்டுத் திரும்பியவன், உதட்டின் மீது விரல் வைத்து எச்சரிக்கை செய்யும் செங்கமலத்தைக் கண்டான்.

'உஷ்! இப்படி வா சொல்கிறேன்,' என்று பின்பக்கத்து வெராந்தாவுக்கு அவனைக் கூப்பிட்டாள் அவள்.

''என்ன அண்ணி?''

''எந்தச் சமாசாரமாயிருந்தாலும் அவரிடம் இப்போது போகாதே,'' என்று பயமுறுத்தினாள் செங்கமலம். ''இன்கம் டாக்ஸ் கணக்குக் காட்டுவதற்கு நாளைக்குக் கடைசி நாளாம். அதற்காகத் தலையைப் பிய்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்.''

மோவாயைத் தடவிக் கொண்டு யோசனையுடன் நின்றான் கௌரி.

''எதுவானாலும் காலையில் சொல்லிக் கொள்ளலாம். பேசாமல் தூங்கு, போ,'' என்று சொல்லிவிட்டுத் தன் படுக்கையறைக்குப் போய்விட்டாள் செங்கமலம்.

ஆனால் கௌரி அவள் அறிவுரையை ஏற்றுக் கொள்ளவில்லை. கதவுக்குப் பக்கமாக, சுவரில் சாய்ந்தாற் போல் தரையில் உட்கார்ந்து கொண்டான். ஹால் கடியாரம் பதினொன்று அடிப்பது கேட்டது. தூக்கம் அவன் கண்களைச் சுழற்றியது. அறைக்குள்ளே காகிதங்களைப் புரட்டும் ஓசை கேட்டுக் கொண்டேயிருந்தது.

எத்தனை நேரம் அப்படி இருந்தானோ, கடியாரத்தின் கணீரென்ற ஒலி அவனைத் துள்ளி எழ வைத்தது. தன்னையுமறியாமல் கண்ணயர்ந்துவிட்டோமே என்று

வெட்கப்பட்டவனாக, கதவின் இடுக்கு வழியாய் உள்ளே பார்த்தான்.

நாற்காலியில் சாய்ந்தாற் போலிருக்கும் உலக நாதனின் பின் தலையும் முதுகும் மட்டுமே - அவற்றிலும் ஒரு பகுதிதான் - அவன் பார்வைக்குப் புலப்பட்டது.

பாவம், களைப்பு மிகுதியால் தூங்கிவிட்டார் போலிருக்கிறது. எழுப்பிப் படுக்கைக்குப் போகச் சொல்லலாம் என்று கதவைத் தட்ட நினைத்தான் உள்புறம் தாழிடப்படாததால் கை வைத்ததுமே சட்டெனத் திறந்து கொண்டது.

மேஜை மீது கண்ட காட்சி அவனைப் பிரமிக்க வைத்தது.

இன்கம் டாக்ஸ்காரர்களுக்குக் காட்ட வேண்டிய கனம் கனமான கணக்குப் புத்தகங்களோ, ஃபைல்களோ, ரசீதுக் கட்டுக்களோ அங்கே இருக்கவில்லை.

ஏராளமான இன்விடேஷன்கள் - அழைப்பிதழ்கள் - பரப்பி வைக்கப்பட்டிருந்தன. உலகநாதனனின் வலது கையில் ஒரு பெரிய பூதக் கண்ணாடி இருந்தது. இடது கை ஓர் அழைப்பிதழைப் பிடித்திருந்தது. தரையைப் பார்த்த மாதிரி நாற்காலியில் அண்ணாந்த நிலையில் சாய்ந்து கிடந்தார் அவர். கண்கள் மூடியிருந்தன.

குபீரென்று கௌரிக்கு ஓர் அச்சம் தோன்றியது. ஒரே எட்டில் அவரை நெருங்கி, மார்பில் கை வைத்துப் பார்த்தான். இதயத்தின் துடிப்புக் கேட்ட பிறகே அவன் இதயத்துக்கு உயிர் வந்தது.

வெறும் மயக்கம் தான்.

மண் கூஜாவிலிருந்து கண்ணீர் ஏந்தி வந்து சுள்ளென்று அவர் முகத்தில் அடித்து ஈரக் கைக் குட்டையால் கண்களைத் துடைத்து, மின்விசிறியை வேகமாகச் சுழல வைத்து . ''சார்! சார்!'' என்று கூப்பிட்டான்.

உலகநாதனின் இமைகள் அசைந்து துடித்தன. சில வினாடிகளில் ஒரு பெருமூச்சுடன் கண் விழித்து நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

''வேலையைப் பார்த்துக் கொண்டே தூங்கி விட்டீர்கள் போல் இருக்கிறது!'' என்று புன்னகையுடன் கேட்டான் கௌரி.

'தூக்கமில்லை, அதிர்ச்சி'' என்று ஆழமான குரலில் பேசினார் உலகநாதன். ''அந்தக் கொலைகாரனை அனேகமாய்க் கண்டுபிடித்து விட்டோம் என்று தெரிந்தது. உடனே மார்பை அடைக்கிற மாதிரி படபடவென்று வந்து விட்டது?''

''கொலைகாரனா! என்ன சார் சொல்கிறீர்கள்?'' என்று கௌரி, மேஜையெங்கும் பரவிக் கிடந்த இன்விடேஷன்களை அப்போதுதான் கவனித்த மாதிரி, ''என்ன சார் இதெல்லாம்?'' என்றான்.

''ராகவ் விஷயம் தான். நீ செய்யத் தவறியதை நான் செய்து கொண்டிருக்கிறேன். அவ்வளவுதான் நீ போ. நிம்மதியாய்த் தூங்கு,'' என்றார் உலகநாதன் விரக்தியும் கசப்புமாக.

''சார், என்னை அப்படியெல்லாம் தப்பாக நினைக்காதீர்கள் சார்! இப்போதுகூட ஒரு விஷயம பேசத்தான் வந்தேன்...'

''பேசு, பேசு! பேசிக் கொண்டேயிரு! ஆனால் அறிவுடன் வேலை செய்ய மட்டும் ஆரம்பித்து விடாதே!'' உலகநாதனின் வருத்தம் கோபமாக மாறியது.

அவ்ரை வேறு விதத்தில் தான் சமானதானப்படுத்த முடியும் என்று தீர்மானித்தான் கௌரி. ''உங்ளுடைய வயதென்ன, அறிவென்ன, அனுபவமென்ன? நான் சின்னப் பையன். கற்றுக் குட்டி. உங்கள் சமயோசிதமும் எச்சரிக்கையும் எனக்கு வருமா சார்? இதோ, அண்ணி உங்களைத் தொந்தரவு செய்யக் கூடாதென்பதற்காக இன்கம் டாக்ஸ் விவகாரம் என்று அவரிடம் சொல்லிவிட்டு, பூதக் கண்ணாடி வைத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்கிறீர்கள். இந்த முன் ஜாக்கிரதை எனக்கு வருமா?''

உலகநாதனின் முகத்தில் - அப்பாடா! - சிறிது புன்சிரிப்பு மலர்ந்தது.

''இது சாதாரண ஆராய்ச்சி இல்லை, கௌரி. ராகவ்வின் உயிரைக் குடித்தவன் யாரென்று கிட்டத்தட்டக் கண்டு பிடித்து விட்டேனாக்கும்! இதெல்லாம் என்ன, பார்த்தாயா?''

பார்த்தான் கௌரி. வெவ்வேறு ரகங்களில், வெவ்வேறு அளவுகளில், வெவ்வேறு நிறங்களில், வெவ் வேறு டிசைன்களில் நூற்றுக் கணக்கான அழைப்பிதழ்கள் பரவிக் கிடந்தன. அவற்றின் நடுவே 'அந்த' அழைப்பிதழ் - ஷோபாவின் திருமண வரவேற்புக்கான அழைப்பிதழ் - இருந்தது.

''மூன்று மாதமாய் எனக்கு இதுதான் பொழுது போக்கு, கௌரி! புரிகிறதா? ஆபீஸ் ஊழியர்களிடமும் சினேகிதர்களிடமும் சொல்லி வைத்திருக்கிறேன் - யாருக்கு என்ன அழைப்பிதழ் வந்தாலும் கொண்டு வந்து என்னிடம்

தர வேண்டுமென்று, அவர்கள் கொடுப்பதையெல்லாம் இங்கே பத்திரப்படுத்தி வருகிறேன். வாரத்துக்கு ஒரு முறை இவைகளை எடுத்து ஒப்பிட்டுப் பரிசீலனை செய்கிறேன். செங்கமலத்தின் கண்ணில் பட்டால் எடுத்துக் கொண்டு போய் விடுவாள் என்று தான் இன்கம் டாக்ஸ் கணக்கு என்று சொல்லி வைத்தேன்.''

செங்கமலத்தின் சிறிய பலவீனத்தை அவரும அறிந்து வைத்திருப்பதை எண்ணிச் சிரித்தான் கௌரி. அதே சமயம், தம்பியின் மீது உலகநாதன் வைத்திருக்கும் மட்டற்ற பாசத்தை - தம்பியின் மரணத்தைப் பற்றியே மறுகிக் கொண்டிருக்கும் அவரது உள்ளத்தை - எண்ணியபோது அவன் கண்களில் நீர் வந்தது.

அழைப்பிதழ்களை எடுத்துப் பார்த்துக் கொண்டே, ''இவைகளிலிருந்து எப்படி... என்ன சார் தெரிந்து கொள்ள முடியும்?'' என்று வினவினான்.

''அந்தப் போலி இன்விடேஷனை அச்சடித்த பிரஸ் வினாயக் பிரிண்டர்ஸ் என்று போட்டிருந்தது. இல்லையா?''

''அங்கேதான் விசாரித்து விட்டேனே சார்... அவர்கள் பெயரைப் பொய்யாக எவனோ போட்டிருக்கிறான் என்றார்களே?''

''அது சரி. ஆனால் அவர்கள் அச்சடிக்கவில்லை என்றாலும், ஏதோ ஒரு பிரஸ் அதை அச்சடித்துத் தானே இருக்க வேண்டும்? அந்தப் பிரஸ் எது? எப்படிக் கண்டு பிடிப்பது? அதற்காகத்தான் கண்ணில் கண்ட இன்வி டேஷன்களையெல்லாம் சேகரித்தேன். சில குறிப்பிட்ட எழுத்துக்கள் தேய்ந்திருப்பதை வைத்து, குற்வாளியைக் கண்டு பிடித்ததாகத் துப்பறியும் கதைகளில் படித்ததுண்டா நீ?''

''படித்திருக்கிறேன் சார்.''

''அதே போல் அச்சாபீசிலும் இருக்கலாமில்லையா? உடைசல் எழுத்து அல்லது படம் இப்படி எதாவது ஒன்று, ஷோபா அழைப்பிதழில் இருக்கிற மாதிரியே இன்னொரு அழைப்பிதழிலும் இருந்தால், இரண்டும் ஒரே பிரஸ்ஸில் அச்சிட்டது என்று கண்டு பிடிக்கலாமில்லையா?''

''ஆனால் அது லட்சத்தில் ஒரு சான்ஸ் சார்!''

''பலன் கிடைத்து விட்டது, கௌரி, கிடைத்து விட்டது! அந்த அதிர்ச்சியில்தான் எனக்குத் தலை சுற்றலும் படபடப்பும் ஏற்பட்டது! இதோ கவனி!'' பழைய போலி அழைப்பிதழையும், ஒரு புதிய அழைப்பிதழையும் எடுத்து அவனிடம் நீட்டினார் உலகநாதன். ''இந்தா, பூதக் கண்ணாடியைக் கொண்டு, பார்!''

கையில் வாங்கும் போதே இரண்டும் ஒரே வகையான காகிதத்தில் அச்சிடப்பட்டது என்று கௌரிக்குப் புலப் பட்டது. பூதக் கண்ணாடியின் துணை கொண்டு ஒப்பிட்டுப் பார்த்தான்.

அவனை ஒட்டினாற் போல் நின்று கொண்டார் உலகநாதன். ''கவனி! 'நடைபெற' என்பதில் உள்ள 'டை'யும் 'தாங்கள் - தங்கள்' என்பதில் உள்ள 'த'வும் இரண்டிலும் உடைந்திருக்கிறது. மேல் புறமும் கீழ்ப் புறமும் உள்ள தோரணப் படத்தைப் பார். ஒன்றே போல் பத்து இலைகள் - ஒரே டிசைனில் - இருக்கிறது. வாக்கியங்களை வரிசைப் படுத்தியிருக்கும் முறை, பாராவுக்குப் பாரா இடம், நீளம் எல்லாம் அதிலும் இதிலும் ஒன்றுதான்...''

கௌரிக்கு மூச்சு நின்று விடுகிற மாதிரி இருந்தது அந்த உண்மைகளைக் கண்டதும்.

''இது அசல் இன்விடேஷன். ஆகவே பொய்ப் பெயர் கொடுக்காமல் உண்மையான அச்சாபீஸ் பெயரையே தந்திருக்கிறார்கள்.'' என்று கூறிய உலகநாதன் புதிய அழைப்பிதழின் பின்புறத்தைத் திருப்பிக் காட்டினார். 'பௌர்ணமி அச்சகம். சென்னை - 1' என்று இருக்கிறது. தொடர்ந்து சில விஷயங்களை நானே கண்டு பிடிக்க வேண்டும் எனறு நினைத்திருந்தேன். அதற்குள் நீ பார்த்து விட்டாய்!''

''இனிமேல் நீங்கள் சிரமப்பட வேண்டாம், சார். அப்புறம் தின்ற உப்புக்கு நன்றி காட்ட எனக்கு வாய்ப்பில்லாமலே போய் விடும். இந்தக் கட்டத்திலிருந்து நான் பொறுப்பேற்கிறேன். என்னை நம்புங்கள் சார். ராகவ் உங்களுக்குத் தம்பி. எனக்கு உயிர் நண்பன். எனக்கும் இதிலே அக்கறை உண்டு சார்.''

''ரைட்!'' என்று விட்டுக் கொடுத்தார் உலகநாதன். ''நீயும் என்னவோ பேசத்தான் வந்தேன் என்றாயே, அதைச் சொல்.''

கீர்த்திசிங்காவைப் பற்றியும் தானும் ஷோபாவும் சேர்ந்து செய்துவரும் வேலைகளைப் பற்றியும் சொல்லி முடித்தான் கௌரி. ஆனந்த தேரா விஷயத்தையும் கூறி, ''நாளைக் காலை இங்கே வந்து அந்தக் கல்ப புஷ்பத்தை நேரில் பார்க்கப் போகிறார்கள்,'' என்றான்.

''எனக்கென்னவோ புத்தமத சமாசாரங்களில் ராகவ்வுக்குச் சம்பந்தம் இருக்குமென்று தோன்றவில்லை. சும்மா கொஞ்ச நாள் ஃபான்ஸி,'' என்று பெருமூச்சு விட்டார் உலகநாதன். ''எதற்கும் அந்த ஆனந்த தேரா வரட்டும். வீட்டிலே ஒரு பெரியவரின் கால் பட்டால் புண்ணியம் தானே?''

மறுநாள் காலை, காம்பவுண்டுக்கு வெளியிலேயே வந்து நின்று கொண்டிருந்தான் கௌரி - வீடு அடையாளம் தெரியாமல் போய் விடப் போகிறார்களே என்று.

சரியாய் எட்டு மணிக்கு, அந்தப் படகுக் கார் வீதி முனையில் திரும்பி அவனை நோக்கி வந்து குலுக்கலுடன் நின்றது.

கௌரி பின் கதவைத் திறப்பதற்காகக் குனிந்தான். ஆனால் காரினுள் ஆனந்த தேரா இருக்கவில்லை. நந்தினி மட்டுமே இருந்தாள்.

## பதின்மூன்று

காரின் ஓசை கேட்டதுமே உள்ளேயிருந்து விரைந்து வந்து விட்டார் உலநாதன்.

துறவி யொருவர் வரப் போகிறார் என்பதற்காக, மேலே சட்டை அணியாமல் அங்கவஸ்திரத்தை இடுப்பில் சுற்றிக் கட்டிக் கொண்டு, நெற்றியில் திருநீறும் குங்குமமாகப் பயபக்தியுடன் அவர் தோற்றமளித்தார்.

காரிலிருந்து நந்தினி மட்டுமே இறங்கவதைக் கண்டு ஏமாற்றம் ஏற்பட்ட போதிலும் பண்பாட்டை முன்னிட்டு, உடனே முக பாவத்தை மாற்றிக் கொண்டு, ''வாருங்கள்,'' என்று வரவேற்றார்.

''சுவாமிகள் வரவில்லையா?'' என்று கௌரிதான் விசாரித்தான்.

''சற்றுத் தாமதமாகும் போலிருந்தது. என்னை முன்னதாகப் போகச் சொன்னார். அவருடைய கார் டிரைவரிடம் விலாசம் சொல்லியிருக்கிறேன்,'' என்று இயல்பாகப் பதில் கூறினாள் நந்தினி. இருந்தாலும் கூட

அவளுடைய விழிகள் யாரையோ தேடுவது போல் இங்குமங்கும் அலைவதைக் கவனித்தான் கௌரி.

''உளளே வந்து உட்கார்ந்திருக்கலாமே?'' என்று உலகநாதன் உபசரித்தார்.

''பரவாயில்லை. தாங்ஸ்,'' என்றவள், ''சிறிது இங்கேயே நின்றிருக்கிறேன். தோட்டம் மிகவும் அழகாக வைத்திருக்கிறீர்களே?'' என்று பாராட்டினாள்.

கண்ணிமைக்கும் நேரத்துக்குள் உலகநாதனின் விழிகள் ஈரமாகிப் பளபளப்பதைக் கவனித்தான் கௌரி. 'என் அருமைத் தம்பி வளர்த்த தோட்டம் இது,' என்று சொல்வதற்காக அவர் உதடுகள் துடிப்பதையும் கண்டான். ஆனால் முதல் தடவையாக வந்துள்ள ஒரு பெண்ணிடம் தன் சொந்தத் துயரத்தை வெளியிட அவர் விரும்பவில்லை. வெறும் ஒரு புன்சிரிப்பை வெளிக்காட்டடிய பின் ''பெரியவர் வந்ததும் எனக்குச் சொல்லி அனுப்பு கௌரி,'' என்று தெரிவித்து விட்டுப் பங்களாவுக்குள் சென்று விட்டார்.

அவர் அந்தண்டை போவதற்காகவே நந்தினி காத்திருந்தாள் போலும், ''அவர் எங்கே?'' என்றாள் பதைப்புடன்.

''எவர்?''

''ராகவ்.''

''ராகவ்?'' திகைத்தான் கௌரி. ராகவ்வின் பெயரையோ அவனுக்கும் தனக்கும் சம்பந்தம் உண்டு என்பதையோ இவளிடம் சொல்லவே இல்லையே?

அவள் மீண்டும் சொன்னாள் ''எனக்குத் தெரியும். ராகவ்வின் வீடு தானே இது? அவர் எங்கே?''

''ராகவ் - அவர் இறந்து விட்டார்.''

''நோ!'' என்று வீரிட்டுவிட்டாள் அவள்.

''மெய்யாகத்தான். நாலு மாதமாகப் போகிறது.''

''மை காட்! மை காட்!'' திரும்பத் திரும்ப அவள் உதடுகள் முணு முணுத்தன. கண்ணில் நீர் தளும்பி வந்ததோ என்னவோ, அதை மறைப்பதற்காக வேண்டி ஏதோ செடியைக் கவனிப்பது போல் வேறு புறமாகத் திரும்பிக் கொண்டாள்.

அவளது உணர்ச்சிகளுக்குச் சிறிது அவகாசம் கொடுத்தபின், ''முன்பே இங்கு வந்திருக்கிறீர்களா? ராகவ்வை உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கௌரி கேட்டான்.

''இங்கு வந்ததில்லை. ஆனால் இதுதான் ராகவ்வின் வீடாக இருக்கவேண்டும் என்று நேற்றுத் தெரிந்து கொண்டுவிட்டேன். ஏனென்றால், நீல்கள் எடுத்து வந்த அதே கல்ப புஷ்பத்தை எடுத்துக் கொண்டு, நீங்கள் கேட்ட அதே கேள்வியுடன் சுவாமிகளிடம் வந்திருந்தார் அவர் - நாலு மாதங்களுக்கு முன்பு. மறுநாள் வருவதாகச் சொன்னார். வரவேயில்லை...''

''அப்படி உட்காரலாம். வாருங்கள்,'' என்று மல்லிகைப் பந்தலின் கீழிருந்த சிமெட்டிப் பெஞ்சுக்கு அவளை அழைத்துச் சென்றான் கௌரி. தனக்குத் தெரியாதிருந்த மர்மங்களை இவள் தீர்க்கப் போகிறாளா அல்லது மேலும் பல புதிய சிக்கல்களை ஏற்படுத்திவிடப் போகிறாளா என்று அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் சற்றும் எதிர்பாராத விஷயமொன்றை அவள் சொல்லத் தொடங்கியிருக்கிறாள் என்பது மட்டும் நிச்சயம்.

வெய்யில் இன்னும் சுள்ளென்று துளைக்காத நேரம். சிமெட்டிப் பெஞ்சில் தூசியைத் தட்டிவிட்டான் தோட்டக்காரன்.

நந்தினி கீழுதட்டைக் கடித்த வண்ணம் பல நிமிடங்களுக்கு மௌனமாயிருந்தாள்.

''ராகவ் இறந்து விட்டார்... எவ்வளவு நல்லவர்களுக்கு எவ்வளவு விரைவாக மரணம் கிட்டிவிடுகிறது! 'இன்றைக்கே உன் பணியைச் செய்து விடு நாளை மரணம் காத்திருக்கக்கூடும் என்பது யாருக்குத் தெரியும்?' என்று பகவான் புத்தர் சொன்னார். அதே போல அல்லவா நடந்துவிட்டது!'' என்று தனக்குத் தானே புலம்பிக் கொண்டிருந்தவள் துன்பம் தோய்ந்த கண்களால் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். ''நான் யாரென்று உங்களுக்குத் தெரியாது. இல்லையா?''

''நந்தினி என்ற பெயரைத் தெரியும். வேறு எதுவும் தெரியாது.''

''மில் அதிபர் ரத்தன் லாலின் ஒரே மகள் நான். பி.ஏ. வரையில் படித்தவள். நினைவு தெரிந்த நாள் முதல் வைரத்திலும் தங்கத்திலும் ஆப்பிளிலும் வெல்வெட்டிலும் மிதக்கிறவள். நான் கேட்டுக் கிடைக்காதது கிடையாது. எனக்கு எந்தக் கல்லூரி விருப்பமோ அங்கே படிப்பேன். எந்த ஹாஸ்டல் பிடிக்குமோ அங்கே தங்குவேன் எந்தச் சினேகிதிகள் எனக்குத் தேவையோ அவர்களுடன் சுற்றுவேன். என்னை ஏனென்று கேட்க ஆள் கிடையாது...''

''பொறாமையாய்த்தான் இருக்கிறது உங்கள் வாழ்க்கையைப் பற்றிக் கேட்டால்!'' என்று புன்னகையுடன் சொன்னான் கௌரி - அவள் மனச் சுமையை லேசாக்கும் எண்ணத்துடன்.

''மிச்சத்தையும் கேட்டீர்களானால் பொறாமை பரிதாபமாகி விடும்.'' என்றாள் நந்தினி. ''நான் சொன்னதெல்லாம் நாலு வருஷத்துக்கு முந்தி. அதன் பின் என் வாழ்க்கை நரகமாகி விட்டது.''

''அடடா, என்ன நேர்ந்தது?''

''மித மிஞ்சிய செல்வமும் கட்டுக்கடங்காத சலுகைளும் உள்ள பணக்காரக் குடும்பத்தில் என்ன நேருமோ அதெல்லாம் நேர்ந்தது,' என்றாள் நந்தினி தோட்டத்தின் புல் தரையில் அவளுடைய பாதத்தின் நுனி எழுதிக் கொண்டிருந்த கோலங்கள் அவள் மனத்தின் தவிப்பை எடுத்துக் காட்டின. அவள் தொடர்ந்தாள்: ''என் அப்பா பெரிய குடிகாரரானார். போதையில் என்னை யாரென்று அடையாளம் தெரிந்து கொள்ளக் கூட மாட்டார். என்றைக்காவது என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டுக் கொண்டு கிட்டே வந்தாரானால் நான் பயந்து நடுங்கி ஓடி விடுவேன். என் அம்மா மனம் வெறுத்து, போபாலில் இருந்த என் பாட்டி வீட்டுக்குப் போய்விட்டாள். நான் வர மாட்டேன் என்று சொல்லி விட்டேன். அப்பா இன்னும் மோசமாகாமல் தடுக்க வேண்டுமென்பது என் ஆசை. அது இன்று வரையில் முடியாமலே இருக்கிறது...''

வாசலில் காரின் ஹாரன் கேட்டது ஆனந்த தேராதான் வந்து விட்டாரோ என்று இருவரும் எழுந்து பார்த்தார்கள். வேறு ஏதோ கார்.

''நீங்கள் சொல்லிக் கொண்டிருக்கிற நிகழ்ச்சிகளுக்கும் ராகவ்வுக்கும் என்ன சம்பந்தமென்று புரியவில்லை,'' என்று கூற நினைத்தான் கௌரி.. அதற்குள் நந்தினியே அவன் மனத்தில் ஓடிய எண்ணத்தைப் புரிந்து கொண்டவள் போலச் சொன்னாள்

''நாலு மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் ரொம்ப ரொம்ப நொந்து போயிருந்த சமயம், சேர்ந்தாற்போல் ஒரு வாரம் என் தந்தை வீட்டுக்கே வராதிருந்தார். கௌரவமான எந்தப் பெண்ணும் கால் வைக்கக் கூசுகிற ஒரு வீட்டில் அவர் இருப்பதாகத் தெரிந்தது. கூப்பிட்டனுப்பியும் வரவில்லை. எனக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது. எங்காவது ஆற்றிலே குளத்திலோ விழுந்து உயிர் விட்டு விடலாம் என்று தீர்மானித்தேன். வீட்டை விட்டுக் கிளம்பியும் விட்டேன் பிறகு தான் அப்பாவிடம் கடைசியாக ஒரு வார்த்தை சொல்லாமல் வந்து விட்டோமே என்று தோன்றியது. குறைந்தபட்சம் நான் இறந்த பிறகாவது அவர திருந்தலாமில்லையா? அந்த எண்ணத்துடன் மவுண்ட் ரோடு தபாலாபீசுக்குள் நுழைந்தேன். கையிலிருந்த சில்லறைக்கு ஒரு கார்டு வாங்கினேன். பேனா கொண்டு வரவில்லை என்று தெரிந்தது. பக்கத்திலிருந்த ஒரு வாலிபரிடம், 'ஒரு நிமிடம்,' என்று பேனாவை இரவல் கேட்டேன். அவர்தான் ராகவ்.''

கௌரி குறுக்கிடாமல் அவள் முகத்தையே பார்த்தவாறிருந்தான்.

''இரண்டே வரிதான். 'அப்பாவுக்கு, நான் இந்த உலகத்தை விட்டே போகிறேன். இனியாவது திருந்தி வாழுங்கள்.' என்று எழுதினேன். 'தாங்ஸ்,' என்று பேனாவைத் திருப்பிக் கொடுத்தேன் அந்த வாலிபரிடம். 'அதையும் கொடுங்கள்' என்று அவர் கை நீட்டினார். 'எதை?' என்று கேட்டேன். 'இதைத்தான்,' என்றவர் சடக்கென்று என் கையிலிருந்த தபால் கார்டைப் பறித்தார். சுக்கல் சுக்கலாய்க் கிழித்தெறிந்தார். 'நீங்கள் படபடப்பாக இருந்ததால் சந்தேகம் வந்தது. கார்டில் எழுதும் போது பார்த்துவிட்டேன்,' என்றார்.

''எனக்குக் கோபம் வந்தது. 'என் சொந்த விஷயத்தில் தலையிட நீங்கள் யார்?' என்றேன். 'ஆமாம். எனக்கு உரிமை இல்லைதான். தப்பு தான். மன்னியுங்கள். பேசிக் கொண்டே நடப்போம், வாருங்களேன்,' என்றார். என்னவோ தெரியவில்லை, அவர் பேச்சை என்னால் தட்ட முடியாதிருந்தது. சாயந்தரம் ஆறு மணி சுமாருக்கு மவுண்ட் ரோடு கும்பலை லட்சியம் செய்யாமல் அவர் கூடவே நடந்தேன். என்னைப்பற்றி அவரிடம் சொல்லச் சொல்ல எனக்கே பாரம் குறைந்த மாதிரி இருந்தது.''

கௌரி கேட்டான்! ''ஆனால் ராகவ் தன்னைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையா?''

''தன் பெயர் ராகவ் என்பதை மட்டும்தான் சொன்னார். நான் பேசி முடிந்ததும், 'ஆயிரம் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு. லட்சம் ஏமாற்றங்களைச் சகித்துக் கொண்டு எவ்வளவோ பேர் உலகத்தில் உயிர் வாழ்கிறார்கள். செல்வமும் இளமையும் ஆரோக்கியமும் உள்ள நீங்கள் ஏன் தற்கொலை செய்து கொள்ள முயல வேண்டும்? பைத்தியக்காரத்தனம்!' என்றார். பிறகு, 'ஆனந்த தேரா என்று ஒரு பௌத்த துறவி வந்திருக்கிறார். அவரைப் பார்க்கத்தான் நான் போகிறேன். நீங்களும் வாருங்கள்,' என்றார். 'அவருடைய சொற்பொழிவைக் கேட்கத்தான் நீங்கள் புறப்பட்டீர்களா?' என்றேன். 'இல்லை, இதைப் பற்றிச் சந்தேகம் கேட்க,' என்று சொல்லி, ஒரு பூவை எடுத்துக் காட்டினார். நேற்று நீங்கள் காட்டினீர்களே. அதே கல்ப புஷ்பம்.''

''அப்புறம்?''

''ஆனந்த தேரா என்ற துறவியை இருவருமாகச் சென்று பார்த்தோம். 'இந்தப் பூவைப் பற்றி பௌத்த

புராணங்களில் என்னவோ சொல்லியிருக்கிறதாமே?' என்று ராகவ் கேட்டார். சுவாமிகள் அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு, 'இது பூத்துள்ள இடத்தை நேரில் பார்த்தால் தான் சொல்ல முடியும்.' என்றார். 'நான் இன்று பம்பாய் போகிறேன். அடுத்த முதல் தேதியன்று திரும்பி வருவேன். வந்ததும் உங்களை என் வீட்டுக்கு அழைத்துப் போகிறேன்.' என்று ராகவ் சொன்னார்.''

''அத்தோடு இருவரும் புறப்பட்டு விட்டீர்களா?''

''இல்லை. ராகவ் மட்டும் தான் புறப்பட்டுப் போனார். இன்னொரு தரம் தற்கொலை முயற்சி செய்து கொள்ள மாட்டேன் என்று பல வாக்குறுதிகளை என்னிடம் வாங்கிக் கொண்டு போனார். நான் அன்று ஆனந்த தேராவின் சொற்பொழிவைக் கேட்பதற்காகப் பின் தங்கினேன். கேட்டேன். என் வாழ்க்கையில் புரட்சி நடந்தது. எந்த மன அமைதியைத் தேடி நான் அலைந்தேனோ அதை அவர் வாரி வழங்குவதைக் கண்டேன். எவ்வளவு முட்டாள்தனமாக உயிரை விடவிருந்தோம் என்று நினைத்துக் கொண்டேன். ஆனந்த தேராவின் செக்ரட்டரியாக இருப்பது என்று முடிவு செய்து அவரிடம் கேட்டுக் கொண்டேன். என் அந்தரங்க சுத்தியைப் புரிந்து கொண்டு சுவாமிகளும் சம்மதித்தார். என் எல்லாச் செலவுகளையும் நானே செய்துகொள்கிறேன். அவருடன் எல்லா ஊர்களுக்கும் செல்கிறேன்...''

''ராகவ்? அவனைப் பிறகு சந்திக்கவே யில்லையா?''

''அதுதான் எனக்குப் பெரிய மனக் குறை. ஒரு வாரம் கழித்து, சொன்னபடி முதல் தேதியன்று வருவார் என்று எதிர் பார்த்தேன். காணோம். கூட்டங்களில் அவரைத் தேடித் தேடி என் கண்கள் களைத்துப் போயிற்று. பிறகு நாங்கள்

ஹைதராபாத், டெல்லி, கல்கத்தா என்று சுற்றுப் பயணம் கிளம்பி விட்டோம். சென்ற வாரம் சென்னை திரும்பி னோம். இப்போது அவரைத் தேடினேன் கூட்டங்களில். அகப்படவில்லை. என் வாழ்க்கையில் ஒளியேற்றியவருக்கு நன்றி சொல்ல என் உள்ளத்தின் ஒவ்வொரு அணுவும் உடம்பின் ஒவ்வொரு துணுக்கும் துடித்தது. நீங்கள் அதே கல்ப புஷ்பத்தைக் கொண்டு வந்ததும், ராகவ்வின் வீட்டிலிருந்து வந்திருக்க வேண்டுமென்று ஊகித்தேன். அவரைச் சந்திப்பதற்காகவே சுவாமிகளுக்கு முன்னால் ஓடோடி வந்தேன். ஆனால் அவர் இறந்து விட்டா ரென்று...''

''சாதாரணமாக இறக்கவில்லை. தற்கொலை செய்து கொண்டு இறந்தான்.''

''நான்ஸென்ஸ்!'' கோபத்துடன் துள்ளி எழுந்தாள் நந்தினி. ''என்னைத் தற்கொலையிலிருந்து தடுத்தவர், அவ்வளவு விவேகத்துடன் பேசியவர் - தற்கொலை செய்து கொண்டாரராவது! நம்ப மாட்டேன்!''

''நானும்தான் நம்பவில்லை. அது தற்கொலையாக இராது, வேறு வகையான மரணம்தான் என்று நான் நினைத்திருக்கிறேன். நீங்கள் சொன்ன விஷயம் அதை உறுதிப்படுத்திவிட்டது. ஒரு கேள்வி: நீங்கள் சந்தித்தது எந்த மாதம்?''

''மார்ச்.''

''அதாவது, பம்பாயிலிருந்து முதல் தேதியன்று திரும்புவேனென்று ராகவ் சொன்னது, ஏப்ரல் முதல தேதியை?''

''ஆமாம்.''

கௌரி கசப்புடன் சிரித்தான். ''சொன்னபடி ராகவ் வராமலில்லை. வந்தான். வந்த தினத்தன்று பிற்பகல்தான் தற்கொலை - இல்லை, இறந்து விட்டான்,'' என்ற கௌரி, சுருக்கமாக அவளுக்குச் சொல்லக கூடியதை மட்டும் தெரிவித்தான். ''உங்களைப் போலவேதான் நானும் ராகவ்வுக்குக் கடமைப்பட்டவன். என் உயிர்த் தோழன் அவன். ஆகவே அவனுடைய திடீர் மரணத்தின் மர்மத்தை அறியாமல் விடுவதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டு வேலை செய்ய ஆரம்பித்தேன். அப்போதுதான் இந்தக் கல்ப புஷ்பத்தின் மீது அவன் அக்கறை கொண்டிருந்தானென்று தெரிய வந்தது. இதில் என்ன விசேடம் என்று அறிந்து கொள்வதற்காக வந்தேன்...''

தோட்டக்காரன் ஓடி வந்து, ''சாமியார் வந்திருக்கிறாருங்க,'' என்றான்.

''போய் ஐயாவிடம் சொல்,'' என்று அவனை விரட்டி விட்டு, காரிலிருந்து இறங்கும் ஆனந்த தேராவிடம், ''வர வேண்டும்,'' என்று கை குவித்தான் கௌரி. அதற்குள் உலகநாதனும் வந்து, ''உள்ளே வர வேண்டும்,'' என்று பணிவுடன் அழைத்தார்.

''முதலில் அந்தப் புஷ்பச் செடியை பார்த்துவிட்டு வருகிறேன்,'' என்ற ஆனந்த தேரா, ''செடி எங்கே இருக்கிறது?'' என்று வினவிய வண்ணம் முன்னே நடந்தார். உலகத்தை ஆளும் மன்னனுக்கும் சகலத்தையும் துறந்த சன்னியாசிக்கும் மட்டும்தான் இந்த ராஜ கம்பீரமான நடையும் போக்கும் இருக்கும் என்று எண்ணிக் கொணடான் கௌரி.

கல்ப புஷ்பம பூத்திருந்த செடியை ஒரு வினாடிதான் குனிந்து பரிசோதித்தார் ஆனந்த தேரா. பிறகு பங்களாவை

ஒட்டினாற் போல் நாலு புறமும் இருந்த சிமெட்டிப் பாதையின் வழியே, பின்கையைக் கட்டியவாறு தோட்டத்தைப் பார்த்துக் கொண்டு நடந்தார். அந்தச் சிமெட்டிப் பாதைக்கும் காம்பவுண்டு சுவருக்கும் நடுவே தோட்டம் அமைந்திருந்தது. பாதக் குறடுகளின் ஓசையைத் தவிர வேறு அரவமே இல்லை. நந்தினியும் கௌரியும் உலகநாதனும் தோட்டக்காரனும் ஒருவரோடொருவர் பேசாமல் அவரைப் பின்தொடர்ந்தார்கள்.

'ட' மாதிரி பாதை திரும்பியது. கட்டிடத்தின் பின்புறப் பாதையில் நடந்தார் ஆனந்த தேரா. காம்பவுண்டு சுவர்கள் சந்திக்கும் முனையை அடைந்ததும் நின்றவர், ''அது என்ன?'' என்று மூலையில் குவிந்திருந்த ஒரு மேட்டைக் காட்டினார்.

''வெறும் குப்பை, ஐயா,'' என்றார் உலகநாதன். ''இலை, தழைகளையெல்லாம் எருவுக்காகக் கொட்டி வைத்திருக்கிறோம்.''

ஆனந்த தேரா தோட்டக்காரனிடம், ''அந்தக் குப்பை மேட்டைக் கொஞ்சம் சரித்துக் காட்டு. அதன் பின்புறம் தெரியவில்லை,'' என்றார்.

தோட்டக்காரன் மண்வெட்டி எடுத்துச் சென்று மேட்டைத் தள்ளினான். அதன் பின்னே, மேற்குப்புறக் காம்பவுண்டும் வடக்குப் புறக் காம்பவுண்டும் சந்திக்கும் முனையில் -

இன்னொரு சின்னச் செடி முளைத்திருப்பது தெரிந்தது. அதிலும் ஒரே ஒரு கல்ப புஷ்பம் பூத்திருந்தது.

இரண்டு எட்டில் அதனருகே சென்று பார்த்துவிட்டுத் திரும்பிய ஆனந்த தேரா, ''முதல் பூ தென் கிழக்கு

முனையில், இன்னொரு பூ வட மேற்கு முனையில்! என்ன ஆச்சரியம்!'' என்று வாய்விட்டுச் சொன்னார். அவருடைய சிவந்த நெற்றியில் முத்து முத்தாக வியர்வை பொடித்திருந்தது.

## பதினான்கு

பயம் ஒரு பக்கம் பிடித்துத் தள்ளினாலும் ஆனந்த தேராவைத் தயங்கித் தயங்கியே நெருங்கினார்கள் உலகநாதனும், கௌரியும், நந்தினி அவர்களைப் பின்தொடர்ந்தாள்.

''ஐயனே! என்ன கண்டீர்கள் இங்கே விசேடமாய்?'' என்று கௌரி வினவியதற்குப் பதிலேதும் வெளிப்பட வில்லை அந்தப் புத்த பிக்குவிடமிருந்து.

செடியிலிருந்து கல்ப புஷ்பத்தை ஜாக்கிரதையாகக் கிள்ளியெடுத்துக் கையில் வைத்துக் கொண்டிருந்தார் அவர். துகள் துகளான அதன் மடல்களை ஒன்று இரண்டு மூன்று என்று அவர் உதடுகள் எண்ணின. ''நூற்றெட்டு!'' என்று வாய்விட்டுச் சொன்னவர் அந்த மலரைக் கண்ணில் ஒற்றிக் கொண்டுவிட்டு மறுபடியுமொரு முறை ஆராய்ந்தார். ''சொர்ண நிறம்! தாமரை வடிவம்! பட்டு மென்மை! எல்லாம் அப்படியே! அப்படியே!'' என்று சொல்லுகையில் அவர் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. ஆனால் உடனே தன்னைச் சுதாரித்துக் கொண்டு ''இருக்காது, மிகச் சுலபமாய் நான் அப்படி நினைத்தது பெரும் அபசாரம்!'' என்று தன் கன்னங்களில் போட்டுக் கொண்டு எழுந்து வந்தார்.

''சுவாமி! என்ன விஷயம்? எங்களுக்குச் சொல்லக் கூடாதா?'' என்று வினயமாக வேண்டிக் கொண்டான் கௌரி.

கனவிலிருந்து விழித்தெழுந்தவர் போல அவர்களை நோக்கினார் ஆனந்த தேரா, பின்கை கட்டிய வண்ணம் சிமெட்டிப் பெஞ்சியை நோக்கி நடந்தார். கால் மீது கால் போட்டமர்ந்தார். பின்னர் சொன்னார்: ''ஒன்றுமில்லை... அந்தக் கல்ப புஷ்பத்தைப் பற்றிப் பெளத்த புராணங்களில் ஒரு விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது...''

''இது பூக்கும் இடத்தில் வசிப்பவன் நேரே நிர்வாணம் அடைவானாம்,'' என்றான் கெளரி.

''அபத்தம்!'' என்று அதட்டினார் ஆனந்த தேரா. ''இந்தக் கல்ப புஷ்பத்தின் தத்துவம் அலாதியானது. கிழக்காசிய நாடுகளில் எல்லா மக்களும் அதைத் தீவிரமாக நம்புகிறார்கள். இந்தப் புஷ்பம் எந்த இடத்தில் நான்கு திசைகளில் பூக்கிறதோ, அதன் நடுவே சாக்கிய முனி - கோதம புத்தன் - போதியெம்பிரான் - அவதரிப்பார்!''

''என்ன!'' என்று மூன்று குரல்கள் ஒரு சேர வியப்புத் தெரிவித்தன.

''மைத்ரேயர் என்று அந்த அவதாரத்துக்குப் பெயர். கோதம கோத்திரத்தில் அவர் ஜனிப்பார்.''

''கோதம கோத்திரமா!'' என்று உலகநாதன் திடீரென்று உரக்கக் கூவினார். ''அதுதான் எங்கள் கோத்திரம் ஐயா!''

ஆனந்த தேராவின் கண்கள் அவர் மீது நிலைத்து நின்றன. ''புராணத்தில் எப்படியெல்லாம் கல்ப புஷ்பம் வர்ணிக்கப்பட்டிருக்கிறதோ, எந்தெந்தத் திசைகளில் அது மலரும் என்று கூறப்பட்டிருக்கிறதோ, அதேபோல இங்கே இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். மைத்ரேய அவதாரம் இந்த இல்லத்தில் நடைபெறப் போகிறது

என்றல்லவோ பொருள்?... முன் பொருமுறை இந்த மலரை எடுத்துக் கொண்டு ஓர் இளைஞன் வந்தான்...''

கௌரி குறுக்கிட்டு, ''இவருடைய தம்பிதான் அவன். ஒரு - ஒரு விபத்தில் காலமாகி விட்டான்,'' என்றான்.

''அப்படியா?'' சிறிது நேரம் ஆனந்த தேரா பேசாதிருந்தார். பிறகு மென்மையுடன் கேட்டது அவர் குரல்:

''போதி பகவான், 'முன்னம் இருந்தவன்தான் நான். இல்லாதவனல்ல. நாளை இருக்கப் போகிறவன் நான். இல்லாதவனல்ல. இன்று இருப்பவனும் நான். இல்லாதவனல்ல,' என்று அருளியிருக்கிறார். ஆகையால் எப்போது, எங்கே அவர் பிறப்பார் என்று சொல்வதற்கில்லை. நம்புகிறவர்கள் நம்பட்டும். நம்பாதவர்கள் போகட்டும். நீங்கள் இதைப் பற்றி எல்லாருடனும் பேச வேண்டாம். ஆனால் இந்தத் தோட்டத்தை மட்டும் கவனமாகக் கண் காணித்து வாருங்கள். இது வரை நடந்தது தற்செயலாக இருக்கலாம். ஆனால் மூன்றாவது திசையில், மூன்றாவது செடி வளர்ந்து, மூன்றாவது புஷ்பமும் பூத்ததானால்-''

அந்த எண்ணமே அவரைச் சிலிர்க்க வைத்தது போலும். அவருடைய சிவந்த மேனி ஒரு முறை நடுங்கி நின்றது. தளர்ந்து சரிந்திருந்த மஞ்சள் வஸ்திரத்தை இழுத்துப் போர்த்துக் கொண்டவர், ''நீ வேண்டுமானால் சற்றுப் பொறுத்து வா. நான் முன்னால் போகிறேன்,'' என்று நந்தினியிடம் கூறிவிட்டுப் புறப்பட்டு விட்டார்.

''மைத்ரேயராம். புத்தராம்! பிறக்கப் போகிறாராம்! உன் அண்ணி குளிக்காமல் இருக்கிறாளா என்று விசாரி, கௌரி!'' என்று நகைத்துக் கொண்டார் உலகநாதன். 'இன்று

சாயங்காலம் எங்கள் தொழிலதிபர் சங்கத்தின் வருடாந்தர விழா இருக்கிறது. விளையாட்டு, டின்னர் எல்லாம் உண்டு. அங்கே சினேகிதர்களிடம் இதையெல்லாம் சொன்னால் சரியான தமாஷாக இருக்கும்!''

''வேண்டாம் சார், ப்ளீஸ்!'' என்று எதிர்பாராத விதமாக அவர் கையைப் பற்றிக் கொண்டு வேண்டிக் கொண்டாள் நந்தினி. ''சுவாமிகள் எதையும் யோசியாமல் சொல்ல மாட்டார். நீங்கள் அவர் பேச்சுக்குத் தயவு பண்ணி மதிப்புக் கொடுங்கள்.''

''ரைட்!'' என்றார் உலகநாதன். ''நீயும் எனக்கு மதிப்புக் கொடுத்து உள்ளே வந்து ஒரு காப்பியாவது சாப்பிட்டுவிட்டுப் போ, பார்க்கலாம்!''

நந்தினி வீட்டுக்குள் வந்தாள். உலகநாதன் வேறு அலுவல்களைக் கவனிக்கச் சென்று விட்டதால் அவளை உபசரிக்க வேண்டிய கடமை கௌரிக்குத்தான் ஏற்பட்டது. ஆனந்த தேரா சொல்லிச் சென்ற புதிய தகவல் அவன் மனத்தில் சிந்தனைகளை எழுப்பியிருந்ததைப் போலவே, அவள் உள்ளத்திலும் சுமையைக் கொடுத்திருந்தது. கையில் அந்தப் புஷ்பத்துடன் அவள் நெடுநேரம் பேசாதவளாகவே இருந்தாள். கடைசியில் புறப்பட்ட போது, ''கௌரி! உங்கள் சினேகிதர் நிச்சயமாய்க் கொலைதான் செய்யப்பட்டிருக் கிறார். இந்தக் கல்ப புஷ்பத்தைப் பற்றித் தெரிந்து கொண்டவர்கள் அவர்மீது பொறாமைப்பட்டு அவரை ஒழித்திருக்கிறார்கள் அந்தக் கொலைகாரர்களை விடாதீர்கள் கௌரி, விடவே விடாதீர்கள்!'' என்று சொல்லிவிட்டுச் சென்றாள்.

மவுண்ட் ரோடு மாளிகையில் சிறு தொழிலதிபர்களின் விழா நடந்து கொண்டிருந்தது.

உட்ரோஸ் கொடிகளின் அடர்த்தியில் புல்தரை மெத்தென்றிருந்தது. கௌரி மறைவாக உட்கார்ந்திருந்தான்.

அன்றைய விழாவுக்கும் விருந்துக்கும் வர அவனுக்கு மனமேயில்லை. முதலாவது ஷோபாவைப் பார்த்து எல்லா விஷயத்தையும் அவளுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று அவன் துடித்துக் கொண்டிருந்தான். அதற்கு எப்போது நேரம் கிடைக்கும் என்பதிலேயே அவன் கவனம் இருந்தது.

ஆகவே உலகநாதன் மாலை ஆறு மணிக்கு அவனை, 'வண்டியை எடு! எங்கள் விழாவுக்குப் போக வேண்டும்' என்று சொன்னபோது கொஞ்சம் தலையைச் சொறிந்து கொண்ட பிறகுதான் கிளம்பினான்.

சூரிய வெளிச்சம் மங்கி, கலர் பல்புகள் மினுமினுக்கத் தொடங்கிய போதுதான் விழா ஆரம்பித்தது. முதலில் சிறிது 'லேசான சிற்றுண்டி'. பிறகு மாலை அணிவித்தல், சிற்றுரை, பேருரை, வாழ்த்துரை முதலியன.

மணி ஒன்பதடித்தபோது நடன நிகழ்ச்சியொன்று தொடங்கி, பத்தரைக்கு முடிந்தது. அதற்கு மேல் சில்லறைக் கேளிக்கைகள் - கடைசியில் டின்னர். சிறு தொழிலதிபர்கள் என்று பெயர் வைத்துக் கொண்டு இப்படியொரு கொட்டமடிக்க வேண்டாமென்று கௌரிக்குத் தோன்றியது.

தோட்டமெங்கும் ஒரே சிரிப்பும் கும்மாளமுமாக இருந்தது. நர்ஸரி குழந்தைகள் மாதிரி ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள் பல பேர். கௌரிக்குச் சலிப்பாயிருந்தது. அவனுக்குத் தெரிந்த டிரைவர்கள் சிலரும் கண்ணில் பட்டார்கள்.

''அண்ணே! அண்ணே!'' என்று யாரோ அவனைக் கையைப் பிடித்துக் கூப்பிட்டார்கள்.

கௌரவ மாஜிஸ்திரேட் சாரதா தம்பியின் கார் டிரைவர்தான். கௌரிக்கு அவனுடன் பழக்கமுண்டு. ''விடப்பா, எனக்கு ஒரே களைப்பாக இருக்கிறது,'' என்று கௌரி கையை உதறினான்.

''புண்ணியமுண்டு, அண்ணே! கொஞ்சம் என்னோடு வாருங்களேன்! இரண்டே நிமிடம்,'' என்று அந்த டிரைவர் பதறவே கௌரியினால் மறுக்க முடியவில்லை. ''என்னப்பா அப்படி?'' என்று ஆச்சரியம் தெரிவித்த வண்ணம் அவனைப் பின்தொடர்ந்து சென்றான்.

மைதானத்தின் மறுகோடியில் வரிசையாகக் கார்கள் நிறுத்தப் பட்டிருந்தன. அந்த இடத்தை அடையு முன்பே ஒரு நாயின் பயங்கரமான, இடைவிடாத குரைப்பு கௌரியின் காதைத் துளைத்தது. திருமதி சாரதா தம்பியின் காரிலிருந்துதான் அது வருகிறது என்று கௌரி கண்டு கொண்டான். ''என்னப்பா, உன் எஜமானியோட நாயா?''

''ஆமாங்க அண்ணே!'' என்று பரிதாபமாகப் புலம்பினான் டிரைவர். ''காரிலேயே இருக்கட்டும்னு சொல்லிவிட்டுப் போயிட்டாங்க அம்மா பாட்டுக்கு. இது வண்டியையே பிய்த்து உதறிப் போட்டுவிடும் போலிருக்குது! அம்மாவண்டை கொண்டு போய் விட்டால்தான் சும்மா இருக்கும்!''

''பின்னே செய்யேன்?''

''ஒரு சமயம் மாதிரி ஒரு சமயம் இருக்காது, அண்ணே! சுத்தி முத்தி இருக்கிறவங்க மீது விழுந்து கொஞ்சவும் கொஞ்சும்! அரை ராத்தல் சதையைப் பிய்க்கவும் பிய்க்கும்!''

ஏற்றியிருந்த கண்ணாடி வழியாய்ப் பார்த்தான் கௌரி. புலி மாதிரி பாய்ந்து கொண்டு, ஓநாய் மாதிரி உறுமிக் கொண்டிருந்தது அந்த அல்சேஷன்! பக்கத்துக் கார்களின் டிரைவர்களும் வேடிக்கை பார்க்கக் கூடிவிட்டார்கள் ''இதை எஜமானிகிட்டே கொண்டு போய் விடலாமா, வேண்டாமாண்ணு தெரியலே அண்ணே! அதுக்குத்தான் உன் அட்வைஸைக் கேட்டுக்கலாம்ணு கூப்பிட்டேன்!'' என்றான் அவன்.

''மன்னித்துக் கொள்ளடா மச்சான்!'' என்று கும்பிட்டான் கௌரி. ''இந்த நாய் பேய் சமாசாரமெல்லாம் நமக்குத் தெரியாது!''

நல்ல காலமாக, விஷயம் தெரிந்து வேறொரு டிரைவர் வந்து, அந்த அல்சேஷனுக்கு மட்டுமே புரியக் கூடிய முறையில் ஏதோ சொன்னான். கொஞ்சம் குரைப்பு ஓய்ந்தது. ''இப்போதைக்குச் சமாளித்துவிட்டேன். ஆனால் உன் அம்மாளை க்விக்காகவே வரவழைச்சுக்க! சொல்லிட்டேன்!'' என்று கூறிவிட்டு அவன் சென்றதும் கௌரியும் தன் பழைய இடத்துக்குத் திரும்பினான்.

அப்போதுதான் அந்தப் பேச்சு அவன் காதில் விழுந்து அவனை நிமிர்ந்து உட்கார வைத்தது.

''இது உலகநாதனுக்கு.''

கிசுகிசுவென்று மித் தாழ்ந்த குரலில் தான் அது சொல்லப்பட்ட தெனினும், தெளிவாகக் கௌரியின் காதில் வார்த்தைகள் விழுந்தன. அந்த நாய்க்காக எழுந்து போகா திருந்தால் முந்தின பேச்சுக்களைக் கூடக் கேட்டிருக்கலாமே என்று வருந்தினான் அவன்.

''இது உலகநாதனுக்கு,'' என்ற வாக்கியம் மட்டு மல்ல.

''மாற்றிக் கீற்றித் தொலைந்து விடாதே. உலக நாதனுக்கு மட்டுமே இது போக வேண்டும்.'' இன்னும் ரகசியமாக, மர்மமாக அந்தக் குரல் ஒலித்ததும், மூச்சின் ஓசைகூட வெளிப்பட்டுவிடாமல், மெல்ல எழுந்து கொண்டான் கௌரி. ஒரு விசாலமான அறையின் வெளிப்புறத்தில் தான் உட்கார்ந்திருக்கிறோம் என்பது அப்போது தான் அவனுக்குப் புரிந்தது. திறந்த பெரிய ஜன்னலின் மறு புறத்தின் இருப்பவர்களையும் நடப்பவை களையும் காண வேண்டுமென்று அவன் உள்ளம் துடித்தது. ஆனால் ஜன்னலின் மட்டத்துக்குக் கண்ணை உயர்த்தகை யில் தலையும் நெற்றியும் தென்பட்டு விடுமே என்பதற்காக, எச்சரிக்கையுடன் இம்மி இம்மியாகவே எழுந்தான். எட்டிப் பார்த்தான்.

அவன் பார்வையில் முதலில் பட்டவை ஏராளமான கண்ணாடிக் கோப்பைகளும் மதுப் புட்டிகளும் தான். மதுவல்லாது ஸாஃப்ட் பானங்களும் வரிசை வரிசையாக இருந்தன. அறைக்குள் தாழ்வாக விளக்குகள் ஒளிர்ந்தன. வெளேரென்று யூனிபாரம் அணிந்த இரண்டு பட்லர்களின் முதுகுப் புறம் தெரிந்தத.

''கவனமாயிருக்கிறேன் அண்ணே,'' என்று மற்றவன் பதிலிறுத்ததும் இருவரும் வெளியேறி விட்டார்கள்.

கௌரியின் உடம்புக்குள் கிலுகிலுவென்று ஒரு பூச்சி ஓடுகிற மாதிரி வேதனை ஏற்பட்டது. வெள்ளமாய்ப் பெருக்கெடுத்த வியர்வையில் சட்டை தொப்பலாக நனைந்து கசகசத்தது.

உலகநாதனின் உயிருக்குக் குறி வைக்கிறார்கள்! அதில் எள்ளத்தனை சந்தேகமுமில்லை. அவருக்காக ஸ்பெஷலாக ஒரு பானம் தயாரிக்கப் பட்டிருக்கிறது இந்தச் சதிக்

கிடங்குக்குள். விஷம் கலந்த பானம்! கூட்டத்தின் நடுவே, கும்மாளியின் நடுவே, அவர் கையில் அந்தக் கோப்பையைத் தந்துவிட்டு வந்த சுவடு தெரியாமல் மறையப் போகிறான் கொலைகாரன். அவன் மறைவதோடில்லை. உலகநாதனும் மறையப் போகிறார் இன்னும் சில நிமிடங்களில் சில வினாடிகளில்!

நூற்றுக் கணக்கான புட்டிகளும் கோப்பைகளும் நிரம்பிய அந்த இடத்தில் உலகநாதனுக்கு மட்டுமே என்று ஒதுக்கப்பட்ட புட்டியை எப்படிக் கண்டு பிடிப்பது? அதை அவர்கள் அங்கே விட்டுப் போயிருக்கிறார்கள் என்பதுகூட என்ன நிச்சயம்? கவனமாகக் கையோடு எடுத்துத்தான் சென்றிருப்பார்கள்!

மீண்டுமொரு முறை அந்த அறையைப் பரபரப்பாக ஆராய்ந்தான். கடற்கரையில் ஒரு குறிப்பிட்ட கிளிஞ்சலைத் தேடுகிற மாதிரி பைத்தியக்கார முயற்சியாக இருந்தது அது. கைகளைப் பிசைந்து கொண்டான்.

திடீரென்று அவனுக்குச் சிரிப்பு வந்தது.

சே! முதல் நம்பர் மடையன் என்றால் இந்த கௌவன்னா ரீயன்னாவைத்தான் சொல்ல வேண்டும்!

எதற்காக அந்த விஷக் கோப்பையை இங்கே தேடிக் கொண்டிருக்க வேண்டும் மூளையில்லாமல்! அது எங்கே போகப் போகிறதோ அந்த இடத்துக்கே போய் நின்று கொண்டால்? எந்தப் பானம் வந்தாலும் குடிக்க வேண்டாம் என்று முன் கூட்டி உலகநாதனை எச்சரித்து விட்டால்? அவர் கையில் கிளாஸ் கொடுக்கப் பட்டிருக்குமானால், அதைத் தற்செயலாகத் தட்டியது போலத் தட்டிவிட்டு விட்டால்?

நாலு பேர் கவனிப்பார்களோ என்று தயக்கப்பட்டுக் கொண்டிராமல் உலகநாதனைக் கையைப் பிடித்து தரதரவென்று வேறு பக்கத்திற்கு இழுத்துச் செல்ல வேண்டும். ''சார்! தலை போகிற விஷயம். கவனமாய்க் கேளுங்கள். குடிப்பதற்கு யார் எது கொடுத்தாலும் உதட்டில் வைக்காதீர்கள். வைத்தீர்களோ தொலைந்தீர்கள்!'' என்று சொல்ல வேண்டும்.

''ஏன்? என்ன?'' என்று விழிப்பார்.

''அதிலே விஷம் கலந்திருக்கும். உங்களைக் கொலை செய்ய முயற்சி நடக்கிறது. தெய்வாதீனமாய் நான் அறிய நேரிட்டது.'' என்று சொல்ல வேண்டும்.

உலகநாதன் பதைத்துப் போவார். ''என்னடா உளறுகிறாய்? என்னை எதற்காகக் கொலை செய்ய வேண்டும்? நான் யாருக்கு என்ன கெடுதல் செய்தேன்?'' என்று திகைப்பார்.

''உங்கள் தம்பி ராகவ் யாருக்கு என்ன கெடுதல் செய்தான்? அவனை ஏன் கொலை செய்தார்கள்? அதே காரணத்துக்காக, அதே கொலைகாரர்கள் உங்கள் உயிருக்கும் உலை வைக்கப் பார்க்கிறார்கள்!'' என்று தெரிவிக்க வேண்டும்...

நடக்காத இவ்வளவையும் அவனாகவே மனத்தினுள் நாடகமாக நடத்திக் கொண்டு தோட்டத்துப் புல் வெளியை அடைந்த போது -

யார் யாரோ அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டு குறுக்கும் நெடுக்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய முகங்களைப் பார்த்ததும் கௌரிக்கு இதயமே ஒரு வினாடி நின்றுவிட்ட மாதிரி இருந்தது.

யாருடைய பித்துக்குளித்தனமான யோசனை இது! என்ன கோரமான விளையாட்டை விளையாடத் தருணம் பார்த்தார்கள்!

ஆடு! மாடு! கோழி! யானை! கரடி! மான்! புலி! முயல்! கழுகு!

ஆம். அவ்வளவு முகமூடிகளை, பொம்மைத் தலைகளை மாட்டிக் கொண்டு விளையாடினார்கள்!

எங்கெங்கும் சவால்கள்!

என்னை யாரென்று சொல்லுங்கள், பார்க்கலாம்! நான் யார் தெரிகிறதா? என்னைக் கண்டு பிடியுங்கள்! என்னை! என்னை!

- விழாவுக்கு வந்திருந்த அத்தனை பேரும் தங்கள் தங்கள் குரல்களை மாற்றிக் கொண்டு கூவினார்கள். சிரித்தார்கள். தொட்டுச் சீண்டி விட்டு ஓடினார்கள்! அவர்கள் கைகளில் மதுபானக் கிண்ணங்கள் இருந்தன. முகமூடிகளில் இருந்த துவாரத்தின் வழியே பானங்களை உறிஞ்சிக் கொண்டு ஓடிப் பிடித்து விளையாடினார்கள்.

உடைகளைக் கொண்டு ஆண்களையும் பெண்களையும் வேண்டுமானால் பிரித்தறியலாம், ஆனால் எந்த முகமூடியின் பின்னே யார் ஒளிந்திருக்கிறார்கள் என்பதை எப்படிக் கண்டு பிடிப்பது?

இங்கே விளையாடுவது சிறு தொழிலதிபர்கள் அல்ல. விதிதான் விளையாடுகிறது!

கௌரி பொருமினான். பல்லைக் கடித்தான். நெற்றியைத் தேய்த்து விட்டுக் கொண்டான். மாலையில் உலகநாதன் என்ன உடையில் கிளம்பினார் என்பதை

மண்டையை உடைத்துக் கொண்டு யோசித்துப் பார்த்தான். நினைவு வரவில்லை.

ஓடுகின்ற ஒவ்வொரு நிமிடமும் ஒரு நெருப்புப் பந்தாய்க் கௌரியின் கையைச் சுட்டது. நழுவுகின்ற ஒவ்வொரு விநாடியும் உலகநாதனுக்கும் மரணத்தக்கு முள்ள இடைவெளி குறுகிக் கொண்டிருப்பதை உணர்ந்தான் அவன்.

''ஐயோ! உலகநாதன் சார்! நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? எங்கே இருக்கிறீர்கள்?'' என்று அவன் இதயம் அலறியது.

## பதினைந்து

**நீ**லமும் பச்சையும் சிவப்பும் மஞ்சளுமான சின்னஞ் சிறு பல்புகளின் ஒளியில் குளித்துக் கொண்டிருந்த அந்தத் தோட்டத்தில், பெரிய பெரிய லட்சாதிபதிகள் சின்னச் சின்னக் குழந்தைகள் போல ஆளுக்கொரு முக மூடியை மாட்டிக் கொண்டு 'பார்ட்டி'யின் குதூகலத்தில் திளைத்துக் கொண்டிருந்த அமர்க்களத்தின் நடுவே, விஷக் கோப்பையை எங்கே உலகநாதன் சுவைத்து விடுவாரோ என்று அச்சம் குலையை அரிக்க, இங்குமங்குமாக ஓடி ஓடித் தவித்துக் கொண்டிருந்தான் கௌரி.

''சார்! சார்!'' என்று கூவக் கூவ அவன் இதயம் வெடித்துச் சிதறிக் கொண்டிருந்தது. கோப்பைகளை அந்த முகமூடி உதடுகள் காலி செய்யச் செய்ய அவன் நாடி நரம்பு அனைத்தும் துடித்தன.

இனி அவரைக் காப்பாற்றவே முடியாது. என்ற முடிவுக்கு அவன் வந்து விட்ட போது, ராகவ்வின் வழியிலேயே அவன் அண்ணனும் செல்வதைக் கடவுளே

வந்தாலும் தடுக்க இயலாது என்ற நிராசையை அவன் அடைந்து விட்ட வேளையில்-

எங்கிருந்தோ கேட்டது ளொள் என்ற பயங்கரக் குரைப்போசை! மறுகணம் அமளி! துமளி!

கூடியிருந்த அவ்வளவு பேரையும் குலை நடுங்க வைத்த அந்த நாயின் குரைப்பு, கௌரியின் செவிகளில் மட்டும் பன்னீராய்ப் பாய்ந்தது.

சற்று முன்னால் சாரதா தம்பியின் டிரைவரை அழ வைத்திருந்த அதே அல்சேஷன் நாய்தான் என்று அதைப் பார்க்கு முன்பே அவன் ஊகித்து விட்டான். அத்தனை தாஜாக்களுக்கும் மசியாமல் காரிலிருந்து பிய்த்துக் கொண்டு வந்துவிட்டது போலும்!

ஆம்! அதே தான்!

வெறி பிடித்தாற் போல் அது கூட்டத்தின் மத்தியில் பாய்ந்து தன் எஜமானியை நோக்கி ஓடிய போது மூலைக்கொருவராய்ச் சிதறினார்கள் விருந்தினர்கள். நாற்காலிகள் சரிந்தன. மேஜைகள் சாய்ந்தன மதுப்புட்டிகள் கவிழ்ந்தன தங்கள் தங்கள் முகமூடிகளைப் பிய்த்தெறிந்து விட்டு அவர்கள் ஓடி ஒதுங்கிய அந்த ஒரு கணத்துக்குள் -

உலகநாதன் எங்கே இருக்கிறாரெனக் கண்டு கொண்டான் கௌரி. அவரும் தன் கையிலிருந்த கிளாஸ் கோப்பையை வீசியெறிந்துவிட்டு ஓடினார்.

கூட்டமும் சீரடைந்து விட்டது.

''மை டார்லிங்! என்ன நடந்தது இப்போது? நான் எங்கே போய்விட்டேன் உன்னை விட்டு? புவர் ஸில்லி சைல்ட்!'' என்று சாரதா தம்பி தன் அருமை நாயை

அணைத்துக் கொண்டு கொஞ்ச, ஆனந்தக் குரைப்புடன் அந்த அல்சேஷன் அவளை நோக்கி எம்பி எம்பி மகிழ, தங்கள் கோபத்தையும் எரிச்சலையும் வெளிக் காட்ட முடியாமல் சிரிதது மழுப்பிச் சமாளித்தார்கள் மற்ற விருந்தாளிகள்.

எறிந்துவிட்ட மூகமூடிகளை யாரும் திரும்ப எடுத்து மாட்டிக் கொள்ளவில்லை. ஆனால் மதுவை அவ்வளவு எளிதாக விட்டுவிட மனமில்லை போலும். ஒவ்வொருவர் கையிலும் கிண்ணங்கள் திரும்பக் காட்சியளித்தன.

அந்த ஒரு நிமிடத்தில்தான் கோட்டை விட்டு விட்டான் கௌரி. யார் ஊற்றித் தந்தவர்கள் என்பதை அவன் பார்க்கு முன்பு உலகநாதனின் கையிலும் ஒரு கோப்பை வந்து விட்டது!

ஒரே எட்டில்அவரை நெருங்கியவன், ''வீட்டிலிருந்து டெலிபோன் வந்தது. உடனே உங்களை வரச் சொல்லிச் சமையற்காரன் கூப்பிட்டான்,'' என்றான் பரபரப்பாக. விஷம் பற்றித் தனக்குத் தெரியும் என்பது, எங்கிருந்த படியோ கவனித்துக் கொண்டிருக்கும் பகைவனுக்குத் தெரியக் கூடாது என்று எச்சரிக்கையாயிருந்தான் அவன்.

அவன் எதிர்பார்த்தது போலவே கையிலிருந்த கிண்ணத்தை டக்கென்று மேஜை மீது வைத்தார் உலக நாதன்.

''என்னப்பா சொல்கிறாய்?'' என்று திடுக்கிட்டவர். உடனேயே அவனுடன் புறப்பட்டார்.

''ஒன்றுமில்லை... அம்மாளுக்குத்தான் தலை சுற்றுகிற மாதிரி இருந்ததாம். இப்போது தேவலையாம்'' என்று அக்கம் பக்கத்திலிருப்பவரின் காதில் விழும்படி சற்று

உரக்கவே தெரிவித்தான் கௌரி. இன்னும் சில நிமிடங்களுக்குள் அந்தத் தோட்டம் மொத்தத்துக்கும் அது பரவிவிடும் என்று நிச்சயமாய்த் தெரிந்தது அவனுக்கு.

ஜெமினி மேம்பாலத்தை அடைந்த பிறகுதான் உலகநாதனின் தவிப்பை நீக்கினான் அவன் "சும்மா தான் சார், சொன்னேன். அண்ணிக்கு ஒன்றுமில்லை."

ஒரு துள்ளுத் துள்ளினார் உலகநாதன். "என்ன கௌரி? ஏதாவது அளவுக்கு மீறிப் போட்டு விட்டாயா என்ன? விளையாடுகிறாயே?"

"உங்கள் உயிரோடு விளையாடப் பார்த்தார்கள். சார்," என்று எல்லாவற்றையும் அவன் கூறி முடித்த போது, "என்னப்பா இது! நம்புகிற மாதிரியில்லையே... எனக்கா? விஷமா? எனக்கு யார் விரோதி?" என்று உலகநாதன் திணறினார்.

"ஆனந்த தேரா என்ன சொன்னார், நினைத்துப் பாருங்கள். எந்த நாலு திசைகளில் கல்ப புஷ்பம் பூக்கிறதோ அந்த நாலு திசைகளுக்கு நடுவிலே புத்த பிரானின் அடுத்த அவதாரம் சம்பவிக்கும், அவர்தான் மைத்ரேயர், அவர்தான் அடுத்த புத்தர், கோதம கோத்திரத்தைச் சேர்நதவராக அவர் இருப்பார் என்றெல்லாம் சொன்னாரில்லையா?..."

"இனிமேல்தான் அப்படிப் பிறக்கப் போகிறார் என்று சொன்னார்."

"அவர் அப்படி நினைத்தார். அதே அடையாளத்தை வைத்து, ஏற்கெனவே அப்படி ஒருவர் பிறந்துவிட்டதாக வேறு சிலர் நினைக்கலாமில்லையா?"

"நினைக்கட்டுமே?"

''புத்த பகவானின் பெயரைச் சொல்லிக் கொண்டு அக்கிரமச் சதிகள் நடத்துகிறவர்களுக்கு அது எப்படி இருக்கும்? உண்மையான புத்தர் ஒருவர் தோன்றப் போகிறார் என்ற ஜனங்களுக்குத் தெரிந்தால் உடனே தங்களுடைய மகிமைகள் குறைந்து குட்டுகள் அம்பலமாகி விடும் என்று பயப்படுவது சகஜம்தானே? ஆகவேதான் ராகவ் அப்படிப்பட்ட போட்டியாக முளைத்து விடக் கூடாது என்று அவனைக் கொலை செய்தார்கள். அதுவும் எப்போது?''

''எப்போது?''

''ஓரே ஒரு செடி முளைத்திருக்கும்போதே! விஷப் பரீட்சை எதற்கு என்று அவனை ஒழித்துக் கட்டினார்கள். இப்போது இரண்டாவது செடி முளைத்திருக்கிறது. இரண்டாவது பூ பூத்திருக்கிறது. கோதம கோத்திரத்தைச் சேர்ந்த இன்னொருவர்-ராகவ்வின் உடன் பிறந்த சகோதர ரான நீங்கள் - இருக்கிறீர்கள். அதே பௌத்த அவதாரமாக - மைத்ரேயராக - நீங்கள் தோன்றி விடக்கூடுமே? அந்த அபாயத்தை ஒழித்துவிடத் திட்டமிட்டிருக்கிறார்கள். நேரம் பார்த்திருக்கிறார்கள். இந்த விருந்தும் விழாவும் ரொம்பச் சௌகரியமாகக் கை வந்திருக்கிறது. நூற்றுக் கணக் கானவர்கள் வகை வகையான பானங்களை அருந்தும் போது யார் எதிலே விஷம் கலந்தார்கள் என்று கண்டு பிடிக்கவே முடியாது. அமளியோடு அமளியாக உங்கள் கதை முடிந்து விடும்!''

பிரமிப்பும் பயமும் கலந்த நெடுமூச்சு வெளிப் பட்டது உலகநாதனிடமிருந்து.

பங்களாவுக்குள் கார் நுழைந்தது. ''இதோ பார். ஒரு விஷயம்,'' என்று தாழ்ந்த குரலில் சொன்னார் அவர்.

''அங்கே பார்ட்டியில் நடந்த விஷயம் எதுவும் செங்க மலத்துக்குத் தெரிய வேண்டாம். அனாவசியமாய்க் காபரா பட்டுப் போவாள்.''

''ஆனால் நீங்கள் இனி ஒவ்வொரு வினாடியும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். சார்'' என்று கவலை யுடன் கூறியபடி காரைப் போர்ட்டிகோவில் நிறுத்தினான் கௌரி.

இந்தத் திரிசரண அபிமானிகள் சங்கத்தைப் பற்றி ஆனந்த தேராவிடம் கேட்க வேண்டும்... என்னென்ன போலிச் சங்கங்கள் என்னென்ன மோசடிகளை நடத்தி வருகிறது என்பது அவருக்குத் தெரிந்திருக்கக் கூடும்...

''திரிசரண அபிமானிகள்க சங்கம்.'' அஸிஸ்டெண்ட் கமிஷனர் மணிவண்ணன் இரண்டு மூன்று தரம் அந்த வார்த்தையைத் திருப்பித் திருப்பி உச்சரித்து விட்டு, யோசனையுடன் ஒவ்வொரு விரலாகச் சொடுக்கு எடுத்துக் கொண்டார்.

படக் படக்கென்று பத்து விரல்களும் ஒலி கொடுத்து முடிகிற வரைக்கும் கௌரி பொறுமையுடன் காத்துக் கொண்டிருந்தான். சொல்ல வேண்டிய விவரங்கள் அனைத்தையும் அந்தப் போலீஸ் அதிகாரியிடம் சொல்லியாயிற்று. இனி அவர் பாடு.

மணிவண்ணன் அவனை நிமிர்ந்து நோக்கினார். அவருடைய உதட்டில் புன்னகை அரும்பியிருந்தது. ''யூ ஆர் ஆன் த ரைட் பாத். கெட்டிக்காரன்தான்.'' என்றார்.

''தாங்ஸ் ஸார். அப்படியானால் இனி மேல் எனக்குத் தாங்கள் உதவ முடியும்? இல்லையா?''

''ஸாரி,'' என்று கையை விரித்தார் மணிவண்ணன். ''அது ஸிபிஐ விஷயம். ஸென்ட்ரல் போலீஸின் கவனத்தில் இருக்கிறது. திரிசரண அபிமானிகள் சங்கம் என்பது ஒரு இன்ட்டர்நேஷனல் க்ரூக்ஸ் ஸ்தாபனம் என்று அவர்கள் சந்தேகப்பட்டுக் கண்காணிக்கிறார்களாம். அது என் காதில் விழுந்ததால் சொன்னேன். ஸிபிஐ உனக்கு உதவி செய்ய மாட்டார்கள். சொல்லப் போனால், லோக்கல் பீப்பிள் புகுந்து மடில் செய்வதை வெறுப்பார்கள்.''

கௌரியின் உள்ளத்தில் ஏமாற்றம் புகைபோல் அடர்ந்தது. ''சரி சார்,'' என்று எழுந்து கொண்டான்.

''இரு,'' என்று கையமர்த்தினார் மணிவண்ணன். ''உலகநாதனைக் கொலை செய்ய முயற்சி நடந்ததாகச் சொல்கிறாய். அதே ஆபத்து உனக்கும் உண்டு. ஆகையால் உங்கள் இருவருக்கும் போலீஸ் ப்ரொடெக்ஷன் தர வேண்டியது எங்கள் கடமை.''

இரும்புப் பீரோவைத் திறந்தவர், லாக்கரிலிருந்து, மிகக் குண்டாயிருந்த ஒரு பேனாவை எடுத்து கௌரியிடம் நீட்டினார்.

''என்ன சார் எழுத வேண்டும்?''

''எழுத வேண்டாம். வெடிக்காமல் இருந்தால் போதும்,'' என்று சிரித்துக் கொண்டே பேனாவின் மூடியைக் கழற்றிக் காட்டினார் மணிவண்ணன்.

உள்புறம் வழக்கமான நெக்கொ நிப்போ இருக்கவில்லை. கட்டை விரல் போல் மொக்கையாக இரந்தது.

''கை வெடி குண்டு. சின்ன சைஸ். நீ ரொம்ப நெருக்கடியில் மாட்டிக் கொள்ள நேரிட்டால் தரையில் ஓங்கி அடி. வெடியும் புகையும் பயங்கரமாக இருக்கும்.

தப்பித்து ஓடு'' என்றார் மணிவண்ணன். பின்னர். ஓர் இன்ஸ்பெக்டரை வரவழைத்தார். கௌரியிடம், ''இவருடன் போ. இதற்கான விண்ணப்பத்தை எழுதித் தந்து, லைசன்ஸூம் வாங்கி வைத்துக்கொள்.'' என்று கூறியனுப்பினார்.

**ம**வுண்ட் ரோடைக் கடந்து, ஞானியார் நகரில் புகுந்து, திலகர் ஹால் இருக்கிற வீதியை அவன் அடைந்த போது, என்ன வேடிக்கை! ஆனந்த தேராவே எதிரில் வந்து கொண்டிருந்தார். அவர் பின்னால் ஒரு வயோதிகத் துறவியும் அவருக்கும் பின்னால் நந்தினியும் வந்து கொண்டிருப்பதைக் கண்டான் கௌரி. சாந்தத்துக்கும் தவத்துக்கும் ஒரு பளபளப்பு உண்டென்றால் அது ஆனந்த தேராவைச் சுற்றி ஒளிவீசிக் கொண்டிருந்தது. அவரது துறவுக் கோலமும் நடையில் தென்பட்ட கம்பீரமும் எதிரில் வருவோரின் தலைகளைத் தன்னாலே தாழ வைத்துக் கொண்டிந்தன.

எதிரில், ஆனால் மரியாதையுடன், சிறிது ஒதுங்கிய படி நின்ற கௌரி, ''வணக்கம்,'' என்றான்.

ஆனந்த தேரா கையுயர்த்தி ஆசி வழங்கிவிட்டு, முறுவலுடன் சென்று கொண்டேயிருந்தார். அவனுக்காக நிற்கவில்லை.

பின்னால் வந்த நந்தினியுடன் சேர்ந்து கொண்டான் கௌரி. ''நிற்பதற்கில்லை. சுவாமிகளின் பின்னே போய்க் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது,'' என்று நடந்து கொண்டே சொன்னாள் நந்தினி.

''நானும் வருகிறேன். ரொம்ப அவசரமில்லையே?''

''போகப் போகத்தான் தெரியும். அடுத்த தெருவோடு திரும்பினாலும் திரும்பலாம். இன்னும் ஐந்து மணி நேரம் நடக்க வேண்டியிருந்தாலும் இருக்கலாம்.''

''எதை வேண்டுமானாலும் போடுங்கள். புதிர் மட்டும் வேண்டாம்.'' என்று பரிதாபமாகக் கெஞ்சினான் கௌரி. ''நேற்று சாயந்தரம் உலகநாதனின் உயிருக்கே ஆபத்து வருகிற மாதிரி இருந்தது. நல்ல வேளை தப்பினார். அது சம்பந்தமாக சுவாமிகளிடம் சில விஷயங்கள் பேசலாமென்று வந்திருக்கிறேன்.''

''அடடா!'' என்று உதட்டைக் கடித்தாள் அவள். ''சுவாமிகள் இன்று உணவு அருந்தி முடிகிற வரையில் யாருடனும் பேச மாட்டாரே?''

''எப்போது அருந்துவார்?''

''அதற்காகத்தான் போய்க்கொண்டிருக்கிறார்.''

''யார் வீட்டில் பிட்சை?''

அவன் கேள்வியைக் கேட்டு நந்தினி சிரித்தாள். ''துறவிகளைப் பற்றியும் அவர்களுடைய விரதங்களைப் பற்றியும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது நிறையத் தான் இருக்கிறது.''

மவுண்ட் ரோடில், ஏ.ஜி.'ஸ் அலுவலகத்தைத் தாண்டி ஆனந்த தேராவின் சிறிய ஊர்வலம் சென்று கொண்டிரந்தது. வழி நெடுகப் பலர் அவரை வணங்குகிறார்கள். அவர் கையுயர்த்துவதைத் தவிர வேறெதுவும் பேசாமல் போய்க் கொண்டிருந்தார்.

நந்தினி கூறினாள்: ''ஜைன சந்நியாசிகளும் பௌத்த பிக்குகளும் பல விதமான விரதங்கள் வைத்துக் கொண்டிருப்பார்கள். அவைகளில் பல வேடிக்கையாயும்

திறுக்குத்தனமாயும் பாமரர்களுக்குத் தோன்றும். இன்று சுவாமிகள் மேற்கொண்டிருப்பது அப்படிப்பட்ட ஒரு விரதம்தான்.''

''அதாவது?''

''அபிக்ரா என்ற விரதத்தைப் பற்றித் தெரியுமா?''

''மன்னியுங்கள். தெரியாது.''

''காலையில் வெளியே புறப்படுவார்கள். 'இன்று இத்தனை மணிக்குள். என் கண்ணில் ஒரு குதிரை பட வேண்டும்' என்றோ, அல்லது, ஒரு கோபுரத்தின் உச்சியில் ஒரு புறா உட்கார்ந்திருப்பதைப் பார்க்க வேண்டும்' என்றோ, அல்லது, 'ஒரு வீட்டு வாசலில் சிவப்புக் கொடி பறப்பதைக் காண வேண்டும்' என்றோ சங்கல்பம் செய்து கொள்வார்கள். அப்படிப் பார்த்த பிறகுதான் உணவு. புலன்களை ஒருமுனைப் படுத்துவதற்காக ஏற்பட்டது இந்த அபிக்ரா விரதம்.''

''அப்படி எதுவும் பார்க்க முடியாமல் போயிற்றென்றால்?''

''அன்றைக்கு அவர்கள் சாப்பிட மாட்டார்கள். பட்டினிதான்.''

வியப்பினால் வாய் மூடியவனாகப் பல நிமிடங்கள் பேசாமலேயே நடந்தான் கௌரி. பிறகு வினவினான்: ''அந்த மாதிரி இனறு சுவாமிகள் என்ன சங்கல்பம் எடுத்துக் கொண்டிருக்கிறார்?''

''மஞ்சள் கோடுகள் போட்ட பச்சை நிறப் புடவை அணிந்த ஒரு பெண், கையில் ஒரு கறுப்புப் பெட்டியுடன் ஒரு கட்டிடத்திலிருந்து வருவதைப் பார்க்க வேண்டும் என்று.''

சிரிப்பதா சிந்திப்பதா என்று கௌரிக்குப் புரியவில்லை. கைக் கடியாரத்தைப் பார்த்தான். மணி பத்தரையை நெருங்கிக் கொண்டிருந்தது. தேனாம்பேட்டை எல்டாம்ஸ் சாலையில் அவர்கள் திரும்பிக் கொண்டிருந்தார்கள்.

''சுவாமிகளின் விரதம் நல்லபடி முடியட்டும். மாலையில் நான் மறுபடி வருகிறேன்.'' என்று சொல்லி அத்துடன் நின்று கொண்டான். உலகநாதன் ஆபீசுக்குப் புறப்பட வேண்டிய நேரம் என்பது அவனுக்கு ஞாபகம் வந்தது. இவன் காரை எடுத்து வருவதற்காக ஹாலில் காத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பார்.

''நல்லது,'' என்று விடை கொடுத்து விட்டு, சற்று வேகமாக நடையைப் போட்டு, ஆனந்த தேராவை நெருங்கினாற் போலச் செல்லலானாள் நந்தினி.

எல்டாம்ஸ் சாலையின் முன் பகுதியில் சிறிய கடைகள் தான் நிறைய இருந்தன. சற்று தூரம் சென்றதும் பெரிய வீடுகள் தென்பட்டன. நந்தினியின் கண்கள் இரண்டு புறமும் அலை பாய்ந்தவாறிருந்தன கவலையுடன். மணி ஆக ஆக அவளுக்குப் பதற்றம் ஏற்பட்டது. ஆனால் ஆனந்த தேரா குழப்பமற்றவராக, குழந்தை போன்ற குதூகலத்துடன் நடந்த வண்ணமிருந்தார்.

மௌபரேஸ் சாலையை வெட்டிக் கொண்டு சர் சி.பி. சாலையில் அவர்கள் புகுந்தார்கள். இன்னும் பெரிய பங்களாக்கள் காட்சியளித்தன. காம்பவுண்டுக்கப்பால், தோட்டத்துக்கு உள்ளே வீடுகள் அமைந்திருந்தன.

''சுவாமி! அதோ!'' என்று உற்சாகத்துடன் தெரிவித்தாள் நந்தினி திடீரென.

அவள் சுட்டிக் காட்டிய பங்களாவிலிருந்து ஒரு பெண் வெளிவந்து கொண்டிருந்தாள்.

ஆனந்த தேரா அவளையும் பார்த்துவிட்டு, நந்தினியையும் திரும்பி நோக்கி, 'ஊகூம்' என்பதுபோல் தலையசைத்தார். அவரது நடை தொடர்ந்தது.

பிறகுதான் நந்தினி புரிந்து கொண்டாள். அந்தப் பெண் பச்சைப் புடவை உடுத்திருந்தது உண்மை. ஆனால் கையில் வைத்திருந்த பை கறுப்பு அல்ல.

பக்கிங்ஹாம் கால்வாயைக் கடந்து ராஜா அண்ணா மலைபுரத்தில் நுழைந்தார்கள் அவர்கள். நந்தினிக்குக் கால்கள் வலிக்கத் தொடங்கின.

''அதோ!'' என்று மீண்டும் உற்சாகத்துடன் சொன்னாள் நந்தினி. நிச்சயமாய், இப்போது சுவாமிகளின் நிபந்தனைகள் அத்தனையும் பூர்த்தியாகிவிட்டன என்று அவள் நம்பினாள்.

இல்லை. மறுபடி ஒரு புன்சிரிப்புடன் தலையை அசைத்துவிட்டு நடையைத் தொடர்ந்தார் ஆனந்த தேரா. காரணம், அந்தப் பெண் ஒரு வீட்டிலிருந்து வெளியே வந்து கொண்டிருக்கவில்லை. உள்ளே போய்க் கொண்டிருந்தாள்!

அடையாறை நோக்கி அவர்கள் போகத் தொடங்கிய பேது நந்தினிக்குக் களைப்பு ஏற்பட்டு விட்டது. பயின்று தேர்ந்த துறவியின் இதயத்தை அவள் பெற்றிராததால் சலிப்பு உதித்தது.

அதே வினாடி அவள் தோளை மெல்லத் தொட்டார் ஆனந்த தேரா. அவர் விழிகள் செல்லும் திசையில் அவள் நோக்கினாள்.

ஆச்சரியம் காத்திருந்தது.

## பதினாறு

மாடிக் கைப்பிடிச் சுவர் சில்லென்றுதான் இருந்தது. இன்னும் மும்முரமாக வெய்யில் வராததே காரணம். இருந்தாலும் அதுதான் ஷோபாவுக்கு 'ஃபேவரிட்' இடம்.

கோபம் பாதியும் சலிப்புப் பாதியுமாக, முழங் காலைக் கட்டிக் கொண்டு அவள் உட்கார்ந்திருக்கையில், கீழே டெலிபோன் அடிப்பதும், அப்பா யாருடனோ பேசுவதும் அவள் செவியில் விழுந்தன. சற்றைக்கெல்லாம் ''ஷோபா! ஷோபா! என்னம்மா பண்ணுகிறாய் மாடியில்?'' என்று கீழிருந்தவாறே ரங்கநாதன் குரல் கொடுத்தார்.

''த்ஸு'' என்று முகம் சுளித்தாளேயொழிய ஷோபா பதில் கொடுக்கவில்லை.

ரங்கநாதன் பாதி மாடிப் படிவரை வந்து நின்று கொண்டு, ''ஷோபா! பரங்கிமலையிலிருந்து போன் பண்ணினார்கள். நீ வருவதாகச் சொன்னாயாமே? ஞாபகப் படுத்தச் சொல்கிறார்கள்.'' என்றார்.

''ஊம், ஊம்,'' என்றாள் ஷோபா சுவாரஸ்ய மில்லாமல்.

அன்று கீர்த்திசிங்காவை முதல் தடவை பார்த்து விட்டு வந்த உடனேயே அந்தப் பிரசாரப் புத்தகங்களை வினியோகித்து முடித்து விட்டாள். மோசடி எதுவும் தெரியவில்லை.

பட்டியலில் இரண்டு பகுதிகள் இருந்தன.

ஒன்று, சௌகார் பேட்டையிலிருந்த சேட்டுகளாயும் இன்னொன்று சாந்தோம் பகுதியைச் சேர்ந்த கிறிஸ்தவர் களாயும் இருந்தனர்.

என்னதான் கல்லூரியில் படித்த துணிச்சலுள்ள பெண்ணானாலும் முன் பின் தெரியாதவர்களின் வீடுகளுக்குள் நுழைகிறோமே என்கிற எண்ணம் அவளைத் தயங்க வைக்கவே செய்தது. 'திரிசரண அபிமானிகள் சங்கம்' என்பது என்ன வகையான மோசடி வேலைகளைச் செய்து வருகிறது என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஒன்றுதான் அவளை ஊக்குவித்தக் கொண்டிருந்தது.

அதற்காகவே அவள், வீட்டில் இருந்தபோதும் சரி, பஸ்ஸில் போய்க் கொண்டிருந்த போதும் சரி. அந்தப் பிரசுரங்களை வரி விடாமல் வாசித்தாள். கல்லூரிப் பரீட்சைகளின் போது அதே அளவு சிரத்தையுடன் பாடங்களைப் படித்திருந்தால் ராஜ்யத்திலேயே முதலாவதாகத் தேறியிருக்க முடியும் என்று சிரிப்புக் கூட வந்தது அவளுக்கு. அவ்வளவு அக்கறையாகப் படித்தாள். ஆனால் எல்லாம் போதிசத்வரின் அறவழியைப் போதிப்பதாகவே இருந்தன.

'வரிகளுக்கு இடையிலே கூட ரகசியம் மறைந் திருக்கக் கூடும். என்று கௌரி கூறியது அவளுக்கு நினைவு வரவே, வீட்டில் தனியே இருந்துபோது பூதக் கண்ணாடியை வைத்துக் கொண்டு பரிசோதித்தாள். சந்தேகப்படுகிற மாதிரி எதுவும் புலனாகவில்லை.

அவள் சந்தித்தவர்களில் பெரும்பாலோர் நல்ல மனிதர்களாகவே இருந்தனர். கௌரவமான தொழில் செய்கிறவர்களாயும் கண்ணியமான பதவி வகிப்பவர் களாயும் இருந்ததோடு, உண்மையிலேயே பௌத்த மதம் பற்றித் தெரிந்து கொள்ள ஆவலுள்ளவர்களாகவும் விளங்கினார்கள்.

ஷோபா ஓர் உண்மையைத் தெரிந்து கொண்டாள்.

எடுத்த எடுப்பிலேயே தன் மோசடிகள் தெரியும்படி நடந்து கொள்ளக்கூடிய அளவுக்குக் கீர்த்தி சிங்கா முட்டாளல்ல. ஆகவேதான் நிஜமாகவே நல்ல பேர் வழிகளின் விலாசங்களை முதலில் கொடுத்திருக்கிறார்.

அடுத்த பட்டியலை எச்சரிக்கையாகப் பரிசோதிக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு, ''எல்லாம் வினியோகித்தாயிற்றறு,'' என்ற தகவலைத் 'திரிசரண அபிமானிகள் சங்கத்'துக்குத் தெரியப்படுத்தினாள் டெலி போன் மூலம்.

''அடுத்த பட்டியலும் புத்தகங்களும் தயாரா யிருக்கின்றன. சகோதரி. உன்னை நாளைக் காலை கட்டாயம் வரச் சொல்கிறார் குருநாதர்,'' என்றார் உபாகர்.

''கட்டாயம் வருகிறேன்,'' என்று உறுதி கூறினாள் ஷோபா. இந்த முறை நிச்சயம் ஏதோ பரபரப்பாக நடக்கப் போகிறது என்று அவள் உள்ளுணர்வு கூறியது. அதைக் கௌரிக்குத் தெரிவிக்க வேண்டுமென்று துடித்தாள். ஆனால் இந்த இரண்டு நாட்களாக அவனிடமிருந்து எவ்விதமான செய்தியும் வரவில்லை. அதை எண்ணுகை யில் கோபம் வந்தது.

அன்று 'ப்ளு டைமண்ட்' தியேட்டரில் நடத்திய நாடகத்தின்படி ஒருவரோடொருவர் எவ்விதமான தொடர்பும் கொள்ளக் கூடாது களன்பதை அவள் மறந்துவிட வில்லை. இருந்தாலும் அதற்காக இத்தனை கெடுபிடி தேவையா!சே! என்ன மனிதர்! ராத்திரி பன்னிரண்டு மணிக்கோ விடிகாலை ஐந்து மணிக்கோ ரகசியமாயப் போன் செய்யக் கூடாதா என்ன? இஷ்டமிருந்தால் எது வேண்டுமர்னாலும் செய்யலாம். எவ்வளவோ சாமர்த்தியக் காரர் என்று பீற்றிக் கொள்வாரே, ஏன் மாறு வேடத்தில் வரக்

கூடாது? தாடி மீசைக் கிழவன் மாதிரி, குடுகுடுப்பைக்காரன் மாதிரி, -ஏன், பர்தா அணிந்த பெண் மாதிரி கூட-வேடம் போட்டுக் கொண்டு வரலாம். 'இதுதான் சாக்கு என்று கத்திரித்துக் கொண்டு விட்டார் போலிருக்கிறது!' என்று பொருமினாள் அவள்.

நேற்று தூறலாக இருந்த அவளது கோபம் பெரு மழையாக மாறியது இன்று காலை.

அவளுடைய தோழியொருத்திக்குத் திருமணம். காலை ஆறு மணிக்கு முகூர்த்தம் வைத்திருந்தார்கள். டவுனில் கல்யாணம். பிறகு திரிசரண சங்கத்துக்குப் போக வேண்டியிருக்கு மாதலால், காலையிலேயே போய்த் தலை காட்டி விட்டுத் திரும்பினாள். மணி ஏழு இருக்கும்.

எழும்பூர் சித்திரக் கல்லூரியினருகே டிராபிக் விளக்கின் அனுமதிக்காகக் காரை நிறுத்திக் கொண்டு அவள் காத்திருந்தபோது, பக்கத்திலிருந்த பஸ்ஸைத் தற் செயலாகப் பார்த்தாள். அவள் இதயத்துக்குள் குபீரென்று ஒரு தென்றல் வீசியது.

ஜன்னலோரமாகக் கௌரி உட்கார்ந்திருந்ததே காரணம்.

தன்னையும் மறந்தவளாக, 'ஹலோ' என்று கையை வீசிக் கூவிவிட்டாள்.

ஆனால் அவள் வேறு யாரையோ கூப்பிட்ட மாதிரி கௌரி திரு திருவென்று விழித்துக் கொண்டு சுற்றுமுற்றும் நோக்கினான். பஸ்ஸிலும் அண்டை அருகிலிருந்த கார்களிலும் பல்வேறு பேர், அவள் கூவியதையும் கையை ஆட்டியதையும் கவனித்து விட்டார்கள். யாரையோ தப்பாக

நினைத்துக் கொண்டு அவள் கூப்பிட்டுவிட்டாள் என்று அவர்கள் நினைத்தார்கள் சிலர் கேலியாகப் புன்சிரிப்பும் செய்தனர்.

எல்லாம் அரை நிமிடத்துக்குள்தான். பின்னர் அந்தப் பஸ்ஸூம் அவள் காரும் பிரிந்து விட்டன. ஆனால் ஷோபாவுக்குச் சுருக்கென்றிருந்தது அந்த அவமானம். பேசி வைத்திருந்தபடி, பரஸ்பரம் இருவருடைய நலனையும் மனத்தில் கொண்டு தான் அவன் அப்படிப் பாசாங்கு செய் தான் என்று அவள் மனச் சாட்சிக்குத் தெரிந்த போதிலும் அவளால் தன் கோபத்தை அடக்க முடியவில்லை.

காரை ஷெட்டில் நிறுத்திவிட்டு, சத்தம் வரும்படி யாகவே கதவைச் சாத்திக் கொண்டு மாடிக்குச் சென்று விட்டாள். 'ஹூக்கும்! உலகத்திலில்லா துப்பறியும் மேதை இவர்தான் பிறந்திருக்கிறார்! பேச வேண்டாம். கண்ணால் ஒரு ஜாடை காட்டக் கூடாது?' என்று நினைத்து நினைத்து, உதட்டைக் கடித்தபடி, மாடிக் கைப்பிடிச் சுவரில் அவள் உட்கார்ந்திருந்தபோதுதான் ரங்கநாதன் வந்து, பரங்கி மலைக்குப் போக வேண்டியதைப் பற்றி ஞாபகப் படுத்தினார்.

அப்படியும் கூட ஷோபா அக்கறை காட்டவில்லை.

ரங்கநாதன் பேசாது திரும்பியது. அவளுக்கு வியப்பா யிருந்தது. ஆனால் அவர் அந்த ஜேம்ஸ் பாண்ட் பெட்டியை எடுத்து வரத்தான் போனார். சில நிமிடங்களுக்கெல்லாம் அதை எடுத்துக் கொண்டு திரும்பியவர், ''தப்புக் காரியங்களைச் சீக்கிரம் பிடித்துக் கொள்கிறோம். நல்ல காரியங்களைச் சீக்கிரம் விட்டு விடுகிறோம். சகஜம்தான்... நீ படித்த பெண். உனக்கு அதிகம் சொல்லத் தேவை யில்லை.'' என்றபடி பெட்டியை அவள் முன் நீட்டினார்.

அன்றொரு நாள் அவள், கற்பனையாக, காசி முதலித் தெருவில் நாலாம் நம்பர் என்ற ஒரு விலாசத்தைச் சொல்லப் போய், திரிசரண அபிமானிகள் சங்கத்தில் ஒரு பிரசாரகியாகச் சேரும்படி அப்பா சொன்னதை அவள் இன்றளவும் மறக்கவில்லை. ஏதோ நிர்ப்பந்தத்தின் பேரில்தான் அவர் அப்படிச் சொன்னாரென்று சந்தேகம் ஏற்பட்டு, படிப்படியாய் வளர்ந்து வந்தது. என்ன நிர்ப்பந்தம்?

''ஏற்றுக் கொண்டிருக்கிற வேலையை மனதாரச் செய், ஷோபா,'' என்றார் ரங்கநாதன் மீண்டும்.

கைப்பிடிச் சுவரிலிருந்து இறங்காமலே ஷோபா கேட்டாள்: ''புத்த மத்தில் உங்களுக்கு இவ்வளவு ஆர்வமும் அக்கறையும் உண்டென்று இத்தனை நாள் வரை எனக்குத் தெரியாதே, அப்பா?''

''உன் கிண்டல் எனக்குப் புரிகிறது.'' பின்கை கட்டிய வண்ணம் அந்த மொட்டை மாடியில் குறுக்கும் நெடுக்கும் உலவினார் ரங்கநாதன். ''ஒப்புக் கொள்கிறேன்! ஒரு கட்டாயத்தின் பேரில்தான் உன்னை அங்கே சேரச் சொன்னேன்.''

அவராகவே தொடரட்டுமென்று ஷோபா குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''உனக்குக் கல்யாணம் என்று போலி அழைப்பிதழ் வெளி வந்ததே, அப்போதே தெரியும் எனக்கு ஒரு விரோதி இருக்கிறானென்று. ஆனால் அவன் ஜானகிராமின் மகன் ரவியாக இருப்பானென்று நான் நினைக்கவில்லை.'' மகளின் முகத்தைப் பார்த்துவிட்டுத் தொடர்ந்தார் ரங்கநாதன். ''டவுனில் இருளப்பன் தெருவில் நானும் ஜானகிராம் என்ற சினேகிதரும் ஸ்டேஷனரி கடை

வைத்திருந்ததைப் பற்றி நீ கூட ஒரு நாள் சொன்னாயே, அந்தக் கூட்டாளியைத் தான் சொல்கிறேன். ஜானகிராம் திடீரென்று இறந்த போது... இறந்த போது...''

தான் அன்று செய்ததை எண்ணி அவர் வெட்கப்படுவது எழுதி ஒட்டிய மாதிரி ரங்கநாதனின் முகத்தில் தெரிந்தது. தலை குனிந்தவாறு அவர் சொன்னார்: ''பிஸினஸ் கொஞ்சம் சூடு பிடிக்க ஆரம்பித்திருந்த சமயம் எங்களுக்குள் எழுத்து மூலமாய் ஒப்பந்தம் எதுவும் இருக்கவில்லை. ஆகையால், ஜானகிராம் கொடுத்திருந்த கொஞ்சம் ரூபாயைத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன். என்றேன்... ஜானகிராமின் பையன் ரவி அதை ஒப்புக் கொள்ளவில்லை. பார்ட்னர்ஷிப் தர வேண்டுமென்று பெரிதாய்ச் சண்டை போட்டான். சரி, உன்னாலானதைப் பார்த்துக் கொள் என்று சொல்லி...''

''விரட்டியடித்து விட்டீர்கள்!'' என்று கசப்புடன் சொன்னாள் ஷோபா அவளால் அடக்கிக் கொள்ள முடியவில்லை.

''சரி, அப்படியே வைத்துக் கொள்,'' என்றார் ரங்கநாதன். ''பல வருடங்களுக்கு முன்பு நடந்த கதை இது... அந்த ரவி சொந்த முயற்சியில் ஏதேதோ செய்து முன்னுக்கு வந்துவிட்டான் என்று தெரிகிறது. ஆனால் என்ன பெயரில் எங்கே இருக்கிறானென்று தெரியவில்லை. என் மேல் ஏற்பட்ட ஆத்திரமும் அவனுக்குக் குறையவில்லை. உனக்குக் கல்யாணமென்று அழைப்பிதழ் போட்டவன் அவன்... அதைத் தவிர பல வகையான மொட்டைக் கடிதங்கள்...''

''ஆமாம், எனக்குத் தெரியும்' என்று சொல்ல நினைத்தாள் ஷோபா. சொல்லவில்லை.

''அன்றைக்கு நீ காசி முதலித் தெரு என்று சும்மாவானும் சொன்ன போது, உன் குட்டை உடைப்பதற்காக நானும் வந்தேனில்லையா? அப்பொழுது, ஏதோ உற்சவத்துக்கு வசூல் என்று ஒரு ஆள் நம் வீட்டு வாசலில் வந்து நின்றானே. நினைவிருக்கிறதா? அவன் ரவியின் ஆள்தான். நமக்கு முன்னே காசி முதலித் தெருவுக்கு அவன் வந்திருந்தான். நீ சொன்ன நாலாம் நம்பர் வீட்டு மாடிக்குப் போனேன் பார். அப்போது அந்த ஆள் வந்து மாடிப் படியில் என்னிடம் ஒரு செய்தி சொன்னான்...''

''என்ன சேதி?''

''நீ திரிசரண அபிமானிகள் சங்கத்துக்குப் போய் வருவது ரவிக்குத் தெரியுமாம். அவன் பத்து வருடங்களுக்கு முன்பு பௌத்த மதத்தில் சேர்ந்து விட்டானாம். ஆகவே புத்த மதப் பிரசாரம் போன்ற நல்ல காரியங்களில் நீ ஈடுபட்டிருப்பதால், நம் குடும்பத்தின் விஷயத்தில் இனிமேல் தலையிடப்போவதில்லை என்று அந்த ஆள் மூலம் சொல்லியனுப்பியிருந்தான்...''

ஒரு விதத்தில் ஷோபாவுக்கு ஆறுதலாயிருந்தாலும் ஒரு விதத்தில் சிரிப்பாயும் இருந்தது. 'திரிசரண அபிமானிகள் சங்கம்' என்பது உண்மையான, நேர்மையான ஸ்தாபனம் என்று தவறாக நினைத்திருக்கும் பலரில் இந்த ரவியும் ஒன்றா!

''அப்பாடா! இப்போது தான் உன் முகத்தில் மலர்ச்சி வந்திருக்கிறது. இந்தா, பிடி!' என்று அந்த ஜேம்ஸ் பாண்ட் பெட்டியை அவள் மடியில் வைத்தார் ரங்கநாதன். ''ஷோபா! சொல்வதைக் கேள். யார் செய்த புண்ணியமோ மலை போல் வந்த ஆபத்து, பனிபோல் நீங்கியிருக்கிறது. அதை நீ கெடுத்து விடாதே. உனக்கு இஷ்டமிருந்தாலும்

இல்லாவிட்டாலும் கொஞ்ச நாளைக்கு அந்தச் சங்கத்துக்குப் போய் வந்து கொண்டிரு. பிறகு வேண்டுமானால் விட்டு விடலாம். தயவு பண்ணம்மா, ஷோபா. நம் குடும்ப கௌரவமே உன் கையில் தான் இருக்கிறது...''

அதற்கு மேல் சொல்லத் தேவை இருக்கவில்லை ஷோபாவுக்கு. எழுந்து கொண்டாள்.

தன் சொந்தக் குமுறலை அடியோடு மறந்தாள். மணி ஒன்பதரையாகு முன்பு பரங்கிமலையை அடைந்து விட்டாள், இரண்டாவது தடவை பிரசுரங்களைப் பெறுவதற்காக.

''கீர்த்திசிங்காவிற்கு என்ன தகுதி இருக்கிறதோ இல்லையோ, ஒன்று நிச்சயம் உண்டு,'' என்றார் கீர்த்தி சிங்கா இளமுறுவலுடன். ''என்ன தெரியுமா? ஒரு காரியத்தை அவசரமாக நடத்தியாக வேண்டுமென்றால் அது அவன் மனத்தில் உடனே தோன்றிவிடும். அதனால்தான் நேற்று ஒரு தடவையும் இன்று மறுபடியும் உனக்குச் சேதி அனுப்பினேன்.''

''சொல்லுங்கள்,'' என்றாள் ஷோபா.

கீர்திசிங்கா அவளுடைய பெட்டியை வாங்கிச் சென்று தானே சில புதிய பிரசுரங்களை அதில் அடுக்கி வந்து கொடுத்தார். அவள் போக வேண்டிய இடங்களுக்கான பட்டியலையும் தந்தார்.

''ரொம்ப அவசரம் போலிருக்கிறது?'' என்று கேட்டாள் ஷோபா.

''தர்ம மார்க்கத்துக்க வர வேண்டியது எப்போதுமே அவசரமான விஷயம்தான், மகளே!'' என்று பதில் கூறினார் கீர்த்திசிங்கா. ''இந்தத் தடவை நீ சந்திக்கப் போவது

முற்றிலும் புதியவர்கள். இவர்களை நம் வழிக்கு அழைத்து வர வேண்டியது ரொம்ப முக்கியம் அம்மா. முடியுமானால், இந்தப் பிரசுரங்களை நீயும் படித்து வை. அவர்கள் ஏதாவது கேள்வி கேட்டால் பதில் சொல்வதற்கு உபயோகமா யிருக்கம்...''

''ஏற்கெனவே நான் பலவற்றைப் படித்து விட்டேன் சுவாமி.''

''மெச்ச வேண்டியதுதான் மகளே, உன் முன் யோசனையை. ஆனால் அதேசமயம் உன்னை ஒரு விஷயத்தில் எச்சரிக்கவும் கீர்த்திசிங்கா கடமைப்பட்டிருக்கிறான்.''

''என்ன சுவாமி?''

''நீ பௌத்த மதத்தைச் சேர்ந்தவளா என்று யாரேனும் கேட்டால் ஆமாம் என்று பொய் சொல்லாதே. இந்துதான் என்று தைரியமாகச் சொல்லு. போதி முனிவரின் உபதேசங்களில் உனக்கே இப்போதுதான் நாட்டம் ஏற்பட்டிருப்பதாயும் சொல்லு. நீ மனம் விட்டு உண்மை பேசுவதைக் கேட்டு அவர்களுக்கு இந்த மார்க்கத்தில் மதிப்பும் பற்றும் ஏற்படும்.''

''உண்மையிலே ஒரு நாள் நான் இந்த மார்க்கத்துக்கு வந்துவிடுவேன் என்று எனக்குத் தோன்றுகிறது, ஐயனே,'' என்று மனமறிந்து பொய் சொன்னாள் ஷோபா.

''அது என்றைத் தினம் என்பது கீர்த்திசிங்காவிற்குத் தெரியும். அதுவரை நீ இப்படியே இரு.'' என்று கூறி அனுப்பினார் கீர்த்திசிங்கா.

திரும்பும் போதுதான் அவர் கொடுத்த பட்டியலைப் பார்த்தாள் ஷோபா.

ஆறு பெயர்கள் அதில் இருந்தன. நால்வர் இந்தியர். மற்ற இரண்டும் இந்தியப் பெயராக தெரியவில்லை. ஒன்று சீனர் மாதிரி இருந்தது. மற்றது ஜப்பானியப் பெயர் போல இருந்தது.

முதல் இரண்டு விலாசமும் இந்தியர்களுடையது. அங்க ஒரு விசேடமும் இல்லை. மூன்றாவது-

அந்த முகவரியின் வாசலில், 'கொரியா தோழமைக் கழகம்' என்ற சாதாரணப் பலகை இருந்தது. அனால் அந்த எளிமைக்கு நேர்மாறான படாடோபத்துடன் விளங்கியது உள்ளேயிருந்த பங்களா. ஹாலில் ஒருவர் பேப்பர் படித்துக் கொண்டிருந்தார்.

பட்டியலில் உள்ள கிம் ஸூன் என்பது தாம் தான் என்று சொல்லிக் கொண்டார். ஐம்பது வயதிருக்கும். ஆங்கிலத்தில் சரளமாக உரையாடினார். சீனர்போலிருந்தார்.

''திரிசரண அபிமானிகள் சங்கம் எப்பேர்ப்பட்ட அருமையான பணிகள் செய்து வருகிறார்கள்!...''

திடீரென ஜன்னலுக்கு வெளிப்புறமுள்ள தோட்டத்தில் யாரோ இருவர் உரக்க வாக்குவாதம் செய்வது கேட்டது. கிம்ஸூன் கொஞ்ச நேரம் முகத்தைச் சுளித்துக் கொண்டு அதைக் கவனியாத மாதிரி இருந்தார். ஆனால் வாய்ச் சண்டை வரவர வலுத்தது. எழுந்து சென்று ஜன்னலைத் திறந்து வெளிப் பக்கம் பார்த்ர்.

''நோ! நோ! நிறுத்துங்கள்! ஒருவரையொருவர் கொலையே செய்துவிடுவீர்கள் போலிருக்கிறதே!''

ஷோபா எழுந்து சென்று தானும் எட்டிப் பார்த்தாள்.

யூனிபாரம் அணிந்த கார் டிரைவரும், அரை நிக்கர் மட்டுமே உடுத்திருந்த தோட்டக்காரனும் பலமான

குஸ்தியில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களைப் பிரித்துவிட முயன்ற மற்ற வேலையாட்கள் தாங்களும் ஆளுக்கொரு அடி வாங்கிக் கொண்டு சமாதானத்தை நிலை நாட்டினார்கள்.

''இந்த இரண்டு பேருக்குமே சீட்டுக் கிழித்துவிட வேண்டும்,'' என்று கூறியபடி கிம் ஸூன் திரும்பினார், வேடிக்கையை ரசித்த புன்னகையுடன் தானும் திரும்பிய ஷோபா-

அதென்ன பிரமையா, இல்லை நிஜமாகவே நடைபெற்றதா? அவளால் நிச்சயம் செய்ய முடியவில்லை.

சற்று முன் அவள் வைத்திருந்த பெட்டியினருகே யாரோ வேகமாக வந்துவிட்டுத் திரும்பிய மாதிரி இருந்தது.

## பதினேழு

**உ**ண்மையிலேயே யாரோ வந்துவிட்டுப் போனார்களா என்ன? ஷோபா தடுமாறினாள்.

''ரொம்ப நன்றி மிஸ் ஷோபா,'' என்று கிம்ஸூன் கைகுவித்து விடை கொடுத்தார். பெட்டியைச் சரியாய் மூடுகிற சாக்கில் அதைத் திறந்து பார்த்துக் கொண்டாள். எல்லாம் சரியாய்த்தான் இருந்தது.

அடுத்த விலாசத்தை அடையும் வரையில் அவளுடைய குழப்பம் நீடித்தது. ''யாரும் வரவுமில்லை. பெட்டியைத் தொடவுமில்லை. நாமாகத்தான் கற்பனை செய்து கொண்டோம்...'

ராஜா அண்ணாமலைபுரத்தில் அவள் நுழைந்த அடுத்த இடம், 'கிழக்கித்திய வர்த்தக மன்றம்' என்று பெயர் போட்டிருந்தது. அயல்நாட்டுத் தூதரகம்போல மிடுக்குடன் இருந்தது.

அவள் சந்திக்க வேண்டியவரின் பெயரி சுமாஹிடோ. நடுத்தர வயது. பார்வைக்கு ஜப்பானியர் போலிருந்தார். திக்கித் திக்கித்தான் ஆங்கிலம் பேசினார். ஆனால் முன்னவரைக் காட்டிலும் நிறையச் சிரித்தார்.

''என்னைத் தேடி வருகிறவர்களுக்கு நான் ஒரு தண்டனை கொடுக்காமல் விடுவதில்லை!'' என்றவர், சிரித்துக் கொண்டு, ''பயப்படாதீர்கள். நானே தயாரிக்கும் தேனீரைத்தான் சொல்கிறேன்,'' என்றார்.

''வேண்டாம், இப்போது சாப்பாட்டு நேரம்,'' என்று ஷோபா மறுத்தும்கூட, அவர் உள்ளே சென்று ஐந்து நிமிடத்தில் டீ போட்டு எடுத்து வந்து விட்டார். வேலைக் காரர் எவரையும் கூப்பிடாமல் தானே கோப்பையில் ஊற்றிக் கொடுத்தார்.

''தாங்ஸ்.'' ஷோபா டீயை அருந்தினாள். சர்க்கரை அதிகமென்று தோன்றியது.

தானும் ஒரு கப் அருந்திய சுமாஹிடோ, திடீரென்று ஏதோ எறும்பு கடித்த மாதிரி காலை உதறினார். அப்போது அவர் கையிலிருந்த கோப்பையிலிருந்து சிறிது தேனீர் தெறித்து, ஷோபாவின் புடவையில் கொட்டி விட்டது.

''வெரி ஸாரி, வெரி ஸாரி,'' என்று பதறினார் அவர். 'பரவாயில்லை.'' என்று ஷோபா எவ்வளவு கூறியும் கேளாமல் ''இப்படி வாருங்கள் ப்ளீஸ். குழாயில் கழுவிக் கொள்ளலாம்.'' என்று வருந்தி அழைத்தார்.

அடுத்திருந்த அறையின் வாஷ் பேசினில், புடவையில் டீ கொட்டியிருந்த இடத்தைக் கசக்கிச் சரி செய்துகொண்டு திரும்பியபோது-

இரண்டாம் முறை அதே அதிர்ச்சி ஏற்பட்டது. இப்போதும் யாரோ அவளுடைய பெட்டியினருகே

வந்துவிட்டு வேகமாகத் திரும்பிச் சென்றார்கள். இந்த முறை வந்தவள் ஒரு பெண். கிமோனா உடுத்திருந்தாள். பெட்டியை உள்ளே எடுத்துப்போய்த் திரும்பக் கொண்டு வந்து வைத்தாள் என்பதும் ஷோபாவின் கண்ணில் பட்டுவிட்டது.

அதை அவள் கவனிக்கவில்லை என்பது சுமாஹிடோ வின் எண்ணம். ஒன்றும் நேராத மாதிரி விடை கொடுத்தனுப்பினார்.

ஆனால் ஷோபாவின் மன அமைதி அடியோடு கெட்டு விட்டது. சரியாய்ப் பூட்டுவதுபோல் பெட்டியைத் திறந்து பார்த்தாள். முன்போல் அதே பிரசுரங்களுடன் இருந்தது. ஆனாலும் அவளுக்கு உறுதியாகப் புலப்பட்டது. தான் பார்த்த காட்சி பிரமையல்ல என்று.

புரிகிறது!

இரண்டு இடத்திலும் ஏதோ ஒரு நாடகம் நடத்தி, சில நிமிடங்களுக்கு அவளுடைய கவனத்தைத் திருப்பி யிருக்கிறார்கள். அந்தச் சமயம் பார்த்து அவள் கொண்டு வரும் பெட்டியை எடுத்துப் போயிருக்கிறார்கள். அதே பெட்டியையோ அல்லது அதே போன்ற வேறொரு பெட்டியையோ திரும்பக் கொண்டவந்து வைத்திருக் கிறார்கள்.

வெளியே வந்தாள்.

கையிலிருந்த அந்தச் சாதாரண பெட்டி, நெருப்பு வைத்துவிட்ட வெடி குண்ட போல் தோன்றியது. இதயம் படபடவென்று அடித்தக் கொள்ள, இனம் தெரியாத பீதியொன்று இருள் போலச் சூழ, தெருவுக்கு அவள் வந்த சமயம், இன்னொரு திகைப்பு ஏற்பட்டது.

யார் அந்த பௌத்தத் துறவி? அவருடன் கூட வரும் பெண் யார்? ஏன் ஷோபாவைப் பார்த்ததும் அந்தத் துறவி அந்தப் பெண்ணிடம் ஏதோ கூறிவிட்டுத் திரும்பிச் செல்கிறார்?

அந்தப் பெண் அவளை நோக்கிவந்து, ''நன்றி அம்மா,'' என்றாள் இனிமையாக.

''எதற்கு?'' திகைத்தாள் ஷோபா.

''சுவாமிகளின் விரதம் உன்னால் தான் பூர்த்தியாயிற்று. அவரைப் பற்றி நீ கேள்விப்பட்டிருக்கலாம். ஆனந்த தேரா. நான் அவருடைய காரியதரிசி. நந்தினி.'' என்றாள் அவள்.

நல்லோரைப் பார்த்த மாத்திரத்திலேயே மனத்திலுள்ள சஞ்சலங்கள் மறைந்தொழியும் என்பது உண்மையானால், அந்தக் கணத்தில் ஷோபாவின் உள்ளத்தில் எல்லையற்ற சாந்தி பதிந்ததற்கு அதுவே காரணம் எனலாம். ஆன்ம ஒளியின் பிரகாசத்துடன் மன்னாதி மன்னனாக நடைபோடும் ஆனந்த தேராவை நோக்கி அவள் கைகள் குவிந்தன. அதே சமயம் யாரை அவள் பார்க்கக் கூடாதென்று கீர்த்திசிங்கா தடுத்திருந்தாரோ அவரைப் பார்த்து விட்டோமே என்ற அச்சமும் அவளுள் எழுந்தது.

உடனே திரும்பிவிட எண்ணிய போதிலும், ''என்ன விரதம்? நான் என்ன வகையில் உதவினேன்?'' என்றாள், நந்தினியுடன் கூடவே நடந்தவாறு. நந்தினி சொல்லி முடித்தபின்னர்தான். தன் புடவை பச்சை நிறத்தில் இருப்பதையும் அதில் மஞ்சள் பூக்கள் போடப்பட்டிருப்பதையும் கவனித்தாள். கையிலுள்ள கறுப்பு ஜேம்ஸ்பாண்ட் பெட்டியையும் பார்த்துக் கொண்டவள் ''ஒரு பெரியவருக்கு என்னையறியாமலே உதவி செய்ய நேரிட்டதில் ரொம்ப

சந்தோஷம். வருகிறேன்.'' என்று நந்தினியிடம் சொல்லி விட்டுத் திரும்புகையில்-

சாலையின் மறுபுறத்தில் எதிர்த் திசையில் வந்து கொண்டிருந்த ஒரு பெரிய கார் அவர்களைக் கண்டதும் சட்டென்று நின்றது. பின் ஸீட்டில் யாரும் இருக்கவில்லை. ஓட்டி வந்த டிரைவர் விரைந்து ரோடைக் கடந்து வந்தான். நந்தினியிடம், ''சுவாமிகள் நடந்து போகிறாரே? வண்டி சும்மா தான் போகிறது. நான் கொண்டு போய் விடுகிறேனே?'' என்றான்.

நந்தினி சற்று வேகமாக நடந்து ஆனந்த தேராவை அணுகினாள்: ''ரவியின் கார் டிரைவர் வண்டி வேண்டுமா என்று கேட்கிறான்,'' என்றாள். ஆனந்த தேரா வேண்டா மென்று தலையசைக்கவே, டிரைவர் திரும்பிப் போய் விட்டான். காரும் சென்றுவிட்டது.

இரண்டு மூன்று நிமிடம் தான். ஆனால் 'ரவி' என்ற பெயரி ஷோபாவின் ஆவலை வளர்த்து கால்களுக்கு விலங்கிட்டது. ''யார் அந்த ரவி?'' என்று சாதாரணமாக விசாரிக்கிற மாதிரி கேட்டாள்.

''சுவாமிகளின் சீடர்களில் ஒருவர். இளைஞர். சில வருடங்களுக்கு முன்னால் பௌத்த மத்தில் சேர்ந்தாராம். பாதி நாள் பம்பாயிலும் பாதி நாள் இங்கேயும் இருப்பார். இப்போது இங்கே வந்திருக்கிறார் போலிருக்கிறது.''

பார்வையிலிருந்து மறைந்து கொண்டிருந்த காரை உற்றுப் பார்த்தாள் ஷோபா.

டி என் எக்ஸ் 4356. அதை வைத்துக் கொண்டு விசாரித்தால், மற்ற விவரங்களைக் கண்டு பிடித்து விடலாம்.

அப்பாவால் வஞ்சிக்கப்பட்டவன்-முன்னாள் கூட்டாளியான ஜானகிராமின் மகன்-இந்த ரவியாகத் தான் இருக்க வேண்டும் என்று அவள் உள்ளுணர்வு கூறியது.

இரவு மணி பதினொன்றைத் தாண்டிவிட்டது.

ஸிமெனான் நாவலில் முக்கால் பகுதியை முடித்து, ரொம்பச் சுவாரஸ்யமான கட்டத்தை அடைந்திருந்தாள் ஷோபா.

ஹாலில் டெலிபோன் மணி ஒலித்தது.

அப்பா விழித்துக் கொண்டிருப்பார், போனை எடுப்பார் என்று முதலில் எண்ணினாள். ஆனால் மணி இடைவிடாமல் ஒலித்தது. ரங்கநாதன் மாடிக்குப் படுக்கப் போய்விட்டார் போலிருக்கிறது. புத்தகத்தைக் குப்புறக் கவிழ்த்துவிட்டு, ஹால் விளக்கைப் போட்டு விட்டு ரிஸீவரை எடுத்தாள்.

''ஷோபா!'' என்ற கிசுகிசுத்த குரலைக் கேட்டதுமே அவளுக்குப் பரவசத்தால் இதயம் நிறைந்தது. ஆனால் உணர்ச்சியை மறைத்துக் கொண்டு, ''எஸ்!'' என்றாள்.

''நான்தான் ஜீ ஒ டபிள்யூ ஆர் ஐ பேசுகிறேன்.''

''ஜீ ஒ டபிள்யூ ஆர் ஐ?'' என்று ஒவ்வோர் எழுத்தாகத் திருப்பிச் சொன்னவள் ''ஓகோ, ராமசாமியா? என்ன சார் விஷயம்?'' என்றாள்.

''ஏய்! ஜீ ஒ டபிள்யூ ஆர் ஐ என்றேன்.''

''அடடே! ஜீ ஒ டபிள்யூ வா? நான் ஜீ ஈ டபிள்யூ என்று நினைத்துவிட்டேன்! என்ன மிஸ்டர் பத்மனாபன், சௌக்கியம்தானா?''

''வருகிற கோபத்துக்கு இந்த டெலிபோனாலேயே இரண்டு போடுவேன். தெரியுமா?'' என்றான் கௌரி. ''யார் பேசுவது என்று நிஜமாகவே உனக்குத் தெரியவில்லை?''

''ஐயோ, அதை ஏன் கேட்கிறீர்கள? எனக்குத் திடீர் திடீரென்று இந்த மாதிரி ஆகிவிடுகிறது. சில பேருக்குப் பஸ்ஸிலே போகும்போது பக்கத்திலே ஒருவர் காரிலேயிருந்து கூப்பிட்டால் கண் தெரியாமல், காது கேட்காமல், ஞாபகம் வராமல் போய்விடுகிறதில்லையா? அதே மாதிரி எனக்கு அடிக்கடி ஸ்பெல்லிங் மறந்து போய்விடுகிறது!''

''உனக்கு முதுகிலே கண் இருந்தால் என்மீது இவ்வளவு கோபம் வந்திருக்காது,'' என்று கௌரி சிரித்தான்.

''ஏன்?''

''சித்திரக் கல்லூரி ஸ்டாப்பிங்கின் அருகில் நடந்ததைத்தானே சொல்கிறாய்? உன் காருக்குப் பின்னாலேயே ஒரு மோட்டார்பைக் ஆள் இருந்தான். திரிசரண அபிமானிகள் சங்கத்தின் ஆள் அவன். உன்னைக் கண்காணிப்பதற்காகவே உன் பின்னால் வந்து கொண்டிருக்கிறான். ஆகவேதான் நான் உன்னைத் தெரிந்த மாதிரி காட்டிக் கொள்ளவில்லை. இப்போதும்கூட ரொம்ப ஜாக்கிரதையுடன் என் வீட்டை விட்டு ஒரு மைல் தூரம் வந்து, மணி பதினொன்றேகால் ஆகும்போது உன்னைக் கூப்பிடுகிறேனே.. இதுவும் உன் நன்மைக்காகத்தான். என்னைப் புரிந்துகொள்ளவில்லையா, ஷோபா?''

ஷோபாவுக்கு நெகிழ்ச்சி ஏற்பட்டுவிட்டது. அவனுடைய அக்கறையைக் கேட்டதும். ''மன்னித்துக் கொள்ளுங்கள். சும்மா விளையாட்டுக்குக் கோபித்துக் கொண்டேன். ஸாரி,'' என்றாள்.

''லவ் ஸ்டோரி நாவல் படித்திருக்கிறாயா?''

''ஓ!''

''ஸாரி என்று ஒரு போதும் சொல்லத் தேவையில்லாததன் பெயர் தான் லவ் என்று அதில் ஒரு பிரபல வாசகம் வரும்.'' என்றான் கௌரி. ''அது போகட்டும். நடு ராத்திரியில் உன்னைக் கூப்பிட்டதற்குக் காரணம், ஆங்கில நாவல் இலக்கியம் பற்றி விவாதிப்பதற்காக அல்ல. இன்றைக்குப் பிரசார புத்தகங்களை வினியோகம் செய்யப் போயிருப்பாயே, அதைப் பற்றித் தெரிந்துகொள்ளத்தான் கூப்பிட்டேன். எங்கெங்கே போயிருந்தாய்? என்னென்ன நேர்ந்தது? க்விக்!''

''கௌரி! உங்களிடம் பல விஷயம் சொல்ல வேண்டும். டெலிபோனில் பேசலாமா? கொஞ்சம் இருங்கள்...'' போனை வைத்துவிட்டு, ஹாலின் இரண்டு புறமுமிருந்த ஜன்னல்களின் வழியே வெளிப்புறம் நோட்டம் விட்டாள். மினுமினுவென்று எரிந்து கொண்டிருந்த நட்சத்திரங்களின் ஒளியில், யாருமே தோட்டத்தில் கிடையாது போலவும் இருந்தது. ஒவ்வொரு செடி ஒவ்வொரு மரத்தின் பின்னேயும் ஒவ்வொரு பகைவன் ஒளிந்து கொண்டிருப்பது போலவும் இருந்தது. கதவுகளைச் சாத்திவிட்டுத் திரும்பி வந்து.

''அங்கேயும் யாரும் இல்லையே? பார்த்துக் கொண்டீர்களா?'' என்று கேட்டாள்.

''இல்லை. சொல்லு.''

கிம்ஸனின் வீட்டிலும் சுமாஹிடோவின் வீட்டிலும் தனக்கு நேரிட்ட அனுபவங்களைக் கிடுகிடுவென்று தாழ்ந்த குரலில் விவரித்து முடித்தாள் ஷோபா.

''நிச்சயமாய்த்தான் சொல்கிறாயா? அல்லது நீயாகக் கற்பனை செய்து கொண்டதா?'' என்று கேட்டான் கௌரி.

''இல்லை, கௌரி. நிச்சயமாயப் பார்த்தேன். கிம்ஸ-ஒன் வீட்டிலாவது கொஞ்சம் சந்தேகம் உண்டு. சுமாஹிடோ விஷயத்தில் நிச்சயம்.''

கௌரி சிறிது பேசாமலிருந்தான். பின்னர், ''அப்புறம்?'' என்று கேட்டான்.

சுமாஹிடோவைப் பார்த்துவிட்டு வந்தபோது தற்செயலாய் அந்த ஆனந்த தேராவையும் பார்த்தேன் நந்தினி என்ற செகரட்டரியையும் பார்த்தேன். ஆனந்ததேராவின் விரதத்தை முடித்து வைத்துப் புண்ணியம் கட்டிக் கொண்டேன்.'' என்று ஷோபா அந்தச் சந்திப்பைச் சொன்னதும் கௌரி உற்சாகத்துடன் பேசினான்:

''மன உறுதியுடன் ஒரு காரியத்தை மேற்கொண்டால் அதற்குக் கடவுளின் துணை இருக்கும் என்பது எவ்வளவு உண்மை பார். ஷோபா! இன்று காலை அப்படியொரு விரதம் எடுத்துக்கொண்டு அவர் வெளியே புறப்பட்டபோது நானும் அங்கே இருந்தேன். 'என்ன பித்துக்குளித்தனமான விரதம் இது! நிறைவேறுமா!' என்று எண்ணிக் கொண்டேன். ஆனால் என்ன அருமையாய் அது நிறைவேறி இருக்கிறது! இருந்தாலும் ஷோபா...''

''என்ன கௌரி?''

''அவர்களுடன் நீ அதிகமாய்ப் பேசவில்லையே?''

''இல்லையில்லை. மரியாதைக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு உடனே போய்விட்டேன். கீர்த்திசிங்காவை மறந்துவிடவில்லை.''

''நல்லது. அப்புறம்?''

''அப்புறம்-'' ஏதோ சொல்ல வாயெடுத்தவள் நிறுத்திக் கொண்டாள்.

''சொல்லு.''

''ஒன்றுமில்லை.'' ஷோபா உதட்டைக் கடித்துக் கொண்டாள். அப்பாவின் தனிப்பட்ட விரோதியான ரவி என்பவனைப் பற்றியும். அவனுடைய கார் நம்பரைத் தெரிந்து கொண்டதைப் பற்றியும் கௌரியிடம் சொல்ல அவள் மனம் துடித்தது. சொன்னால், கார் நம்பரைக் கொண்ட விலாசத்தைக் கண்டுபிடிக்கக் கூட கௌரி உதவக்கூடும். ஆனால் அதைப் பற்றி எதுவும் சொல்லாமல் அடக்கிக் கொண்டாள். இதே போல் முன்பொரு முறை அப்பாவைப் பற்றிச் சொல்லிவிட நினைத்ததும், அந்தச் சமயம் பார்த்து உலகநாதனின் பெருந்தன்மையைக் குறித்து கௌரி பெருமையுடன் பேசவே, தந்தையைப் பற்றி அவன் மட்டமாக நினைத்துவிடக் கூடாதென்று எதுவும் சொல்லாமலே இருந்துவிட்டதும் அவளுக்கு நினைவு வந்தது. 'இல்லை' இது என்னுடைய சொந்தப் பிரசினை. நான், என் அப்பா, ரவி மூன்று பேருக்கிடையில் மட்டுமே உள்ள தனிப் பட்ட பூசல். இதில் கௌரியை இழுப்பது சரியில்லை. நானே ஒன்றியாகச் சமாளிக்க வேண்டிய விஷயம்...''

''ஷோபா! ஆர் யூ தேர்?'' என்று மறுபடி குரல் கொடுத்தான் கௌரி.

''இருக்கிறேன். சொல்லுங்கள்.''

''நீதான் ஏதோ சொல்ல வந்து சொல்லாமல் இருந்துவிட்டாய்.''

''அதுவா... நான் அடுத்தபடி என்ன செய்ய வேண்டும் என்று கேட்க நினைத்தேன்... அந்தத் திரிசரண

சமாசாரங்களை நான் பாட்டுக்குப் பேசமல் டிஸ்ட்ரிப்யூட் பண்ணிக் கொண்டே போக வேண்டியதுதானா?''

''உன்னிடம் கொடுத்திருக்கும் பட்டியலில் இன்னும் நாலு பேர் பாக்கி இருக்கிறார்கள் இல்லையா?''

''இருக்கிறார்கள்.''

''அவர்களில் அயல்நாட்டுக்காரர் யாரும் இல்லையா?''

''பெயர்களைப் பார்த்தால் எல்லாருமே இந்தியர் மாதிரி தானே தோன்றுகிறார்கள். பார்த்துவிட்டுச் சொல்கிறேன். இருங்கள்.'' என்றவள் கைப்பையிலிருந்து அந்தக் காகிதத்தை மறுபடி ஒரு தடவை பார்த்துக் கொண்டாள். ஒரு பெயர் சந்தேகத்தை உண்டாக்கியது. ''இதில் ராம்புத்ரா என்று ஒரு பெயர் இருக்கிறது. வடக்கத்தியர் என்று நினைக்கிறேன்.'' என்றாள்.

''இல்லை. தாய்லந்துக்காரர் அல்லது இந்தோனேசியாக்காரராகவும் இருக்கக் கூடும்,'' என்றான கௌரி. ''எதுவானாலும் அந்த நாலு பேரைப் பார்க்கச் செல்லும் போது, இன்னும் எச்சரிக்கையாக இரு. பெட்டியைக் கீழே வைக்கவே வேண்டாம். அப்படியே வைத்தாலும் அதைவிட்டு ஓரடி கூட அந்தண்டை இந்தண்டை நகராதே!''

''சரி,'' என்றாள் ஷேபா.

''ஆனால்-''

''என்ன?''

''அவர்களுடைய தந்திரங்களில் நீ ஏமாறவில்லை என்றதும் பலவந்தமாக உன்னை அப்புறப்படுத்த நினைத்தால்... உனக்கு ஆபத்து விளைவிக்க முயன்றால்...''

''வருவது வரட்டும்,'' என்றாள் ஷோபா.

## பதினெட்டு

அன்று காலை முதலே செங்கமலத்தின் முகத்தில் கவலையும் வருத்தமும் படர்ந்திருந்தன.

காரில் ஒரு ரிப்பேரைக் கவனிப்பதற்காக ஒரு மெகானிக்கை அழைத்து வந்து அவனுடன் இத்தனை நேரமும் உயிரை விட்டுக் கொண்டிருந்தான் கௌரி. வேலை முடிந்து விட்டது. மெக்கானிக்குக்குப் பணம் கொடுத்தனுப்ப வேண்டியிருந்ததால் எஜமானியம்மாளிடம் வந்தவன், அவளுடைய மன நிலையைக் கண்டதும், அப்புறம் தருவதாகச் சொல்லி அனுப்பிவிட்டான். செங்கமலத்தின் வருத்தத்துக்கு என்ன காரணமென்று அவனுக்குத் தெரியும்.

கொஞ்சம் முன்னால் ''பம்பாயிலிருந்து என் பெரியப்பா எழுதியிருக்கிறார்...'' என்று செங்கமலம் ஆரம்பித்தவுடனேயே உலகநாதனின் முகம் கறுத்து விட்டது.

கௌரி, ஸ்டீல் பீரோவின் கதவில், இல்லாத அழுக்கைத் துடைப்பதில் ரொம்பக் கவனமாயிருந்தான்.

''பெரியப்பா பெண்ணுக்குக் கல்யாணமாம். கட்டாயம் உங்களையும் என்னையும் வரச் சொல்லிப் பத்திரிகையும் கடிதமும் அனுப்பியிருக்கிறார்'' என்று செங்கமலம் ஒருவழியாய்ச் சொல்லி முடித்தாள்.

''நீ போய்விட்டு வா. எனக்கொன்றும் ஆட்சேப மில்லை,'' என்றார் உலகநாதன் கண்டிப்புடன். அது கௌரி எதிர்பார்த்தது தான். இருபது இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு நடந்த திருமணத்தின்போது மாப்பிள்ளையான தன்னை மாமனார் வீட்டார் போதுமானபடி கௌரவிக்க

வில்லை என்று உலகநாதனுக்குக் கோபம் வந்ததாம். அது பிற்பாடு மறையவேயில்லையாம். அவன் கேள்விப் பட்டிருக்கிறான்.

''இப்படிச் சொன்னால் எப்படிங்க?'' என்று கெஞ்சும் குரலில் கேட்டுப் பார்த்தாள் செங்கமலம்.

உலகநாதன் மசியவில்லை. ''கௌரி! வண்டியை எடு! எனக்கு வெளியே போகணும்!'' என்று சொல்லிவிட்டார்.

உலகநாதனை அவருடைய ஆபீசில் விட்டு விட்டு, இடை வேளைச் சாப்பாட்டுக்காக கௌரி வீடு திரும்பிய போது வீடு வெறிச்சென்றிருந்தது. சமையல்காரன், ''ஆமாம்! எஜமானியம்மாளே சாப்பாடு வேண்டாம் என்று சொல்லிவிட்டு ரூமுக்குப் போய் விட்டார்கள். நீ வந்து விட்டாயாக்கும். நாக்கை முழ நீளம் நீட்டிக்கொண்டு!'' என்றான்.

கௌரிக்குச் சங்கடமாயிருந்தது. கணவன்-மனைவியின் பூசலில் தலையிடுவது தவறு... இருந்தாலும் அப்பாவியான செங்கமலம் பட்டினி கிடப்பது அவனால் பொறுக்க முடியவில்லை. அவளுடைய அறைக்குப் போனான்.

''ஒன் டூ த்ரீ என்று பத்துவரை எண்ணுவேன். அண்ணி! அதற்குள் நீங்கள் எழுந்து சாப்பிட வர வேண்டும். இல்லையோ...''

''இல்லையென்றால் என்ன பண்ணுவாயாம்?''

''இருபது வரை எண்ணுவேன்!''

''நீ ஒன்றும் இங்கே ஜோக் அடிக்க வேண்டாம்!' என்றாள் செங்கமலம்.

அவள் கவனததை இன்னும் கொஞ்சம் மாற்ற எண்ணி, ''நேற்று குறளகம் போயிருந்தீர்களே, அண்ணி? ஏதாவது டாய்ஸ் வாங்காமல் வந்திருக்க மாட்டீர்களே?'' என்று அறையைச் சுற்று முற்றும் பார்த்தான்.

மேஜை மீது, பூச்சாடியில் செருகப்பட்டிருந்த பூ!

அது கல்ப புஷ்பம் என்று கண்டபோது சிறிது திக்கென்றிருந்தது. அவனையும் அறியாமல் அதனிடம் ஒரு பயபக்தி ஏற்பட்டிருந்ததால், அதைக் கண்டபடி பறித்து அலங்காரப் பொருளாக்குவதை அவன் மனம் ஒப்பவில்லை.

''ஏன் அண்ணி, இந்தப் பூவைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? கல்ப புஷ்பம் என்று பெயர். இதை இஷ்டப்படி போட்டு வைக்கக்கூடாது...'' என்று அவன் சொன்னதும், செங்கமலம் எழுந்து வந்தாள் படுக்கையிலிருந்து.

''ஆமாம்! உலகத்திலே இல்லாத அதிசயப் பூ! தோட்டத்தில், பைப்புக்குப் பக்கத்தில் வீணாய்ப் பூத்துக் கிடக்கிறதே என்று பறித்து வந்தேன்,'' என்றாள்.

கௌரியின் புருவங்கள் சுருங்கின.

''பைப்புக்குப் பக்கத்திலா! தப்பாய்ச் சொல்லுகிறீர்கள், அண்ணி! கிழக்குப் பக்கத்துக் காம்பவுண்டுச் சுவரை ஒட்டினாற் போல் அல்லவா குழாய் இருக்கிறது?''

''இருக்கட்டுமே? அங்கே தான் அந்தச் செடியும் இருக்கிறது என்கிறேன்.''

''இல்லை, அண்ணி. இருக்க முடியாது. நீங்கள் ஞாபகம் பிசகாய்ச் சொல்கிறீர்கள்!''

''ஆமாம்பா! இந்தப் பங்களாவில் நான் குடியேறி வருடம் பதினைந்தாகிறது. தோட்டத்திலே எந்த இடத்தில்

பைப் இருக்கிறது என்றுகூட எனக்குத் தெரியாது! அப்படித்தானே?''

''அதென்னவோ, நான் பார்த்தால்தான் நம்புவேன். கொஞ்சம் தோட்டத்துக்கு வாருங்கள். எந்தச் செடியிலிருந்து இதைப் பறித்தீர்கள், காட்டுங்கள்.''

செங்கமலத்துக்குத் தன் சொந்தத் துயரம் மறந்து விட்டது. பந்தயத்தில் கலந்து கொள்ளும் குழந்தையைப் போல், வெற்றியில் நம்பிக்கையுடன் உடனே அவனுடன் புறப்பட்டாள்.

''இதோ அண்ணி! இந்தச் செடியைத் தானே சொன்னீர்கள்?'' என்று தென் கிழக்கு மூலையில் வளர்ந்திருந்த செடியையும் பிறகு மறு.கோடியில் இருந்த செடியையும் காட்டினான் கௌரி.

''இல்லை,'' என்று இரு முறையும் வலுவாகத் தலையசைத்தாள் செங்கமலம். ''நான் சொன்ன செடி இது தான்,'' என்று குழாயினருகே வளர்ந்திருந்த செடியை-கல்ப புஷ்பச் செடியை- காட்டினாள்.

மூன்றாவது திசையில், மூன்றாவது கல்ப புஷ்பம்! கௌரிக்குத் திகில் பிறந்தது.

தன்னிடம் உடனே வந்து சொல்லுமாறு ஆனந்த தேரா சொல்லியிருந்தது அவனுக்கு நினைவு வந்தது. ஆனால் அதைக் காட்டிலும் முக்கியமாக, உலகநாதனை எச்சரிக்க வேண்டுமென்று தோன்றியது.

''அண்ணி! நீங்கள் பிடிவாதம் பிடிக்காமல் சாப்பிடப் போங்கள். நான் சாரைப் பார்த்துவிட்டு வருகிறேன். ரொம்பத் தலை போகிற விஷயம்!'' என்று அவசர அவசர மாகச் சொல்லிவிட்டு, உலகநாதனின் அலுவலகத்துக்குப் பறந்தான்.

ஆனால், பிற்பகல் தேனீர் அருந்திவிட்டுச் சற்று ஓய்வாக இருந்த அவர், இவனுடைய எச்சரிக்கையைப் பொருட்படுத்துவதாகக் காணோம்.

''சார், அவர்கள் சொன்னபடியே எல்லாம் நடக்கிறது! புத்த அவதாரம் என்பது நிஜமான விஷயம் தான். உங்களுக்கு முன்னைக் காட்டிலும் ஆபத்து அதிகரிக்கிறதென்று பயமாயிருக்கிறது...'' என்று கௌரி பதறப் பதற அவர் அமைதியாக இருந்தார்.

''கௌரி! என் தம்பியின் மரணம் என்னைப் பாதித்ததைக் காட்டிலும் அதிகமாக உன்னைப் பாதித்திருக்கிறது. இல்லாவிட்டால் அந்தக் கட்டுக் கதையில் இப்படி நம்பிக்கை வைக்கமாட்டாய்!'' என்றார்.

''சரி, சார். கட்டுக் கதையாகவே இருக்கட்டும். விஷப் பரீட்சை எதற்கு? இதைச் சாக்காக வைத்தாவது கொஞ்ச நாளைக்கு நீங்கள் வெளியூரில் போய் இருங்களேன். பம்பாய்க்குப் போகலாமே! அண்ணியையும் சந்தோஷப் படுத்திய மாதிரி இருக்கும்.''

''நத்திங் டூயிங்!'' என்று திட்டவட்டமாக மறுத்து விட்டு, ஃபைல்களைக் கையிலெடுத்துக் கொண்டு விட்டார் உலகநாதன்.

மூன்றாவது செடி முளைத்து, மூன்றாவது திசையில் மூன்றாவது கல்ப புஷ்பமும் பூத்திருக்கும் அதிசயத்தை — ஆபத்தை? — யாரிடம் சொல்வது? அவனுடைய பரபரப்பையும் தவிப்பையும் உள்ளபடி உணர்ந்து, பங்கு கொள்ளக் கூடியவர் யார் இருக்கிறார்கள்?

ஷோபா ஒருத்திதான்.

அவனது அச்சங்களை மெய்யானவையென நம்பக் கூடியவர் வேறு எவரும் கிடையாது. போலீஸ் அஸிஸ்டெண்ட் கமிஷனர் மணிவண்ணனே, ஒரு பொம்மை வெடி குண்டைத் தூக்கிக் கொடுத்துவிட்டு, 'இனி மேல் உன் சமர்த்து!' என்று கையைக் கழுவிக் கொண்டு விட்டாரே?

ஷோபாதான் மிஞ்சியிருக்கிறாள். ''என் மனத்துக்குப் பிரியமான ஷோபா... அவள் கண்களைச் சந்தித்த மாத்திரத்தில் என் கவலைகள் பறக்கின்றனவே! என்ன அபூர்வ சக்தி அவளிடம் இருக்கிறது!' என்று எண்ணிக் கொண்டான் அவன்.

ஆனால் அவளைக் கூடுமான வரையில் சந்திக்கக் கூடாது என்று உறுதி கொண்டிருப்பதும் அவனுக்கு ஞாபகம் வந்தது. டெலிபோனில் கூப்பிடவும் மனமில்லை. இந்நேரம் அவள் திரிசரண அபிமானிகள் சங்கத்தின் பிரசுரங்களுடன் வெளியே சென்றிருக்கவும் கூடும். எதற்கும் ஒரு முறை நேரில் போய், அவள் வீட்டுக்கருகே வட்டமிட்டால் ஒரு வேளை...

ஷோபாவின் வீடு இருந்த தெரு எவ்வளவுக் கெவ்வளவு வெறிச்சோடிக் காணப்பட்டதோ, அவ்வளவுக் கவ்வளவு, சிந்தனைகள் குறுக்கும் நெடுக்கும் ஓடச் சந்தடி மிகுந்ததாயிருந்தது அவன் மனம். சம்பந்த மில்லாதவனைப் போல் அவள் வீட்டைத் தாண்டிக் கொண்டு சென்றான். ஷோபா கண்ணில் படவில்லை. மறுபடியும் ஒரு முறை கடந்து, தெருவின் மறுகோடிக்கு வந்தான்.

வெற்றிலைப் பாக்கு கடையில் சோடா வாங்கிக் குடித்துத் தாகத்தைத் தணித்தபடி வேறென்ன செய்யலாம்

என்று அவன் யோசித்துக் கொண்டிருந்தபோது, ஓர் ஆள்-வேலைக்காரன் போல் தலைப்பாகை கட்டிக் கொண்டிருந்தவன்-அவனை நெருங்கி வந்து, ''அம்மா உங்களைக் கூட்டி வரச் சொன்னாங்க,'' என்றான்.

திகைத்தான் கௌரி. ''எந்த அம்மா?''

''சின்ன எஜமானிதாங்க-ஷோபாம்மா. நீங்க வீட்டு வாசலோடு போறதைப் பார்த்தாங்காளம்.''

'அட, பரவாயில்லையே!' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டு அவனுடன் புறப்பட்டான் கௌரி. அதே வினாடியில் இன்னொன்றும் கவனித்தான்.

நெடு நேரமாக அந்தக் கடை வாசலில் ஒரு சைக்கிளில் சாய்ந்தாற் போல் நின்றபடி சிகரெட் புகைத்துக் கொண்டிருந்த ஓர் இளைஞன், சைக்கிளில் தாவியேறி வேகமாகச் செல்கிறானே, ஏன்? அவனுடைய முகம் ஓரளவே தெரிந்ததென்றாலும் அதை எங்கோ...ஞாபகம் வந்து விட்டது. அன்று சித்திரக் கல்லூரியினருகே, ஷோபாவின் காருக்குப் பின்னால் மோட்டார் சைக்கிளிலிருந்த அதே ஆசாமிதான் இவன்... திரிசரண அபிமானிகள் சங்கத்தின் ஆள்... ஷோபாவைக் கௌரி சந்திக்கும் விஷயம் காதில் விழுந்து விட்டதால் அதைத் தெரிவிப்பதற்காகப் பறக்கிறான் இப்போது.

ஷோபாவை இந்த நிலையில் பார்க்காமலே இருந்துவிட்டாலென்ன என்று தோன்றியது கௌரிக்கு. ஆனால் இவ்வளவுக்குப் பிறகு இனி மேல் பார்க்காமலே போவதில் லாபமில்லை. அத்துடன் ஷோபா ஏதாவது முக்கியமான வேலையாக அழைத்திருக்கிறாளோ என்னவோ? எப்படித் தெரியும்?

வீட்டுக்குள் நுழைந்தான், ''அதோ அந்த ரூமில் இருக்கிறாங்க, என்று காட்டிவிட்டு வேலைக்காரன் போய் விட்டான்.

''வாப்பா,'' என்ற குரல் அவனை வரவேற்றது.

ஷோபா அல்ல. ஷோபாவின் அப்பா ரங்கநாதன்.

''ஷோபா...''

''இல்லை. வெளியே போயிருக்கிறாள். நீ இரண்டு மூன்று தரம் இந்த வீட்டைப் பார்த்தபடியே போய்க் கொண்டிருப்பதைக் கவனித்து, நான்தான் கூப்பிட்டனுப்பி னேன்,'' என்றார் ரங்கநாதன். ''உட்கார் இப்படி. உன்னுடன் கொஞ்சம் பேச வேண்டும்.''

''பரவாயில்லை சார். நான் கேவலம் ஒரு கார் டிரைவர். உங்களைப் போன்ற பெரியவர்களுக்குச் சமமாக உட்கார்ந்து கொள்வது மரியாதையில்லை.'' என்றான் கௌரி.

அவனுடைய பேச்சுக்குக் கை மேல் பலனாக, ரங்கநாதனின் முகத்திலிருந்த கடினம் சற்றுக் குறைந்தது. லேசாகப் புன்னகை மலர்ந்த மாதிரி தோன்றியது. 'நான் கூப்பிட்டால் வருவாயோ மாட்டாயோ என்று தான் ஷோபாவின் பெயரைச் சொல்லியனுப்பினேன். அவளைப் பார்க்கத் தானே தெருவில் இப்படியும் அப்படியும் நீ போய்க் கொண்டிருந்தாய்?''

''ஆமாம், சார்.''

''நல்லது. நீ இந்த தெருவுக்கு வருவது இது கடைசித் தடவையாக இருக்கட்டும். புரிகிறதா? பார்த்தால் நல்ல பிள்ளையாக இருக்கிறாய். ஆனால் நீ செய்வதெல்லாம்

விபரீதமான விஷயங்கள். ஷோபா குழந்தை. ஒன்றும் தெரியாதவள். அவளையும் ஏன் இழுக்கிறாய்? விட்டு விடு.''

கௌரி பதிலொன்றும் சொல்லாமல், அவர் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றான். ரங்கநாதன் தொடர்ந்தார். ''நீ உன் முதலாளியின் தம்பி எப்படி இறந்து போனான் என்பதைக் கண்டு பிடிப்பதில் முனைந்திருக்கிறாய். ரொம்பப் பாராட்ட வேண்டிய விஷயம் தான். ஆனால் அதிலே ஷோபாவுக்கு என்ன சம்பந்தம்? நாளைக்கே கல்யாணம் பண்ண வேண்டிய பெண். ஒரு கெட்ட பெயர் வந்தால் நீயா காப்பாற்றுவாய்?''

''அப்படி எதுவும் வராது, சார்,'' என்றான் கௌரி. அவளுடைய கல்யாணத்தைப் பற்றிப் பேச இந்த மனிதர் யார் என்ற கோபம் வந்தது அவனுக்கு.

''அல்லது, ஷோபாவின் உயிருக்கே ஆபத்து வருகிறது என்று வைத்துக் கொள்...''

''என் உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றுவேன், சார்.''

''அம்பிகாவதி காலந்தொட்டு எல்லாப் பிள்ளைகளும் சொல்கிற வார்த்தை இது!'' ஏளனமாகச் சிரித்தார் ரங்கநாதன். ''சுருக்கமாயச் சொல்கிறேன். இனிமேல் இந்தப் பக்கம் வராதே. சரிதானா?''

**வீ**ட்டுக்குத் திரும்பியபோது கௌரியின் ஆர்வம் ஐந்நூறடி ஆழத்துக்கு இறங்கியிருந்தது. ஷோபாவைப் பார்க்க முடியாமல் போனதோடு மட்டுமில்லாமல், அவள் அப்பாவின் கண்டிப்பு வேறே அவன் மனத்தைத் தளர வைத்திருந்தது. ஆனால் வீட்டை அடைகிற வரையில்தான்.

காம்பவுண்டுக்குள் நுழையும் போதே, ''கௌரி! சமயம் பார்த்து எங்கேடா போய் விட்டாய்?'' என்ற உலகநாதனின் உற்சாகமான குரல் அவனை வரவேற்றது. அவர் முகத்தில் சுறுசுறுப்புக் கூத்தாடிக் கொண்டிருந்தது.

''ஏன் சார்... என்ன விஷயம்?'' என்றான்.

''ஏர்போர்ட்டுக்குப் போய்ப் பம்பாய்க்கு ரிசர்வேஷன் செய்து விட்டு வா, எனக்கும் உன் அண்ணிக்கும்!'' என்றார் அவர்.

'அப்பாடா! இவரைப் பற்றிய மனச் சுமையாவது கொஞ்சம் இறங்கியதே?' என்று ஆறுதலடைந்தான் கௌரி. ''பாவம் சார். அண்ணி காலையில் ரொம்ப வருத்தப்பட்டு விட்டார்கள்...''

''டேய் முட்டாள்! அவளுக்காக நான் பம்பாய் போகிறேன் என்றா நினைத்தாய்? கிடையாது. உன்னைப் போல் நான் திசை தெரியாமல் சுற்றிக் கொண்டிருக்கவில்லை. அந்தப் போலி இன்விடேஷனை அச்சடித்தவர்கள் யாரென்று கண்டு பிடித்து விட்டேனாக்கும்! அன்றைக்கே சொன்னேனில்லையா?''

''ஆமாம் சார்... பௌர்ணமி அச்சகம் என்று...''

''அதேதான். அவர்களைப் பிடித்துக் குடை குடையென்று குடைந்தேன். லேசிலே அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. கவர்னர் வரையில் போகாமல் விடப்போவதில்லை என்று மிரட்டினேன். கடைசியில் ஒப்புக் கொண்டார்கள்...''

''அந்த இன்விடேஷனை அடித்தவன்...''

''ரவி என்ற ஆள். வாலிப வயது. பிஸினஸ் பண்ணுகிற பணக்காரன். மதறாசில் பாதி நாள், பம்பாயில்

பாதி நாள் வாசமாம். இப்போது அவன் பம்பாயில் இருக்கிறான். விலாசம் கொடுத்திருக்கிறார்கள். நான் பம்பாய் போவது அவனை அங்கே உண்டு இல்லை என்று உலுக்கி எடுப்பதற்காகத்தான்! புரிகிறதா கௌரி? யாரும் என் தம்பிக்காக மெனக்கெடத் தேவையில்லை. அவனுக்காகத் தீர்க்க வேண்டிய பழியை, தீர்க்க வேண்டிய முறையில், நானே தீர்த்துவிடுகிறேன்!''

''சார்...'' என்றான் கௌரி. இனம் விளங்காத அச்சம் அவன் நெஞ்சில் மூண்டது.

## பத்தொன்பது

கீர்த்திசிங்கா சோகமாய்ப் புன்னகை செய்தார்.

''உபாகரே! எத்தனையோ காலமாக நீங்கள் போதிசத்வரின் நெறிகளைப் பயின்று வந்திருக்கிறீர்கள். கீர்த்திசிங்காவின் சீடனாக எவ்வளவோ கற்றிருக்கிறீர்கள். இருந்தும் இப்படி மனம் தளர்ந்து சாதாரண மானிடனைப் பேல அலட்டிக் கொள்ளலாமா?''

உபாகர் தலை குனிந்து, ''இல்லை ஐயனே எனக்குத் தங்கள் மீதுள்ள பாசமும் பக்தியும் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. ஆகவே தான் தாங்களே தங்களை வருத்திக் கொள்ளும் சமயங்களில் என்னால் தாளமுடியவில்லை.'' என்றார்.

சில்லென்ற வெறும் தரையில் படுத்திருந்தார் கீர்த்திசிங்கா. அவர் கண்கள் மூடியிருந்தன. கால் மாட்டில் நின்றபடி உபாகர் அவருடன் பேசிக் கொண்டிருந்தார். இன்னும் மூன்று 'துறவி'களும் அவருக்கு அருகே நின்றிருந்தாரகள். சற்று தள்ளினாற் போல் ஷோபா பார்த்துக்

கொண்டிருந்தாள். அவள் கையில் அந்த ஜேம்ஸ் பாண்ட் பெட்டி இருந்தது.

கீர்த்திசிங்கா குழுவினரின் தத்துவப் பேச்சுக்களும் விந்தையான நடைமுறைகளும் முந்திய தடவை அவளைக் கவர்ந்த மாதிரி இந்த முறை கவரவில்லை. 'எனக்குத் தெரியாதா உங்களுடைய மோசடி வேலைகளெல்லாம்!' என்று மனத்துக்குள் சிரித்துக் கொண்டிருந்தாள். ஆனால் அந்த இகழ்ச்சி முகத்திலே வெளிப்பட்டு விடாதபடி ஜாக்கிரதையாக மறைத்துக் கொண்டு, மிகுந்த பயபக்தி யுடன் அனைத்தையும் கவனிக்கிற மாதிரி பாசாங்கு செய்து கொண்டிருந்தாள்.

கிம் ஸுனையும் சுமாஹிடோவையும் பார்த்து விட்டுத் திரும்பிய பிறகு அவள் வெளியே போகவே யில்லை. ஒரு வாரமாகிறது

காரணம், திடுதிப்பென்று ஒரு நாள் சாயந்தரம் மழையில் நனைந்து கொண்டு, தும்மிக் கொண்டே வீடு திரும்பினார் அவள் அப்பா. அதே சாக்கில் காய்ச்சல் வந்தது. படுத்துவிட்டார் அவரைச் கவனிப்பதும், மருந்து கொடுப்பதுமே, ஷோபாவுக்குச் சரியாயிருந்தது. இடையில் இரண்டு முறை கௌரி அவளை டெலிபோனில் கூப்பிட்டு, மேற்கொண்டு என்ன செய்தாயென்று விசாரித்தான். தன் நிலைமையைத் தெரிவித்தாள் ஷோபா.

நேற்றுத்தான் ரங்கநாதனுக்குக் காய்ச்சல் இறங்கியது. எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

இன்ற காலை, கீர்த்திசிங்காவின் பட்டியலில் இருந்த மற்றவர்களையும் பார்ப்பதற்காகக் கிளம்ப இருந்தாள். முக்கியமாக அந்த ராம்புத்ராவின் வீட்டில் என்ன நேரப்

போகிறதோ பார்க்க வேண்டும் என்ற துடிப்புடன் இருந்தாள். அந்தச் சமயத்தில்தான் டெலிபோன் மணி அவளை அழைத்தது.

''மிஸ் ஷோபா. உபாகர் பேசுகிறேன். உங்களைக் குருதேவர் உடனே பார்க்க வேண்டுமாம். வரச் சொல்கிறார்.'' என்றார்

''நான் பார்க்க வேண்டியவர்கள் இன்னும் சில பேர் பாக்கி இருக்கிறார்கள். ஏற்கனவே ஒரு வாரம் சும்மா இருந்து விட்டேன். பார்த்துவிட்டு, சாயந்தரமாக வருகிறேன்,'' என்றாள் ஷோபா.

''வேண்டாம் அம்மா. பெட்டியைக் கையோடு எடுத்துக் கொண்டு வரச் சொல்கிறார் குருநாதர்.''

ஷோபாவுக்குத் திகைப்பாயிருந்தாலும் ''அப்படியே ஐயா,'' என்று கூறினாள்.

எதற்காகப் பெட்டியுடன் வரச் சொல்கிறார் என்று அவளுக்குப் புரியவில்லை. இன்னுமொரு நீண்ட பட்டியல் தரப் போகிறாரா? அல்லது மேலும் சில புத்தகங்களைக் கொடுக்கப் போகிறாரா? போகாமலே இருந்து விடலாமா என்று கூட எண்ணினாள். ஆனால் ஏற்கெனவே பல நாட்களை நழுவ விட்டாயிற்று, எதுவும் தெரிந்து கொள்ளாமலேயே. அடுத்தபடி என்ன திட்டங்கள் வைத்திருக்கிறாரோ கீர்த்திசிங்கா? அவைகளைத் தெரிந்து கொள்ளாத வரையில் தனக்கு நிம்மதியில்லை என்று உணர்ந்தவளாக ஷோபா பரங்கிமலைக்குப் புறப்பட்டாள்.

இங்கே வந்து பார்த்தால், கீர்த்திசிங்கா தரையிலே கிடக்கிறார். அவரைச் சுற்றிச் 'சீடர்கள்' சூழ்ந்திருக் கிறார்கள்.

பேசுவதெல்லாம் பொய், செய்வதெல்லாம் நாடகம் என்ற உண்மையை உணர்ந்திருந்ததால் ஷோபாவுக்குக் குமுறிக் கொண்டு கோபம் வந்தது. இருந்தாலும் பொறுத்துக் கொண்டாள்.

''உபாகரே! படித்தது மறந்து விட்டது உமக்கு! தம்ம பதத்தில் அந்தச் சுலோகம் நினைவிருக்கிறதா? யோ நிப்பாணதோ வனாதிமுத்தோ வனமுத்தோ வனமேவ தவதி எனத் தொடங்குகிற சுலோகம் நினைவிருக்கிறதா? கீர்த்திசிங்கா அடிக்கடி சொல்வானே?'' என்றார் கீர்த்திசிங்கா.

''ஆம், ஐயனே.''

''கீர்த்திசிங்கா நம்பமாட்டான். என்ன அதற்கு அர்த்தம்? சொல்லும். கீர்த்திசிங்கா கேட்கட்டும்.''

''நினைவிருக்கிறது, குருதேவா! 'அந்தோ! வீட்டைப் பற்றிய பாச பந்தங்களிலிருந்து விடுபட்ட மனிதன் காட்டுக்கு ஓடுகிறான். பிறகு காட்டின் மீது பற்று ஏற்பட்டு விடுகிறது. அதே பாசபந்தங்களில் மறுபடியும் சிக்குகிறான்' என்பது அந்தச் சுலோகத்தின் கருத்து,'' என்று அடக்கத்துடன் கூறினார் உபாகர்.

''நன்று உபாகரே நன்று!'' என்றார் கீர்த்திசிங்கா. ''அந்த வேடிக்கை மனிதனைப் போலவே நீரும் இருக்கிறீர். எல்லாப் பந்தங்களிலிருந்தும் விடுபடுவதற்காக இந்தச் சங்கத்திடமும் கீர்த்திசிங்காவிடமும் வந்தீர். கடைசியில் புதிய தளைகளில் கட்டுப்படுகிறீர்! ஹாஹா!'' வாய்விட்டுச் சிரித்தார் அவர். அழகுற அமைந்திருந்த வெண் பற்கள் விகாரமாய்ப் பளபளத்தன.

''சுவாமி! தங்கள் கட்டளைப்படி இதோ ஷோபா வந்திருக்கிறாள்,'' என்று உபாகர் தெரிவித்தார்.

சட்டெனக் கண்களைத் திறந்தார் கீர்த்திசிங்கா. ''வந்துவிட்டாளா குழந்தை? எங்கே? எங்கே?'' என்று எழுந்து அமர்ந்தார்.

அவருக்குச் சரியாகத் தானும் நடிக்க வேண்டும் என்பது ஷோபாவுக்கு ஞாபகம் வந்தது. ''இதோ இருக்கிறேன், சுவாமி. என்னை மன்னியுங்கள். ஐந்தாறு நாட்களாக நான் வராமல் இருந்துவிட்டேன். தப்புதான்,'' என்றாள்.

உபாகர் குறுக்கிட்டு, ''இப்போதாவது வந்தாயே அம்மா? இல்லாவிட்டால்...'' என்று ஏதோ கூற முயன்றார். ஆனால் கீர்த்திசிங்கா, ''அதெல்லாம் எதற்கு, உபாகரே!'' என்று அவரைத் தடுத்தார்.

''ஏன் -என்ன நடந்தது? நான் ஏதாவது தவறிழைத்து விட்டேனா?'' என்று ஷோபா பதற்றம் காட்டினாள்.

''நீயல்ல, குழந்தாய் கீர்த்திசிங்காதான் தவறிழைத்த வன்,'' என்று கூறிவிட்டு, மெல்லக் குறுக்கும் நெடுக்குமாய் உலாவலானார் கீர்த்திசிங்கா.

''குருநாதருக்கு ஏதாவது பானம் கொண்டு வாருங்கள்,'' என்று உபாகர் உத்தரவிட, மற்றவர்கள் கலைந்து சென்றார்கள். ''உன்னைப் பார்க்காமல் சாப்பிடுவதில்லை என்று மூன்று நாட்களாகக் குருநாதர் உபவாசம் இருந்து வருகிறார்,'' என்று ஷோபாவிடம் தெரிவித்தார் உபாகர்.

''ஐயா! மெய்யாகவா! ஏன்?''

''உபவாசமில்லை மகளே! கழுவாய். கீர்த்திசிங்கா செய்துவிட்ட பாவத்துக்குப் பிராயச்சித்தம்,'' என்றார் கீர்த்திசிங்கா.

உபாகர் விளக்கினார்: ''உன்னை இங்கே சங்கத்தில் சேர்த்துக் கொண்டிருக்கக் கூடாது என்று குருநாதர் கருதுகிறார். அந்தத் தவறுக்குப் பிராயச்சித்தமாக, உன்னைப் பார்க்கிற வரையில் தண்ணீர்கூட அருந்துவதில்லை என்று விரதம் இருந்து வருகிறார் மூன்று நாட்களாக. உன்னிடம் அதைச் சொல்ல வேண்டாமென்று கட்டளை யிட்டிருந்ததால் நான் சொல்லவில்லை.''

''ஐயோ! மூன்று நாட்களாகத் தங்களைப் பட்டினி போட்ட பாவியாகி விட்டேனே!'' என்று கண்களைத் துடைத்துக் கொண்டாள் ஷோபா. ''சுவாமி, என்னைச் சங்கத்தில் சேர்த்துக் கொண்டது தவறென்று ஏன் கருதினீர்கள்?''

கீர்த்திசிங்கா புன்முறுவலுடன் பேசினார். ''மகளே, ஒருமுறை கோசாம்பியில் சிம்சுபா மரங்களடர்ந்த ஒரு தோப்பில், புத்தபிரான் தமது சீடர்களுடன் தங்கியிருந்தார். ஒரு நாள் மரத்திலிருந்து ஒரு கொத்து இலைகளைப் பறித்துக் கையில் வைத்துக் கொண்டு, 'சொல்லுங்கள் சகோதரர்களே! என் கையிலிருக்கும் சிம்சுபா இலைகள் அதிகமா? இந்தத் தோப்பிலிருக்கும் இலைகள் அதிகமா?' என்று கேட்டார். சீடர்கள், 'தேவரீர் கையிலிருப்பவை குறைவு. விருட்சங்களில் உள்ள இலைகள் பன்மடங்கு அதிகம்' என்றார்கள். 'இதே போல், நான் என் ஞானத்தால் அறிந்திருப்பது அதிகம். உங்களுக்கு வெளிப்படுத்தி யிருப்பது குறைவு' என்ற போதிமகான் கூறினார். அது மாதிரியே குழந்தாய் உன்னிடம் கீர்த்திசிங்கா தெரிவிக்க முடியாதது அதிகம் இருக்கிறது.''

''சுவாமி! நான் என் வாழ்க்கையில் பல துன்பங்களை அனுபவித்தவள். நிம்மதியில்லாமல் அலைந்தவள். சென்ற

சில நாட்களாகத்தான் என் மனத்தில் சாந்தி நிலவுகிறது. அதற்குக் காரணம், தாங்கள் எனக்கு இட்டிருக்கும் இந்தச் சீரிய பணிதான்.''

''இல்லை, குழந்தாய். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வழி விதிக்கப்பட்டிருக்கிறது. நீ உன் வழியிலும், கீர்த்திசிங்கா கீர்த்திசிங்காவின் வழியிலும்தான் நிர்வாணத்தை அடைய வேண்டும். இரண்டையும் குழப்பியது கீர்த்திசிங்கா செய்த பெரும் பிழை. அதிலும் குறிப்பாக, போதிசத்துவரின் சங்கத்தில் ஒரு பெண்ணைச் சேர்த்துக் கொண்டது தப்பு,'' என்றார் கீர்த்திசிங்கா. ''உபாகரே, ஷோபாவிடமுள்ள பெட்டியை வாங்கிக் கொள்ளுங்கள்.''

ஷோபாவுக்குப் பளிச்சென்று அவருடைய திட்டம் புரிந்தது. இவர்களுக்குத் தன் மீது சந்தேகம் வந்துவிட்டது. மேற்கொண்டு தங்களுடைய குட்டு வெளிப்படுமுன்பு இந்தப் பெட்டியைத் திரும்பப் பெறுவதில் குறியாக இருக்கிறார்கள்....

தன் குழப்பத்தை மறைத்துக் கொண்டு, களங்கமற்ற முறையில் சிரித்தாள் அவள். ''சுவாமி! தங்களுக்கு என் மீது அளவற்ற இரக்கம். நான் கண்டபடி அலைந்து கஷ்டப்படக் கூடாதென்பதற்காக என்னை விலக்கப் பார்க்கிறீர்கள். ஐயனே, இந்தப் பெட்டியை என்னிடம் தந்தீர்களே, அப்போது இதற்குள் உள்ள விஷயம் என்னவென்று நான் மட்டும் கண்டு கொள்ளாமலிருப்பேனா?''

மின்னல் மாதிரி ஒரு திகில் கீர்த்திசிங்காவின் முகத்தில் அடித்துவிட்டு மறைந்தது. ''என்ன?... என்ன சொல்கிறாய்? நீ?'' என்றார், 'மகளே' என்றும் 'குழந்தாய்' என்றும் கூப்பிட்டதை வினாடிக் காலம் மறந்தவராக.

''இந்தப் பெட்டியிலுள்ள பிரசுரங்களைப் பிறருக்கு வழங்கிவிட்டு வருவேனே தவிர நான் படிக்க மாட்டேனென்று தாங்கள் எண்ணியிருக்கிறீர்கள்? சிலவற்றை நானும் படித்துப் பார்த்தேன்,'' என்றாள் ஷோபா.

''என்ன தெரிந்து கொண்டாய் மகளே?'' என்றார் கீர்த்திதசிங்கா சாந்தமடைந்தவராக.

''நான் பார்த்த வரையில் பெண்களைச் சேர்க்க வேண்டாமென்று புத்த பகவான் எங்கேயும் கூறவில்லை. சுவாமி!'' என்றாள் ஷோபா. ''மிச்ரா என்பவர் எழுதிய 'வினயா' என்ற பிரசுரத்தை இன்று காலைகூடப் புரட்டிக் கொண்டிருந்தேன். தமது குழுவிலே சன்னியாசினிகளைச் சேர்த்துக் கொள்ளப் போதி முனிவர் தயங்கினாரென்றும், அவரது பிரதம சீடரான ஆனந்தர் பலவிதமாக விவாதித்த பின்னர் பெண்களைச் சேர்த்துக் கொண்டாரென்றம் எழுதியிருக்கிறார். நான் சொல்வது சரி தானே?''

''கீர்த்திசிங்கா ஏன் அறிவை மெச்சுகிறான்,'' என்று புன்னகையுடன் சொன்னார் கீர்த்திசிங்கா. ''உண்மையை ஒப்புக் கொள்ள வேண்டியது தான். உன்னிடம், உன் நலனில், கீர்த்திசிங்காவுக்கு மிகுந்த அக்கறை உண்டு. ஆகவேதான் உன்னை நீக்கிவிட வேண்டுமென்று விரும்புகிறேன்.''

''என்னை நீக்குவதுதான் என் நலனுக்குப் பெரும் தீங்கு ஏற்படுத்தக் கூடியது, ஐயனே!''

''கீர்த்திசிங்காவுக்குத் தெரிந்திருக்கும் அளவுக்கு உனக்குத் தெரிந்திருந்தால் இப்படிப் பேச மாட்டாய்!'' அவர் குரல் உரத்து ஒலித்தது. ''மகளே! சங்கத்தின் பணியையும் பிரசாரத்தையும் எதிர்ப்பவர்கள் பல பேர் இருக்கிறார்கள்.

அவர்கள் எல்லாருமே சாதுக்களாயிருப்பார்கள் என்று சொல்ல முடியாது. ஏன், கொலைக்கு அஞ்சாதவர்கள் கூட இருக்கலாம். யார் கண்டது?''

அவர் பேச்சில் புதைந்திருந்த மறைமுகமான மிரட்டலை, அச்சுறுத்தலை, ஷோபா கவனிக்கத் தவற வில்லை. ''சுவாமி! சாக்கிய முனியின் பணியிலே என் உயிர் நீங்குமானால் அதைக் காட்டிலும் பாக்கியம் என்ன இருக்க முடியும்?'' என்றாள்.

கீர்த்திசிங்காவின் முகத்தில் சினம் பரவியது. அது அவளுக்குத் தெரியக் கூடாது என்பதற்காக உபாகரின் பக்கம் திரும்பி, ''உலகமறியாத சிறுமி இவள். இப்படித்தான் பேசிக்கொண்டேயிருப்பாள். உபாகரே, நீர் பெட்டியைப் பெற்றுக் கொள்ளுங்கள்,'' என்றார்.

உபாகர் ஓரெட்டு முன் வந்தார். ஷோபா மார்போடு அணைத்துக் கொண்டாள் அந்தப் பெட்டியை, ''இன்னும் ஒரு பதினைந்து இருபது நாட்களுக்காவது இந்தத் தொண்டிலே நான் ஈடுபடுவதற்கு அனுமதி கொடுங்கள். குறைந்த பட்சம், தாங்கள் இப்போது கொடுத்துள்ள பட்டியலையாவது பூர்த்தி செய்து விடுகிறேன். இரண்டு மூன்று பேர்தான் பாக்கி இருக்கிறார்கள்,'' என்றாள்.

''ஊகூம். பிடிவாதம் பிடிக்காதே!'' என்று முதல் தடவையாக அதட்டினார் கீர்த்திசிங்கா. இனிமேல் அந்தப் பெட்டியை வலுக்கட்டாயமாகப் பறிக்கத்தான் போகிறார்கள் என்றெண்ணிப் பின் வாங்கினாள் ஷோபா. அடுத்த நிமிடம் —

வெளியே பல காலடியோசைகள் கேட்டன. வெள்ளைக்கார ஆண்களும் பெண்களும் பல பேர் உள்ளே

நுழைந்தார்கள். அவர்களை அழைத்து வந்த ஒரு தமிழர். "இவர்கள் டூரிஸ்டுகள் ஐயா. தங்கள் திரிசரண அபிமானிகள் சங்கத்தைப் பார்க்க வேண்டுமென்று வந்திருக்கிறார்கள். தயவு செய்து அனுமதி தர வேண்டும்," என்றார். அவர் பேசிய விதத்திலிருந்து அடிக்கடி இம்மாதிரி டூரிஸ்டுகளை இங்கு அழைத்து வந்திருப்பவர் என்று தெரிந்தது.

அவர்களுக்காக வேண்டி, கீர்த்திசிங்கா தமது முக பாவத்தையும் பேச்சையும் மாற்றிக் கொள்ள வேண்டியதா யிற்று. "வாருங்கள். மிக்க மகிழ்ச்சி," என்று கை குலுக்கினார் ஒவ்வொருவருடனும்.

எதிர்பாராத விடுதலை தெய்வாதீனமாகக் கிடைக்கவே, ஷோபா, "மறுபடி அடுத்த வாரம் வந்து பார்க்கிறேன், குருநாதரே!" என்று அவசரமாகச் சொல்லி விட்டு, கிடுகிடுவென்று வெளியேறினாள்.

குன்றிலிருந்து இறங்குகையில் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டாள். ஆனால் யாரும் அவளைப் பின்தொடர்ந்து வருவதாகத் தெரியவில்லை.

**ஹா**ரன் சரியாய் வேலை செய்யாததால் அதைப் பியிங்க் பியிங்க் என்று அழுத்திச் சரி செய்து கொண்டிருந்தான் கௌரி.

ஆறு தினங்களாகிறது உலகநாதனும் செங்கமலமும் பம்பாய்க்குப் புறப்பட்டுப் போய். கிளம்புகிற வரையில் அவர் குஷியாகத்தான் இருந்தார். ஒன்றுமில்லாததற் கெல்லாம் ஜோக் அடித்துக் கொண்டிருந்தார்.

குஷாலாகச் சீட்டியடித்த வண்ணம் அவர் சூட்கேஸை ரப்பிக் கொண்டிருந்தபோது, கௌரி தயக்கத்துடன்,

''சார்... கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருங்கள். அந்த ரவியைக் கண்டு பிடித்தால் சும்மா இரண்டு அதட்டல் போட்டுவிட்டு, விட்டு விடுங்கள்...''என்றான்.

''ஏண்டா டேய், உன்னை எனக்கு வாத்தியாராக எப்போதடா நியமித்தேன்? கழுதை!'' என்று திட்டிவிட்டு, உலகநாதன் தொடர்ந்து சீட்டியடித்தார்.

அவர்களை அனுப்பி விட்டுத் திரும்பியது முதல், கௌரிக்கு வீடு வெறிச்சென்றிருந்தது. மனத்தை வேறு திசைகளில் திருப்பலாமென்றால், ஐந்தாறு நாட்களாக ஷோபாவின் தொடர்பும் இல்லை. அவள் அப்பாவுக்கு உடம்பு சரியில்லை என்று வீட்டிலேயே தங்கி யிருக்கிறாளாம்...

உள்ளே பங்களாவில் டெலிபோன் மணியடிக்கும் ஓசை தீனமாகக் கேட்டது. ஹாலுக்கு விரைந்தான். போனை எடுத்தான்.

''நான்தான் ஷோபா,'' என்ற குரலைக் கேட்டதும், பன்னீர் தெளித்துக் கொண்டாற் போல சுகம் ஏற்பட்டது.

''ஷோபா! உன் அப்பாவுக்கு உடம்பு தேவலையா?''

''தேவலை,'' என்று கூறிவிட்டு, திரிசரண அபிமானிகள் சங்கத்துக்குப் போய் வந்த விவரங்களைத் தெரிவித்தாள் அவள். ''கௌரி! அந்தப் பெட்டியை என்னிடமிருந்து திரும்ப வாங்கிக் கொண்டுவிட வேண்டு மென்பதில் கீர்த்திசிங்கா ரொம்பக் குறியாயிருக்கிறார்... ஏனென்று தெரியவில்லை...''

ஏனென்று கௌரிக்குப் புரிந்தது. அன்று ஷோபா வீட்டுக்குப் போவதை ஒரு சைக்கிள் ஆசாமி கவனித்தானே?

அவன் கீர்த்திசிங்காவின் ஆள்தான்... ஆகவே கீர்த்திசிங்கா உஷாராகிவிட்டான். ''அப்புறம்?'

''எப்படியோ தப்பி வந்துவிட்டேன். அடுத்தபடி நான் என்ன செய்ய வேண்டும்? அந்த ராம்புத்ராவை...''

''வேண்டாம், ஷோபா,'' என்றான் கௌரி. ''ராம்புத்ரா வீட்டுக்கு நீ வருவாய் என்று அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தாலும் இருப்பார்கள். அங்கே போகாதே. பெட்டி முக்கியம். அதை எடுத்துக் கொண்டு நாளைக் காலை நேரே இங்கே வந்துவிடு.''

''எங்கே? உலகநாதனின் வீட்டுக்கா?''

''ஆமாம். இங்கே யாருமில்லை. ஊருக்குப் போயிருக் கிறார்கள். இங்கே-கொண்டு வந்து விடு பெட்டியை.''

''அதாவது, இன்று ராத்திரி அந்தப் பெட்டிக்கு எதுவும் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்? இல்லையா? சரி கௌரி,'' என்றாள் ஷோபா.

அவள் பேச்சில் ஒலிப்பது வேடிக்கையா, அச்சமா? கௌரிக்குத் தெரியவில்லை.

## இருபது

''ஸ்...'' என்று மெதுவே அழைத்தான் சமையற்காரன்.

ஷோபா இன்னும் வரக்காணோமே என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்த கௌரிக்கு எரிச்சலேற்பட்டது.

''என்ன விஷயம்?''

''அந்த ஆள் வந்திருக்கிறார்.''

''எந்த ஆள்?''

''முன்னே ஒரு நாள் உன் கிராமத்திலிருந்து வந்திருந்தாரே, மாமா என்று சொல்லிக் கொண்டு? ஆறு இட்லி வெட்டினாரே, அதே ஆள்.''

''சரிதான். மறுபடியுமா அவரை அனுப்பி விட்டார் என் அப்பா? இப்போது ஒரு பைசா கூட...'' என்று அவன் சொல்லிக் கொண்டிருந்த போதே பேச்சு சத்தம் கேட்டு அந்த நபர் அவனைத் தேடிக் கொண்டு வந்துவிட்டார்.

''பணம் எதுவும் வாங்கி வரச் சொல்லவில்லை, கௌரி. உன் அப்பா மதறாஸ் வரப் போகிறாராம். இரண்டு நாள் முன்பு எனக்கு லெட்டார் போட்டிருந்தார்,'' என்றார் அவர்.

''மெட்றாஸ் வரப் போகிறாரா? எதற்காக?''

''உடம்பு கொஞ்சம் தேவலையாம். நீ தான் அவரைப் பார்க்க அங்கே போக மாட்டேனென்கிறாய். அவர்தான் இங்கே வரட்டுமே உன்னைப் பார்க்க?''

''ஆமாம்! அவர் வரும் போது உமக்குச் சொல்லி யனுப்புகிறேன். நீர் நாதசுரத்துடன் வந்து வரவேற்பு கீதம் வாசியுங்கள்!'' என்று அவரை அனுப்பி வைத்தான் கௌரி. தந்தைமீது பிரியம் இல்லை என்பதல்ல. இருந்தாலும், இங்கே இப்போது இருக்கும் சிக்கல்கள் போதாதென்று அவர் வேறு எதற்காக வந்து சேர வேண்டும் என்று நினைத்தான்.

''என்னவோ, எந்த நிமிடத்திலும் அவரே இங்கே வருவார்,'' என்று தெரிவித்துவிட்டு அகன்றார் அந்த நபர்.

''எங்கேயம்மா புறப்பட்டு விட்டாய், ஷோபா?'' என்றார் ரங்கநாதன், வாசித்துக் கொண்டிருந்த பேப்பரை மோவாய்க்குக் கீழே இறக்கிக் கொண்டு.

''ஒரு சின்ன வேலை அப்பா. இதோ திரும்பி வருகிறேன்,'' என்றவாறு, நிலைக் கண்ணாடி முன்னே நின்று முகத்தை அவசரமாய்ச் சரி செய்து கொண்டாள் ஷோபா.

கட்டிலின் மீது வைக்கப்பட்டிருந்த கறுப்புப் பெட்டியை அவள் எடுத்துக் கொள்வதைக் கண்டதும் ரங்கநாதனின் சலிப்புக் குறைந்து மலர்ச்சி பரவியது. ''ஓ, திரிசரண அபிமானிகள் சங்கத்தின் வேலையா? கார் வேண்டுமானால் எடுத்துக் கொண்டு போகிறாயா? எனக்கு இப்போதைக்கு வேண்டாம்'' என்றார்.

''இதற்கெல்லாம் நடை தானப்பா நல்லது,'' என்று பதிலளித்துவிட்டு, காய்ச்சலடிக்கும் குழந்தையைத் தாய் அணைத்துக் கொள்வது போல் பெட்டியை அணைத்துக் கொண்டு புறப்பட்டாள் ஷோபா. 'பாவம் அப்பா' என்று அவள் மனம் எண்ணமிட்டது. 'அந்த ரவியின் நல்லபிப்பிராயத்தைப் பெறுகிறோம் என்பதற்காகத் திரிசரண அபிமானிகள் சங்கத்தில் நிறைய ஈடுபடச் சொல்கிறார். அவர்கள் எப்படிப்பட்ட மோசக்காரர்கள் என்பது அந்த ரவிக்கும் தெரியாது, அப்பாவுக்கும் தெரியாது, என்று நினைத்துக் கொண்டவள். கையிலிருந்த பெட்டியை ஒரு முறை பார்த்துக் கொண்டே நடந்தாள்.

இந்தப் பெட்டியைக் கௌரியிடம் உடனே ஒப்படைத்துவிட வேண்டும். பிறகு ரவியை கண்டு பிடிப்பதில் இறங்கலாம்...

*அப்பப்பா! ராத்திரி முழுவதும் தூக்கமில்லாமல் அவள் பட்ட அவஸ்தை அவளுக்கல்லவா தெரியும்!*

கண்ணெதிரிலேயே அந்தப் பெட்டியை வைத்துக் கொண்டுதான் அவள் படுத்தாள். இரவு வெகு நேரம் வரை

புத்தகம் படித்தபடி விழித்துக்கொண்டும் இருந்தாள். பிறகு நித்திரை கண்ணைச் சுழற்றவே, விடிவிளக்கை எரிய விட்டுக் கொண்டு தூங்கினாள்.

திடீரென்று விழிப்புக் கண்டது. ஏதோ ஒரு வகையான ரீங்காரம் கேடபது போலிருந்தது. தலைக்கு மேல் சுழலும் மனிசார விசிறியின் ஓசை தான் அது என்று உணர்ந்து கொள்ளப் பல வினாடிகள் பிடித்தன. உணர்ந்ததும் தனக்குத் தானே சிரித்துக்கொண்டு விசிறியை நிறுத்தி விட்டுத் தூங்கலானாள்.

மணி இரண்டு ஆகியிருந்த போது, திடுப்பென்று மறுபடியும் அவள் நித்திரை கலைந்தது. அச்சத்துடன கண்ணை விழித்தாள். தோட்டத்துப் பக்கமிருந்த ஜன்னலில் இரண்டு விழிகள் பளபளப்பதைக் கண்டாள். நெஞ்சில் பந்து அடைத்துக் கொள்வதைப் போன்ற திகிலுடன், ''யாரது? ஹூ இஸ் தேர்?'' என்று கம்மிய குரலில் அதட்டல் போட்டாள்.

'மியாவ்!' என்ற பதிலைத் தொடர்ந்து ஜன்னலி லிருந்து ஒரு பூனை குதித்தோடுவதைப் பார்த்த பிறகே அவளுக்கு மூச்சு சீராக வந்தது. அதற்கப்புறம் அவள் தூங்கவில்லை. இருட்டில் படுத்திருக்கும்போது, வெளியே அசைகின்ற ஒவ்வொரு நிழலும், ஒலிக்கின்ற ஒவ்வோர் ஒலியும், நுகர்கின்ற ஒவ்வொரு மணமும் மனத்தில் பீதியை உண்டு பண்ணுவதாகவே இருந்ததால், மறுபடியும் விளக்கைப் போட்டுக் கொண்டு புத்தகம் படித்தபடியே மிச்ச இரவைக் கழித்தாள்.

பின்னரும் கூட, குளிக்கும் போதும் டிரஸ் செய்து கொள்ளும் போதும் காலைச் சிற்றுண்டி அருந்தும் போதும் தன் பார்வையிலேயே வைத்திருந்தாள் அந்தப் பெட்டியை.

தெருவில் லேசாகத் தூறல் போட்டுக் கொண் டிருந்தது.

'இந்தப் பெட்டிக்குள் அப்படி என்னதான் இருக்கும்?' என்று ஆச்சரியப் பட்ட வண்ணமே நடந்தாள் ஷோபா. சாதாரணமான பெட்டி: சாதாரணமான கைப்பிடி. உள்ளேயோ, அன்பு மார்க்கத்தை உபதேசித்த புத்த பகவானின் பொன்மொழிகள் கொண்ட பிரசுரங்கள். என்ன அபாயம் ஒளிந்திருக்க முடியும் இவற்றின் நடுவே?

'கௌரி இரண்டு நிமிடங்களில் கண்டு பிடித்துச் சொல்லி விடுவார்!' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டவள், உற்சாகத்துடன் பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தாள். 'இங்கே யாருமில்லை. நீ வரலாம்' என்று கௌரி சொன்னது நினைவு வந்தது. முதல் தடவையாகக் கௌரியைத் தனியே சந்திக்கப் போகிறோம் என்ற எண்ணம் அவள் இதயத்தில் ஒரு கிளுகிளுப்பை ஏற்படுத்தியது. அவன் என்ன பேசினால், தான் என்ன பதில் சொல்ல வேண்டும் என்பதை மனத்துக்குள்ளே ஒத்திகை பார்த்தபடி நடந்தவள்-

ஒரு பெரிய படகுக் காரைத் தாண்டிச் சென்றாள்.

கண்ணிமைக்கும் நேரத்தில் அவளுக்குள் ஏதோ பொறி தட்டியது. நின்றாள். திரும்பிப் பார்த்தாள்.

அன்று ஆனந்த தேராவுடனும் நந்தினியுடனும் சென்ற போது கண்ட அதே கார். அதே டிரைவர்.

புத்தம் புதிய கட்டிடத்தின் வாசலில் நின்ற அந்த சொகுசுக் காரைக் கண் கொட்டாமல் கவனித்தாள். டி என். எக்ஸ் 4356. நெட்டுரு வாகியிருந்த எண்.

காரின் பின் சீட்டில் அமர்ந்திருந்தவன் இளைஞன். சற்றுக் கறுப்பு நிறமாக இருந்தான். வெள்ளை யூனிபாரம் அணிந்திருந்த டிரைவர் முன் சீட்டிலிருந்து இறங்கிப் பணிவாயும் மிடுக்காயும் பின் கதவைத் திறந்து விட்டதும், அந்த இளைஞன் டக்டக்கென்று நடந்து வீட்டினுள் சென்றான்.

ரவி! இவன்தான் ரவி! ஷோபாவுக்குச் சந்தேகமே ஏற்படவில்லை! காரின் நம்பரைக் கொண்டு டிராபிக் கமிஷனரின் அலுவலகத்தில் விசாரித்தறிய வேண்டும் என்று எண்ணியிருந்தாள். அதற்கு அவசியமில்லை!

இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

தெருவைப் பார்த்த மாதிரியே சற்றுத் தள்ளினாற் போல இருந்த ஷெட்டுக்குக் காரைக் கொண்டு போய் விட்டான் டிரைவர்.

அந்த ரவியை இப்போதே பார்த்துப் பேசி விட்டாலென்ன?

'பெட்டியுடன் நேரே என்னிடம் வந்து விடு. எங்கேயும் போக வேண்டாம்.' என்று கௌரி சொன்ன வார்த்தைகள் ஒரு கணம் அவள் நினைக்வுக்கு வந்தன. ஆனால் நடுவே சில நிமிடங்கள் தாமதிப்பதால் எதுவும் கெட்டு விடாது. அவளுடைய வாழ்க்கையையும் அவள் அப்பாவின் வாழ்க்கையையும் பாதிக்கிற அந்தரங்கமான சொந்த விஷயம் இது. கௌரிக்கே தெரியாமல் மறைத்து வைத்திருக்கிற ரகசியம். 'அவனறியாமலே இதை முடித்து விடுவது நல்லது தானே?' என்று சமாதானம் சொல்லிக் கொண்டு அந்த வீட்டினுள் நுழைந்தாள்.

முன்னறையில் அவளைத் தடுக்க யாரும் இல்லை. அதற்கடுத்தாற் போலிருந்த ஹாலினுள் எட்டிப் பார்த்தவள்,

அவன் ஒரு குட்டை மேஜையின் மீது காலை ஊன்றி, காலணியின் நூலை அவிழ்ப்பதில் ஈடுபட்டிருப்பதைக் கண்டாள்.

தொண்டையைச் செருமிக் கொண்டு ''வணக்கம்'' என்று குரல் கொடுத்தாள்.

அவன் திரும்பி நோக்கினான். முகத்தில் திகைப்புப் பரவியது. ''நீங்கள்...'' என்றான். குரல் கணீரென்றிருந்தது.

நல்லவனாகத்தான் தெரிகிறான். நாம் இவ்வளவு நடுங்கத் தேவையில்லை...

''உங்களுக்கு என்னைத் தெரியாது மிஸ்டர் ரவி,'' என்றாள் புன்னகையை வரவழைத்துக் கொண்டு. ''ஆனால் எனக்கு உங்களைத் தெரியும். என் பெயர் ஷோபா. ரங்கசாமி அண்டுகோ ரங்கநாதனின் மகள்.''

''ஷோபா? எஸ். எஸ். ஞாபகம் வருகிறது,'' என்று சற்றும் எதிர்பாரா வண்ணம் அவள் கைகளைப் பிடித்துக் குலுக்கினான் அவன். ''உட்காருங்கள், மிஸ் ஷோபா. என்ன சாப்பிடுகிறீர்கள்? நல்ல வெய்யில் வேளை. இல்லையா?''

''தாங்ஸ். எதுவும் வேண்டாம்,'' என்று சொல்லி விட்டு, சோபாவில் அமர்ந்தாள் ஷோபா.

ரவியைச் சந்திக்க வேண்டும் என்று மட்டுமே இத்தனை நாட்களும் எண்ணி வந்தாளேயொழிய, சந்திக்கும் போது என்ன பேச வேண்டும், என்ன கேட்க வேண்டும் என்று துளிகூட அவள் சிந்தித்து வைத்திருக்கவில்லை. இப்போது திடீரென அவனைக் கண்டதும். ஒரு வினாடிக்குள் நூற்றுக் கணக்கான குழப்பங்கள் அவள் உள்ளத்தில் கூத்தாடின.

நல்ல வேளையாக அப்போது டெலிபோன் மணி அடித்தது. அவன், ''எக்ஸ்கியூஸ் மி. ஒரு நிமிடம்,'' என்று அவளிடம் கூறிவிட்டு எழுந்து அந்தண்டை சென்றான். அவன் திரும்பி வந்த சில நிமிடங்களுக்குள் அவனிடம் பேச வேண்டிய விஷயத்தைத் தீர்மானித்துக் கொண்டு விட்டாள்.

''எஸ்?'' என்று உற்சாகமாகக் கேட்ட வண்ணம் அவளருகே இருந்த சோபாவில் அமர்ந்து கொண்டு பரந்த புன்னகையொன்றை வீசினான் அவன்.

''நீங்கள் ரொம்பப் பிஸியான மனிதர் என்ற எனக்குத் தெரியும், மிஸ்டர் ரவி,'' என்று பேச்சைத் தொடங்கினாள் ஷோபா. ''சுருக்கமாகவே சொல்லிவிடுகிறேன். உங்களைப் பார்த்தால் நல்லவராயும், பழி தீர்க்கிற நோக்கங்கள் இல்லாதவராயும் தெரிகிறது. எந்தக் காலத்திலோ என் அப்பா செய்த தவறுகளுக்காக இன்றைக்கும் கூட அவரையும் அவரது மகளையும் துன்பப்படுத்துவது நியாயமில்லை...''

''ஊம்?'' என்றான் அவன் முறுவலுடன்.

''எனக்குக் கல்யாணம் என்று போலி அழைப்பிதழ் அனுப்பி, எங்கள் குடும்பத்தின் மானத்தை எவ்வளவு வாங்க வேண்டுமோ அவ்வளவு வாங்கி விட்டீர்கள். அந்த ஒரு தண்டனை போதும். தயவு செய்து அத்துடன் விட்டுவிடுங்கள்,'' என்றாள் ஷோபா.

அப்போதும் கூட அவன் புன்சிரிப்புடனேயே, 'அப்புறம்?'' என்றான்.

''உங்களைப் பற்றி நந்தினி தான் சொன்னார்,'' என்றவள், அவன் முகத்தில் கேள்விக் குறி எழுவதைக் கவனித்தாள். ''ஆனந்த தேராவின் சிஷ்யையைச்

சொல்லுகிறேன். புத்தபிரானின் மார்க்கத்தில் இவ்வளவு ஈடுபாடு கொண்டிருக்கும் நீங்கள், ஒரு பழைய சம்பவத்தை ஞாபகம் வைத்துக் கொண்டு பழி வாங்குவதில் தீவிரமாய் இருப்பீர்களென்று என்னால் நம்ப முடியவில்லை...''

''நான் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?'' என்றான் அவன்.

''ஒன்றம் செய்ய வேண்டாம் என்கிறேன்,'' என்றாள் ஷோபா சிரித்துக் கொண்டே. ''திரிசரண அபிமானிகள் சங்கத்தில் ஒரு பிரசாரகியாக நான் பணியாற்றுவதால், என்னை மேற்கொண்டு தொல்லைப் படுத்தப் போவ தில்லை என்று என் அப்பாவிடம் சொன்னீர்களாம். ரொம்ப நன்றி. ஆனால் நான் இந்தப் பிரசாரத்தில் ஈடுபட்டாலும் ஈடுபடாவிட்டாலும் எங்களை மறந்து மன்னித்து விட்டுவிட வேண்டும் என்று உங்களை ரொம்பவும் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால்-உங்களிடம் சொல் வதில் என்ன தயக்கம்? -இந்தத் திரிசரண அபிமானிகள் சங்கம் அயோக்கியர்களின் கூடாரம். இவர்களுடன் அதிக நாள் நான் இருக்க மாட்டேன்...''

''அப்படியா?' என்று ஆச்சரியம் தெரிவித்தான் அவன். ''அவர்கள் நல்ல நல்ல பிரசுரங்கள் வினி யோகிப்பதாகக் கேள்விப்பட்டேனே? இந்தப் பெட்டியில் கூட அந்த மாதிரிப் புத்தகங்கள் தானே வைத்திருக் கிறீர்கள்?''

''ஆமாம் ஆனால் எல்லாம் முதல் நம்பர் ஏமாற்று!'' என்றவாறு பெட்டியைத் திறந்து காட்டினாள் ஷோபா.

அவன் பெட்டியோடு அவைகளை வாங்கிக் கொண்டு, ஒவ்வொரு புத்தகமாய்ப் பார்க்கலானான்.

''த சைக்காலஜி ஆஃப் நிர்வாணா-நான் படித்திருக்கிறேன். இந்தியன் புத்திஸம்- நல்ல புத்தகம். இது என்ன புதிசாய்? ஏஜ் ஆஃப் வினயா... மிச்ரா எழுதியதா?...''

'இவர் எவ்வளவு நல்லவராக இருக்கிறார்!' என்றெண்ணியபடி, தற்செயலாய்க் குனிந்து பார்த்த ஷோபா, வாழ்க்கையில் என்றும் அறிந்திராத அதிர்ச்சியை அடைந்தாள்.

டீப்பாயின் மீது, கண்ணாடி விரிப்பின் கீழே இருந்த அந்த விஸிட்டிங் கார்டு-

''ராம்புத்ரா' என்ற பெயரைக் காட்டியது.

ஷோபாவுக்கு ரத்தம் உறைத்த மாதிரி அச்சமேற் பட்டது. இவ்வளவு நேரம் ரவி என்று நினைத்துக் கொண்டு உரையாடியது, உண்மையில் ராம்புத்ராவா? எப்படி இந்தத் தவறு...

தன் திகிலைச் சாமர்த்தியமாக மறைத்துக் கொள்ளவே அள்க எண்ணினாள். ஆனால் அதற்குள் அவன் அந்த விஸிட்டிங் கார்டை நோக்கிவிட்டுத் தன்னையும் நோக்கு வதை உணர்ந்து விட்டாள்.

''அன்ப்ளஸென்ட் ஸ்ர்ப்ரைஸ்? இல்லையா ஷோபா?'' என்று விகாரமாய்ச் சிரித்தான் அவன் ''ஆனால் எனக்கு அப்படியில்லை இப்போதுதான் கீர்த்திசிங்கா போன் செய்தார்- நீ வந்தாயானால் பெட்டியோடு பிடித்து வைத்துக் கொள்ளச் சொல்லி!''

ஷோபா சட்டென எழுந்து கொள்ள முயன்றாள். ஆனால் பெரும் இரும்புக் குண்டுகளைக் கட்டிய மாதிரி கால்கள் கனத்தன. ''நீங்கள்... நீங்கள்...'' என்று திணறினாள்.

''நான் ராம்புத்ராதான். ரவி இல்லை. அவருடைய புதுக் காரை நேற்றுத்தான் விலைக்கு வாங்கினேன். பழகிய டிரைவர் இருப்பது நல்லதென்று அவருடைய டிரைவரையும் நானே அமர்த்திக் கொண்டேன். புத்த பகவானின் கருணையே கருணை! இல்லையா மிஸ் ஷோபா?''

அவன் பெட்டியை மூடிவிட்டு எழுந்தான்.

'எந்தப் பெட்டியை எதிராளியிடம் தரக் கூடாதோ அதைக் கொடுத்து விட்டோம்! யாரிடம் போக வேண்டாமென்று கௌரி எச்சரித்திருந்தானோ அவனிடமே வந்து மாட்டிக் கொண்டோம்! என்ன முட்டாள்தனம்!' என்று எண்ணினாள் ஷோபா. ஒரு வினாடி முன் நல்ல இளைஞனாகத் தோன்றிய ராம்புத்ரா இப்போது மலை போன்று வடிவெடுத்த அரக்கனாக அவள் எதிரில் நின்றான்.

**எ**ந்த நிமிடத்திலும் அப்பா வரக்கூடும் என்று கேள்விப்பட்டது முதல் கௌரிக்கு இருப்புக் கொள்ள வில்லை.

ஷோபாவுடனே தனியே இருக்கக்கூடிய சந்தர்ப்பம் கெட்டுவிடுமே என்பதற்காக அவன் ஏங்கவில்லை; அவள் கொண்டுவரும் பெட்டியை ஆராயவும், தொடர்ந்து என்ன செய்ய வேண்டும் என்று ஷோபாவுடன் விவாதித்து முடிவு கட்டவும் முடியாமல் போகுமே என்றுதான் சலித்துக் கொண்டான். வாசல்பக்கம் தலையைக் காட்டக்கூட அவனுக்குப் பிடிக்கவில்லை.

ஆகவேதான், வாசலில் ''சார்!'' என்று யாரோ கூப்பிடுவது கேட்டபோது உடனே அவன் போய்ப் பார்க்கவில்லை. ''போஸ்ட் சார்!'' என்று இரண்டாம் முறை

குரல் கேட்கவே, வெளியே சென்று தபாலை வாங்கிக் கொண்டான்.

''சிரஞ்சீவி கௌரிக்கு,'' என்ற உலகநாதனின் கையெழுத்தைக் கண்டதும், தன்னை மறந்த பரபரப்புடன் உறையைப் பிரித்தான்.

''அண்ணே! நான் என் சகலை வீட்டுக்குப் போகிறேன். நாளைக் காலைதான் வருவேன்,'' என்று சமையற்காரன் சொல்லிக்கொண்டு புறப்படுவதுகூட அவனுக்குக் கேட்கவில்லை.

''ரயிலில் ஏறும்போதே அந்த ரவியைச் சந்தித்து விட்டேன்...'' என்ற முதல் வரிகளைப் படித்தான். அவனுக்குக் கண்கள் இருண்டுகொண்டு வந்தன.

## இருபத்தொன்று

ரவியைச் சந்தித்தாரா! பம்பாய் போகும் ரயிலிலா! என்ற விபரீதம் நிகழ்ந்திருக்குமோ இதற்குள்!

நடுங்கும் கரங்களுடன் கௌரி தொடர்ந்து படித்தான் உலகநாதனின் அந்த நீண்ட கடிதத்தை:

எங்களை ஏற்றி வழியனுப்பிவிட்டு நீ போய் விட்டாய். அதே விமானத்தில் என்னுடன் பிரயாணம் செய்யப் போகிறவர் யார் என்று நீ பார்க்கவில்லை. நான் கவனித்துவிட்டேன். ரிசர்வேஷன் பட்டியலில் 'ரவி' என்ற பெயரைக் கண்டதுமே எனக்கு நரம்பெல்லாம் புடைக்கிற மாதிரி இருந்தது. உலகத்தில் ஆயிரம் ரவி என்று சமாதானப்படுத்திக் கொண்டேன்.

ஆனால் புறப்படுவதற்குச் சில நிமிடங்கள் முன்பு அந்த ரவி என்பவன் அவசர அவசரமாக ஏறிக் கொண்டு என்

பக்கத்து சீட்டில் உட்கார்ந்ததும் என் எதிரியான ரவிதான் என்று எனக்கு பலமாகத் தோன்றிவிட்டது. அவன் வாலிபப் பிராயமாக இருந்தான். வழியனுப்ப வந்த செகரட்டரியிடம் லவுஞ்சில் பேசியதிலிருந்து அவன் மதறாஸிலும் பம்பாயிலும் மாறி மாறி வசிக்கிறவன் என்றும் புரிந்தது. அந்த செகரட்டரி ஒரு கேள்வி கேட்டான். ''அந்தப் பௌர்ணமி அச்சகத்துக்கு என்ன சொல்லட்டும்? யாரோ வந்து விசாரித்ததாகச் சொல்கிறான். ரொம்பப் பயப்படுகிறான்,'' என்றான். காதைத் தீட்டிக் கொண்டு கேடடேன். இந்த ரவி உடனே, ''அதெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். கவலைப் பட வேண்டாம் என்று சொல்,' என்றான்.

கௌரி! எனக்கு அந்தச் சமயத்தில் எப்படி இருந்தது தெரியுமா? நாம் பம்பாயில் தேடிப் பிடிக்க நினைத்திருந்த ஆள் இதோ என் அருகிலேயே இருக்கிறான்! நெடு நாள் பழகியவன் போல் புன்னகை செய்கிறான்! எப்படித்தான் என்னை நானே அடக்கிக்கொண்டு பதிலுக்குப் புன்னகை செய்தேனோ! நினைத்தால் ஆச்சரியமாயிருக்கிறது.

உன் அண்ணி வெகு நாள் கழித்து விமானப் பிரயாணம் செய்கிறாள். அதுவும் என்னுடன் கூட. குழந்தை மாதிரி ஏதேதோ கேட்டுக் கொண்டே வந்தாள். ஒப்புக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தேன்.

நள்ளிரவு ஒரு மணி இருக்கும். அவன் எழுந்து பாத் ரூம் பக்கம் சென்றான். இரண்டு மூன்று நிமிடம் ஆகியும் திரும்பி வரக் காணோம். அதைப் பற்றிக் கொஞ்சம் ஆச்சரியம் ஏற்பட்டதோடு, அவனை பாத் ரூமிலேயே மடக்கிவிட்டாலென்ன என்ற ஐடியாவும் தோன்றியது. ஓசைப்படாமல் எழுந்து போய்ப் பார்த்தேன்.

தூக்கி வாரிப் போட்டது அந்தக் காட்சி! பாத்ரூமுக்கு வெளியே நடைவழியில் உட்கார்ந்திருந்தான் அந்த ரவி ஆனால் அடியோ காயமோ இல்லை. உணர்வோடு முழு நினைவோடு, கண்களைத் திறந்து கொண்டு, ஒரு தினுசாய்க் கோணினாற்போல் தடுப்புப் பலகையில் சாய்ந்து கொண்டு தரையில் கிடந்தான் அவன் முகத்தில் அளவற்ற வேதனை பரவியிருந்தது.

விமானப் பணிப்பெண் யாரையும் காணோம்.

என்னைக் கண்டதும், ''நல்ல சமயம் வந்தீர்கள் சார். என் சூட்கேசின் வெளிப்புறப் பையில் மாத்திரை இருக்கிறது. தயவு செய்து எடுத்து வருகிறீர்களா?'' என்றான்.

''என்ன உங்களுக்கு?'' என்று திடுக்கிட்டுக கேட்டேன்.

''ஒன்றுமில்லை. என் உடம்பில் ஒரு சின்னக் கோளாறு,'' என்றான்.

எனக்கு என்னவோ போலிருந்தது. அவனுக்குக் கடுகத்தனை உதவியும் செய்யக் கூடாதென்று ரொம்பப் பிடிவாதமாய் என்னை நான் தடுத்துக் கொள்ளப் பார்த்தேன். ஆனால் என்னையும் அறியாமல் என் கால்கள் அவன் சீட்டுக்கு சென்றன. செங்கமலம் தூக்கத்தில் கொஞ்சம் விழித்துக் கொண்டு, ''என்னங்க?'' என்று முனகினாள். ''ஒன்றுமில்லை,'' என்று அவளுக்குச் சொல்லிவிட்டு, அவன் சூட் கேஸைத் திறந்து மாத்திரையை எடுத்துக் கொண்டேன். கூடவே என் கூஜாவிலிருந்து ஒரு டம்ளர் தண்ணீரும் கொண்டு போனேன்.

அவன் இடது கையால் அதை வாங்கிக் கொண்டு, இடது கையாலேயே மாத்திரையை வாயில் பேட்டுக் கொண்டான். இடது கையாலேயே தண்ணீரைக் குடித்தான்.

அவன் உடம்பில் வலது பக்கம் செயலற்றுப் போயிருக்கிறது என்று ஊகித்துக்கொண்டேன்.

ஆனால் அந்த மாத்திரை ரொம்ப அற்புதமானது. விழுங்கிய சில வினாடிக்கெல்லாம் அவன் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டான். என் கையைப் பிடித்து எழுந்து கொண்டு தன் ஸீட்டுக்குத் திரும்பினான். பிளாஸ்கிலிருந்து கொஞ்சம் சூடாகப் பானம் எதையோ எடுத்துக் குடித்ததும் அவன் முகத்தில் களை ஏற்பட்டது. ''நீங்கள் மட்டும் தற்செயலாக வந்து பார்த்திருக்காவிட்டால், மணிக் கணக்கில் நான் அப்படியே கிடந்திருப்பேன்,'' என்றான்.

''சின்ன வயது முதலே இந்தக் கோளாறு இருக்கிறதா?'' என்று விசாரித்தேன். எனக்கு அவனுடன் பேசவே பிடிக்கவில்லை. பேசப் பேச அவனிடம் ஏற்பட்டுள்ள கோபம் குறைவதை உணர்ந்ததால் ரொம்ப வெறுப்பாகவும் இருந்தது.

''இப்போதுதான் திடீரென்று ஒரு மாதமாய் இந்தக் கோளாறு ஏற்பட்டிருக்கிறது. திடீர் திடீரென்று வலது பக்கம் பூரா மரக்கட்டை மாதிரி ஆகி விடுகிறது. இந்த மாத்திரை சாப்பிட்டால்தான் குணமாகிறது... ஆனந்த தேரா என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பெரிய புத்த பிட்சு,'' என்றான். ''தெரியும்,'' என்றேன். ''அவர்தான் எனக்குக் குருநாதர். அவரிடம் சொன்னேன். 'ஏதாவது விளையாட்டாய்த் தப்புப் பண்ணியிருப்பாய். அதை நினைத்து வருத்தப்படு புத்த பகவானிடம் மன்னிப்புக் கேள். சரியாகிவிடும்' என்றார். கொஞ்ச நாளாய் அதுதான் செய்து வருகிறேன்,'' என்றான் அவன்.

அவனை துருவுவதற்காக, ''உங்களைப் பார்த்தால் தப்புச் செய்கிறவர் மாதிரி தோன்றவில்லை,'' என்றேன் வேண்டுமென்றே.

''இல்லையில்லை. உங்களுக்குத் தெரியாது. பழி வாங்கும் எண்ணம் என்னிடம் ரொம்ப உண்டு. ரங்கசாமி அண்ட் கோ ரங்கநாதனைத் தெரியுமா?'' என்றான்.

என் திகைப்பு இன்னம் பெரிதாயிற்று. ''ஆமாம்,'' என்றேன்.

''அவர் என்னை முன்பொருமுறை ஏமாற்றிவிட்டார். அதற்காக, அவருடைய பெண்ணுக்குக் கல்யாணம் என்று போலி அழைப்பிதழ் அச்சிட்டு, எல்லாருக்கும் அனுப்பி அவர் குடும்பத்தின் மானத்தை வாங்கினேன். அது தப்பான காரியம் தானே? நான் கொஞ்சம்கூட எதிர்பாராமல், அதன் விளைவாக யாரோ ஒரு இளைஞன் தற்கொலை செய்து கொண்டான் என்று கூடக் காதில் விழுந்தது. அந்தப் பாவமெல்லாம் தான் என்னை இப்படி வாட்டுகிறது. இனிமேல் அந்த வழிக்குப் போகப் போவதில்லை,'' என்று அவன் சொன்னான்.

''இதெல்லாம் பசப்பு வார்த்தை. இதிலே மயங்கி, இவனை விட்டு விடுவதா!' என்று எனக்குள் நான் விவாதித்துக் கொண்டிருந்த சமயம் அவன் இன்னொரு குண்டைத் தூக்கிப் போட்டான். ''எனக்கு அண்ணன் கிடையாது. நீங்கள் என் அண்ணா மாதிரி எங்கிருந்தோ வந்து என்னைக் காப்பாற்றி விட்டீர்கள்!'' என்றான்.

கௌரி! என்னைப் பைத்தியமென்று நீ நினைத்தாலும் சரி. அந்த வினாடியில் அவன் முகத்தை ஏறிட்டுப் பார்த்தபோது, என் அருமைத் தம்பி ராகவ்வின் முகத்தை அப்படியே கண்டேனடா, கௌரி! 'அண்ணா! என்னைத் தான் ஏற்கனவே ஒரு முறை கொலை செய்து விட்டார்களே! இன்னொரு தடவை நீங்கள் வேறு கொல்லப் போகிறீர்களா?' என்று ராகவ் கேட்கிற மாதிரியே இருந்தது. அடுப்பில் ஒரு

கை தண்ணீரை வீசியடித்த மாதிரி என் ஆத்திரம் பொசுக்கென்று அணைந்து போய் விட்டது.

ஆகக் கூடி நீ பயந்தபடி எதுவும் நடக்கவில்லை. பம்பாயில் சௌக்கியமாக உன் அண்ணியின் உறவினர் வீட்டில் தங்கியிருக்கிறேன்.''

கடிதத்திலிருந்த விஷயத்தின் திகைப்பிலிருந்து கௌரி விடுபடுமுன் —

காலடியோசை கேட்டது.

அவன் அப்பாதான்!

'என்னப்பா, ஒரு கடுதாசி போட்டுவிட்டு வரக்கூடாதா?' என்றான் சலிப்புடன்.

''நான் ஒரு அனாதைடாப்பா குழந்தை!'' கண்ணைத் துடைத்துக் கொண்டார் அவர். ''இவ்வளவு சொல்கிறாயே, என் வைத்தியச் செலவுக்காவது மாசாமாசம் பணம் அனுப்பக் கூடாதா?''

''அப்பா, இப்படி என்னுடன் வாருங்கள்,'' என்று அவரைக் கார் ஷெட்டுக்கு அழைத்துப் போனான் கௌரி. கதவுகளைத் திறந்து விட்டான். ''அதோ பார்த்தீர்களா அப்பா?'' என்று துணிகள் போட்டிருந்த நைலான் கயிற்றைக் காட்டினான்.

''என்னடா குழந்தை அதிலே?''

''ஒரு பாண்ட், ஒரு சட்டை, ஒரு வேட்டி, துண்டு இரண்டு பனியன். இவ்வளவுதான் அப்பா என் ஆஸ்தி. அப்புறம் இதைப் பாருங்கள்.'' சுவரலமாரியின் கதவைத் திறந்து, ஒரு டிரங்குப் பெட்டியைக் காட்டினான். கண்ணாடி, சீப்பு, ஒரு டயரி, பிளேடு, ரேசர் முதலியவை

யும் இரண்டொரு கைக்குட்டைகளும் இருந்தன. மேல் மூடியிலிருந்து 'அறை'யில் ஒரு பழைய பர்ஸ் இருந்தது. அதைப் பிரித்தான். ''அட! உங்கள் அதிர்ஷ்டம் ஒரு பத்து ரூபாய் நோட்டு இருக்கிறது! எடுத்துக் கொள்ளுங்கள்.''

அவர் அதை வாங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டு, பனியன் உட்புறமிருந்த பைக்குள் பத்திரப்படுத்திக் கொண்டார். ''சரிடாப்பா குழந்தை, என்னால் உனக்கேன் கஷ்டம்? நான் புறப்படுகிறேன்.''

''கொஞ்சம் பொறுமையாயிருங்கள், அப்பா. நல்ல காலம் வரும். உங்களை இங்கேயே அழைத்து வைத்துக் கொள்கிறேன்,'' என்று வாசல் வரை வந்து வழி யனுப்பினான் கௌரி.

''ஹூம்! என்னவோப்பா. அந்தக் கிருஷ்ணசாமி உன்னை என்கிட்டே கொடுக்காமல் வேறே யார் கிட்டே யாவது ஒப்படைத்திருந்தால் நீ நன்றா யிருந்திருப்பாயோ என்னவோ...''

''கிருஷ்ணசாமியா! யாரையப்பா சொல்கிறீர்கள்?''

''உன் சொந்தத் தகப்பனாரை தாண்டா குழந்தை சொல்கிறேன். போயும் போயும் உன்னை என்னிடமா ஒப்படைக்க வேண்டும்?...''

கௌரிக்குப் புதிதாயிருந்தது அவர் கூறிய தகவல். ''என்ன... என்னப்பா நீங்கள் சொல்வது? நான் ... நீங்கள் என்...''

''ஆமாம்டா, குழந்தை! நீ என் தத்துப் பிள்ளைதான். நானும் உன் அப்பா கிருஷ்ணசாமியும் கோயமுத்தூரிலே, ஒப்பணக்காரன் தெருவிலே, ஒரே வீட்டிலே ஒண்டுக் குடித்தனம் இருந்தோம். உன் அம்மா உன்னைப் பெற்ற

பத்தாம் நாள் போனாள். கிருஷ்ணசாமி ஒரு வருஷத்திலே போய் விட்டான். என் கிட்டே உன்னைக் கொடுத்து- இப்பத்தான் போலேயிருக்கிறது- 'நீ தான் இந்த அனாதைக் குழந்தையை வளர்க்கணும்' என்று சொல்லி...ஹூம்! எதற்கு அதெல்லாம் பழைய கதை? நான் யார் கிட்டேயும் சொல்வதில்லை... வரட்டுமாடா குழந்தை?''

கௌரிக்கு உடம்பெங்கும் ஒரு பதைபதைப்பு ஏற்பட்டது. நம்ப முடியாத அந்தப் புதிய சேதியைக் கேட்டதும், மின்னலடித்தாற்போல இன்னொரு விஷயம் ஞாபகம் வந்தது.

''இருங்கள் அப்பா... நான் வேறொருவர் பிள்ளை என்றால்... அதாவது, நான் உங்களுடைய கோத்திரத்தைச் சேர்ந்தவனில்லை? அப்படித்தானே?''

''சுவீகாரத்துக்குப் பிறகு என் கோத்திரம் தானே நீ?''

''அதில்லையப்பா... அதற்கு முன்பு?''

''அதுவா... வந்து... இரு...'' அவர் யோசித்தார். ''ஆமாம், ஆமாம். கிருஷ்ணசாமி சொல்லியிருக்கிறான். நீ கோதம கோத்திரம். நன்றாய் நினைவிருக்கிறது. என்னவோ இனி மேலாவது உனக்கும் எனக்கும் நல்ல காலம் பிறந்தால் சரி...''

அவர் பேசிக் கொண்டே போய் விட்டார். ஆனால் காலில் ஆணியடித்த மாதிரி கௌரி சிலையென நின்றான். கார் ஷெட்டிலிருந்து பார்த்த போது, அந்தப் பெரிய தோட்டத்தின் மூலைகளில் வளர்ந்து பூத்திருந்தத கல்ப புஷ்பச் செடிகள் நிமிர்ந்து நிற்பது கண்ணில் பட்டது. அதில் பூத்திருந்த மலர்கள் அவனை நோக்கிச் சிரிப்பது போலிருந்தது.

'நான்... நானே கோதம கோத்திரத்தைச் சேர்ந்தவனா!... வேறு யார் யாருக்கோ அபாயமிருப்பதாக நினைத்திருக்க... கடைசியில் நானே... நானே...!' எண்ணிப் பார்க்கக் கூட அவனுக்குப் பயமாயிருந்தது. சமையற்காரன், தோட்டக்காரன், யாருமே இல்லாத பிரம்மாண்டமான பங்களாவில் தன்னந்தனியே இருக்கிறோம்... அச்சம் அவன் உடலைக் குலுக்கியது.

இப்போது பார்த்து, இந்த இடத்துக்குப் பார்த்து, ஷோபாவை வரச் சொன்னோமே என்பதை எண்ணு கையில் அவன் திகில் மேலும் பெருகியது.

ராம்புத்ராவின் இளிப்பையும் நச்சுக் கலந்த பேச்சையும் கண்டபோது ஷோபாவுக்கு எதுவும் தோன்றவில்லை.

பளிச்சென்று புன்னகையை எப்படியோ முகத்தில் வரவழைத்துக் கொண்டாள்.

''ஸாரி, உங்களிடம் புத்தகங்களைமட்டும்தான் தரச் சொன்னார் கீர்த்திசிங்கா, பெட்டியைத் தரும்படி உத்தரவிடவில்லை.'' டக்கென்று பெட்டியை அவனிட மிருந்து எடுத்துக் கொண்டாள்.

ஆனால் ஒரடி எடுத்து வைக்கு முன் ஏதோ தடுக்கிய மாதிரி இருந்தது. திரும்பி நோக்கினாள். அவளுடைய புடவையின் நுனியை அவனுடைய செருப்புக்கால் மிதித்துக் கொணடிருந்தது அழுத்தமாக.

''பெட்டி!'' என்று கை நீட்டினான் அவன்.

தலை சுழல, நாக்கு உலர, இதயம் படபடக்க, ஷோபா அவனை நிமிர்ந்து பார்த்த அதே வினாடி —

''ஷோபா!'' என்று ஓர் அழைப்பு வாசற்புறமிருந்து வந்தது.

ஹாலின் கதவருகே நந்தினி நின்றிருந்தாள். ''என்னம்மா ஷோபா, உன் அப்பா உன்னைத் தேடிக் கொண்டு ஊர் பூரா அலைந்து கொண்டிருக்கிறார். நீ இங்கே வந்ததைப் பார்த்ததால் உடனே அழைத்து வந்தேன். வாசலில் போலீஸ் ஜீப்பில் காத்திருக்கிறார் பார்!' என்றாள் அவள்.

கண்ணிமைக்கும் நேரம் தான். ''அப்பாவா! எங்கே இருக்கிறார்?'' என்றபடி வாசல் பக்கமாகப் பாய்ந்து விட்டாள் ஷோபா. நந்தினி அவளை அணைத்தாற்போல் பரபரவென்று அழைத்துக்கொண்டு நடந்தாள் தெருவுக்கு. ஒரு வினாடி ஏமாந்து விட்ட ராம்புத்ரா ''ஷோபா!'' என்ற ஆத்திரத்துடன் கூவியபோது அந்தப் பெண்கள் இருவரும் தெருவை அடைந்து விட்டார்கள்.

வெளியுலகத்தையும் வெளிச்சத்தையும் கண்டபிறகு தான் ஷோபாவுக்கு மூச்சு சீராக வந்தது. ''எங்கே என் அப்பா?'' என்றாள் நாலுபுறமும் நோட்டமிட்டுவிட்டு.

''நட வேகமாக,'' என்று அவளைக் கிட்டத்தட்ட இழுத்தாற் போலவே அழைத்துப் போனாள் நந்தினி. ''நானும் உன்னைப் போல ஏமாந்தவள்தான். அந்தக் காரைப் பார்த்துவிட்டு ரவிதான் 'இருக்கிறாராக்கும் என்று எண்ணி, உனக்குப் பின்னாலேயே உள்ளே வந்தேன். அவன் என்னைக் கவனிக்கவில்லை. அவன் ரவியல்ல என்று உடனேயே எனக்குத் தெரிந்துவிட்டது. ஆனால் நீ அவனை ரவி என்று நினைத்துக் கொண்டு பேசியபோது அவன் மறுக்காமல் இருந்ததால் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

மறைவாக நின்றிருந்தேன். அவன் உன்னை மிரட்டத் தொடங்கியதும் தந்திரமாகக் குறுக்கிட்டேன்.'

''ரொம்ப நன்றியம்மா,'' என்றாள் ஷோபா, தழுதழுத்த குரலில்.

''அது இருக்கட்டும்... என்ன இருக்கிறது இந்தப் பெட்டியில்? அந்தத் திரிசரண அபிமானிகள் சங்கம் என்பது...''

''அது பெரிய கதை. இன்னொரு நாளைக்குச் சொல்கிறேன். என்னை மன்னியுங்கள். இப்போது நான் உடனடியாகப் போக வேண்டும்.''

''தனியாகப் போவாயா? நான் துணைக்கு வரட்டுமா?''

''இனிமேல் பயமில்லை. நீங்கள் சிரமப்பட வேண்டாம்.'' என்ற ஷோபா ஒரு கைகாட்டி நிறுத்தினாள்.

''பத்திரமாகப் போ. சீக்கிரம்,'' என்று கூறி அவளை அனுப்பினாள் நந்தினி.

கௌரியின் வீட்டுக்கு ஓட்டச் சொன்னாள் ஷோபா.

## இருபத்திரண்டு

நந்தினியின் முன்னிலையில் தைரியமாகப் பேசி அனுப்பி விட்டாளேயொழிய, டாக்ஸி ஓடத் தொடங்கியதும், ஷோபாவுக்குப் பயம் உதித்தது. திரிசரண அபிமானிகள் சங்கம் என்பது ஆயிரம் கால் கொண்ட ராட்சசப் பூச்சியாதலால் எந்தக் கால் எங்கிருந்து நீண்டு தன்னைப் பிடிக்குமோ என்ற அஞ்சினாள். ஏன், இந்த ஆட்டோ டிரைவரேகூட அவர்கள் ஆளாக இருந்து, தற்செயலாக வந்ததுபோல் வந்திருக்கலாம் அல்லவா?

தன்னைச் சுதாரித்துக்கொண்டவளாக, தொண்டையைக் கனைத்துக் கொண்டாள். ''வண்டி நன்றாய் வைத்துக் கொண்டிருக்கிறீர்களே? சொந்த ஆட்டோவா?'' என்று வேண்டுமென்றே பேச்சுக் கொடுத்தாள்.

''இல்லேம்மா. தில்லக் கேணியிலே ஒரு சேட்டோட வண்டி. பதினெழு ஆட்டோவுக்கு ஓனர் அவர்.'' என்று ஆரம்பித்த டாக்ஸி டிரைவர், அந்த சேட்டின் கருமித்தனம், போலீஸ்காரர்களின் கெடுபிடி, 'எம்ப்டி' வண்டியை ஓட்டுவதிலுள்ள நஷ்டம் — இப்படிப் பல விஷயங்களையும் பற்றி வளவளவென்று பேசிய பிறகு ஷோபாவின் அச்சம் சிறிது சிறிதாகக் குறைந்தது. பின் ஸீட்டின் மூலையில் ஒண்டிக் கொண்டிருந்தவள், தைரியமடைந்து தாராளமாய் நகர்ந்து உட்கார்ந்து கொண்டாள். சாலையின் பின்புறத்தையும் கவனித்தாள்.

துணுக்கென்றது. பின்னாலேயே வந்து கொண்டிருந்த ஒரு காரைக் கண்டதும்.

அதை ஓட்டி வந்தவன் ஓர் இளைஞன். பிடரி வரை கருகருவென்ற வளர்ந்து தொங்கிய சிகை, மோவாய் வரை வந்திருந்த ஸைட் பர்ன், புஸ்ஸென்று அடர்த்தியுள்ள மீசை-ஊகூம். இவனை எங்கேயும் பார்த்தது கிடையாது என்று உறுதியாகத் தனக்குச் சொல்லிக்கொண்டாள் இல்லை, இல்லை. நிச்சயமாக எங்கேயோ பார்த்திருக் கிறோம் என்று உள்ளறிவு கூறிற்று. பழையபடி ஸீட்டின் மூலைக்கே திரும்பி மறைந்து கொண்டாள். மீண்டும் ஆவலைக் கட்டுப்படுத்த முடியாமல் வெகு ஜாக்கிரதையாகத் திரும்பிப் பார்த்தபோது அந்தக் கார் பின் தொடர்ந்து வந்து கொண்டுதான் இருந்தது. டாக்ஸிக்கும் தனக்கும் இடையே அளந்து வைத்துக்கொண்டாற் போல் ஒரே சீரான இடைவெளி கொடுத்தவாறு அது வந்துகொண்டிருந்த

நிதானம் அவளுக்குப் பீதி உண்டாக்கியது. அபாயம் என்பது ஒரு காராக வடிவமெடுத்து அடி அடியாக அவளை நோக்கி வருவது போல அவள் உணர்ந்தாள்.

கௌரியின் வீடு இருக்கும் தெருவில் திரும்பிய பிறகு அவளுக்குச் சிறிது படபடப்பு குறைகிற மாதிரி இருந்தது. பின்னால் எந்தக் காரும் தொடரக் காணோம். நாமாகத்தான் எல்லாவற்றையும் கற்பனை செய்து கொண்டோமோ என்றுகூட எண்ணினாள். அந்த ப்ரீஃப் கேஸைப் பத்திரமாக அணைத்துக் கொண்டு பர்சைத் திறந்தபோது உள்ளிருந்து வேகமாகக் கௌரி வந்தான். ''ஷோபா! இங்கே நிற்க வேண்டாம். உள்ளே போ. நான் ஆட்டோவை அனுப்புகிறேன்.'' என்றான்.

தான் வந்திருக்கும் அபாயமான நிலைமை அவனுக்க எப்படித் தெரிந்தது என்று ஆச்சரியப்பட்ட வண்ணம் ஷோபா கார் ஷெட்டினருகே நின்றிருந்தபோது, ஆட்டோவுக்குப் பணம் கொடுத்தனுப்பிவிட்டுக் கௌரி திரும்பி வந்தான். அவன் முகத்திலும் கலவரம் படர்திருந்தது. ''உன்னை இங்கே வரவேண்டாமென்று சொல்வதற்காகக் கடந்த அரை மணி நேரமாய் உன் வீட்டுக்குப் போன் பண்ணிக்கொண்டேயிருக்கிறேன். மணி அடிக்கிறது. ஆனால் யாரும் எடுக்கவில்லை. சரி, சரி, வீட்டுக்குள் வந்துவிடு,'' என்று அவள் கைகளைப் பற்றினான்.

அந்த ஸ்பரிசத்தில் இழந்த சக்தியனைத்தும் திரும்பி வருவது போல் தோன்றியது. ''ஜில்லென்று ஒரு டம்ளர் தண்ணீர் கொடுங்கள், கௌரி. ஃப்ரிஜ் இருக்கிறதா?'' என்றாள்.

''கொள்ளையாய் இருக்கிறது. இப்படி வா,'' என்று செங்கமலத்தின் அறைக்கு அவளை அழைத்துச் சென்றான் கௌரி. அங்கிருந்த ஃபிரிட்ஜியிலிருந்து ஐஸ் வாட்டர் ஒரு கிளாஸ் எடுத்துக் கொண்டு திரும்பிய போது, அவள் மின்சார விசிறியைத் திருகிவிட்டுத் தரையிலேயே உட்கார்ந்து விட்டாள் அலுப்புடன். சில நாட்களாக அனுபவித்து வந்த படபடப்பு கௌரியைக் கண்ட மாத்திரத்தில் பறந்து விட்டதென்றாலும், உள்ளத்தின் குழப்பம் தீர்ந்தபாடில்லை. அத்துடன் கௌரியும் ஏன் பதற்றமாக இருக்க வேண்டும் என்று அவளுக்குப் புரியவில்லை.

''இந்தா குடி,'' என்று அவளை அணைத்துத் தாங்கிக் கொண்டு கிளாஸை அவள் உதடுகளில் வைத்தான் கௌரி. ஷோபா உறிஞ்சிப் பருகினாள்.

''பெட்டியை எடுத்துக் கொண்டு நேராய் இங்கு தானே வருகிறாய்? ஏன் என்னவோ பயந்த மாதிரி இருக்கிறாய்?''

மன்னிப்புக் கேட்கும் பாவனையில் அவன் கண்களை ஏறிட்டு நோக்கினாள் அவள். ''ராம்புத்ரா வீட்டிலிருந்து வருகிறேன். கௌரி.''

''உன்னை அங்கே போக வேண்டாமென்று சொன்னேனே ஷோபா?'' அவன் குரல் கோபத்துடன் ஒலித்தது.

''என்னை மன்னியுங்கள், கௌரி. ஒரு விஷயத்தை உங்களிடமிருந்து மறைத்து வந்தேன்... அதற்குத் தண்டனை கிடைத்தது...'' என்று தலை குனிந்து கொண்டே ரவியின்

கதையைக் கூறி முடித்தாள். காரைப் பார்த்து, ரவியாக இருக்குமோ என்ற எண்ணத்தில் ராமபுத்ரா இல்லத்தினுள் நுழைய நேரிட்டதையும் சொல்லி முடித்தாள். ''கௌரி, என் அப்பாவைப் பற்றி... அவரால் என்னைப் பற்றி... மட்டமாக நினைத்து விடுவீர்கள் என்றுதான் இதையெல்லாம் மறைத்தேன். என் மேல் கோபமா?''

''என்னை மன்னியுங்கள் ஸ்வாமி என்ற அபிநயம் மட்டும் பிடிக்காதே!'' என்று சிரித்தான் கௌரி. அவள் குடும்பத்தின் மாஜி எதிரி இந்நேரம் பம்பாயில் உலகநாதனின் சிநேகிதனாக இருக்கிறானென்ற விஷயத்தைச் சொல்ல நினைத்தான். ஆனால் அதற்கெல்லாம் இது நேரமில்லை.

''ஷோபா! இந்த இடத்தை விட்டு நாம் இரண்டு பேரும் கிளம்பிவிட வேண்டும். ராம்புத்ராவின் வீட்டைக் காட்டிலும் அபாயமான இடம் ஒன்று உண்டென்றால் அது இது தான். அப்புறம் சொல்கிறேன் விவரம். இப்போது கிளம்பு முதலில்,'' என்றான்.

''இந்தப் பெட்டியின் சாவியை அங்க விட்டுவிட்டு வந்துவிட்டேனே...'' என்றாள் ஷோபா.

''உங்கள் இருவருக்கும் ஆட்சபம் இல்லையென்றால் இவன் திறந்து தருவான்,'' என்று ஒரு குரல் வந்தது.

திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தார்கள் இருவரும்.

அறை வாசலில் சாவி வளையத்தை விரல் நுனியில் சுழற்றிக் கொண்டு நின்றான், டாக்ஸியின் பின்னே ஷோபாவைத் தொடர்ந்து வந்த அந்த இளைஞன். திமிருடன், ஆனால் மிகச் சகஜமான முறையில் கதவின் மீது சாய்ந்திருந்தான் அவன்.

''யார் நீ?'' என்று கௌரி கேட்கும் போதே, ஷோபாவுக்கு அந்தக் குரல் அடையாளம் தெரிந்து விட்டது.

''கீர்த்திசிங்கா!'' என்று அச்சத்துடன் கூவினாள்.

''கெட்டிக்காரிதான்!'' அவளை மெச்சிக் கொண்டே தலையிலிருந்து 'விக்' கைக் கழற்றிக் கொண்டு உள்ளே வந்து மேஜை மீது வைத்தார் கீர்த்திசிங்கா. அந்த மழித்த தலைக்கும் அடர்த்தியான பொய் மீசைக்கும் பொருத்த மில்லாமல், அவர் முகம் ஒரு காட்டு மிருகம்போல் காட்சியளித்தது. வழக்கமான பிட்சு உடை மாறி, பாண்ட்டும் ஸ்லாக்குமாக அவரைப் பார்க்கையில் ஷோபாவுக்கு மேனி நடுங்கியது.

கௌரிக்கும் கலக்கம்தான். ஆனால் அதை வெளிக் காட்டாமல், ''கடைசியில் உன் வேஷம் வெளிப்பட்டு விட்டது!'' என்றான் பரிகாசமாகச் சிரித்த வண்ணமே.

கீர்த்திசிங்காவின் முகத்தில் ஒர பயங்கரமான சிரிப்புப் படர்ந்தது. ''விளையாடாதே, தம்பி!''

''நீங்கள் புத்தருடன் விளையாடியதைக் காட்டிலுமா நான் அதிகம் விளையாடப் போகிறேன்!''

''கொடு இப்படி அந்தப் பெட்டியை!'' வெடுக் கென்று இழுத்தார் கீர்த்திசிங்கா. கௌரி அதன் பிடியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு தன் பக்கம் இழுத்தான்.

மறு வினாடி, பெட்டி வேறு பிடி வேறாகப் பிரிந்தது

பிரிந்ததோடு அல்ல. கௌரியின் கையிலிருந்த அந்தப் பிடியின் குழாய்க்குள்ளிருந்து, கோலிக் குண்டுகள் போல் மஞ்சளான பத்துப் பதினைந்து உருண்டைகள் உருண்டு தரையில் ஓடின.

பல்லைக் கடித்துக் கொண்டு நின்றார் கீர்த்திசிங்கா. ஒரு கணம் கௌரிக்கும் அது என்ன பொருளென்று புரிய வில்லை. புரிந்ததோ இல்லையோ-

''ஓபியம்! அபின் உருண்டைகள்!'' என்றான், அதிர்ந்து போனவனாக.

''ஆமாம். சரியாகக் கண்டு பிடித்து விட்டாயே!'' என்று வெப்பம் நிறைந்த குரலில் பதிலளித்தார் கீர்த்திசிங்கா. சிதறியோடிய உருண்டைகளைப் பொறுக்கி யெடுத்துப் பாண்ட்பையில் போட்டுக் கொண்டார் அவர். ''சரியாக மட்டுமில்லை. தேவைக்கும் அதிகமாகவே தெரிந்து கொண்டு விட்டீர்கள்! பாவம்!''

திடுதிப்பென்று அவர் கையில் மின்னியது அந்த ரிவால்வர். ''கௌரி!'' என்று ஓடிச் சென்று அவனைக் கட்டிக் கொண்டாள் ஷோபா.

''பயப்படாதே ஷோபா. இவனுடைய குட்டு இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாயத் தெரிய ஆரம்பித்திருக்கிறது! இதுதான் முதல் அத்தியாயம்!'' என்றான் கௌரி.

கீர்த்திசிங்கா சிரித்தார். ''ஏன், மற்ற அத்தியாயங் களையும் தெரிந்து கொள்ள நீங்கள் ஆவலாக இருந்தால் இப்போதே சொல்லக் கீர்த்திசிங்கா தயார். இங்கே யாரும் கிடையாது. அன்னியர் யாரும் வந்து காலட்சேபத்தைக் கெடுத்து விடாதபடி வாசலிலேயும் கீர்த்திசிங்காவின் ஆள் நின்றிகிறான். சொல்லட்டுமா ஷோபா?''

''சொல்லுங்கள் பாகவதரே!'' என்று கௌரி கிண்டல் செய்தான்.

## இருபத்துமூன்று

அறையின் வாசற் புறமிருந்து நாற்காலியில் கால் மீது கால் போட்டுக் கொண்டு அமர்ந்தார் கீர்த்திசிங்கா. ''திரிசரண அபிமானிகள் சங்கம் என்றால் என்னவென்று அறிந்து கொள்ள நீங்கள் இருவரும் அரும்பாடு பட்டீர்கள், இல்லையா?

திரிசரணம் என்பது நீங்கள் முட்டாள்கள் நினைத் திருக்கிற மாதிரி, புத்தம், தர்மம், சங்கம் இல்லை. திடுக்கிடாமல் இருந்தால் கேளுங்கள்! ஓபியம்-மார்ஃபைன்-ஹெராயின் என்கிற மூன்றுதான். இந்த மூன்றின் அருளைப் பெருகிறவனுக்கு, அதைக் காட்டிலும் இன்பமான சுகம் கிடையாது. நரம்புகளைக் குளுமைப் படுத்தி, மனத்தை மிதக்க வைத்து, ஆனந்தமான தொரு நித்திரையில் ஆழ வைக்கும் அந்தப் போதையைக் காட்டிலுமா புத்தர் காட்டிய நிர்வாணம் பெரிது? இல்லை, இல்லை, இல்லவே இல்லை.

அந்த உன்னத நிலைக்கு மனிதனைக் கொண்டு செல்லும் தூய பணியில் எங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம். பரங்கிமலையிலுள்ள எங்கள் மடத்தின் ரகசியமான பகுதிகளுக்கு நீங்கள் வந்திருந்தால், வி.ஐ.பி. க்களுக்குத் தொழிற்சாலைகளைச் சுற்றி காட்டுவது போல் உங்களுக்கும் காட்டியிருப்போம். துறவி யூனிபாரம் அணிந்த பல பேர்கள் இந்த உருண்டைகளைத் தயாரிக்கும் மாபெரும் தொண்டில் எவ்வளவு ஆர்வத்துடன் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதையும் பார்த்திருக்கலாம்.

பரங்கிமலைத் தொழிற்சாலையில் மிகப் பக்குவமாக இந்த அபினி உருண்டைகள் தயாரிக்கப்பட்டு, சென்னை யிலுள்ள எங்கள் உள்நாட்டு வெளிநாட்டு அபிமானிகளுக்கு

அனுப்பப்பட்டு வருகிறது. ரொம்ப உயர்ந்த ரக உருண்டைகள். ஒவ்வொன்றிலும் ஒரு கடுகத்தனை உள்ளே போனால் போதும், மறு நிமிடம் சொர்க்கத்தைக் காணலாம். எங்கள் உருண்டைகள் ஒவ்வொன்றும் ஆயிரக் கணக்கான ரூபாய் விலை மதிப்புள்ளவை...''

தன் குரலைத் தானே ரசித்தவராகக் கீர்த்திசிங்கா பேசிக்கொண்டே போனார். கௌரியின் செவிகள் அதைக் கவனமாகக் கேட்ட கொண்டிருந்தனவாயினும் கண்கள் வாசலையே நோக்கி அலைந்தன. ஏதாவது ஒரு நிழலாடாதா என்று அவன் மனம் ஏக்கத்துடன் தேடியது. தோட்டக்காரன் முன்பே லீவு போட்டதும் சமையல்காரன் தன் சகலையைப் பார்த்துவிட்டு மறுநாள் வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்றதும் வெகு தாமதமாக அவனுக்கு நினைவு வந்து துன்புறுத்தின.

கீர்திசிங்கா தொடர்ந்தார்:

''ஆனால் கொஞ்ச நாளாகச் சங்கத்தின் அறப் பணியில் போலீஸ் இடைஞ்சல்கள் அதிகமாகிவிட்டது. சங்கத்தின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதாகக் காதில் விழுந்தது. நல்ல காரியத்துக்கு எப்படியெல்லாம் தடைகள் வருகின்றன என்றெண்ணி வருந்தினோம். அந்தச் சமயம் பார்த்து பாங்காக்கிலும் ஹாங்காங்கிலும் இருக்கும் எங்கள் கூட்டாளிகள் மேலும் உருண்டைகள் தேவை என்று தந்தி கொடுத்தார்கள். அந்தத் தந்தியின் வாசகங்கள் வெளிப் பார்வைக்கு ஒரு அர்த்தமாயும் உள்ளுக்குள் வேறு இருக்கம். அதற்கென்றே விசேட மொழிபெயர்ப்பு வல்லுனர்களும் எங்களிடம் உண்டு.

உருண்டைகள் தங்குதடங்கலின்றி எங்கள் நண்பர்களுக்குச் செல்ல வேண்டமானால், அவ்வகளைக்

கொண்டு செல்லுகிறவர் பெரிய இடத்தைச் சேர்ந்தவராக, அதுவும் ஒரு பெண்ணாக இருந்தால் நல்லதென்று கீர்த்திசிங்கா நினைத்திருந்த சமயத்தில் ஷோபா வந்து சேர்ந்தாள் போதிசத்துவரின் அருளால். விசேடமாகத் தயாரிக்கப்பட்ட இந்தப் பெட்டியைக் கொடுத்தனுப்பி னோம். பெட்டிக்குள்ளேதான் பொக்கிஷம் இருக்கிற தென்று நீங்கள் எண்ணுகிறீர்கள். ஆனால் பெட்டிக்கு வெளியேயுள்ள கைப்பிடியில் இருக்கிறது பொக்கிஷம். எங்கள் அபிமானிகளுக்கு அது தெரியும். ஒவ்வொருவரும் எத்தனை உருண்டைகள் ஆர்டர் கொடுத்திருக்கிறார்களோ அத்தனை எடுத்துக் கொள்ள வேண்டியது என்று ஏற்பாடு. செல்வி ஷோபா பெட்டியைக் கொண்டு போய் வைப்பாள். புத்தகங்களைத் தருவாள். அவளுடன் பேச்சுக் கொடுத்தபடி, பெட்டியை எடுத்துச் சென்று, கைப்பிடியை-தோழர் கௌரி சற்று முன் செய்தபடி முரட்டுத்தனமாக இழுக்காமல்-நாசூக்காகத் திருகுவார்கள். கழன்று கொள்ளும். உருண்டைகளை எடுத்துக்கொண்டு, கைப் பிடியை முன் போல் திருகி விடலாம்...''

தெருவில் ஒரு பஸ் ஓடும் சத்தம் பெரும் ஓசையாகக் கேட்டது. அந்தச் சத்தத்தில் கீர்த்திசிங்காவின் பேச்சுக் கூடக் கேட்கவில்லை. ஷோபா சிறிது நகருவதற்கு முயற்சி செய்தாள். ஆனால் அவள் உடல் கொஞ்சம் அசைந்ததுமே கீர்த்திசிங்காவின் துப்பாக்கி விறைத்துக் கொண்டு நின்றது. ''வேண்டாம் மகளே. முழுதும் கேட்பதற்கு முன்பு சாகாதே. உன் கட்டை வேகாது,'' என்று சிரித்துவிட்டு மேலும் கூறினார்.

''செல்வி ஷோபா எதிர்பார்த்த அளவுக்கு நம்பிக்கைக்குரியவளாகத் தோன்றாதது வருந்தத் தக்க விஷயம். இல்லையா மிஸ்டர் கௌரி? உங்கள்

இருவருக்குமிடையே சண்டை மூட்டி விட்டாயிற்று என்று கீர்த்திசிங்கா நினைத்தான். ஆனால் ரகசியமாக உங்களுக்குள்ளே தொடர்பு இருந்து வருவது தெரிந்தது. இனி இவளை நம்பக் கூடாது என்ற முடிவு செய்து பெட்டியைத் திரும்பப் பெற முயற்சி பண்ணினான். ஆனால் எங்களையும் மீறிக் கொண்டு புறப்பட்டு விட்டாள். அவன் அதிர்ஷடம்-அல்லது ஷோபாவின் துரதிர்ஷ்டம்-போகக்கூடாத ராம்புத்ராவின் வீட்டுக்குப் போய்ச் சிக்கிக் கொண்டாள். அங்கேயிருந்து ரொம்ப சாமர்த்தியமாகத் தப்பினாலும், இங்கேதான் வருவாள் என்று எதிர்பார்த்தோம். ஓர் ஆளை இந்தத் தெருவிலே உலாவிக் கொண்டிருக்கும்படி அனுப்பிவிட்டு, கீர்த்திசிங்கா இவளைப் பின்தொடர்ந்து வந்து சேர்ந்தான்...''

மீண்டும் சத்தத்துடன் ஒரு பஸ் பங்களாவைத் தாண்டிச் சென்றது. கௌரியின் விழிகள் ஆர்வத்துடன் வாசலை நோக்கின.

''மிஸ்டர் கௌரி! நீங்கள் இருவரும் இனி மேல் பார்க்க வேண்டியது கேவலம் இந்தப் பங்களாவின் வாசல் அல்ல. அந்த வாசல்!'' என்று கையை வானுக்கு உயர்த்திக் காட்டி விட்டு நகைத்தார் கீர்த்திசிங்கா. அவர் கையிலிருந்த துப்பாக்கி கூடச் சிரிப்பது போல் பளபளத்தது.

கௌரியும் சளைக்காமல், ''அந்த வாசலையும் பார்க்க வேண்டியது தான். இதே வீட்டிலிருந்து ஏற்கெனவே ஒருவர் அங்கே போயிருக்கிறாரே-உங்கள் தயவில்!'' என்றான் கிண்டலாக.

''ஓகோ! கீர்த்திசிங்கா அந்த விஷயத்தைச் சொல்ல மறந்துவிட்டான்! இல்லையா?'' என்று கேட்டுவிட்டு, எவ்வித அவசரமுமின்றிப் பேசலானார் கீர்த்திசிங்கா.

''ராகவ் ராகவ் என்று ஒரு வாலிபன். ஆள் அங்கமாக, அழகாக, வாட்ட சாட்டமாக வளர்ந்திருந்தானே தவிர மூளையைப் பொறுத்த மட்டில், ஒரு பெரிய பூஜ்யம். உலகநாதன் என்று அவனுக்கு ஒரு முத்தண்ணா. அந்த ஆள் இன்னும் பெரிய பூஜ்யம்.

தாய்லாந்திலிருந்து அவர்களுக்கேற்ற பைத்தியம் ஒருவன் வந்திருந்தான். விருந்து சாப்பிட்டு விட்டுத் தோட்டத்தைச் சுற்றிக் கொண்டிருந்தவன், சும்மா செடிகளின் அழகை ரசித்துவிட்டுப் போக வேண்டியது தானே? ஒரு செடியைப் பார்த்தான். பௌத்த மதம் பற்றிய புராண இதிகாசங்களில் அவனுக்குப் பைத்தியம் உண்டு போல் இருக்கிறது. 'ஆகா! இது கல்ப புஷ்பம்!' என்று சொல்லி வைத்தான். முட்டாள் ராகவ்வுக்கு அது கப்பென்ற மூளையில் போய் ஒட்டிக் கொண்டு விட்டது.

அந்தப் புஷ்பத்திற்கு என்னென்ன மகிமை உண்டென்று அறியத் துடியாய்த் துடித்தான். யாரிடம் மேற்கொண்டு விசாரிப்பது என்று அவன் தேடியபோது எவனோ எங்கள் சங்கத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறான். புத்த மதப் பிரசாரம், ஆராய்ச்சிகள், கருத்தரங்குகள், வழிபாட்டுக் கூட்டங்கள்-இதெல்லாம் பிரமாதமாக நடத்திக் கொண்டிருப்பதால் எங்கள் பெயர் தான் உடனே ஞாபகம் வரும் எவருக்குமே.

அந்தத் தினம் ரொம்ப நன்றாக நினைவிருக்கிறது கீர்த்திசிங்காவுக்கு. சாயங்காலம் ஐந்து மணி இருக்கும். மடத்தின் ஜன்னல் வழியாகக் குன்றின் அடிவாரத்தைக் கவனித்துக் கொண்டிருந்தபோது அந்த ராகவ் தயங்கித் தயங்கி மேலேறி வந்தான். அடுத்த நிமிடம் கீர்த்திசிங்கா தியானத்தில் ஆழ, உபாகர் கையது கொண்டு மெய்யது பொத்தி நிற்க, சிஷ்ய கோடிகள் தம்ம பதத்தைப்

பாராயணம் செய்ய-அடடா! வந்தவன் அப்படியே மயங்கி விட்டான். பயபக்தியோடு கீர்த்திசிங்காவின் காலில் விழுந்து வணங்கி, பாலிதீன் காகிதத்தில் சுற்றி எடுத்து வந்திருந்த பூவைக் கொடுத்து, தான் கேள்விப்பட்ட கதையையும் சொன்னான்.

பார்த்த மாத்திரத்திலேயே அது என்ன பூவென்று கீர்த்திசிங்காவுக்குத் தெரிந்து விட்டது. அவனுக்கு மெய் சிலிர்த்தது. காரணம், அந்தப் பூவை-அந்தச் செடியை-தமிழ் நாட்டிலே, ஏன் இந்தியாவிலேயே, வேறெங்கும் வளர்க்க முடிந்தது கிடையாது என்று அவனுக்குத் தெரியும். அந்த ஜாதியைச் சேர்ந்த வேறு செடி இருக்கலாம். ஆனால் இந்தச் செடி! இந்தப் பூ! யாரெல்லாமோ எங்கெல்லாமோ வளர்க்கப் பார்த்து, தோல்வியே அடைந்திருக்கிறார்கள்! ஆனால் உலகநாதனின் இந்தத் தோட்டத்திலேயே வந்து அது முளைத்ததே, என்ன அதிசயம்! ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலிருந்து வேடந்தாங்கலுக்குப் பறத்து வருகிற எந்தப் பறவை அந்த விதையை எச்சமிட்டு விட்டுச் சென்றதோ, தெரியாது. ஒரு பிரயத்தனமும் பண்ணாமல் உலகநாதனின் தோட்டத்திலே அது வளர்ந்திருக்கிறது! அதன் மகிமையை, பெருமையை, அருமையை அறியாத மடையர்கள்-அதைக் கல்ப புஷ்பம் என்றும் மைத்ரேயரின் அவதாரத்துக்கு அறிகுறியென்றம் புலம்பிக் கொண்டு திரிகிறார்கள்!....''

ஷோபா குறுக்கிட்டு, ''பின்னே என்ன பூதான் அது?'' என்று கேட்டாள். ஆவலை அடக்க முடியாதவளாக.

ஆனால் கௌரியின் கண்களோ, சர்க்கரை ஜாடிக்குள் புக முயலுகிற எறும்பைப் போல, தப்பிச் செல்வதற்கான மார்க்கத்தைத் தேடிச் சுழன்று கொண்டிருந்தன. கீர்த்திசிங்கா தற்பெருமையில் திளைத்துக் கொண்டிருக்கிறார்...

ஏதாவதொன்றைத் தூக்கி அவர் மீது எறியலாம்... சே! இங்கே வந்து மாட்டிக்கொண்டோமே! கார் ஷெட்டாக இருந்தால் ஸ்பானர், ஜாக் என்று ஏதாவது கிடைக்கும்.

கண்ணாடி அலமாரியொன்றை ஒட்டினாற் போல் அவனும் ஷோபாவும் நின்றிருந்தார்கள். ஷோபா அவனைப் பாதி மறைத்தாற் போல் இருந்தாளாகையால், கீர்த்திசிங்காவுக்குத் தெரியாமலே கதவைத் திறக்கலாம். எதையாவது எடுக்கலாம்... அலமாரிக்குள் என்ன இருக்கும்? அவன் கண்கள் துழாவின.

நடுத் தட்டில் அவன் கண்ட அந்தப் பொருள்!

'சபாஷ்!' என்று வாய்விட்டே கூவியிருப்பான். நல்ல காலம், அடக்கிக் கொண்டான். அவன் இதயம் ஒரு பேரிகை போல் இரைச்சலிட்டது. அந்த இரைச்சல் வெளியே கேட்டுவிடுமோ என்று பயந்தவன் போலக் கீர்த்தி சிங்காவைப் பார்த்தான்.

அவர், ஷோபாவின் கேள்விக்குப் பெருமையுடன் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்.

''என்ன பூ என்பதைக் கீர்த்திசிங்கா கடைசியாகச் சொல்வான், பெண்ணே! மிச்சத்தைக் கேள். அது கல்ப புஷ்பம் தான் என்றும், அந்த ராகவ் புத்தரின் மறுபிறப்பாக இருக்கக் கூடும் என்றம் சொல்லி அவனுடைய மூடத்தனத்தை ஒரு பக்கம் விசிறி விட்டுக்கொண்டிருந்தான் கீர்த்திசிங்கா. மறுபக்கம் அந்தப பூவை வெளிநாட்டுக்கு அனுப்பி, தன் ஊகம் சரிதானா என்ற விசாரித்தான். சரிதான் என்று பதில் கிடைத்தது. ராகவ்வுக்குத் தெரியாமல் அந்தச் செடியின் விதையை எடுத்துவந்து, பரங்கிமலையில் விதைத்துப் பார்த்தான். முளைக்கவில்லை. இந்த வீட்டுத் தோட்டத்து மண்ணுக்கு ஏதோ தனிச் சிறப்பு இருக்க

வேண்டும் என்று தோன்றியது. அது என்ன என்று பரீட்சிப்பதற்குள். ராகவ் எல்லாவற்றையும் கெடுத்துத் தொலைத்துவிட்டான்.

ஒரு நாள் பரங்கி மலை மடத்தில் எல்லாரும் அஜாக்கிரதையாயிருந்த சமயத்தில், அவன் பாட்டுக்குப் போகக் கூடாத இடத்துக்குப் போய் விட்டான். பல துறவிகள் அபின் உருண்டைகளைத் தயாரிப்பதைக் கண்ணால் பாரக்கவும் பார்த்துவிட்டான். கீர்த்திசிங்காவிடம் வந்து பதறினான், 'என்ன அது?' என்று. 'மதப் பிரசாரம் என்றால் நாலு விதமாகவும் தான் நடக்கும். நீ அதையெல்லாம் கண்டு கொள்ளாதே. நம் மதத்தை நம்ப வைப்பதற்காக, பாமரர்களுக்காகத் தயாரிக்கப்படும் லேகிய மருந்துகள்' என்று ஏதோ சொல்லிப் பார்த்தான் கீர்த்திசிங்கா. ராகவ்வுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அப்போது அந்தக் கிழவர் ஆனந்த தேரா சென்னை வந்திருந்தார். அவரிடம் அதே புஷ்பத்தை எடுத்துப் போய்க் கேட்டிருக்கிறான். அந்தக் கிழத்துக்கு என்ன தெரியும்? மறுநாள் இந்தத் தோட்டத்துக்கு வந்து பார்ப்பதாய்ச் சொல்லியிருக்கிறது. அதற்குள் ராகவ் பம்பாய்க்குப் புறப்பட்டான், பிஸினஸ் என்று சொல்லிக் கொண்டு.

அவன் எங்களைச் சந்தேகிக்க ஆரம்பித்த பிறகு, நாங்கள் அவனைச் சந்தேகிக்காமல் இருக்க முடியுமா? ராகவ் எங்கே போனாலும் எங்கள் ஆள் அவனைப் பின்தொடர்ந்து கெண்டிருந்தான். ராகவ் போனது, இந்தச் செடியைப் பற்றி விசாரிக்கத்தான் என்று தெரிந்தது. ராஜஸ்தான்-மத்தியப் பிரதேஷ் எல்லையில் உள்ள மால்வா பீடபூமிக்குப் போய், இந்த வகைச் செடிகள் பயிரிடப்படுகிற பெரிய பெரிய பண்ணைகளைப் பார்வையிட்டான். விசாயிகளுடன் பேசினான். குவாலியரில் உள்ள

நார்காடிக்ஸ் கமிஷனரைச் சந்தித்தான். தான் எடுத்துப் போயிருந்த பூவைக் காட்டிக் கேட்டான்...''

ஷோபா மறுபடியும் குறுக்கிட்டாள். ''நார்காடிக்ஸ் கமிஷனரா? அப்படியானால்...''

அவளுடைய வியப்பான குரல் வேறு எந்த உலகத்திலோ ஒலிப்பதாகத் தோன்றியது கௌரிக்கு. அலமாரியில் அந்தப் பொருளைப் பார்த்த படபடப்பு இன்னம் அவனுக்கு அடங்கவில்லை.

அலமாரியின் நடுத் தட்டில் வலது கைக்கு மிகக் கிட்டத்தில் இருந்த அந்தப் பொருள்!

'அண்ணி! உங்களுடைய இந்தக் குழந்தைத்தனமான பழக்கத்துக்காக எவ்வளவு முறை உங்களைக் கேலி செய்திருக்கிறேன்! என்னை மன்னியுங்கள் அண்ணி! நீங்கள்தான் இப்போது எங்களைக் காப்பாற்றப் போகிறீர்கள்!' என்று செங்கமலத்துக்கு நன்றி சொன்னான்.

ஆம். என்றைக்கோ கார் ஷெட்டில் அவன் கை மறதியாக வைத்துவிட்டிருந்த அந்தப் பொருள்-

அஸிஸ்டெண்ட் கமிஷனர் மணிவண்ணன் அவனுக்குக் கொடுத்த அந்தக் கை வெடி குண்டுதான். நெருக்கடி ஏற்படும்போது, 'தரையில் ஓங்கி அடி! வெடியும் புகையும் பயங்கரமாக இருக்கும். தப்பித்து ஓடுவதற்கு நல்ல காமஃப்ளேஜ்' என்று அவர் சொன்னது இப்போதும் காதில் ஒலித்தது. அழகான பேனா மாதிரி அது இருக்கவே, செங்கமலம் வழக்கம்போல் எடுத்து வந்து, தன் அறையில் அலமாரியில் வைத்துக் கொண்டு விட்டாள்.

இப்போது அதல்லவா இவர்களுக்கு உயிர் கொடுக்கப் போகிறது!

கதவின் மீது மெல்ல மெல்ல விரல்களை வைத்தான். இம்மி இம்மியாகத் திறந்தால் போதும். எடுத்து விடலாம். திடீரென்று இன்னோர் நினைவு வந்தது. இந்தக் கதவு எப்போதும் கிறீச்சென்று சத்தமிடுமே!

சத்தம் எழுப்பாமல், கீர்த்திசிங்காவின் கவனத்தைக் கவராமல், அலமாரியைத் திறப்பது எப்படி?...

கீர்த்திசிங்கா அவனை லட்சியம் பண்ணவில்லை. தன் பெருமையில் தானே ஆழ்ந்திருந்தார்.

''ஆமாம், மகளே! நீ ஊகிப்பது சரிதான். அது கல்ப புஷ்பம். ஓபியம்-மார்ஃபைன்-ஹெராயின் எல்லா வற்றுக்கும் மூல காரணமான பாப்பிச் செடிதான் அது! பூ உதிர்ந்து காயானதும் அதைக் கீறி வைத்தால் பால் வடியும். மறுநாள் அந்தப் பிசினை எடுத்து வந்து உலர்த்திப் பக்குவம் செய்து அபின் உருண்டைகள் தயாரிக்கலாம். இங்கே அதைக் கசகசா செடி என்று சொல்வார்கள். ஆனால் கசகசாவிலேயே ரொம்ப ரொம்ப உயர்ந்த வகை இது. இந்தயாவில் வேறெங்கும் காணக் கிடைக்காதபோது இந்த உலகநாதன் தோட்டத்திலே அது முளைத்திருக்கிறது!

உண்மையைத் தெரிந்து கொண்ட ராகவ் ஊருக்குத் திரும்பியதுமே அவனை விட்டு வைப்பது ஆபத்து என்று கீர்த்திசிங்கா முடிவு செய்து விட்டான். அன்று மத்தியானம் ரொம்பச் சுலபமாய் வேலை முடிந்து விட்டது. யாரும் கவனிக்காத நேரத்தில் இதே பங்களாவுக்குள் நுழைந்தான் கீர்த்திசிங்கா. இதே மாடிக்குப் போனான். ஏதோ எழுதிக் கொண்டிருந்த ராகவ்வை மடக்கி, அவன் கையில் ஒரு துப்பாக்கியைக் கொடுத்தான். அவனை அவனே சுட்டுத் தற்கொலை செய்து கொள்ளும்படி இன்னொரு துப்பாக்கி முனையில் மிரட்டினான். அதற்கு முன், ஒரு தற்கொலைக்

கடிதம் எழுதி வைக்கும்படியும் பண்ணினான். தற்கொலைக்குக் காரணம் வேண்டுமே! தற்செயலாக அன்று வந்திருந்த திருமண அழைப்பிதழைப் பார்த்ததால் அந்தப் பெண்ணின் மீது காதல் என்று சொல்லும்படியும் செய்தான். செல்வி ஷோபா! ரொம்ப வசதியாக அன்று உதவி செய்தது உங்கள் பெயர். மிக்க நன்றி.

ஆனால் ராகவ்வை ஒழித்துவிட்டதோடு பிரசினை தீர்ந்து விடவில்லை. அந்தப் புதிய வகைப் பாப்பிச் செடியை வளர்த்தாக வேண்டும். அது இந்த வீட்டுத் தோட்டத்து மண்ணில் மட்டும்தான் முளைக்குமா என்று பரீட்சிப்பதற்காக-அதே சமயத்தில் உலகநாதனுக்கும் திகில் ஏற்படுத்துவதற்காக — ஒவ்வொரு மூலையில் ஒவ்வொன்று ரகசியமாய் விதைத்துப் பார்த்தான் கீர்த்திசிங்கா வளர்ந்தது! ஆகவே இந்த மண்ணுக்கு ஏதோ தனித் தன்மை இருக்கிற தென்று ருசுவாகிவிட்டது. அடுத்தடுத்து அபாயங்கள் ஏற்பட்டால் உலகநாதன் பயந்து ஓடுவார். இந்தப் பங்களாவையும் மலிவாய் விலைக்கு வாங்கி விடலாம் என்று கீர்த்திசிங்கா நினைத்தான்.

விருந்தின்போது உலகநாதனுக்கு விஷம் கொடுக்க முயன்றதும் அதற்காகத்தான். அது வீணாகி விட்டது. அதனால் என்ன? இதோ இப்போது நீங்கள் இரண்டு பேரும் இங்கே துர்மரணம் அடையப் போகிறீர்களே! அப்புறம் இந்த வீட்டில் யார் குடி இருப்பார்கள்!...''

கௌரி காத்திருந்தான்.

ஓசையில்லாமல் கதவைத் திறப்பதற்கு அவன் வழி கண்டுபிடித்துவிட்டான். வாசலில் பெருத்த சப்தத்துடன் செல்லும் பஸ்தான் அவனுக்கு கை கொடுத்தது. அடுத்த பஸ் வரும்போது. அதன் இரைச்சலின் நடுவே இந்தக் கதவைத் திறந்து வெடி குண்டை எடுத்து விடலாம்.

ஐயோ! அடுத்த பஸ்ஸே! உடனே வாயேன்! இவன் தன் கதையை முடித்துவிட்டுக் காரியத்தில் இறங்கி விடுவான் போலிருக்கிறதே! சீக்கிரம் வாயேன்!

இதோ, இதோ இதோ! தெருவிலே கடகடவென்ற சத்தம் கேட்ட அந்த வினாடியிலேயே கதவைத் திறப்பதும், அலமாரியிலுள்ள வெடி குண்டை எடுப்பதும், கீர்த்தி சிங்காவின் காலடியில் வீசியெறிவதும் நிகழ்ந்து விட்டன.

கண்ணிமைக்கும் நேரத்துக்குள் கீர்த்திசிங்கா சுருண்டு விழுந்தது தெரிந்தது. பிறகு ஒரே புகை!

''ஷோபா! வா!'' அவளை இழுத்துக் கொண்டு வாசலுக்குப் பாய்ந்தான் கௌரி.

''அங்கே கீர்த்திசிங்காவின் ஆள்-''

ஷோபாவின் வாக்கியம் பாதியிலேயே நின்று விட்டது. காரணம், புயலென வேகமாய் வந்த ஒரு போலீஸ் ஜீப்தான். தொப் தொப்பென்று குதித்த போலீஸ் படை, வாசலில் நின்ற கீர்த்திசிங்காவின் ஆளை மடக்கிக் கொண்டது. ஜீப்பிலிருந்து குதித்த இன்னொரு உருவம்-

நந்தினி!

அவர்களை நோக்கி அவள் ஓடிவந்து, ''நீ தைரியமாகப் புறப்பட்டுப் போனாயே தவிர, எனக்கு மனம் கேட்கவில்லை. இங்கேயும் ஏதாவது அபாயம் காத்திருக்கும் என்று நினைத்துப் போலீஸ் உதவியை நாடினேன். நான் பயந்தது சரிதான்,'' என்றாள்.

''நந்தினி! என் நண்பனுக்கு நானும் நன்றிக் கடனைச் செலுத்திவிட்டேன். நீங்களும் செலுத்தி விட்டீர்கள்.'' என்றான் கௌரி.

திலகர் ஹாலில் கூட்டம் நிரம்பி வழிந்தது. ஆனந்த தேரா தமது சொற்பொழிவை ஆரம்பிக்கவிருந்தார்.

முன் வரிசையிலிருந்து ஐந்தாவது வரிசையில் உலகநாதனும் செங்கமலமும் ரங்கநாதனும் ஷோபாவும் கௌரியும் அமர்ந்திருந்தார்கள்.

வரும் வழியில் உலகநாதனுக்கு யாரோ கொடுத்த அழகான சிறிய டயரியைத் தன் கைப் பைக்குள் பத்திரப்படுத்திக் கொண்ட மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தாள் செங்கமலம்.

''என் பெண்ணின் உயிருக்கு ஆபத்து வந்தால் நீயா காப்பாற்றுவாய் என்று ஒரு நாள் கேட்டேன் உங்கள் கௌரியிடம். காப்பாற்றுவேன் என்றான். நிரூபித்தும் காட்டிவிட்டான்,'' என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டிருந்தார் ரங்கநாதன்.

''கௌரி இனி மேல் என் தம்பி மாதிரி. உங்களுக்கு மாப்பிள்ளை மாதிரி. அவன் இவன் என்று நீங்கள் சொல்லக் கூடாது,'' என்று விளையாட்டாய்க் கண்டித்தார் உலகநாதன்.

''கேட்டாயா?'' என்று வினவுகிற மாதிரி ஷோபாவின் கையை அழுத்தினான் கௌரி.

''உஷ்! இது மெரீனா அல்ல,'' என்று அதட்டினாள் ஷோபா.

ஆனந்த தேராவின் வெண்கலக் குரல் கம்பீரமாக எழுந்தது.

''உண்மையான பௌத்தனொருவன் தியானத்தில் அமரும் போது, அன்பு, ஆனந்தம் கருணை, சாந்தி ஆகிய

நான்கு பிரம்ம விஹாரங்கள் அவனது சுவாசத்தோடு கலக்கின்றன. அன்பினால் அவன் தன்னைத் தானே நிறைத்துக் கொள்கிறான். மனிதர்கள், விலங்குகள், பூச்சிகள், பறவைகள் ஆகிய சகலத்தையும் குறித்து அன்பான எண்ணங்கள் அவனிடத்தில் உதித்துப் புறப்பட்டு அலை அலையாக, பூமியின் நான்கு திசைகளுக்கும் செல்கின்றன. கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, மேலே, கீழே - எங்கெங்கும் அன்பு சூழ்கிறது. அந்த எல்லையற்ற அன்பின் அலைகளில் உலகம் குளிக்கக் குளிக்க, ஆனந்த மயமான சொர்க்கத்தில் அவன் திளைக்கிறான்...''

நிறைவு